வரு.73 இல. 10 ★

www.vaaramanjari.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2021 மார்ச் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை March 07 Sunday, 2021

32 பக்கங்கள் 40/-




இலவச இணைப்பு




கொவிட்–19 தடுப்பூசி எல்லோருக்கும் நிச்சயம் கிடைக்கும் 02



பெற்ற மனம் கல்லா? 05



பயணப் பைக்குள் தலையயற்ற பெண்ணுடல்! 13



மேற்கிந்திய அணியுடனான 2வது T20 போட்டி: இலங்கை அணி வெற்றி 24


ஐ.நா மனித உரிமை பேரவையின் அறிக்கையை ஏற்க மாட்டோம்;

# உள்நாட்டு விவகாரத்தில் சர்வதேசம் தலையிட ஒருபோதும் அனுமதியோம்

## ஈஸ்பர் தாக்குதல் உட்பட சகலவற்றுக்கும் அரசிடம் தீர்வு உள்ளது



**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

**பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர அதிரடி அறிவிப்பு**

- மனிதவுரிமை பேரவையின் அறிக்கை பொய்யானது
- இந்தியா இலங்கைக்கே இறுதியாக ஆதரவளிக்கும்
- பேராயரின் கோபத்தை எம்மால் நிராகரிக்க முடியாது
- குற்றவாளிகளை பாதுகாக்க முன்னணி சட்டத்தரணிகள்

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்ட அறிக்கை என்பது முற்று முழுதாக பொய்களால் தயாரிக்கப்பட்ட அறிக்கையாகும். எனவே இந்த அறிக்கையை நாம் எச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

இந் நிலையில் எமக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணை மீதான வாக்கெடுப்பில் நாம் தோற்றாலும் கூட எமது உள்ளக விவகாரங்களில் சர்வதேச நாடுகள் தலையீடு செய்வதற்கு எந்தவிதமான அதிகாரத்தையும் வழங்கப் போவதில்லை.

04

ஈஸ்டர் தின பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம்;

# கடந்த அரசாங்கமே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டுமென்கிறார் ஜனாதிபதி



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான முழுப் பொறுப்பையும் கடந்த அரசாங்கமே ஏற்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

'நாட்டுக்கு ஒளி' என்ற நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் நேற்று ஹிரிபாவ கிராமத்தில் சமுர்த்தி பயனாளிகளுக்கு மின்சாரம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர்,.. ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மிகவும் தெளிவானது.


மஹிந்த ராஜபக்ஷதலைமையிலான அரசாங்கத்தில் தேசிய பாதுகாப்புக்கு வழங்கப்பட்டிருந்த முக்கியத்துவத்தை கடந்த நல்லாட்சி அரசாங்கம் புறக்கணித்தமையின் ஊடாகவே இத்தாக்குதல் இடம்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

04




பாதுகாப்பு படைகளின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று (06) கொரோனா தடுப்பூசியை பெற்றுக் கொண்டார். இராணுவ ஆஸ்பத்திரியில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயும் கலந்து கொண்டார்.

### இன்று முதல் வாரமஞ்சரியுடன் அரச வர்த்தமானி



இன்று முதல் பிரதி ஞாயிறு தோறும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையுடன் அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் வெளியாகும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

04

சுகாதார பாதுகாப்பு முறைகளுக்கமைய

## சிவராத்திரி தினத்தன்று உலக சைவ கொடி தினம்



உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை வழமைபோல் இவ்வருடமும் சிவராத்திரி தினமான எதிர்வரும் 11ஆம் திகதியன்று சைவக் கொடிதினம் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறது என அதன் துணைத் தலைவர் எஸ். தனபாலா தெரிவித்துள்ளார்.

04

படையினர் மீதான குற்றச்சாட்டு;

# உண்மையை தெளிவுபடுத்துவதற்கு மிச்சேலை அழைக்க அரசு தீர்மானம்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சிலெட்டை இலங்கைக்கு அழைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

படையினருக்கு எதிராக மனித உரிமை கள் மீறல் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றின் உண்மை நிலையை அறிந்து கொள்வதற்காக அவர்களை அழைக்க அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது என கூறினார். அந்தவகையில் மனித உரிமைகள் ஆணையாளர்

04



## அனுராதபுர ஜனாஸாக்கள் ஓட்டமாவடியில் அடக்கம்

### நேற்று மேலும் பல சடலங்கள் அடக்கம்



கொரோனா தொற்றினால் மரணமடைந்து அநுராதபுர வைத்தியசாலையில், குளிரூட்டிகளில் வைக்கப்பட்டிருந்த 3 ஜனாஸாக்கள் நேற்று சனிக்கிழமை ஓட்டமாவடியில் நல்லடக்கம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் தைரியம் மிக்க பெண்;

## அமெரிக்க உயர் விருதுக்கு ரனிதா ஞானராஜா தெரிவு



அமெரிக்க இராஜாங்க செயலாளரினால் வழங்கப்படும், உலகில் தைரியமிக்க பெண்களுக்கான விருதுக்கு, இலங்கையின் சட்டத்தரணியும் மனித உரிமை செயற்பாட்டாளருமான ரனிதா ஞானராஜா தெரிவாகியுள்ளார். உலகெங்கும் உள்ள

04

# ஈராக்கில் பாப்பரசருக்கு செங்கம்பள வரவேற்பு



நான்காயிரம் வருடங்களைக் கொண்ட ஈராக்கின் கிறிஸ்தவ வரலாற்றில் பாப்பரசர் பிரான்சிஸின் ஈராக்கிற்கான விஜயம் முக்கியத்துவம் வாய்ந்த விஜயமாக கருப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. அவருக்கு அங்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

75 ஊடகவியலாளர்களுடன் பாப்பரசர் நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணியளவில் தலைநகர் பக்தாத்தைச் சென்றடைந்தார்.

ஈராக் பிரதமர் முஸ்தபா அல் காதிமி, பாப்பரசரை வரவேற்றார். பாப்பரசர் பிரான்சிஸுக்கு விமான நிலையத்தில் செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டது.

04

## ஆயிரம் ரூபா கொடுப்பனவை உடனடியாக வழங்க வேண்டும்

### தொழில் ஆணையாளர் அறிவிப்பு



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள நிர்ணய சபையால் தீர்மானிக்கப்பட்ட 1000 ரூபா கொடுப்பனவை தோட்ட நிறுவனங்கள் வழங்க வேண்டும் என தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

04

# இலங்கை தொடர்பான பிரேரணையில் திருத்தங்களை முன்வைத்தது ஐ.நா

## அரசினால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் பரிசீலிப்பு

**நமது நிருபர்**

UNHRC

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான பிரேரணை திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் முன்வைத்த யோசனைகளை பரிசீலித்த பின்னர், திருத்தப்பட்ட யோசனையை முன்வைப்பதாக மனித உரிமைகள் பேரவை முன்னதாக அறிவித்திருந்தது.இதற்கமைய, நேற்று முன்தினம் முன்வைக்கப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணையில், குறிப்பிடத்தக்களவான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணையாளர் பரிந்துரைத்ததன் பிரகாரம், இலங்கையில் மனித உரிமை மீறல் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள நபர்களின் சொத்துக்களை தடை செய்தல் அல்லது அவர்களுக்கு பயணத்தடை விதித்தல் என்பன திருத்தப்பட்ட பிரேரணையில் உள்ளீர்க்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கும் பாரப்படுத்துவதும் புதிய

04

**விக்கல் வீராச்சாமி**



படையினரை விசாரிக்க வேணும் எண்டா புலிகள் செய்த அநியாயத்தையும் விசாரித்து தீர்ப்பு வழங்க வேணுமாம்.....

சஜித் ஐயாவுக்கு வாக்களிச்ச புலி ஆதரவு தமிழ் சனம் எங்கே போய் தங்கட முகத்தை வைக்கப்போகினமோ தெரியல...!!!

# இராவண எல்ல வனத்தின் ஒரு பகுதியில் பாரிய தீ

## கட்டுப்படுத்தும் முயற்சியில் விமானப்படை



பதுளை இராவண எல்ல வனப்பகுதியில் ஏற்பட்டுள்ள தீப்பரவலை கட்டுப்படுத்துவதற்கு பெல் 212 ரக ஹெலிகொப்டர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது. தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு வனஜீவராசிகள் திணைக்கள

04

# கொவிட்-19 தடுப்பூசி

# எல்லோருக்கும் நிச்சயம் கிடைக்கும்



## தொற்று நோயியல் தடுப்பு பிரிவின் பிரதம தொற்று நோயியல் நிபுணர் டொக்டர் சுதத் சமரவீர 'தினகரன் வார மஞ்சரி'க்கு வழங்கிய விஷேட பேட்டி

***உலகிற்கே பெரும் சவாலாக விளங்கும் கொவிட் 19 தொற்று இலங்கையில் பதிவாக ஆரம்பித்து மார்ச் 10 ஆம் திகதியுடன் ஒரு வருடம் நிறைவடைகின்றது. இந்த நிலையில் இத்தொற்று பரவுதலின் தற்போதைய நிலைமை, தடுப்பு மருந்தேற்றல், அது தொடர்பில் நிலவும் ஐயங்கள், மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் தடுப்பு பிரிவின் பிரதம தொற்று நோயியல் நிபுணர் டொக்டர் சுதத் சமரவீர 'தினகரன் வாரமஞ்சரி'க்கென வழங்கிய விஷேட பேட்டி.....***



மர்லின் மரிக்கார் ...

**கேள்வி - இந்நாட்டில் கொவிட் 19 தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை தற்போது குறைவடைந்துள்ளமை தொடர்பில் குறிப்பிடுவதாயின்?**

**பதில் -** கொவிட் 19 தடுப்பூசி வழங்கப்படுவதால் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை குறைவடையவில்லை என்பதை முதலில் குறிப்பிட்டாக வேண்டும். மாறாக இத்தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்தவென நாம் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகளின் பிரதிபலனாகவே தற்போது இத்தொற்று குறைவடைந்து வருகின்றது. இத்தடுப்பூசியின் பிரதிபலன் கிடைக்க சிறிது காலம் எடுக்கும். ஏனெனில் இத்தடுப்பூசியை வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு சில வாரங்கள் தான் கடந்துள்ளன.

**கேள்வி - பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தினர், தாம் கொவிட் 19 தடுப்பூசி வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளதால் பி.சி.ஆர் பிரிசோதனை மேற்கொள்வது குறைடைந்துள்ளதாகவும் அதனால்த்தான் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாகவும் கூறியுள்ளனரே?**

**பதில் -** அதில் உண்மையில்லை. நாம் பி.சி.ஆர் பரிசோதனைகளைக் குறைக்கவுமில்லை. அது குறையவும் இல்லை. இப்பரிசோதனையைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றோம். அதாவது தொற்றுக்குள்ளான ஒருவர் அடையாளம் காணப்பட்டால் அவருடன் நெருகிப்பழகியவர்கள், தொடர்புகளைப் பேணியவர்களை இப்பரிசோதனைக்கு உட்படுத்துகின்றோம். ஆனால் தற்போது இத்தொற்றாளர்களாகப் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதால் நெருங்கிப் பழகும் மற்றும் தொடர்புகளைப் பேணியவர்களது எண்ணிக்கையும் குறைவடைந்திருக்கின்றது. அத்தோடு வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்கு வருகை தருபவர்களின் எண்ணிக்கையும் கடந்த சில வாரங்களாகக் குறைவடைந்துள்ளது. இவற்றின் விளைவாக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய தேவையும் குறைவடைந்திருக்கின்றது. ஆனால் சமூகத்தில் இத்தொற்றாளர்களை அடையாளம் காண்பதற்கான பி.சி.ஆர் பரிசோதனை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது.

இருந்தும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம், மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம், அரசாங்க மருந்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட எந்த சங்கமும் கொவிட் 19 தொற்று பரவுதலைக் கட்டுப்படுத்த நாம் முன்னெடுக்கும் எந்த நடவடிக்கை தொடர்பிலும் எம்மைப் பாராட்டுவதில்லை. அவர்கள் எப்போதும் எமது வேலைத்திட்டங்களில் பிழைகளையே காண்கின்றனர். அவர்களது குற்றச்சாட்டுக்களில் எந்தவித அடிப்படையும் இல்லை. வீணாக பொய் கூறுகின்றனர்.

பி.சி.ஆர் பரிசோதனை எண்ணிக்கையைக் குறைத்து தொற்றாளர்கள் பதிவாவதைக் குறைத்துக் காண்பிப்பதாயின் அடையாளம் காணப்படாத தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து கொத்தணிகள் உருவாகிவிடும். இதனை நாம் அறியாதவர்கள் அல்லர்.

**கேள்வி - கொவிட் 19 தடுப்பு மருந்து தொடர்பில் வெவ்வேறு விதமான கதைகள் நிலவுகின்றவே?**

**பதில் -** இத்தடுப்பூசியைப் பெறக்கூடாத சில பிரிவினர் உள்ளனர். குறிப்பாக சில மருந்துப்பொருட்கள் மற்றும் உணவுகளால் தீவிர ஒவ்வாமைக்கு உள்ளாகக் கூடியவர்கள் இதனைப் பெறலாகாது.

அதேநேரம் கர்ப்பிணிகளுக்கும் தாய்ப்பாலூட்டும் தாய்மாருக்கும் பிள்ளை பெற எதிர்பார்த்திருப்போருக்கும் இத்தடுப்பூசி வழங்கப்படமாட்டாது. ஏனெனில் அதுதொடர்பான ஆராய்ச்சிகளின் முடிவுகள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை. அவற்றின் முடிவுகள் கிடைக்கப் பெறும்போது தடுப்பூசியை அவர்களுக்கு வழங்குவது தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்படும். இத்தடுப்பூசி நல்லதல்ல என்பதற்காக இவ்வாறான முடிவு எடுக்கப்படவில்லை. அத்தோடு இத்தடுப்பூசியைப் பெற்றால் மலட்டுத்தன்மை ஏற்படும் என்பதற்கும் ஆராய்ச்சி ரீதியில் எந்த சான்றும் கிடையாது. நாம் மிகவும் பாதுகாப்பான தடுப்பு மருந்தையே வழங்குகின்றோம். இத்தடுப்பூசிக்கு இந்நாட்டில் தீவிர பக்கவிளைவுகளும் இற்றைவரை பதிவாகவில்லை.

**கேள்வி - இத்தடுப்பூசியைப் பெறுபவர்கள் வெயிலில் செல்லக்கூடாது, குளிக்கக்கூடாது, மது, புகைபிடித்தல் கூடாது, உடற்பயிற்சியில் ஈடுபடலாகாது என்றபடி நிலவும் கூற்றுக்கள்?**

**பதில் -** இத்தடுப்பூசிக்கும் இக்கூற்றுக்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை. தடுப்பு மருந்தொன்றைப் பெற்றால் உடலில் நோயெதிர்ப்பு சக்தி ஏற்படும். அதுவே இங்கும் இடம்பெறுகின்றது. இதன் விளைவாக உடல் வலி, காய்ச்சல் போன்றவாறான அறிகுறிகள் வெளிப்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் குளிப்பது தவறான காரியம் அல்ல. ஆனால் காய்ச்சல் இருக்கும் போது நாம் எவரையும் குளிக்கச் சொல்ல மாட்டோம். விரும்பிய உணவை உண்ணலாம். பருகலாம்.

மேலும் சிகரெட் மற்றும் மதுசாரத்துக்கும் இத்தடுப்பூசிக்கும் தொடர்பில்லை. ஆனால் அவை ஆரோக்கியத்திற்கு உகப்பானவை அல்ல. இவற்றின் பாவனை இத்தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதைத் தவிர்த்துக் கொள்வதற்கான காரணம் அல்ல. என்றாலும் சிகரெட், மது பாவனையாளர்களும் இத்தடுப்பூசியைக் கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் மத்தியில் வெளிப்படாத நோய்கள் அதிகமாகக் காணப்படும். அதனால் அவர்கள் இத்தொற்றுக்கு உள்ளாகக்கூடிய அச்சுறுத்தலும் அதிகம். அதன் விளைவாக உயிராபத்து அச்சுறுத்தலுக்கும் முகம் கொடுக்க நேரிடும். இத்தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதன் மூலம் அவற்றைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

**கேள்வி - இத்தடுப்பூசியைப் பெற்ற இரண்டு நாட்களின் பின்னர் கம்பஹா மாவட்டத்தில் இருவர் உயிரிழந்துள்ளனரே?**

**பதில் -** கம்பஹா மாவட்டத்தின் திவுலப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். இவர்கள் 40 முதல் 55 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். இவர்களை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தி பார்த்த போது அவர்கள் இருவரும் இதய நோயின் விளைவாக உயிரிழந்துள்ளனர். அவர்களது இதய நாளங்களில் கொழுப்பு பெரிதும் படிந்து அடைப்பு ஏற்பட்டிருந்தது. ஒருவருக்கு நீரிழிவு நோயும் காணப்பட்டுள்ளது. இவற்றின் விளைவாகவே இவர்கள் உயிரிழந்துள்ளனர். அதனால் இம்மரணங்களுக்கும் இத்தடுப்பூசிக்கும் தொடர்பில்லை என்பது உறுதியாகியுள்ளது.

இதேவேளை எமது சிரேஷ்ட பிரஜைகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் இத்தடுப்பூசி வழங்கப்படுகின்றது. அவர்களையும் இத்தொற்றிலிருந்து பாதுகாப்பதே எமது நோக்கம். ஆனால் இத்தடுப்பூசியைப் பெற்றாலும் பெறாவிட்டாலும் சிரேஷ்ட பிரஜைகள் மத்தியில் உயிரிழப்பு அதிகமாகக் காணப்படுவது இயல்பானது.

என்றாலும் தடுப்பூசி பெறுபவர்கள் மத்தியில் உயிரிழப்புக்கள் ஏற்படுமாயின் அது தொடர்பில் மிகுந்த அவதானத்தோடு விரிவான ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. தடுப்பூசியினால் மரணங்கள் ஏற்படுமாயின் அவற்றைத் தவிர்த்துக்கொள்ளவே எதிர்பார்க்கின்றோம்.

- **தடுப்பூசியைப் பெற முண்டியடிக்கத் தேவையில்லை**
- **கொவிட் 19 தொற்று இலங்கையில் பரவ ஆரம்பித்து ஒரு வருடமாகிறது**
- **பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம், மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம், அரசாங்க மருந்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்டவற்றின் கூற்றுக்களில் எந்தவித உண்மையுமில்லை.**
- **தொற்றாநோயுள்ளவர்களுக்கு இத்தடுப்பு மருந்தினால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. ஆனால் அவர்கள் தொற்றா நோய்க்கான மருந்துகளை தொடர்ந்தும் பாவிக்கத் தவறக்கூடாது.**
- **சிகரெட் மற்றும் மதுபாவனையாளர்களும் இத் தடுப்பூசியை பெற்றுக் கொள்ள வேண்டும்**
- **அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் எவருக்கும் இத்தடுப்பூசி வழங்கப்படுவதில்லை. அதனால் எவரும் அரசியல்வாதிகளுக்கு பின்னால் செல்லவும் தேவையில்லை.**

**கேள்வி - இத்தடுப்பூசியை ஒவ்வாமை, பாலூட்டும் தாய்மார், கரப்பிணிகள் உள்ளிட்டோருக்கு வழங்க வேண்டாமென சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அப்படியாயின் நாட்பட்ட சிறுநீரக பாதிப்பு, இதய நோய்கள், புற்று நோய்கள், நீரிழிவு போன்ற தொற்றா நோய்களுக்கு உள்ளாகியுள்ளவர்களுக்கு வழங்க முடியுமா?**

**பதில் -** நிச்சயமாக. தொற்றா நோய்களுக்கு உள்ளாகியுள்ளவர்களுக்கு கட்டாயம் இத்தடுப்பூசியை வழங்க வேண்டும். இத்தடுப்பூசியை வழங்கவென நாம் தயாரித்துள்ள முன்னுரிமைப் பட்டியலில் தொற்றா நோய்களுக்கு உள்ளாகியுள்ளவர்களுக்கு முக்கிய இடமளிக்கப்பட்டுள்ளது. தற்போது சிறுநீரக நோய்க்குள்ளாகி இரத்த மாற்று 'டயலிஸ்' செய்பவர்களுக்கு இத்தடுப்பூசி வழங்கப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து சிறுநீரக மாற்று சிகிச்சை செய்துள்ளவர்களுக்கும் இனம் காணப்படாத சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளவர்களுக்கும், நீரிழிவு நோயாளர்களுக்கும் இத்தடுப்பூசியை வழங்குவோம். ஏனெனில் தொற்றா நோயாளர்களுக்கு அதிக உயிராபத்து அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது இத்தொற்று.

இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்காக, தாம் பயன்படுத்தும் மருந்துப்பொருட்களிலும் பாவனையிலும் எவ்வித மாற்றங்களையும் அவர்கள் செய்ய வேண்டியதில்லை. இத்தடுப்பு மருந்தினால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. ஆனால் அவர்கள் தொற்றா நோய்க்கான மருந்துகளை தொடர்ந்தும் பாவிக்கத் தவறக்கூடாது.

**கேள்வி - இத்தடுப்பூசி வழங்கும் சில நிலையங்களில் இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்கள் பின்பற்றப்படாத நிலைமை ஏற்பட்டுள்ளதால் அங்கும் கொவிட் 19 கொத்தணிகள் உருவாகலாம் என்ற அச்சம் தெரிவிக்கப்படுகின்றதே?**

**பதில் -** நாட்டில் எல்லா மக்களுக்கும் இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனாலும் தற்போது மட்டுப்படுத்தப்பட்டளவில் தான் இத்தடுப்பூசி கிடைக்கப்பெறுகின்றது. அதனால் கிடைக்கப்பெறும் ஒழுங்குக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசியை வழங்குகின்றோம். என்றாலும் தமது முறை வரும்வரை பொறுமையாகக் காத்திருந்து ஒவ்வொருவரும் அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதுவே இத்தடுப்பு மருந்து வழங்கல் மூலம் உரிய பிரதிபலன் கிடைக்கப்பெற வழி வகுக்கும். ஒவ்வொருவரும் தாம் வாழும் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தர், மருத்துவமாது, பொதுச் சுகாதார பரிசோதகர் ஆகியோருடன் தொடர்புகொண்டு தாம் வாழும் பிரதேசத்தில் இத்தடுப்பூசி வழங்கப்படும் தினத்தில் அதனைப் பெற்றுக்கொள்ளலாம். குறித்த நாளில் பெற்றுக்கொள்ள முடியாவிட்டாலும் கூட மற்றொரு நாளில் அதனைப் பெற்றுக்கொள்ளலாம். அதனால் இத் தடுப்பூசியைப் பெறவென முண்டியடிக்கத் தேவையில்லை,

முதலில் கொவிட் 19 தொற்று தொடர்பிலான சிகிச்சை மற்றும் பராமரிப்பு சேவைகளில் ஈடுபடும் சுகாதார துறையினர், பொலிஸார் உள்ளிட்ட முப்படையினர் அடங்கலான முன்னணியில் நின்று கருமமாற்றுபவர்களுக்கு இத்தடுப்பூசி வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இத்தொற்று அடிக்கடி பதிவான துறைமுகங்கள், விமான நிலையம் உள்ளிட்ட இடங்களின் ஊழியர்களுக்கும், தற்போது உள்ளூராட்சி மன்றகளில் திண்மக் கழிவுப் பொருட்களை அகற்றும் பணிகளில் ஈடுபடுவர்களுக்கும் வழங்கப்படுகின்றது. ஏனெனில் இவர்களும் இத்தொற்றுக்கு அடிக்கடி உள்ளாகக்கூடியவர்களாக விளங்குகின்றனர். அவர்கள் ஊடாக ஏனையவர்களுக்கும் இத்தொற்று பரவுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. அதனைத் தவிர்க்கும் வகையிலேயே இவர்களுக்கு இத்தடுப்பூசி வழங்கப்படுகின்றது. இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள அச்சுறுத்தல் மிக்க பிரிவினருக்கு தொடர்ந்தும் தடுப்பூசி வழங்கப்படுகின்றது.

ஆனால் அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் எவருக்கும் இத் தடுப்பூசி வழங்கப்படுவதில்லை. அதனால் எவரும் அரசியல்வாதிகளுக்கு பின்னால் செல்லவும் தேவையில்லை.

**கேள்வி - தற்போது இத்தடுப்பூசி வழங்கப்படும் பிரதேசங்கள்?**

**பதில் -** கொழும்பு, கம்பஹா மாவட்டங்களிலும் கொழும்பு மாநகரப் பிரதேசங்களிலும் தற்போது இத்தடுப்பூசி வழங்கப்படுகின்றது. ஏனைய பிரதேசங்களில் சுகாதார ஊழியர்கள், கொவிட் 19 பராமரிப்பு பணியில் ஈடுபடும் பொலிஸ் உள்ளிட்ட முப்படையினருக்கும் மாத்திரமல்லாமல் தனியார் வைத்திய சாலைகளின் டொக்டர்கள், தாதியர் உள்ளிட்ட ஊழியர்ளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. அத்தோடு சிறுநீரகப் பாதிப்புக்கு இரத்த மாற்று 'டயலிஸ்' செய்பவர்களுக்கும் இத்தடுப்பூசி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. இத் தடுப்பு மருந்து மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கிடைக்கப்பெற்று வருவதால் அதிக பிரதிபயன்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய பிரதேசங்களுக்கு முதலில் வழங்கப்படுகின்றன. கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் தான் இத்தொற்றுக்கு அதிகளவானோர் உள்ளாகினர். இங்கு இத்தொற்றுக்குள்ளானவர்கள் ஊடாகவே கிராமங்களுக்கும் இத் தொற்று பரவியது. அதனால் இங்கு இத்தொற்று பரவுதலைக் கட்டுப்படுத்த முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. அதன் ஊடாக இத்தொற்று கிராமத்திற்கு செல்வது இயல்பாகவே கட்டுப்படும்.



**கேள்வி - இந்நாட்டில் அஸ்ட்ராசெனகா தடுப்பு மருந்துக்கு அனுமதியளிக்கப்பட்டு அது பயன்பாட்டிலும் இருக்கும் நிலையில் ரஷ்ய உற்பத்தியான 'ஸ்புட்னிக் - வி' என்ற தடுப்பூசிக்கும் தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளதே?**

**பதில் -** நாம் அஸ்ட்ராசெனகா தடுப்பு மருந்தில் 18 மில்லியனை கொள்வனவு செய்ய விருப்பம் தெரிவித்து கேள்விப் பத்திரமும் சமர்ப்பித்துள்ளோம். ஆனால் அத்தடுப்பூசி பல நாடுகளுக்கும் வழங்கப்படுவதால் எமக்கு கொஞ்சமாகவே கிடைக்கப்பெறுகின்றது. அதன் விளைவாகவே 05 இலட்சம் தடுப்பூசி, பணம் செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்றது. இதேவேளை உலக சுகாதார ஸ்தாபனம் ஏற்கனவே வழங்கியுள்ள வாக்குறுதிக்கு அமைய 'கொவெக்ஸ்' திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 02 இலட்சத்து 74 ஆயிரம் 'அஸ்ட்ராசெனகா' தடுப்பு மருந்து இன்று ஞாயிற்றுக்கிழமை (07.03.2021) கிடைக்கப்பெறுகின்றது.

என்றாலும் ஏனைய தடுப்பு மருந்துகள் தொடர்பிலும் நாம் மிகுந்த முன்னவதானத்துடன் கவனம் செலுத்தி வருகின்றோம். அந்த வகையில் தான் தேசிய மருந்துப்பொருள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் நிபுணத்துவக் குழு 'ஸ்புட்னிக் வி' தடுப்பு மருந்துக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கு ஏற்ப அவர்கள் அங்கீகார சான்றிதழ் வழங்க வேண்டும். அதன் பின்னர் தடுப்பு மருந்துகள் தொடர்பான இந்நாட்டின் உச்ச சபையாக விளங்கும் தொற்று நோய்கள் தொடர்பான ஆலோசனைக் குழு சிபாரிசுகளை அளிக்க வேண்டும். அதன் பின்னர் தான் அத்தடுப்பூசியை இங்கு கொண்டு வர முடியும். ஆனாலும் முதலில் வழங்கும் நிறுவனத் தடுப்பூசியையே இரண்டாம் தடவையும் வழங்க நாம் தீர்மானித்திருக்கின்றோம்.

**கேள்வி - நிறைவாக, நாட்டு மக்களுக்கு நீங்கள் கூற விரும்பும் அறிவுரைகள் யாது?**

**பதில் -** இத்தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக ஒருவருக்கு இத்தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்பும், நோயின் தீவிரநிலையும் குறைவடையும். அத்தோடு இத் தொற்றுக்குள்ளாகின்றவர்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான காரணங்கள், உயிரிழப்புக்கான சந்தர்ப்பங்களும் கூட குறையும். ஆனாலும் இத்தடுப்பூசியைப் பெற்றவர்களுக்கு இத்தொற்று மிகவும் அரிதாக ஏற்பட முடியும். அவ்வாறு ஏற்படுமாயின் அவர்களிடமிருந்து ஏனையவர்களுக்கு இத்தொற்று பரவலாம். அதனால் தடுப்பூசி பெற்றவர்களும் முன்னவதானத்துடன் செயற்பட வேண்டும். தடுப்பூசியைப் பெற்றுவிட்டதற்காக முகக்கவசம் அணிவதையோ, கை கழுவதையோ, சமூக இடைவெளியைப் பேணுவதையோ தவிர்க்க முடியாது. அதனால் ஆராய்ச்சி ரீதியான முடிவுகள் கிடைக்கப்பெறும் வரையும் ஒவ்வொருவரும் கொவிட் 19 தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப செயற்படுவது அவசியம். அத்தோடு இத்தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள அச்சப்படவும் தேவையில்லை. அதனைப் பெற்றுக்கொள்ள முண்டியடிக்கவும் தேவையில்லை. உரிய நேர காலத்தில் நிச்சயம் தடுப்பூசி கிடைக்கப்பெறும்.



# இரணைதீவு மக்களின் கோரிக்கை நிறைவேறுமா?

இலங்கையின் வடக்கு பகுதியில் பல தீவுக் கூட்டங்கள் காணப்படுகின்றன. அந்தவகையில் இரணைதீவு என்னும் கிராமமானது கிளிநொச்சி மாவட்டத்தின் பூனகரி பிரதேச சபைக்குட்பட்ட முழங்காவில், நாச்சிக்குடா ஆகிய பிரதேசங்களின் நிலத் தொடர்ச்சியிலிருந்து கடலுக்குள் இருபது கிலோமீற்றர் தொலைவில் மன்னார் வளைகுடா கடலில் அமைந்துள்ளது.

வடக்கில் தீச்சுவாலையாக பரவிய உள்நாட்டு போரானது இரணைதிவில் வசித்து வந்த 417 குடும்பங்களையும் விட்டு வைக்கவில்லை. மீன்பிடி, கால்நடை வளர்ப்பு என அமைதியாக வாழ்ந்து வந்த மக்கள் கொடும் யுத்தம் காரணமாக உயிரை காப்பாற்ற தங்கள் பிறந்து வளர்ந்த மண்ணை விட்டு அகதிகளாக 1997 இல் இடம் பெயர்ந்து அருகிலுள்ள முழங்காவில், நாச்சிக்குடா மற்றும் கிளிநோச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் குடியேறியிருந்தனர்.

இரணைதீவு மக்கள் தங்கள் உயிரை காப்பாற்ற உடமைகளை கைவிட்டு அகதிகளாக சென்றதன் பின்னர் அத்தீவை இலங்கை கடற்படையினர் முழுமையாக தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தமானது 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்டாலும், அப்போதைய இலங்கை அரசானது இரணைதீவு மக்களை அவர்களின் பூர்வீக மண்ணில் மீள்குடியேற்றம் செய்யவில்லை. வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னரும் தமிழ் மக்களின் போராட்டங்கள் ஓய்ந்திருக்கவில்லை. மழை ஓய்ந்தும் தூவானம் விடவில்லை என்ற வகையில், இராணுவத்தினரின் நில ஆக்கிரமிப்பு, அரசியல் கைதிகள் விவகாரம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை, தொல் பொருள் திணைக்களத்தின் ஆக்கிரமிப்பு, நுண்நிதி கடன் வழங்கும் நிறுவனங்களின் கெடுபிடி என தமிழ் மக்கள் இப்பிரச்சினைகளுக்கு எதிராக போராட்டங்களை நடத்தியவாறே கடந்த 12 வருடங்களாக வாழ்க்கையை நகர்த்தி வருகின்றனர்.

அந்த வகையில் இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகளும் இரணைதீவு மக்களை மீள்குடியேற்றம் செய்யாத காரணத்தாலும், தமிழ் தேசியம் பேசி தமிழ் மக்களிடம் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்றும் இரணைதீவு மக்களின் மீள்குடியேற்றத்திற்கு வழிவகை செய்யாத உள்ளூர் அரசியல் வாதிகளுக்கு எதிராகவும் இரணைதீவு மக்கள்போராடினர். தங்களை தங்கள் சொந்த மண்ணில் மீள்குடியேற்றம் செய்யுமாறான கோரிக்கையை முன்வைத்து போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

இரணைதீவு மக்களின் சுமார் ஒரு வருடத்திற்கும் மேலாக ஜனநாயக ரீதியிலான போராட்டத்தின் பின்னரும் இலங்கை அரசாங்கமோ அல்லது உள்ளூர் அரசியல்வாதிகளோ அம் மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பாக நடவடிக்கை எடுக்காத நிலையில் பொறுமையிழந்த அவர்கள் 23 ஏப்பிரல் 2017 இல் தங்கள் சொந்த முயற்சியில் 50 மீன் பிடிப்படகுகளில் வெள்ளைக் கொடிகளை ஏந்தியவாறு கடலைக் கடந்து தமது தாய்மண் நோக்கி பயணப்பட்டனர்.

2017 ஆம் ஆண்டு இரணைதீவு கிராமத்தில் தரை இறங்கிய மக்கள் தங்கள் மீள் குடியேற்றத்திற்காக இன்று வரை போராடி வருவதுடன் சிறுகச் சிறுக தங்கள் வாழ்வாதாரத்தையும் கட்டியெழுப்பி வருகின்றனர்.



இரணைதீவைச் சூழவுள்ள கடலானது பல்வேறுபட்ட கடலுணவுகள் நிறைந்த பகுதியாக காணப்படுவதுடன் ஏற்றமதி தரத்திலான கடலட்டைகளும் இப்பகுதியில் நிறைந்து காணப்படுகின்றது. இத்தீவின் மண்வளமானது கால்நடை வளர்ப்பிற்கும் பயிர்ச் செய்கைக்கும் உகந்ததாக காணப்படுகின்றது.

தரைப்பகுதியில் முழங்காவில் பகுதியிலிருந்து இரணைதீவுக்கு படகில் ஒன்றரை மணி நேரத்தில் பயணிக்க கூடியதாக இருக்கும். அதே வேளை காலநிலை சீராக இல்லையானால் பயணம் செய்ய முடியாத ஒரு நிலைமையே அங்கே காணப்படுகின்றது

இலங்கை அரசானது 'கொரோனா' வைரஸ் காணமாக இறப்பவர்களின் உடலங்களை உடலங்களை இரணைதீவில் அடக்கம் செய்ய பரிந்துரைத்துள்ளதானது அத்தீவின் மக்களின் மனங்களில் பாரிய கவலையையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கத்தின் இவ் அறிவிப்பை தொடர்ந்து கொரோனா பெருந்தொற்றினால் இறப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்யும் புதைகுழியாக மாற்ற எமது தீவை அனுமதிக்க மாட்டோம், விவேகமற்ற இத்தீர்மானத்தை உடனடியாக நீக்க வேண்டும் என தெரிவித்து இரணைதீவில் பொது மக்கள், சமயத் தலைவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கோவிட் பெருந்தொற்றினால் உயிரிழப்பவர்களை தொடர்ச்சியாக எரியூட்டி வந்த இலங்கை அரசாங்கத்திற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அழுத்தம் காரணமாக உடலங்களை அவர்களின் ஆகம விதிப்படி புதைப்பதற்கான அனுமதியை இலங்கை அரசு வழங்கியதுடன். இலங்கையில் மக்கள் வாழாத நடமாற்றம் அற்ற பல தீவுகள் மற்றும் பிரதேசங்கள் இருக்கும் நிலையில் இரணைதீவு பகுதியை கொரோனாவினால் இறந்தவர்களின் உடலங்களை புதைப்பதற்கு ஏற்ற இடமாக பரிந்துரை செய்துள்ளமை ஏன் என்ற கேள்வி பொது மக்களிடம் தொக்கி நிற்கின்றது.

**இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தமானது 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்டாலும், அப்போதைய இலங்கை அரசானது இரணைதீவு மக்களை அவர்களின் பூர்வீக மண்ணில் மீள்குடியேற்றம் செய்யவில்லை. வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னரும் தமிழ் மக்களின் போராட்டங்கள் ஓய்ந்திருக்கவில்லை.**

கொவிட் பெரும் தொற்றால் உயிரிழப்பவர்களின் உடலங்களை அடக்கம் செய்வதற்கு இலங்கை சுகாதாரத் துறை நிபுணர்களால் ஆறு இடங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ள போதிலும் அவற்றை கவனத்தில் கொள்ளாது இரணைதீவில் சடலங்களை அரசாங்கம் அடக்கம் செய்ய வேண்டும் என தீர்மானித்துள்ளதன் மூலம் அரசானது திட்டமிட்டு இனங்களுக்கிடையில் பிரச்சினையை தோற்றுவிக்க முயற்சிக்கின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் காசிம் தெரிவித்துள்ள கருத்தானது ஆராயப்படவேண்டியது.

இரணைதீவு கிராமத்தில் மக்கள் மீள்குடியேறி வரும் நிலையில் கொரோனா பெருந் தொற்றால் உயிரிழப்பவர்களின் உடலங்களை அடக்கம் செய்ய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை அத்தீவிலிருக்கும் மக்களை அச்சம் கொள்ள வைத்துள்ளது.

இலங்கையில் பல அரசியல் தலைவர்கள் இரணைதீவில் உடலங்களை அடக்கம் செய்வதை கடுமையாக எதிர்த்து வரும் நிலையில் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இரணைதீவில் கடலட்டை ஏற்றுமதி கிராமம் ஒன்றை உருவாக்கி அரசாங்கத்திற்கு வருடம் தோறும் 25 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு மேற்பட்ட வருமானத்தை ஈட்டித்தருவதோடு 350 க்கு மேற்பட்டவர்கள் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் கொரோனா பெருந்தொற்று காரணமாக இறப்பவர்களின் உடலங்களை அடக்கம் செய்வதற்கு ஏற்ற இடம் இரணைதீவு அல்ல என்பதையும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரோடு ஆராய்வதாகவும் மாற்று ஏற்பாடு தொடர்பாக ஆராய்வதாகவும் தெரிவித்த கருத்தானது, இரணைதீவு மக்களை ஆறுதலடையச் செய்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றால் இறப்போரின் உடலங்களை எமது மையவாடிகளிலே அடக்கம் செய்யுங்கள் பக்க விளைவுகளுக்கு நாம் பொறுப்பேற்கிறோம் என கல்முனை மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதானது சிறுபான்மை இனங்களுக்கிடையிலான ஒரு நல்ல புரிந்துணர்வுக்கான சமிக்கையாகவே பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் அனைத்து சமூகங்களும் ஒற்றுமையுடன் வாழ்வதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சிறுபான்மை இனங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் கடப்பாடும் இலங்கை அரசுக்கு உள்ளது என்பதுடன் சகல வளங்களும் நிறைந்த இரணைதீவு மண்ணை மயான பூமியாக மாற்றாது அத்தீவின் மக்களை விரைவாக மீள்குடியேற்றம் செய்ய இலங்கை அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்பதுவே அம் மக்களின் கோரிக்கையாகும்.

பாராபட்சமற்ற பௌதீகவளப்பங்கீடுகள் யுத்தத்தால் நலிந்து போயுள்ள மக்களையும், அம் மக்களின் சொந்த நிலமான இரணதீவையும் செழிப்படையச் செய்யும்.

இலங்கை அரசாங்கத்தின் சாதகமான செயல்பாடுகள் சிறுபான்மை மக்களின் மனங்களில் நம்பிக்கையை ஏற்படுத்துவதுடன், நாம் அனைவரும் இலங்கையர் என்ற உணர்வுடன் பயணிக்க வைக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

எம்.ஜி.ரெட்ணகாந்தன்...

## பெண்களை வலுவூட்டுவதற்கான சவாலை எதிர்கொள்ளல்

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களுக்கு கௌரவம் வழங்கும் முகமாக உலகெங்கிலும் உள்ள பெண்களுக்கு சொந்தமான வியாபார நிறுவனங்களின் வணிக வாய்ப்புக்களை முன்னேற்றுவதற்காக ஒரு குறிப்பிட்ட செலவு இலக்கு அல்லது அதனுடன் தொடர்புடைய திட்டங்களுக்கு பகிரங்கமாக உறுதியளிக்க, வீ கனெக்ட் சர்வதேசம் (WEConnect International) அதன் 110+ ற்கும் மேற்பட்ட தனது பன்னாட்டு கொள்முதல் நிறுவனங்களை தனது #சவாலை எதிர் கொள்ள எழுந்திருங்கள் (#Rise2TheChallenge) எனும் பிரசாரத்தினூடாக வலியுறுத்துகிறது.

(WEConnect International) வீ கனெக்ட் சர்வதேசமானது 110+ ற்கும் மேற்பட்ட பெரு நிறுவனங்கள், பன்னாட்டு மற்றும் அரச நிறுவனங்களை தனது உறுப்பினர்களாக கொண்ட நிறுவனமாகும். வீ கனெக்ட் சர்வதேச நிறுவனத்தின் உறுப்பினர்கள் ஆண்டுதோறும் ஒரு திரில்லியன் டொலர் மதிப்புள்ள தயாரிப்புக்கள் மற்றும் சேவைகளை கூட்டாக உலகளவில் கொள்வனவு செய்கின்றன. #சவாலை எதிர் கொள்ள எழுந்திருங்கள் (#Rise2TheChallenge) எனும் நிகழ்ச்சியினூடாக தனது உறுப்பினர்களுக்கு பெண்களுக்கு சொந்தமான வியாபார நிறுவனங்களிலிருந்து கொள்வனவு செய்யும் அர்ப்பணிப்பின் அளவை நிர்ணயிக்க ஒரு வருடம் அவகாசம் வழங்குகின்றது.

இந் நிறுவனமானது ஆண்டு முழுவதும் அவ்வப்போது அர்ப்பணிப்பு தொகைகளை கண்காணித்து ஒருங்கிணைத்து பகிர்ந்து கொள்வதுடன் அடுத்த வருடம் 2022ம் ஆண்டு பங்குனி மாதம் 8ம் திகதி சர்வதேச மகளிர் தினத்தின் போது இறுதி தொகையை அறிவிக்கும்

பெண்கள் உலகின் தனியார் வணிகங்களில் மூன்றில் ஒரு பகுதியை பிரதிநிதித்துவப்படுத்துவதோடு உலக சனத்தொகையில் அரைவாசியாகவும் காணப்படுகின்றனர். மேலும் இவர்கள் கொள்வனவு தீர்மானத்திலும், கொள்வனவு தீர்மானத்தை உருவாக்குவதிலும் 85% சதவீத செல்வாக்கை செலுத்துகின்றார்கள் என்று வீ கனெக்ட் சர்வதேசத்தின் தலமை நிர்வாக அதிகாரி மற்றும் இணை நிறுவனர் எலிசபெத் ஏ.வஸ்குவெஸ் தெரிவித்தார்.

unicef for every child 75

REQUEST FOR PROPOSAL (RFP)

**Hiring of a Research Institution to conduct Formative Research & KAP Assessments in support of the Risk Communication and Community Engagement (RCCE) related to COVID-19 vaccine roll-out in Sri Lanka**

UNICEF Sri Lanka country office calls for Request for Proposal for Hiring of a Research Institution to conduct Formative & KAP Research in support of the Risk Communication and Community Engagement (RCCE) related to COVID-19 vaccine roll-out in Sri Lanka.

Agencies with the qualifications, specialized knowledge and experience required for the assignment are invited to send in proposals as per the requirements of the Terms of Reference (TOR) and solicitation documents (RFP) which can be downloaded at: http://bit.ly/unisd-fr

The virtual Pre-bid meeting will be held at 9.00 a.m. on the 10th of March 2021. The deadline for the submission of he request for Proposal by 4.00 p.m. on Monday 22nd March 2021.

UNICEF reserves the right to accept or reject any bid. The procurement process will be governed by the rules and regulations of UNICEF.

unicef for every child 75

REQUEST FOR PROPOSAL (RFP)

**Services of a qualified agency to provide Social Listening Services**

UNICEF is supporting the Ministry of Health and Health Promotion Bureau (HPB) in its roll out of the COVID - 19 vaccine across the country through technical support and communication including, Risk Communication and Community Engagement (RCCE) needed for the vaccination campaign.

UNICEF Sri Lanka country office calls for Request for Proposals for services of a qualified agency to provide Social Listening Services.

Agencies with the qualifications, specialized knowledge and experience required for the assignment are invited to send in proposals as per the requirements of the Terms of Reference (TOR) and solicitation documents (RFP) which can be downloaded at: http://bit.ly/unisd-social

The virtual pre-bid meeting will be held at 1.30 p.m. on the 10th March 2021. The deadline for the submission of the Request for Proposal by 4.00 p.m. on Monday 22nd March 2021.

UNICEF reserves the right to accept or reject any bid. The procurement process will be governed by the rules and regulations of UNICEF

# ஓல்டன் தோட்ட நிர்வாகம் - தொழிலாளர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தையின் இரண்டாம் கட்டம் 10 ஆம் திகதி

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

ஓல்டன் தோட்ட நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான முரண்பாட்டினையடுத்து நிர்வாகத்துடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை எதிர்வரும் 10 திகதி மீண்டும் இடம்பெறும் என ஜி.நகுலேஸ்வரன் தெரிவித்தார்


ஹொரண பெருந்தோட்ட கம்பனிக்குட்பட்ட ஓல்டன் தோட்ட நிர்வாகத்திற்கு எதிராக கடந்த மாதம் 02 ஆம் திகதி முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருக்கும் ஓல்டன் தோட்ட தொழிலாளர்களுக்கும் தோட்ட நிர்வாகத்திற்கும் இடையிலான சமரச பேச்சுவார்த்தையொன்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தேசிய அமைப்பாளர் ஜி.நகுலேஸ்ரன் தலைமையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.



தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரத்தின் பணிப்புரைக்கமைய இடம்பெற்ற இப் பேச்சுவார்த்தை கவரவில தோட்ட காரியாலயத்தில் இடம்பெற்றது.

இதன் போது , ஓல்டன் தோட்ட நான்கு பிரிவுகளை சேர்ந்த அனைத்து தொழிற்சங்க தலைவர்கள், தொழிலாளர் தேசிய சங்கத்தின் உப தலைவர் ரட்ணசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பிராந்திய முகாமையாளர் வசந்த குணவர்தவிற்கு இடையில் இடம்பெற்ற இப் பேச்சுவார்த்தையில் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள 600 மேற்பட்ட தொழிலாளர்களை மீண்டும் பணிக்கு திரும்ப செய்தல் தொடர்பிலும், நீதிமன்ற விசாரணையிலிருக்கும் இருவேறு சம்பவங்கள் தொடர்பிலும் அதில் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.



## தவக்கால சிந்தனை

### கடவுளின் கொடையும் ஆசீரும் பொதுவானது

தவக்காலத்தின் இரண்டாவது வாரத்தில் பயணிக்கின்றோம். இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு "உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.எலியாவின் காலத்தில் மூன்றரை ஆண்டுகளாக வானம் பொய்த்தது. நாடெங்கும் பெரும் பஞ்சம் உண்டானது. அக்காலத்தில் இஸ்ரவேலரிடையே கைம்பெண்கள் பலர் இருந்தனர்.

ஆயினும் அவர்களுள் எவரிடமும் எலியா அனுப்பப்படவில்லை. சீதோனைச் சேர்ந்த சாரிபாத்தில் வாழ்ந்த ஒரு கைம்பெண்ணிடமே அனுப்பப்பட்டார் என தெரிவிக்கின்றார்.

இப்போதெல்லாம் மனிதர்கள் எனது நாடு, எனது மதம்,எனது இனம் எனும் குறுகிய வட்டத்துக்குள்ளேயே தங்களை அடக்கிக்கொண்டு சக மனிதனுடைய அன்பையும் கடவுளின் ஆசீர்வாதத்தையும் பெறத் தவறிவிடுகின்றனர்.

ஏற்றத் தாழ்வினை உருவாக்கிக் கொண்டு மனித மாண்பினை மறந்து செயற்படுகின்றனர். அதனையே இயேசு இன்றைய நற்செய்தியில் சுட்டிக்காட்டுகின்றார்.

யூதர்கள் தமக்கு இறைவனால் கிடைத்த கொடைகளை புறவினத்தாருக்கு வழங்குவதில் நாட்டம் கொள்ளவில்லை.

தமக்கு மட்டுமே அவைகள் கிடைக்க வேண்டும் என்று மார்தட்டிக் கொள்கின்றனர்.

கடவுளுடைய கொடையும் ஆசீரும் ஒரு இனத்திற்கு,மதத்திற்கு சொந்தமானதல்ல. இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்து சக மனிதனின் துன்பத்தில், தேவையில் பங்கெடுக்கத் தயாராக இருக்கவேண்டும் என்பதையே இயேசு நமக்கு இத் தவக்காலத்தில் கற்பிக்கிறார்

அருட்பணி அருண் ரெக்ஸ்...



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சாவகச்சேரி கிளை வெள்ளிக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதிச் சந்தியில் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோ திறந்து வைத்தார். படம் சாவகச்சேரி விசேட நிருபர்

## 'வெட்டவெளியில் கொட்டிக்கிடக்கிறது' கவிதை நூல் வெளியீடு




எ.எம்எம்.அனஸின் 'வெட்ட வெளியில் கொட்டிக்கிடக்கிறது' கவிதை நூல் வெளியீடு இன்று மாலை 4 மணிக்கு மருதானை டவர் மண்டபத்தில் இடம் பெறும். அல் ஹிக்மா கல்லூரி அதிபர் எம்.எம் மஹ்ஸூர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்துகொள்கிறார்.

தேசிய கல்வி நிறுவக சிரேஷ்ட விரிவுரையாளர் வி.என். உதயச்சந்திரன் மற்றும் ரூம் டூ ரீட்டின் சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட அதிகாரி கிருஷ்ணகுமார் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

# கோணேசப் பெருமானின் மஹாசிவராத்திரி பெருவிழா

**அன்புவழிபுரம் தினகரன் நிருபர்**



திருகோணமலை கோணேசப் பெருமானின் திருக்கோயிலில் 11.03.2021 மகா சிவராத்திரி பெருவிழா, சமய அனுட்டானங்கள், நான்கு சாம அபிசேகங்களும், பூசைகளும் பின்வரும் நேர ஒழுங்கின்படி இடம்பெறவுள்ளது.

1ம் சாம அபிசேகம் மாலை 4.30 மணி, தொடர்ந்து பூசை

2ம் சாம அபிசேகம் இரவு 8.30 மணி, தொடர்ந்து பூசை

3ம் சாம அபிசேகம் இரவு 10 மணிக்குத் தொடங்கி (லிங்கோற்பவர் காலம்) நள்ளிரவு 12.00 மணி, தொடர்ந்து பூசை

4ம் சாம அபிசேகம் அதிகாலை 4.00 மணி, தொடர்ந்து பூசை.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தாக்கங்கள் காரணமாக ஆலய நிர்வாகம் பக்தர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோள்.

விரதகாரர்களுக்கான தர்ப்பை அணிதல் நிகழ்வுகள் இடம் பெறமாட்டாது.

ஆலயத்தில் நீண்ட நேரம் தரித்திருந்து வழிபாட்டினை மேற்கொள்ளலை தவிர்க்கவும் மாலை 05.00 முதல் நள்ளிரவு 11.00 மணிவரை லிங்கோற்ப முன் லிங்கத்திற்கு தீர்த்தம் வார்க்கலாம்.

அனைவரும் கட்டாயம் முக கவசங்களை அணிந்திருத்தல் வேண்டும்.

இம்முறை கலைநிகழ்வுகள் இடம் பெறமாட்டாது.

சிவராத்திரி தினத்தன்று அடியவர்கள் வழங்கும் ஒத்துழைப்பைப் பொறுத்தே, மறுநாள் 12.03.2021 அன்று, பெருமானின் நகர்வலம் சிறப்பாக நடைபெற பேருதவியாக இருக்கும் என்பதை அனைவரும் சிந்தித்து செயல்படவும் என ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

## இலங்கை தொடர்பான பிரேரணையில்...

பிரேரணையில் உள்ளீர்க்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.எதிர்காலத்தில், போர்க்குற்றங்களுக்கு நீதி வழங்க அவசியமான ஆதாரங்களை திரட்டுதல், உறுதிப்படுத்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பாதுகாத்தல் என்பன அவசியமாகும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.அத்துடன், மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் என்பன தொடர்பில், எதிர்காலத்தில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினர், தொடர்ந்தும் ஒதுக்கப்படுதல், அழுத்தங்களுக்கு உள்ளாதல் என்பனவற்றைத் தடுப்பதும், ஊடக சுதந்திரம் மற்றும் ஜனநாயக வகிபாகத்தை பாதுகாப்பதும் முக்கியமானதாகும்.

யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கான வரையறைகளை விதிப்பதற்காக, நினைவுச் சின்னங்கள் அழிக்கப்படுதல் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக திருத்தப்பட்ட பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்க உயர் விருதுக்கு...

பெண்களின் தைரியத்தையும் தலைமைத்துவத்தையும், அமைதிக்கான வாதிடலையும் அங்கீகரித்து, நீதி, மனித உரிமைகள், பால்நிலை சமத்துவம், பெண்களை வலுவூட்டல் போன்றவற்றுக்காக, தனிப்பட்ட ரீதியில் அபாயத்தையும் பொருட்படுத்தாமல் பணியாற்றியமைக்காக, அவர்களை கௌரவப்படுத்தும் விதமாக இந்த விருது வழங்கப்படுகிறது.

2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்ட இந்த விருது வழங்கலில், இதுவரை 75 நாடுகளை சேர்ந்த 155 பெண்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர். இம்முறை 15 ஆவது ஆண்டாக இடம்பெறவுள்ள இந்த விருது வழங்கும் விழா, சர்வதேச மகளிர் தினமான திங்கட்கிழமை (08) காணொளி தொழில்நுட்பத்தினூடாக நடைபெறவுள்ளது.

இந்த விழாவில், விருதுக்காக தெரிவுசெய்யப்பட்ட பெண்களின் சாதனைகளை அங்கீகரித்து, அமெரிக்காவின் முதல் பெண்மணி கலாநிதி. ஜில் பைடன் (Jill Biden) தமது கருத்துக்களை பகிரவுள்ளார்.

ரனிதா ஞானராஜா, அச்சுறுத்தல் மற்றும் சவால்களுக்கு மத்தியில் நாட்டில் ஒதுக்கப்பட்ட மற்றும் பாதிப்புகளை எதிர்நோக்கும் சமூகங்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடுவதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், நீண்ட காலமாக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு இலவச சட்ட உதவியை ரனிதா வழங்கியுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

தனிப்பட்ட முறையில் போரினால் பாதிக்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுடனும் அவர்களது குடும்பத்தினருடனும் பணியாற்றிய தனது விரிவான அனுபவத்தின் அடிப்படையில், இலங்கையின் மிகவும் நலிவுற்ற மக்களுக்கு நீதியையும் பொறுப்புக்கூறலையும் பெற்றுக்கொடுப்பதில் ரனிதா அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளதாகவும் அமெரிக்க இராஜாங்க திணைக்கள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உள்நாட்டு விவகாரத்தில் சர்வதேசம்...

மேலும், ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பில் பேராயரின் கோபம் நியாயமானது. அதனால் தான் அதில் தற்போது கால தாமதம் ஏற்படுகின்றது. சாதாரண குற்றங்களை போன்றதொரு சம்பவம் அல்ல இது.

இந்த தாக்குதலுடன் தொடர்புபட்ட பலர் இன்னமும் வெளியில் உள்ளனர். இவ்வாறான தாக்குதல் இனிமேலும் இடம்பெறக்கூடாது என்பதற்காக நாம் சகல விதத்திலும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

ஜெனிவா விவகாரம்

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் இலங்கையின் நிலைப்பாட்டை நாம் ஏற்கனவே அறிவித்துள்ளோம்.

கடந்த காலத்தில் நல்லாட்சி அரசாங்கம் இந்த விடயங்களில் இலங்கையை பாதுகாக்க தவறிய காரணத்தினால் நாம் முன்னின்று போராட வேண்டிய நிலைமை உருவாகியது. ஆனால் இப்போது எமது அரசாங்கம் எதனை செய்ய வேண்டுமோ அதனை மிகச் சரியாக செய்து வருகின்றது.

இலங்கையின் நிலைப்பாடு என்ன என்பதையும், நாம் எவ்வாறான நடவடிக்கைகளை கையாள்வோம் என்பதையும், எமது நோக்கம் என்ன என்பதையும் வெளிவிவகாரத்துறை அமைச்சர் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

எம்மை பொறுத்தவரை மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பில் முன்வைத்த அறிக்கை பொய்களால் தயாரிக்கப்பட்ட ஒரு அறிக்கையாகும்.

இந்த அறிக்கையை நாம் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். பிரேரணையை நாம் நிராகரிப்பதாக தெரிவித்த பின்னரும் எமக்கு ஆதரவாக பல நாடுகள் குரல் கொடுத்துள்ளன.

பிரதான நாடுகள் எம்முடம் உள்ளனர் என்பது எமக்கு தைரியமளிக்கின்றது. இலங்கைக்கு எதிராக பிரேரணையை கொண்டுவந்து நடத்தப்படும் வாக்கெடுப்பில் நாம் தோற்றாலும், சர்வதேச நாடுகள் இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிடும் அதிகாரத்தை வழங்கப்போவதில்லை.

யார் வலியுறுத்தினாலும் போர் குற்றங்கள் தொடர்பில் எந்தவொரு விசாரணையையும் நடத்த மாட்டோம். இராணுவத்தை தண்டிக்கும் எந்தவொரு நடவடிக்கைக்கும் அரசாங்கம் இடமளிக்காது, இந்த பேச்சுக்கே இடமில்லை என்பதே அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாடாகும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இந்தியா எவ்வாறான நடவடிக்கை எடுக்கும் என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. இப்போது தமிழகத்தில் தேர்தல் ஒன்று இடம்பெறவுள்ள நிலையில் அவர்களின் உள்ளக அரசியல் நகர்வுகள் காணப்படும்.

ஆனால் இந்தியா எப்போதும் இலங்கைக்கு ஆதரவாக செயற்படும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்தியா இப்போது அமைதியாக இருந்தாலும் அவர் எமக்கு சாதகமாகவே தீர்மானமெடுப்பார்கள்.

ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதல்

பேராயரின் கோபம் நியாயமானது. இதனாலேயே இப்போதும் கால தாமதம் ஏற்பட்டுள்ளது, சாதாரண குற்றங்களை போன்றதொரு சம்பவம் அல்ல இது. இந்த தாக்குதலுடன் தொடர்புபட்ட பலர் இன்னமும் வெளியில் உள்ளனர்.

இவ்வாறான தாக்குதல் இனிமேலும் இடம்பெறக்கூடாது என்பதற்காக நாம் சகல விதத்திலும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

எனினும் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அரசாங்கத்தின் செயற்பாடுகள் மீது அதிருப்தியில் உள்ளதை வெளிப்படுத்தியுள்ளார். அவரது கோபம் நியாயமானது, அவரின் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்க அவர் ஆவேசமாக பேசுகின்றார். அதனை எம்மால் நிராகரிக்கவே முடியாது.

ஈஸ்டர் தாக்குதல் குறித்த விசாரணை அறிக்கை தற்போது சட்ட மாஅதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எட்டு இடங்களில் தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இந்த இடங்கள் குறித்த பரிசோதனை அறிக்கையும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தாக்குதல்களுடன் நேரடியாக தொடர்புபட்டதாக கருதப்படும் 32 பேரும், ஏதேனும் ஒரு விதத்தில் இந்த தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்களாக 241 பேரும் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேபோல் தொடர்ச்சியாக விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குற்றவாளிகளை எக்காரணம் கொண்டும் விடுதலை செய்ய மாட்டோம். தற்போது விளக்கமறியலில் உள்ள பிரதான குற்றவாளிகள் 32 பேருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க சட்ட மாஅதிபரை வலியுறுத்தியுள்ளோம்.

எனினும் அவர்களுக்கு எதிரான ஆதாரங்களை மேலும் திரட்டி குற்றத்தை உறுதியாக நிரூபிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. ஏனென்றால் இந்த குற்றவாளிகளை காப்பாற்ற பிரபல்யமான சட்டத்தரணிகள் முன்வருகின்றனர்.

எனவே இவர்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்கில் ஏதேனும் சிறிய பலவீனத்தன்மை காணப்பட்டாலும் அதனை பயன்படுத்தி குற்றவாளிகளை காப்பாற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவிடும்.

எக்காரணம் கொண்டும் இவர்கள் தப்பிக்கவே கூடாது, இவர்களை விடுதலை செய்து மீண்டும் பிரச்சினைகளை உருவாக்க நாம் ஒரு போதும் இடமளிக்க மாட்டோம். எனவே இவர்களுக்கு எதிரான சாட்சியங்களை மேலும் வலுப்படுத்தி சகலரையும் தண்டிக்கவே நாம் நடவடிக்கை எடுக்கின்றோம்.

அரசாங்கம் இந்த விடயத்தில் அமைதியாக இருக்கவில்லை. சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றோம். சட்ட மாஅதிபரிடம் சகல ஆவணங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. எனவே சட்டதுறையே அடுத்த கட்டமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சாரா எங்கேயென தேடுகின்றோம். மேலும் சாரா என்ற நபர் குறித்தும் அதிகளவில் கேள்விகள் எழுகின்றன, ஆனால் அவரும் இருந்ததாக கூறப்படும் குறித்த தாக்குதலில் 11 பேரின் உடல்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அவற்றில் 10 பேரின் உடல்களை அடையாளம் கண்டுள்ளோம். ஒருவரது உடலை அடையாளம் காணமுடியாதுள்ளது. ஆகவே அவர் சாராவாக இருக்கலாமா என சந்தேகப்பட்டு மரபணு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவர் உயிருடன் இல்லையா அல்லது அவர் இந்தியாவிற்கு சென்றதாக கூறிவிட்டு வேறு இடங்களில் உள்ளாரா என்றெல்லாம் பல்வேறு கேள்விகள் உள்ளன.

ஆனால் விசாரணைகளை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார்.

## கடந்த அரசே முழுப்பொறுப்பையும் ஏற்க...

இந்நிலையில், குறித்த தாக்குதலுக்கும் தற்போதைய அரசாங்கத்திற்கும் எந்தவித பொறுப்பும் இல்லை என குறிப்பிட்ட அவர், தாக்குதலுக்கு பின்னணியில் இருப்பவர்களை தண்டிப்பதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கம் என தெரிவித்தார்.

## உண்மையை தெளிவுபடுத்துவதற்கு...

அந்தவகையில் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சிலெட் மற்றும் மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கின்ற முக்கியமான நாடுகளின் பிரதிநிதிகளை இலங்கைக்கு விஜயம் செய்யும்படி அழைப்பு விடுக்கவுள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

## ஈராக்கில் பாப்பரசருக்கு...

ஈராக்கின் வடபகுதி பிராந்தியமான குர்திஷ் பகுதியின் தலைநகராக கருதப்படும் இர்பில் நகருக்கும் அவர் விஜயம் செய்துள்ளார்.ஒரு இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் அதிகமான கிறிஸ்தவர்கள் இர்பில் நகரில் தங்கியிருப்பதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. ஈராக்கின் சனத்தொகையில் 70 சதவீதமாகவுள்ள ஷியா முஸ்லிம்களின் தலைவர் ஆயத்துல்லா அலி சிஸ்தானியையும் அவர் நஜப் நகரில் சந்திக்கவுள்ளார்.

சிறுபான்மை சுன்னி முஸ்லிம்களின் தலைவர்களும் யதீசி இனத்தவர்களின் முக்கியஸ்தர்களும் இதன்போது பாப்பரசரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

## ஆயிரம் ரூபா கொடுப்பனவை...

அதற்கான வர்த்தமானியை இரண்டு தினங்களுக்கு முன்னர் தான் அரச அச்சகத்திற்கு அனுப்பியுள்ளதாக தொழில் ஆணையாளர் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்தார்.

சம்பள நிர்ணய சபையில் எடுக்கப்பட்ட தீர்மானம் 5 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

900 ரூபா அடிப்படை சம்பளத்துடன் 100 ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு அடங்கலாக ஆயிரம் ரூபாவை வழங்க வேணடுமென்று அண்மையில் சம்பள நிர்ணய சபையினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிவராத்திரி தினத்தன்று...

கொழும்பு, வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதி உட்பட இலங்கையின் சகல மாவட்டங்களிலுமுள்ள பெரும்பாலான சைவ ஆலயங்கள், இந்து நிறுவனங்கள், அறநெறிப் பாடசாலைகள் என்பனவற்றில் கொடிதின வைபவம் இடம்பெறும். உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை தலைவர் கா. தயாபரன் தலைமையில் கொடிதின நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் கொடி விற்பனை மூலம் கிடைக்கும் நிதியானது, அந்தந்த மாவட்டங்களிலுள்ள அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும், வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும் பயன்படுத்தப்பட்டு வருவது வழக்கமாகும் என்றும் தனபாலா தெரிவித்தார்.

தற்போது நாடளாவிய ரீதியில் பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கொடிதின நிகழ்ச்சிகள் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைய நடத்தப்படவிருக்கிறது.

## இராவண எல்ல வனத்தின் ...

அதிகாரிகள், பொலிஸார், இராணுவத்தினர் உள்ளிட்ட பலர் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால், தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாததை தொடர்ந்தே பெல் 212 ரக ஹெலிகொப்டரை, தீயை கட்டுப்படுத்தும் செயற்பாட்டுக்கு உதவுவதற்காக இலங்கை விமானப்படை அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட திடீர் தீப்பரவல் சம்பவத்தில், இதுவரை சுமார் 200 ஏக்கர் காடு தீக்கிரையாகியுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் தொடர்ந்து அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

# பெற்ற மனம் கல்லா?

## யாழ். மணியம் தோட்ட சம்பவம் உணர்த்துவது என்ன?

**கடந்த முதலாம் திகதி இரவு சமூக வலைத்தளங்களில் 27 செக்கன் காணொளி ஒன்றில், பெண்ணொருவர் சிறு குழந்தையை தடி ஒன்றினால் அடிகின்றார். அதன்போது அருகில் ஒரு பெண் நிலத்தில் எந்த சலனமும் இன்றி, படுத்து இருக்கிறார். குழந்தையை அடித்த பெண் அக்குழந்தையின் ஒற்றைக்கையை பிடித்து நிலத்தோடு "தர தரவென" இழுத்துக்கொண்டு அறைக்குள் சென்று அங்கும் குழந்தையை அடித்து அறைக்கதவை மூடிக்கொள்கிறார். அத்துடன் அந்த காணொளி முடிவுறுகிறது. அந்த காணொளி வைரல் ஆகின்றது.**

பலரும் அதனை பகிர்ந்து குழந்தையை தாக்கும் பெண்ணை திட்டியும், குழந்தையை காப்பாற்ற என்ன செய்வது என தெரியாது தமது ஆதங்கங்களை சமூக வலைத்தளங்களில் கொட்டியும் தீர்த்தனர்.

அது தொடர்பில் சில ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட சிலர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையம், யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலர் மற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட தரப்பினரின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

இரவு நேரம் ஆகையாலும், அந்த பெண் குறித்து உறுதியான தகவல்கள் கிடைக்க பெறாததாலும் உடனடியாக எவராலும் எதுவும் செய்ய முடியாத நிலை.

மறுநாள் காலை கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில், யாழ்ப்பாண தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெனோர்ண்டோ தலைமையில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் உள்ளிட்ட பொலிஸ் குழுவினர், ஊடகவியலாளர்கள், நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், குடும்ப நல உத்தியோகஸ்தர் உள்ளிட்டவர்கள் குழந்தையை மீட்க நடவடிக்கை எடுத்தார்கள்.

அரியாலை நாவலடி கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வீட்டுத் திட்டம் ஒன்றின் கீழ் வழங்கப்பட்ட வீட்டில் வாடகைக்கு அக்குடும்பம் வசித்து வருகின்றது எனும் தகவலின் அடிப்படையில் அவ்விடத்திற்கு சென்றனர்.

அங்கு சென்ற பொலிஸார் உள்ளிட்ட குழுவினர் குழந்தையை மீட்டு குழந்தையை அடித்த பெண்ணிடம் விசாரணைகளை முன்னெடுத்தனர். குழந்தையுடன் மூர்க்கத்தனமாக நடந்து கொண்டது, குழந்தையின் தாயார் தான் என்பதனையும் விசாரணைகளின் ஊடாக அறிந்து கொண்டனர்.

குறித்த பெண்ணின் குடும்பமானது திருகோணமலையை சொந்த இடமாக கொண்டது. அப்பெண் திருகோணமலையில் பிறந்து வளர்ந்தவர். மத்திய கிழக்கு நாட்டிற்கு தொழில்பார்க்கச் சென்றுள்ளார்.

அங்கு பணிப்பெண்ணாக வேலை செய்த சமயம் இந்தியாவை சேர்ந்த ஒருவருடன் முகநூல் ஊடாக காதலில் வீழந்துள்ளார். அதன் பின்னர் இருவரும் அங்கே ஒன்றாக வாழந்துள்ளனர். கடந்த ஆண்டு ஜூன் மாதம் அப்பெண் குழந்தையை பிரசவித்துள்ளார்.

அக்கால பகுதியில் கொரோனா பெருந்தொற்று நோய் உலகையே உலுக்கிக்கொண்டு இருந்தது. அதனால் தொழில் வாய்ப்புக்கள் இன்றியும் தொற்று அபாயத்தில் இருந்து குழந்தையை காக்கவும் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுத்தனர். அதனால் மனைவியையும் பிள்ளையையும் இலங்கைக்கு திரும்பி செல்லுமாறும், கூறி இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளார் கணவன்.

அதனை அடுத்து கடந்த ஜனவரி மாதம், 7 மாத கைக்குழந்தையுடன் நாடு திரும்பியுள்ளார் அப்பெண். 21 நாட்கள் தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டும், பின்னர் வீட்டில் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டு இருந்தார்.

அக்கால பகுதியில் பொருளாதார ரீதியாக பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுக்க ஆரம்பித்தார். தனிமைப்படுத்தல் கால பகுதியிலையே பெருமளவான பணம் அவருக்கு செலவாகியுள்ளது. இந்நிலையில் இலங்கைக்கு செல்லுங்கள் என அனுப்பி வைத்த கணவன் பணம் அனுப்பாததால் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் விரக்தியில் காணப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசாரணையின் போது ஏன் குழந்தையை அடித்தீர்கள்? என கேட்ட போது "நான் மனக்குழப்பம் ஏற்பட்டு மன நிலை பாதிக்கப்பட்ட நிலையில் என்ன செய்கிறேன் என தெரியாமலே குழந்தைக்கு அடித்தேன்" என கூறியுள்ளார். மன குழப்பத்திற்கு மருந்தெடுத்தீர்களா ? என கேட்ட போது இல்லை என்றே பதில் அளித்தார்.

அதேவேளை குழந்தை தொடர்பான ஆவணங்களை தனிமைப்படுத்தல் முகாமில் தொலைத்து விட்டதாகவும் பொலிஸ் விசாரணையின் போது தெரிவித்திருந்தார்.

அனைவரின் மனங்களையும் உலுக்கிய அந்த காணொளியை எடுத்தவர், அந்த பெண்ணின் சகோதரன் என பொலிஸ் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டது.

எதற்காக காணொளி எடுத்தீர்கள் என கேட்ட போது, "அக்கா குழந்தையை அடிப்பதை பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இதனை எனது அப்பாவிற்கு காட்டவே எடுத்தேன். பின்னர் அக்கா அந்த வீடியோவை தா அவருக்கு (தனது கணவருக்கு) அனுப்புவோம் எனக் கேட்டார் அதனால் அவருக்கு கொடுத்தேன். அக்கா அதனை தனது கணவருக்கு அனுப்பினார். அவர் தான் சமூக வலைத்தளங்களில் அந்த காணொளியை பகிர்ந்தார்" என அப்பெண்ணின் சகோதரன் கூறினார்.

எனது கணவருக்கு அந்த காணொளியை அனுப்பினேன். அவர் அதனை பார்த்து விட்டு என்னை ஏசினார். குழந்தைக்கு அடிக்காதே பணம் அனுப்புகிறேன். என கூறினார். ஆனாலும் அவர் அந்த காணொளியை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்திருக்க மாட்டார் என அப்பெண் கூறினார்.









அதனை அடுத்து அப்பெண்ணையும் குழந்தையையும் மீட்டு யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்ற பொலிஸார் விசாரணைகளின் பின்னர் பெண்ணையும் குழந்தையையும், யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் (சிறுவர் நீதிமன்றம்) ஆஜர்படுத்தினர்.

சம்பவம் தொடர்பில் ஆராய்ந்த மேலதிக நீதிவான், தாயாரையும் குழந்தையும் சட்ட மருத்துவ நிபுணர் முன்னிலையில் முற்படுத்த வசதியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்க உத்தரவிட்டார்.

அத்துடன், தாயாரின் மனநிலை தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரி ஊடாக உளநல மருத்துவ வல்லுநரிடம் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் நீதின்றம் உத்தரவிட்டது. தற்போது தாயும் சேயும் வைத்திய கண்காணிப்பில் உள்ளனர்.

இந்நிலைமையில் குழந்தையை தாக்கியமை தொடர்பிலான வழக்கு விசாரணைகள் மீண்டும் எதிர்வரும் 09ஆம் திகதி யாழ்.மேலதிக நீதவான் நீதிமன்றில் (சிறுவர் நீதிமன்றம்) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. அன்றைய தினம் தாயாரின் உளநல மருத்துவ அறிக்கை, தாய் மற்றும் குழந்தை தொடர்பிலான சட்ட வைத்திய அதிகாரியின் வைத்திய அறிக்கை என்பன நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

குழந்தையை தாக்கிய காணொளியினை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்த பலரும் அப்பெண்ணை சகட்டு மேனிக்குள் குற்றம் சாட்டி பெண் மீதான தமது வன்மங்களை தீர்த்துக்கொண்டனர்.

குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்களை கண்காணிக்க அவர்களுக்கான வைத்திய சேவைகளை வழங்க என அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட பொறிமுறைகள் உரிய முறையில் இயங்காமையே இந்த சம்பவத்திற்கு காரணம் எனவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. தனது

குழந்தையை தாக்கிய பெண்ணை மாத்திரம் குற்றம் சாட்டி சமூகம் தப்பித்துக்கொள்ள முனைகின்றது. இந்த சமூகமும் தன்னை சுய பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். அந்த பெண்ணின் செயலுக்கு இந்த சமூகமும் எதோ ஓர் வகையில், காரணமாக அமைந்துள்ளதும் மறுக்க முடியாத உண்மை. எனவே தாம் சார்ந்த சூழலில் மீண்டும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது இருக்க அனைவரினதும் பங்களிப்பும் தேவை.

யுத்தம், இயற்கை அனர்த்தம் எதுவாகிலும் அது பெண்களையும் சிறார்களையுமே அதிகளவில் பாதிக்கின்றது. பெண் தன் குழந்தையை இப்படியும் அடிப்பாளா என்பவர்கள், தற்போதைய கொரோனா சூழல் ஆதரவற்ற ஒரு பெண்ணின் மீது எற்றிவைத்திருக்கும் சுமையைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

**மயூரப் பிரியன்...**

## ஒரு முதுகில் விழுந்த அடி

தாயொருவர் சிறு குழந்தையை மிக மோசமாக தடியால் அடிக்கும் காணொலி ஒன்று வெளிவந்திருந்தது. அதனைத் தொடர்ந்து இன்று அவரை பொலிஸ் விசாரணை செய்தது. இது தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் சமூக வலைத்தளங்களில் சொல்லப்பட்டு வருகின்றன. அந்த தாயை ஒரு மோசமானவர் என்று சொல்வது பிரபலமாக உலா வருகின்றது. எப்பொழுதும் உச்ச கட்ட வன்முறைகள் நடக்கும் பொழுது அதற்கு கொந்தளிப்பதும் பிறகு அதே வன்முறைகளை வேறு வேறு அளவில் நடக்கும் பொழுது பாராமல் இருப்பதுவும் நமது சமூகத்தின் பொதுப் பொழுதுபோக்கு.

இங்கு அந்தத் தாய் செய்தது குற்றம்தான். ஆனால் அதை வெளிப்படுத்தும் விதம், அவர் மட்டும்தான் இப்படிச் செய்தார் என்பதுபோல மொத்த நீதிமான்களின் தடிகளும் நீண்டிருக்கின்றது. நமது சமூகம் வன்முறையை தண்டனைகளின் வழி சாதாரணமானதொன்றாக மாற்றி வைத்திருக்கிறது. அதன் சிறு விளைவுதான் அந்தத் தாயின் கரத்தில் வெளிப்பட்டிருக்கிறது.

நமது சமூக அமைப்பின் தண்டனைகளை விரிவாக உரையாடாமல், மாற்றாமல் நாம் இவற்றை மாற்ற முடியாது. கோபப்படுவது நியாயம்தான் ஆனால் விளைவுகளின் மீது மட்டும் மிகையாகக் கோபப்படுவது எந்த விதத்திலும் பயன்படாது. நாளை இன்னொரு பிள்ளை அடி வாங்கத் தான் போகிறது. குழந்தைகளை இன்னொரு மனிதர் என்று மதிக்கும் பழக்கம் நம் சமூகத்தில் இல்லை. குழந்தையை 'அது' என்றே நாம் விழிக்கிறோம். அவர்களுக்கென்று சுயமரியாதை இல்லை. அவர்களின் உடல் மீதும் வாழ்வின் மீதும் பெற்றோரும் சமூகமும் அதிகமான உரிமையைக் கொண்டிருப்பதாக நம்புகின்றனர். இதை ஒரு கலாசார உரிமையாக கருதுகிறார்கள். தாய் தகப்பன் அடிக்கலாம், ஆசிரியர் அடிக்கலாம், மாமா சித்தப்பா அண்ணா அடிக்கலாம் என்று நியாயம் சொல்லும் யாருக்கும் அந்தத் தாயை நோக்கி விரலை நீட்ட எந்த அருகதையும் இல்லை.

நமது சமூகம் பாலியலை மொழியில் புதைத்து வைத்திருக்கும் முறையை பார்த்தால் சற்று விளங்கும். உதாரணத்திற்கு திருமணம் செய்வது எதற்காக? அடிப்படை உடலியல் மற்றும் துணைத் தேவை. ஆனால் பொதுச் சமூகம் காமத்தினை பற்றி பேசுவதற்கு பயன்படுத்தும் மொழி எத்தகையது? கலியாணம் கட்டுவது பிள்ளை பெறுவதுக்கு என்பது தான் இவர்களின் உரையாடல், பிள்ளை ஒரு சாட்டு, பிள்ளை ஒரு நிபந்தனை. இப்படியாக சிந்திக்கும் ஒரு சமூகம் நாம், உண்மைக்கு முன் நிற்கத் தயங்குபவர்கள். கல்யாணம் செய்வதற்கு முன் அதை எதற்காக செய்கிறோம் என்பதை கலாசார வரைவிலக்கணங்களுக்கு வெளியில் நாம் அறிய வேண்டும், நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும். பிள்ளை பெறுவது ஒரு நிபந்தனையல்ல. பெற்று சுயமரியாதையுடனும் சுதந்திரத்துடனும் பிள்ளைகளை வளர்க்க இயாலதவர்கள் பிள்ளை பெறுவதை நிறுத்த வேண்டும்.

இந்தத் தாயின் கரத்தில் நீண்ட தடிக்குப் பின்னால் இந்த உரையாடலெங்கும் கவனிக்கத் தவறுகிற ஒருவர், அக் குழந்தையின் தந்தை. இது ஒரு ஆணாதிக்க சமூகம். அதன் ஆணாதிக்கத்தின் நெருக்கடியால் சிதையும் பெண்களை குற்றவாளிகளாக்குவது அதன் கடைந்தெடுத்த ஆணாதிக்கப் பார்வையின் பிரதிபலிப்பு.

பிரச்சினைகள் பின்னாலிருக்கும் கருத்தியலைத் தான் நாம் இல்லாமலாக்க வேண்டும். ஒரு நாளும் பிரச்சினைகளைத் தடுப்பதன் மூலம் கருத்தியலை இல்லாமலாக்க முடியாது. கருத்தியலை அழிப்பதன் மூலமும் நமது காலத்திற்கான கருத்தியலை உருவாக்குவதும் நடைமுறைப்படுதுவதன் ஊடாகவுமே பிரச்சினைகளை அழிக்க முடியும்.

நமக்கு முன் தடியோடு நின்று கொண்டிருப்பது இந்த ஆணாதிக்க கருத்தியல் சிந்தனையே தவிர அந்தத் தாயல்ல. எங்களைச் சுற்றி இருக்கும் ஒவ்வொருவர் மீதும் விழும் அடியை தன் மேல் விழுவதாக ஒரு சமூகம் உணரும் போதே நாம் ஒரு சமூகம்.

அலெக்ஸ் ஹேலியின் ஏழு தலைமுறைகள் நாவலில் ஒரு வரி வரும், நாம் எனும் சதைப்பிண்டத்தில் நாம் என்றால் நீ, நீ என்றால் நாங்கள்.

**பிரதீப் குணரட்ணம்** -முகப்புத்தகத்தில் இருந்து...

# மார்ச் மாதத்தில் மட்டும் கோஷம் எழுப்புவதால் தமிழ் மக்களது பிரச்சினைகள் தீரப்போவதில்லை

## எமது பிரச்சினைகளை நாமே பேசித் தீர்க்க வேண்டும் என்கிறார் ரவிக்குமார்



ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதத்தில் வருகின்ற ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டு காலத்தில் கோஷம் எழுப்பி வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான ஏனைய கட்சிகளோ இதுவரை தமிழ் மக்களுக்கு எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டது கிடையாது என புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் எஸ். ரவிக்குமார் குற்றம்சாட்டியுள்ளார்.

யுத்தம் முடிவுக்கு வந்து 15 வருடங்கள் பூர்த்தியாகின்ற நிலையில் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ் கட்சிகள் கடந்த ஐந்து வருடங்களில் நல்லாட்சி அரசாங்கத்திற்கு முட்டுக் கொடுத்து தமது சுய தேவைகளை மட்டும் பூர்த்தி செய்தனவே தவிர தமிழ் மக்களுக்கு எந்தவிதமான ஆக்கபூர்வ முன்னேற்றகரமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டது கிடையாது எனவும் அவர் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் ஐந்து வருடங்கள் சுகபோகம் அனுபவித்து வந்த தமிழ் தேசிய கூட்டமைப்பினர் அந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு எத்தனையோ விடயங்களை செய்து சாதனை படைத்து இருக்கலாம்.

குறிப்பாக இன்று வரை பேசுபொருளாக இருந்து வரும் தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம், காணிகள் விடுவிப்பு, பிரதேச அபிவிருத்தி போன்ற விடயங்கள் எவற்றையுமே அந்த ஐந்து வருடங்களில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு செய்யவில்லை. மாறாக தென் இலங்கையில் நல்லாட்சி அரசாங்கம் தளம்பல் நிலையை கண்ட போதெல்லாம் அவர்களுக்கு ஆதரவு வழங்கி வந்தது.

ஜெனிவா மாநாட்டில் அந்த காலப்பகுதியிலேயே இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவாக இருந்து வந்தது. ஆனால் இப்போது இந்த ஆட்சி வந்ததும் புதிதாக பிறந்து வந்தவர்கள் போல் அரசாங்கத்திற்கு எதிரான பிரசாரங்களை உலகளாவிய ரீதியில் மேற்கொண்டுவருகின்றது. இலங்கையில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்துவரும் அவர்கள் இலங்கைக்கு எதிராகவே எந்தவிதமான தேசப்பற்றும் இல்லாது செயற்பட்டு வருகின்றமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

தமிழ் மக்களுக்கு நல்லதொரு எதிர்காலம் தேவை, சுபிட்சமான வாழ்வு அமைய வேண்டும் என்று இவர்கள் நினைப்பார்களாயின் அரசாங்கத்துடன் ஒற்றுமையாகச் சென்று உள்நாட்டிலேயே பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு பேச்சுவார்த்தைகளை நடத்தி வெற்றி காண வேண்டுமே தவிர வெளிநாடுகளில் கோஷம் போடுவதால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை.

கடந்த பல வருடங்களாக காணாமல் போன உறவுகளைத் தேடி அலைந்து வரும் உறவுகளுக்கு தக்கதொரு ஆறுதல் கூறாது அவர்களை உசுப்பேற்றி போராட்டங்களை நடத்தி அவர்களது எதிர்காலத்தை தமிழ் தலைமைகள் மழுங்கடித்து வருகின்றன. தமது சுய தேவைகளுக்காகவே தமிழ் கட்சிகளின் தலைவர்கள் இவ்வாறு செயற்படுகின்றார்கள்.

அத்துடன் எதிர்கால இளைஞர் சந்ததியையும் இவர்கள் இதுபோன்ற உசுப்பேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட வைத்து அவர்களது வாழ்க்கையும் கேள்விக்குறியாகி வருகிறார்கள். எனவே ஜெனீவாவிற்கு சென்று எந்த விதமான நன்மையையும் அடையப் போவதில்லை.

எமது பிரச்சினைகளை நாமே பேசித் தீர்க்க வேண்டும். தற்போது ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரது தலைமையில் சிறந்ததொரு அரசாங்கம் நாட்டை நிர்வகித்து வருகின்றது. இந்த அரசாங்கம் எதிர்வரும் 20 வருடங்களுக்கு ஆட்சியில் இருக்கும். அதனால் அதனை மனதில் கொண்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளை இதயபூர்வமாக, உணர்வு பூர்வமாக சிந்தித்து தீர்க்க வடக்கு கிழக்கு தலைமைகள் முன்வரவேண்டும் என்றும் தமிழ் கட்சிகளுக்கு ரவிக்குமார் அழைப்பு விடுத்தார்.

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429294, 2429296
பெக்ஸ் : 2429329

சார்வரி வருடம் மாசி மாதம் 23ம் நாள் ஞாயிற்றுக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 றஜப் பிறை 22

# மகளிர் தினம் வெறும் கொண்டாட்ட நாள் அல்ல

நாளை உலகெங்கும் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட வுள்ளது. நீண்ட காலமாகவே உலக நாடுகள் இத்தினத்தைக் கொண்டாடி வருகின்றன. இவ்வாறு கொண்டாடப்படுவதால் மகளிர் விவகாரங்களில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா என்ற ஒரு கேள்வியுடன், சர்வதேச மகளிர் தினம் அனுஷ்டிக்கப்படுவது எப்போது முடிவுக்கு வரும் என்ற கேள்வியும் தொக்கி நிற்கவே செய்கிறது. இந்த மகளிர் தினத்துடன் மற்றொரு சர்வதேச தினத்தையும் நாம் தொடர்புபடுத்திப் பார்க்க முடியும். அடுத்த மே முதலாம் திகதி வரவுள்ள சர்வதேச தொழிலாளர் தினத்தன்று முன்நிறுத்தப்படும் உலகத் தொழிலாளர் சமூகமும் சிக்காக்கோ போராட்ட காலம் முதல் இன்றுவரை பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்களை நிகழ்த்தி வருகின்ற போதிலும் முதலாளித்துவத்தின் அலுங்குப் பிடியில் இருந்து தொழிலாளர் சமூகம் எப்படி இன்றளவும் மீள முடியாது தவிக்கிறதோ அதேபோலத்தான் ஆணாதிக்க கோரப்படியில் இருந்து சர்வதேச மகளிர் சமூகமும் விடுபடும் வழி தெரியாது தவித்து வருகிறது என்பதே உண்மை.

பெண்கள் எதிலிருந்து முதலில் விடுபட வேண்டுமென்றால் தம்மைப் பற்றி அவர்களே உருவாக்கி வைத்திருக்கும் தவறான சிந்தனைகளில் இருந்துதான். ஆண் உரிமைகளை பகிர்ந்து கொள்ளவோ அல்லது விட்டுத்தரவோ முன்வந்தாலும் பெண்களே அதை விரும்புவதில்லை. தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் காணப்படும் சில நம்பிக்கைகள், சமய மற்றும் கலாசார ரீதியான சடங்குகள் என்பனவற்றுக்கு ஆண்கள் அவசியமில்லை எனக் கருதினாலும் பெண்கள் அவை எல்லாம் இருக்கத்தான் வேண்டும் என்ற கருத்தை முன்வைப்பதை பார்க்க முடிகிறது. விதவைகள் தொடர்பான தமிழ்ப் பெண்களின் நம்பிக்கைகள் பெரும்பாலான பெண்கள் அப்படியே பின்பற்றப்படுவதையே விரும்புகிறார்கள். பெண்கள் பெரிய பட்டங்கள் பெற்று உயர் பதவிகளில் வீற்றிருக்கலாம். இலங்கையின் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பெருமளவு பெண்கள் பணியாற்றி வருகின்றனர். ஏராளமானோர் கைநிறைய சம்பாதிக்கின்றனர். இலங்கையின் பிரதான தொழில் துறைகளான ஆடைக் கைத்தொழில் துறை மற்றும் பெருந்தோட்டத்துறை ஆகிய இரு துறைகளிலும் பெருமளவில் பணியாற்றி வருபவர்கள் பெண்களே.

இவை மகிழ்ச்சிக்குரிய தகவல்களானாலும் இவ்விரு துறைகளிலும் பணியாற்றி வருபவர்கள் பெருமளவு சுரண்டல்களுக்கு ஆளாகியுள்ளனர் என்பதும் கடுமையான உழைப்பின் பின்னரும் வாழ்வதற்கான வருமானம் கிட்டாதவர்களாக இருக்கிறார்கள் என்பதும் அனைவருமே அறிந்த உண்மையாக இருந்தாலும் இந்நிலை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த வாரமஞ்சரி இதழின் இன்னொரு பக்கத்தில் வெளியாகி இருக்கும் மலையகப் பெண் தொழிலாளர்கள் தொடர்பான கட்டுரை அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக இருக்கிறது. பல்வேறு தோட்டங்களில் பணியாற்றும் பெண் தொழிலாளர்கள் தாம் மலைகளில் பணியாற்றும்போது இயற்கை உபாதைகளில் இருந்து விடுபடுவதற்கான எந்த வசதிகளும் மலைகளில் செய்து தரப்படாத சூழலே காணப்படுவதாக குறிப்பிடுகின்றனர். பணியாற்றும் தேயிலை மலைகளில் மலசல கூடங்கள் கிடையாது. என்றைக்குமே இருந்ததில்லை. உபாதை ஏற்பட்டால் பற்றைக்காட்டுப் பக்கமே ஒதுங்க வேண்டும். கழுவுவதற்கு தண்ணீர் கிடையாது. மாத விடாய் காலமானால் பெரும் அவஸ்தைகளை அனுபவிக்க வேண்டும். வேலையைத் தொடர முடியாத நிலை என்றால் அரைநாள் விடுமுறை கேட்கும்போது கங்காணி அல்லது சுப்பர்வைசர்மார் நிலைமைகளை புரிந்து கொள்ளாமல் ஏன், எதற்கு என பல கேள்விகளைக் கேட்பார்கள். பகல் உணவு அருந்துவதற்கான ஒரு தனி இடம் தண்ணீர் வசதியுடன் கிடையாது. மழைகாலம் என்றால் நனைந்தபடியே தான் சாப்பிட வேண்டியிருக்கிறது என்றெல்லாம் அவர்கள் தெரிவிக்கின்றனர். இவை மிகவும் அவசியமான நிறைவேற்றி வைக்க வேண்டியவை என்பது நம்மில் பலர் சிந்தித்தும் பார்க்காதவை. எத்தனையோ கோலாகலமான மே தினங்களும் மகளிர் தினங்களும் கடந்து சென்ற பின்னரும் அரசாங்கமும் வேலை கொள்வோரும் இத்தேவைகளை நிறைவேற்றி வைத்தமாதிரித் தெரியவில்லை.

ஆடைத் தொழிற்சாலைகளில் கழிப்பிட வசதி உள்ளதாயினும் அவசியமான வேளைகளில் எல்லாம் அவற்றை உபயோகிப்பதில் கட்டுப்பாடுகள் காணப்படுவதாகவும் கண்காணிப்பாளர்களின் முன் அனுமதி பெற்ற பின்னரே கழிப்பறைகளை உபயோகிக்கலாம் என்றும் தெரிகிறது.

எனவே தொழிலாளர் உரிமைகளும் பெண் உரிமைகள் மற்றும் சமத்துவமும் என்றைக்கும் தீர்க்கப்படுவதாக இல்லாமல் ஓயாத கயிறிழுப்பாகவே இருந்து வருகிறது. எனவே இரண்டு விடயங்களிலும் ஓயாத போராட்டங்கள் நிகழ்த்தப்படுவதன் மூலமே உரிமைகளைப் பெற முடியும் என்பதே நடைமுறை உண்மை. ஆண்களின் உலகமாக, ஆண் தலைமைத்துவத்தின் கீழ் இயங்குவதாக சமூக வாழ்க்கை அமைந்திருப்பதால் மகளிர் முதல் கட்டமாக தமது தவறுகளையும் நம்பிக்கைகளையும் திருத்திக்கொண்டு ஆண்கள் வசமிருக்கும் உரிமைகளுக்காக குரல் கொடுக்க வேண்டும். பெண்கள் தமது பல உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள் என்றால் அதற்கு கணிசமான ஆண்களின் ஆதரவு இருந்திருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. பெண்கள் உரிமைகளைப் பெறுவதில் ஆண்கள் அல்ல; பெண்களே முன்நின்று குரல் கொடுக்க வேண்டியது அவசியம்.

இலங்கையில் உள்ள பெண்கள் அமைப்புகளை எடுத்துக் கொண்டால் பெண் உரிமைகளுக்காக குரல் கொடுப்பவையாக அவை இல்லை. பெருந்தோட்டங்களில் மலைகளில் பணியாற்றும் பெண் தொழிலாளர்களுக்கு கழிப்பறை மற்றும் உண்ணும் இடங்களை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதன் பேரிலான கலகக்குரல்களை தமிழ் மற்றும் சிங்கள பெண் அமைப்புகள் குரல் கொடுக்க முன்வருமா? பெரும்பாலான பெண் அமைப்புகள் ஒன்று கூடிக் கலையும் அமைப்புகளாகவும் பெயருக்காக நற்பணி செய்பவையாகவுமே உள்ளன. எவை எல்லாம் பெண் உரிமைக்கும், விடுதலைக்கும் குறுக்காக நிற்கின்றனவோ அவை மதமாகவோ, கலாசாரமாகவோ அல்லது பாரம்பரியமாகவோ, எவையாக இருந்தாலும், அவற்றை எதிர்த்து நிற்கும் பண்பை நாம் தமிழகத்தில் காண்பதுபோல இலங்கை தமிழ்ப் பெண்ணுலகில் காண முடிவதில்லை என்பது வருத்தத்துக்குரியது. மகளிர் உரிமை, விடுதலை என்பது மேம்போக்கானது அல்ல. ஒரு நாள் கூத்துமன்று. இலங்கை தமிழ் மகளிருக்கு நிறைய பிரச்சினைகள் உள்ளன. வாழ்வாதார பிரச்சினைகள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள், தற்கொலைக்குத் தூண்டும் அளவுக்கு பெண்களை நெட்டித்தள்ளும் பிரச்சினைகள் என சொல்லி மாளாத பிரச்சினைகளுக்கு தீர்வுகள் காணப்பட வேண்டும். இத்தினத்தை ஒரு நாள் கொண்டாட்டமாகக் கருதாது, வசதியும் வாய்ப்பும் சேவை மனப்பான்மை கொண்ட பெண்கள் இப்பெண்களின் விடுதலைக்காக பரந்த அளவில் சேவையாற்ற முன்வர வேண்டும். பெண்கள் களத்தில் இறங்கினால் ஆண்களும் கை கொடுப்பார்கள்.

தினகரன் விளம்பரம் : 0112429367 | விற்பனை பிரிவு : 0112429444, 0112429378 | விளம்பர முகாமையாளர் : 0112429673 | தினகரன் ஆசிரியபீடம் : editor.vm@lakehouse.lk

# ஜெனீவா பிரேரணையை தோற்கடிக்கும் தீவிரமான பிரயத்தனத்தில் இலங்கை!



## இலங்கை தொடர்பான வாக்கெடுப்பு 22ஆம் திகதி

**உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தொடர் பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்து விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகி, அதன் பிரதிகள் பல்வேறு தரப்பினருக்கும் வழங்கப்பட்டு வரும் நிலையில், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணை விவகாரமானது நாட்டின் அரசியலில் பரபரப்பான விடயமாகியுள்ளது.**

உள்நாட்டில் அவ்விவகாரம் எதிரணி யினராலும், கிறிஸ்தவ மத தலைவர்களாலும் விமர்சிக்கப்பட்டு வருகின்ற சூழ்நிலையிலேயே, ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை சர்வதேச ரீதியிலான சவாலொன்றுக்கு முகங்கொடுத்துள்ளது.

தற்பொழுது நடைபெற்று வருகின்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 46வது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான அறிக்கையொன்றை மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பித்திருந்தார். எனினும், இலங்கை மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவிருக்கும் இலங்கை குறித்த வாக்கெடுப்பில் அரசுக்கு சர்வதேச நாடுகளின் ஆதரவைத் திரட்டும் பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளார்.



## சர்வதேச நாடுகளின் ஆதரவை திரட்டுவதில் அரசாங்கம் இராஜதந்திர ரீதியில் கடும் முயற்சி

அரசுக்கு ஆதரவு திரட்டும் நோக்கில் கொழும்பிலுள்ள சர்வதேச நாடுகளின் தூதுவர்களை வெளிவிகார அமைச்சர் அவசர அவசரமாக சந்தித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் பலவற்றுடன் இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக இராஜதந்திர ரீதியில் பேச்சுகளை நடத்தி வருவதுடன், நடைபெறவிருக்கும் வாக்கெடுப்பில் தமக்கு ஆதரவளிக்குமாறு அந்நாடுகளிடம் கோரிக்கைகளை விடுத்து வருகிறது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு நேரடியாகக் கடிதங்களை அனுப்பியுள்ள நிலையில், அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கொழும்பில் தொடர் சந்திப்புகளை நடத்தி வருகிறார். பிரேசில், ஜப்பான், தென்கொரியா, மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் தூதுவர்கள் உள்ளிட்ட பலருடன் இச்சந்திப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

முக்கியமாக கடந்த 24ஆம் திகதி மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான விவாதத்தில் பல நாடுகள் உரையாற்றியிருந்தன. அந்த விவாதத்தில், இலங்கைக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்த நாடுகளை விட, இலங்கையின் பொறுப்புக் கூறல் விடயத்தில் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கருத்துக்கு ஆதரவாகவே பல நாடுகள் கருத்துகளை முன்வைத்திருந்தன.

இந்த நிலையில், இலங்கை குறித்து ஒரு நாள் வரைபொன்று தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் அதற்கு ஆதரவு திரட்டும் முயற்சிகள் ஒருபக்கம் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில், மறுபக்கத்தில் இதனை முறியடிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. சீனா உள்ளிட்ட இலங்கைக்கு நட்பான நாடுகள் நேரடியாகவே பிரேரணையை நிராகரித்து கருத்துகளை முன்வைத்துள்ளன.

இவ்வாறான நிலையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடிதமொன்றை அனுப்பியிருந்தார். கடந்த சில வாரங்களாக இரு நாட்டுக்கும் இடையில் நிலவி வருகின்ற இராஜதந்திர உறவுகளின் போக்கை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது, இந்தியா இலங்கைக்கு ஆதரவு தெரிவிப்பதற்கான வாய்ப்புகளே அதிகம் இருப்பதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

அவ்வாறு இல்லாத பட்சத்தில் இந்த விவகாரத்தில் இந்தியா நடுநிலைப் போக்கைக் கடைப்பிடிப்பதற்கும் சந்தர்ப்பம் உள்ளதாக சர்வதேச இராஜதந்திர அவதானிகள் கருதுகின்றனர்.

இந்நிலையில் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதுவர்களும் தமது மட்டங்களில் ஒத்துழைப்புக் கோரும் சந்திப்புகளை நடத்தி வருகின்றனர்.

மறுபக்கத்தில், இலங்கை தொடர்பாக சமர்ப்பிக்கப்படவுள்ள தீர்மானத்தில், கடுமையான சொற்பதங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என மேற்கு ஐரோப்பா உள்ளிட்ட ஏனைய நாடுகளின் குழு நடத்திய உத்தியோகப்பற்றற்ற கலந்துரையாடலில் வலியுறுத்தியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

டென்மார்க், நோர்வே, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், லீச்டென்ஸ்டைன், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள், மேற்கு ஐரோப்பா மற்றும் ஏனைய நாடுகளின் குழுவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சொற்களை மேலும் கடுமையாக்க வேண்டும் என இந்த நாடுகள் வலியுறுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

இவ்வாறான நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன்னர் 'ஒன்லைன்' ஊடாக ஜெனீவா அமர்வில் உரையாற்றியிருந்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, 'இலங்கை தொடர்பில் கொண்டு வரப்படும் பரிந்துரைகள் மற்றும் முடிவுகள் தொடர்பாக வெளிவந்த பாதையானது, இலங்கைக்கு எதிராக இடைவிடாமல் தொடர்ந்த முன்கூட்டிய, அரசியல் மயப்படுத்தப்பட்ட மற்றும் பாரபட்சமற்ற சில கூறுகளின் நிகழ்ச்சி நிரலைப் பிரதிபலிக்கின்றன. இந்தப் பரிந்துரைகள் தவறான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அமைந்தவை. உயர் ஸ்தானிகரின் அறிக்கையில் உள்ள முடிவுகளையும் பரிந்துரைகளையும் இலங்கை திட்டவட்டமாக நிராகரிக்கின்றது' எனக் குறிப்பிட்டிருந்தார்.

"முப்பது ஆண்டுகளாக வெளியிடப்படாத மற்றும் அவற்றுள் சில உயர் ஸ்தானிகர் அலுவலகத்தினால் தக்க வைக்கப்பட்டு, அணுகுவதற்கு மறுக்கப்பட்டிருந்த ஆதாரங்களின் அடிப்படையில், குறிப்பாக ஐ.நா மற்றும் அதன் பொறிமுறைகளுடன் தொடர்ச்சியாகவும் ஆக்கபூர்வமாகவும் ஈடுபட்டு வரும் இலங்கை போன்ற ஒரு நாடு தொடர்பாக, சொத்து முடக்கம், பயணத் தடைகள், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தைப் பற்றிய குறிப்புக்கள் மற்றும் தனிப்பட்ட அரசுகள் உலகளாவிய அதிகார வரம்பைப் பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கான அழைப்பானது, சர்வதேச சமூகம் ஒட்டுமொத்தமாகக் கவனிக்க வேண்டிய ஒரு தனித்துவமான மற்றும் சிறந்த ஆபத்தை சுட்டிக் காட்டுகின்றது. சில நாடுகளின் இத்தகைய ஒருதலைப்பட்ச நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ள முடியாதவையும், மற்றும் இயற்கை நீதியின் கொள்கைகளை மீறுவதுமாகும்.

அரசியல் உந்துதல்களால் உந்தப்பட்டு, இந்த சபையால் இலங்கை மீது செலுத்தப்பட்டுள்ள கவனத்திற்காக நாங்கள் வருந்துகின்றோம். இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட எந்தவொரு தீர்மானமும் சபையால் நிராகரிக்கப்பட்டு மூடப்பட வேண்டும் என இலங்கை இந்த சபை உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கின்றது" என தினேஷ் குணவர்த்தன மேலும் தெரிவித்திருந்தார்.



ஐ.நா மனித உரிமைகள் பேரவை எந்தப் பிரேரணையொன்றைக் கொண்டு வந்தாலும் அதனை அரசாங்கம் நிராகரிக்கும் என்பது இதனூடாகத் தெளிவாகத் தெரிகிறது.

இது இவ்விதமிருக்க, இலங்கை தொடர்பில் கொண்டு வரப்படவுள்ள பிரேரணைக்கான வரைபொன்று தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், அதில் கடுமையான விடயங்கள் பல இடம்பெறவில்லையென்பதால் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் பல ஏமாற்றமடைந்திருப்பதாகவும் அந்நாடுகளில் இருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் அறிக்கையில் பல காட்டமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தாலும், தற்பொழுது தயாரிக்கப்பட்டிருப்பதாக் கூறப்படும் வரைபில் நிலைமைகள் சற்றுத் தளர்த்தப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வருகின்றன.

இதற்கு முக்கிய காரணமொன்றும் உள்ளது. எந்தவொரு நாடும் இலங்கையில் உள்ள இனங்கள் மீது அதீத கரிசனை கொண்டு பிரேரணையொன்றை ஆதரிக்கப் போவதில்லை. பிரேரணையைக் கொண்டு வரும் நாடுகள் கூட அதனை வெல்ல வைக்கக் கூடிய வகையிலேயே தயார்படுத்தல்களை மேற்கொள்ளும். இந்த அடிப்படையில் பார்க்கும் போது ஒவ்வொரு நாடும் தமது நிலைப்பாடுகளிலிருந்து விடயங்களை ஆராய்ந்தே முடிவெடுக்கும் எனத் தெரிகின்றது.

இதற்காக சர்வதேசம் ஏமாற்றி விட்டது என புலம்பெயர் தமிழ்த் தரப்புகள் கூச்சல் இடுவது எந்த விதத்திலும் எவருக்கும் பயன் தரப் போவதில்லை.

தமிழர்களின் பிரச்சினைகளை இணக்க அரசியல் மூலம் வென்றெடுப்பதற்கான பல சந்தர்ப்பங்கள் கடந்த காலத்தில் இங்குள்ள தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு கிடைத்திருந்த போதும் அதனை அவர்கள் சரியாகப் பயன்படுத்தவில்லையென்றே கூற வேண்டும். உதாரணமாக கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் ஆட்சியாளர்கள் நெருக்கடியான நிலையில் இருந்த பல சந்தர்ப்பங்களில் அந்த அரசுக்கு தோள் கொடுத்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது உரிய அழுத்தங்களைக் கொடுத்திருந்தால் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்திருக்க முடியும்.

அதேபோல, தற்பொழுது எதிர்ப்பு அரசியல் செய்து வருகின்ற தமிழ் அரசியல் பிரதிநிதிகளும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மீதான அக்கறையை ஒவ்வொரு மார்ச் மாதமும், செப்டெம்பர் மாதமும் மாத்திரம் வெளிப்படுத்தி விட்டு, பின்னர் மத்திய அரசாங்கத்தைத் தமது செயற்பாடுகளால் தூண்டி விடுவதில் அக்கறையாக இருப்பதையே காண முடிகின்றது.

ஜெனீவாவில் இலங்கை விவகாரத்தைப் பொறுத்த வரையில், இதனை முற்றுமுழுதாக முடிவுக்குக் கொண்ட வர வேண்டும் என்பதே இலங்கை அரசாங்கத்தின் முனைப்பாக உள்ளது. அதே நேரம், ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு அப்பால் இப்பிரச்சினையைக் கொண்டு செல்ல வேண்டும் என்பதே தமிழர்களுக்கு ஆதரவாக உள்ள தரப்பின் முனைப்பாக உள்ளது. இந்த இரண்டு விடயமும் எந்தளவுக்கு சாத்தியமாகும் என்பது சம்பந்தப்பட்ட நாடுகளின் அணுகுமுறைகளிலேயே தங்கியுள்ளது.

## இலங்கைக்கு எதிரான பிரேரணையின் சொற்பதங்களை கடுமையாக்க வேண்டுமென்பதில் டென்மார்க், நோர்வே, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், லீச்டென்ஸ்டைன், அமெரிக்கா அதிக அக்கறை

பி.ஹர்ஷன்...

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

# கூட்டமைப்பு அஸ்தமிக்கும் வேளையில் உதயமாகின்ற 'தமிழ் தேசியப் பேரவை'

**இலங்கை அரசியலில் தமிழர் தரப்பின் பிரசன்னம் பிரித்தானியரின் ஆட்சிக் காலத்திலிருந்தே காணப்பட்டாலும், சுதந்திரத்துக்கு பின்னர் உக்கிரமடைந்த 'கட்சி அரசியல்' போக்கினால் தமிழர் அரசியலும் பல்வேறு பிளவுகளுடன் தொடர்ந்து கொண்டே வருகிறது.**

ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏதாவதொரு இலக்கை முன்னிலைப்படுத்தி தமிழ்த் தலைவர்களால் அரசியல் கட்சிகள் உருவாக்கப்பட்ட போதும், காலப்போக்கில் பல பிளவுகளும் பின்னடைவுகளும் ஏற்பட்டமையே வரலாறு.

இலங்கையில் தமிழர்களின் 'கட்சி அரசியல் வரலாறு' 1944ஆம் ஆண்டு ஆரம்பமானது. பிரித்தானியரின் ஆட்சிக் காலத்திலேயே ஜீ.ஜீ.பொன்னம்பலத்தினால் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி உருவாக்கப்பட்டது.

சுதந்திரத்துக்கு முற்பட்ட அக்காலப் பகுதியில் தமிழர்களுக்கு அரசியலமைப்பு ரீதியான பாதுகாப்பைப் பெற்றுக் கொடுப்பது என்ற நோக்கத்தில் இக்கட்சி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

ஆரம்பத்தில் ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் போன்ற தமிழ் அரசியல் தலைவர்கள் ஒன்றாகவே செயற்பட்டனர். நாடு சுதந்திரமடைந்த பின்னர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் நிலைப்பாடு ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பானதாக இருந்தமையாலும், மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பறிக்கும் ஐ.தே.கவின் யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவிக்காத காரணத்தாலும் அதிருப்தியடைந்த செல்வநாயகம் உள்ளிட்டவர்கள், 1949ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழர் காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்று 'பெடரல்' கட்சியை உருவாக்கினர்.

தமிழ் மொழி பேசக் கூடிய இனங்களால் கூட்டாட்சியொன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதே பெடரல் கட்சியின் அன்றைய கோரிக்கையாகவிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் கடும்போக்குவாத செயற்பாடுகள் பெடரல் கட்சிக்கு தமிழர்கள் மத்தியில் அமோக ஆதரவைப் பெற்றுக் கொடுத்ததும் இலங்கை அரசியலில் தவிர்க்க முடியாத சக்தியாக அது வளரத் தொடங்கியது. பலமான அரசியல் பின்னணியுடன் 1965ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாகவும் அது இணைந்து கொண்டது.

ஒரு சில வருடங்கள் இந்தக் கூட்டு நீடித்தாலும் ஐ.தே.கவின் நிலைப்பாட்டின் காரணமாக அரசிலிருந்து வெளியேறி தொடர்ந்தும் எதிர்க் கட்சியாக செயற்படும் நிலைக்குத் தள்ளப்பட்டது அக்கட்சி. தொடர்ந்தும் நீடித்த கடும்போக்குவாத செயற்பாடுகளால் தமிழ்க் கட்சிகள் தமக்கிடையிலான வேற்றுமைகளை மறந்து ஒன்று சேர்வதற்கான முயற்சிகளை 1970களின் ஆரம்பத்தில் தொடங்கியிருந்தன.

குறிப்பாக ஒன்றுடன் ஒன்று எதிராகவிருந்த தமிழ்க் கட்சிகளான தமிழ் காங்கிரஸ், பெடரல் கட்சி மற்றும் மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய சௌமியமூர்த்தி தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன இணைந்து 'தமிழர் ஐக்கிய முன்னணி' என்னும் அமைப்பை உருவாக்கி, அரசிடம் சில கோரிக்கைகளை முன்வைத்திருந்தன.

இது எவ்வித பயனும் அளிக்காததைத் தொடர்ந்து 1976 இல் இலங்கையில் தமிழருக்குத் தனிநாடு கோரித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், 'தமிழர் ஐக்கிய முன்னணி' என்னும் பெயர் 'தமிழர் விடுதலைக் கூட்டணி' எனவும் மாற்றப்பட்டது. அமைதி வழியில் தமது இலக்கை அடைவதையே இம்முன்னணி நோக்கமாகக் கொண்டிருந்தது.

மாறி மாறி மத்தியில் ஆட்சிக்கு வந்த பெரும்பான்மை கட்சிகளின் கடும்போக்கான அரசியல் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இளைஞர்களின் ஆதரவைப் பெற்றுக் கொடுத்தது. இந்த அமோக ஆதரவால் பிரதான எதிர்க் கட்சியாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியால் செயற்பட முடிந்தது. தனிநாட்டுக் கோரிக்கையில் உறுதியாகவிருந்ததால் 1983ஆம் ஆண்டு அக்கட்சியின் உறுப்பினர்கள் இலங்கையின் அரசியலமைப்பின் கீழ் சத்தியப் பிரமாணம் செய்ய மறுத்து பாராளுமன்ற உறுப்பினர்களாக பதவிப் பிரமாணம் செய்யவில்லை.

பிரதான அரசியலில் தமிழர்களின் சார்பில் குரல் கொடுக்க உரிய பிரதிநிதித்துவம் இல்லாமையால் பல போராட்டக் குழுக்களின் தோற்றத்துக்கு அன்றைய நிலைமை வழியை ஏற்படுத்தியது. இதன் பின்னரான காலத்திலேயே தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து பல போராட்டக் குழுக்கள் உருவாகி, பின்னர் அவை ஆயுதக் குழுக்களாகவும் உருமாற்றம் பெற்றன.





இவ்வாறான நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணி 1986ஆம் ஆண்டு தனது தனிநாட்டுக் கோரிக்கை என்ற நிலைப்பாட்டை சற்றுத் தணித்து, 'பிரிக்கப்படாத நாட்டுக்குள் சுயாட்சி' என்ற விடயத்தை வலியுறுத்தியது.

மறுபக்கத்தில் 80களின் ஆரம்பத்திலிருந்தே போராட்டக் குழுக்களின் செயற்பாடுகள் தீவிரமடையத் தொடங்கின. இக்குழுக்கள் தமிழ் மக்களின் உரிமைகளை முன்னிலைப்படுத்தினாலும் தமது சிரேஷ்ட தலைவர்களையே விமர்சிப்பது, குழுக்களுக்கிடையில் சாதிய மற்றும் போட்டாபோட்டி அடிப்படையிலான வேறுபாடுகள் காண்பிப்பது போன்றவை திரைமறைவில் இடம்பெற்றன.





அது மாத்திரமன்றி, கோரிக்கைகளும் இலக்கும் ஒன்றாக இருந்திருந்தால் அனைத்துக் குழுக்களும் ஒன்றாக செயற்பட்டிருக்க முடியும். ஒற்றுமையும் அக்குழுக்களிடம் இருக்கவில்லை. மாற்று இயக்கங்களை வேட்டையாடுவதில் புலிகள் இயக்கம் மும்முரமாக இருந்தது. அதன் காரணமாக மற்றைய இயக்கங்களும் புலிகளுக்கு எதிராக செயற்படுவது தவிர்க்க முடியாததாக இருந்தது.

தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் எனக் கூறிக் கொண்டு அவர்கள் தமக்கிடையில் நிழல் யுத்தத்தைத் தொடர்ந்தனர். ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏதாவது ஒரு போராட்டக்குழு மத்திய அரசுக்கு ஆதரவாக செயற்படும் நிலைமை காணப்பட்டது. இதனால் ஒருவரை ஒருவர் தாக்கும் துர்ப்பாக்கிய சூழலும் ஏற்பட்டது. இயக்க உறுப்பினர்கள் மாத்திரமன்றி அப்பாவி மக்கள் ஏராளமானோர் இயக்கங்களாலேயே கொல்லப்பட்டனர்.

80களில் ஆரம்பமான இந்த குழுக்களுக்கிடையிலான மோதல்கள் 1990 வரை தொடர்ந்ததுடன், இயக்கங்களுக்கிடையிலான மோதல்களில் எல்.ரி.ரி.ஈ இயக்கம் மாத்திரம் தன்னை பலமானதொரு அமைப்பாகக் காண்பிக்கத் தொடங்கியது. ஆயுதக் குழுக்கள் தம்மை அரசியல் கட்சிகளாகப் பதிவு செய்து கொண்டு அரசியல் செய்யத் தொடங்கின. புலிகளிடமிருந்து பாதுகாப்புப் பெற வேண்டிய தேவையும் மற்றைய இயக்கங்களுக்கு இருந்தது.

மக்களின் உரிமைக்காக சாத்வீக ரீதியில் ஆரம்பமான போராட்டம் பின்னர் ஆயுதப் போராட்டமாக மாறியதால் ஏறத்தாழ மூன்று தசாப்தங்களாக நாடு எதிர்கொண்ட நிலைமை நாம் அனைவரும் அறிந்த விடயம். தனிநாடு கோரி யுத்தம் இடம்பெற்ற சூழ்நிலையில் தமிழ் மக்களை அரசியல் ரீதியாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி அரசியலில் ஒரு மந்த நிலையே காணப்பட்டது. ஆயுதக் குழுக்களுக்குப் பயந்து செயற்படும் நிலை தமிழ் அரசியல்வாதிகளுக்கு ஏற்பட்டது.

யுத்த காலத்தில் பல தமிழ் அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றிருந்தாலும், ஆயுதக் குழுவின் ஆதிக்கமே அதிகமாகவிருந்தது. இவ்வாறான சூழ்நிலையிலேயே 2001ஆம் ஆண்டு தமிழ்க் கட்சிகள் பலவற்றை ஒன்றிணைத்து பலமான கூட்டணியொன்றை உருவாக்கும் முயற்சி தொடங்கப்பட்டது. மறைந்த ஊடகவியலாளர் 'தராக்கி' சிவராம் உள்ளிட்ட ஊடகவியலாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் எல்.ரி.ரி.ஈ தரப்பில் உள்ளோர் இணைந்து பல கட்சிகளை இணைத்து 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை' உருவாக்கினர்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' உருவாக்கப்பட்டது. பின்னரான காலப் பகுதியில் அதனுடன் புளொட் இணைக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக இருந்த வீ. ஆனந்தசங்கரி இணைத்துக் கொள்ளப்படாமையால், அதன் சின்னத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பயன்படுத்த நீதிமன்றத்தில் அவர் தடையுத்தரவைப் பெற்றார். இவ்வாறான சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட போதும் அது இன்னமும் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்படாதுள்ளது.

தமிழர்களுக்கான அரசியல் சக்தியாக உருவாக்கப்பட்ட இந்தக் கூட்டணி 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் சற்று ஆட்டம் காணத் தொடங்கியது என்றே கூற வேண்டும். குறிப்பாக எல்.ரி.ரி.ஈயினர் இல்லாதாக்கப்பட்ட பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆதிக்கம் மேலோங்கத் தொடங்கியது. ஆயுதக் குழுக்களாக முன்னொரு காலத்தில் இருந்தவர்களை படிப்படியாக இதிலிருந்து நீக்கும் முயற்சிகள் திரைமறைவில் மேற்கொள்ளப்பட்டதால், கூட்டமைப்புக்குள் கருத்து வேறுபாடுகளும் கட்சித் தலைவர்களுக்கிடையில் மனக்கசப்புகளும் ஏற்படத் தொடங்கின. இதனால் இன்னமும் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிய முடியாமல் உள்ளது.

## இணக்கப்பாட்டு அரசியல் நாகரிகம் இனிமேலாவது நிலைத்திருக்குமா?



இது இவ்விதமிருக்க, தமிழ்க் கட்சிகள் யாவும் ஒன்றாக இணைவதற்கு அவ்வப்போது பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், ஒரு சிலரின் பதவி மோகத்தினால் பலமான கூட்டணியொன்றை அமைக்க முடியாதிருந்தது. இருந்தாலும், தேர்தல் காலங்களில் ஒருசில அரசியல் கட்சிகள் இணைந்து கூட்டணிகளை அமைக்கின்ற போதிலும் அவை தேர்தலுடன் உடைந்து விடுவனவாகவே காணப்படுகின்றன.

தந்தை செல்வாவின் காலத்திலிருந்து இதுவரை போராட்டமொன்றை மையப்படுத்தி அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றாலும் குறித்த போராட்டம் தொடர்ந்தும் முன்னுக்குக் கொண்டு செல்லப்படாது உருவாக்கியவர்களின் முரண்பாடுகளே முன்னோக்கிக் கொண்டு செல்லப்படுகின்றன. இது தமிழர் அரசியலின் மாற்ற முடியாத சாபக்கேடு என்றே கூற வேண்டும்.

இது போன்ற நீண்ட அரசியல் பின்னணியில், மீண்டுமொரு தடவை பாரிய தமிழ்க் கூட்டணியொன்றை உருவாக்குவதற்கான முனைப்புக்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களின் கோரிக்கைகள் பலவற்றை முன்னிறுத்தி, கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற 'பொத்துவில் முதல் பொலிகண்டி' வரையிலான கவனயீர்ப்புப் போராட்டத்தின் பின்னணியிலேயே பலமான கூட்டணியொன்றுக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சிவில் அமைப்புகளின் அழைப்பின் பேரில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பேரணிக்கு பொதுமக்கள் ஏராளமானோர் ஆதரவை வழங்கியிருந்ததுடன், தமிழ் அரசியல் கட்சிகள் பலவும் இதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கியிருந்தன. அதேநேரம், தற்பொழுது ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு உரிய அழுத்தத்தைக் கொடுக்குமாறு தமிழ்க் கட்சிகள் ஒன்றாக கோரியுள்ளன.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டத்தின் வெற்றியை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்லும் நோக்கில் 'தமிழ்த் தேசிய பேரவை' என்ற பெயரில் பலமான கூட்டணியொன்றை அமைப்பதற்கு ஆரம்ப கட்டப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன. இதில் இணைந்து கொள்வதற்கு 10 அரசியல் கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி உள்ளிட்ட கட்சிகளும், சிவில் மற்றும் மத அமைப்புக்களும் இதில் அங்கம் வகிக்கின்றன. வெளியே இருக்கும் ஏனைய கட்சிகளையும் இதில் இணைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்ட அரசாங்கம் மத்தியில் இருக்கும் நிலையில் தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாக அக்கட்சியில் உள்ளோர் கருதுகின்றனர். எனினும், தேசிய அரசியலில் அங்கம் வகிக்கின்ற தமிழ் அரசியல்வாதிகள் சிலர் இந்தக் கூட்டணி அமைக்கும் முயற்சிகளை விமர்சிக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

இந்த விமர்சனங்களுக்கான காரணம் அரசியல் போட்டாபோட்டிதான் என்பதை மறுப்பதற்கில்லை.

இதேவேளை தமிழரசுக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பலர் இந்தக் கூட்டணியில் கலந்து கொண்டிருந்தாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், கூட்டணியில் கலந்து கொண்டவர்களிடம் அது பற்றி கடிந்து கொண்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது 1950களிலிருந்து இன்று வரை ஏதாவது ஒரு நோக்கத்துக்காக தமிழர் தரப்புக்களை ஒன்றிணைக்கும் போது அதனைப் பிரிப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்றுக் கொண்டே வருவதையும் அறிய முடிகின்றது.

அதேநேரம், இவ்வாறு அமைக்கப்படும் கூட்டணி வெறுமனே தமிழ் மக்களை உருவேற்றும் நோக்கம் கொண்டதாகவும், எப்பொழுதும் எதிர்ப்பு அரசியலை மாத்திரம் முன்னெடுப்பதாகவும் அல்லாமல் யதார்த்தமான அரசியலை முன்னெடுக்கும் கூட்டணியாக இருக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கும் கூட்டணியாக அமைந்தாலன்றி, வெற்றுக் கோஷம் போடும் மற்றுமொரு கூட்டணியாக அமைவதால் தமிழர்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை. மாறாக மத்தியில் உள்ள இனவாத சக்திகள் தமது அரசியலை தொடர்ந்தும் பல தசாப்தங்களுக்கு இப்படியே கொண்டு செல்வதற்கான ஊக்கியாகவே அது அமைந்து விடும்.



**சுதந்திரத்துக்குப் பின்னர் தமிழ்க் கட்சிகளின் ஐக்கியமும், பிரிவும் தமிழினத்தின் அரசியல் வரலாற்றில் மாற்ற முடியாத பாரம்பரியம்!**

# சர்வதேச மகளிர் தினம் மலையகத்தில் வெறும் பேசுபொருள் மட்டுமே



'தொழிற்சங்க காரியாலயங்களில் குறைந்த சம்பளத்தில் பெண்கள் பலர் வேலை செய்து வருகிறார்கள். இவர்களின் அடிப்படைத் தேவைகளைக் கூட மலையகத் தலைமைகள் வழங்கத் தயாரில்லை. இந்த இலட்சணத்தில் இவர்கள் முழு மலையக பெண்களினதும் விமோசனத்துக்காக மகளிர் தினத்தில் மட்டும் குரல் கொடுப்பதும் வெறும் ஏமாற்று. மலையக சமூகம் இதனைப் புரிந்து கொண்டு தம்மைச் சுதாகரித்துச் செயல்படாதவரை பெண் விடுதலை, பெண்ணுரிமை எல்லாம் வெறும் பேசுபொருளாகவே தொடரும்'

சர்வதேச மகளிர் தினம் நாளை 8ம் திகதி கொண்டாடப்படுகிறது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் பெண் தொழிலாளர்களது நிலைமையும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இவர்களின் நிலைமையும் வேறுபடுகின்றது.

சுமார் 100 கோடிக்கும் அதிகமான பெண்கள் அபிவிருத்தியடைந்த நாடுகளில் பணியாற்றுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்கள் ஓரளவேனும் சமூக அந்தஸ்தைப் பெறக்கூடியவர்களாக காணப்படுகின்றார்கள். சமத்துவம், அரசியல் பிரதிநிதித்துவம் போன்றவற்றில் இவர்களது அபிலாஷைகளுக்கு இடம் கிடைக்கப்



'மலையகப் பெண்கள் தமது சக்தியை உணர வேண்டியது கட்டாயம். எல்லாவற்றையும் தலையில் சுமந்து நாளாந்த வாழ்வியலோடு போராடி தாங்கும் இவர்கள் தாம் பிறரிலேயே தங்கியிருப்பதாக எண்ணும் தாழ்வு மனப்பான்மையிலிருந்து வெளியே வரவேண்டும்'

பெற்றுள்ளது. ஆனால் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பாகுபாடு, அடக்குமுறை, உரிமைக்கான அங்கீகாரம் இன்மை, சமூகப் பாதுகாப்பு இன்மை போன்ற பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது.

இந்தப் பெண் தொழிலாளர்களின் நிலைமையை விட மிக மோசமான நிலைமையிலேயே பெருந்தோட்டப் பெண்கள் வாழ்கிறார்கள். இவர்கள் பெருந்தோட்டத் துறையில் 50 சதவீத பங்களிப்பை கொண்டிருக்கின்றனர். இதில் குடும்ப வருமானம் கூட இவர்களின் உழைப்பையே அடிப்படையாக கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. ஆனால் இந்த அர்ப்பணிப்புக்கான கௌரவம் இவர்களுக்குக் கிடைக்கிறதா என்பதே கேள்வி.

இன்று, இலங்கை மகளிருக்காக அரசியலில் இட ஒதுக்கீடு, சிறப்பு சட்டங்கள் எல்லாம் நடைமுறையில் இருக்கின்றன. குறிப்பாக 25 சதவீதம் பெண்களுக்கான இடஒதுக்கீட்டில் அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளது. ஆனால் இந்த ஏற்பாடுகள் எல்லாம் மலையக பெண்களை சென்றடையப் போவதில்லை. சமூக ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் இவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு மத்தியில் விடுதலைக்கான அறைகூவல்களிலேயே இப்பெண் சமூகத்தின் தலைமுறைகள் கரைந்து கொண்டிருக்கின்றது. குறிப்பாக, மூன்றாம் உலக நாடுகளிலும் தெற்காசிய நாடுகளிலும் பெண்களுக்கு அரசியல் சமவுரிமைமீதாக நசுக்கப்படுதல் இடம்பெறும் நிலையில் இங்கு மலையக பெண்கள் சகல துறைகளிலும் அடக்கியொடுக்கப்படும் பெருந்தோட்ட கட்டமைப்புக்குள் சிக்கிக் கொண்டுள்ளார்கள். இன்று இவர்கள் வீடு, தொழில் என்ற வட்டத்



துக்குள்ளேயே சுழல வேண்டிய கட்டாயத்தில் சமூகநிலை உள்வாங்கப்பட்டுள்ளது. இவர்களை தன்னம்பிக்கை மிக்க சமூகமாக மாற்ற வேண்டிய கடமையை முன்னெடுக்க இங்கு யாரும் தயாரில்லை. இது மரபு ரீதியிலான பெண்ணாதிக்க சிந்தனையின் வெளிப்பாடு.

இதனால்தான் இவர்கள் மகளிர் தினங்களில் மட்டும் மகிமைப்படுத்தும் அம்சமாக மாற்றப்பட்டுள்ளார்கள். இங்கு மலையக பெண்களுக்கு சமஉரிமை, அரசியலில் இட ஒதுக்கீடு என்றெல்லாம் பேசுவோர் இவர்களின் அடிப்படைத் தேவைகளே ஆட்டம் கண்டிருப்பதை கவனத்தில் கொள்வது இல்லை. வேலைத்தள வன்முறைகள், வீட்டு வன்முறைகள் இவர்களை உளவியல் ரீதியாக பாதிப்பதை இவர்கள் புரிந்து கொள்வது இல்லை.

உயர்தரம், சாதரணதரம் கற்ற பெண்கள் கூட கொழுந்து பறிக்கும் தொழிலுக்குத் தள்ளப்படும் சூழ்நிலை குறித்து எவருமே கவலைப்படுவது கிடையாது. இங்கு சமூக எழுச்சிக்கான வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன. தவிர மலையகத்தில் தாராளமாக அனுமதிக்கப்பட்டுள்ள மது பாவனைக்கான வசதிகள் சமூக, பொருளாதார சீர்கேட்டினை உருவாக்குவதன் அழுத்தங்களினால் முற்றுமுழுதாக ஆக்கிரமிப்புக்குள்ளாவது மலையகப் பெண்களே!

பிற மகளிர் தாம் வாழ்ந்து கெண்டே வேறு சவால்களுக்கு முகம்கொடுக்கும்போது மலையக பெண்கள் வாழ்க்கையையே சவாலாக எதிர்நோக்க வேண்டியுள்ளது. குடும்ப மட்டத்தில், சமுதாய ரீதியில் ஓரங்கட்டப்படும் போக்கே நிலவுகின்றது. பாரம்பரியம், கலாசார மரபு போன்ற அலங்கார வார்த்தைகளால் இவர்கள் அடக்கி ஒடுக்கப்படுவது உண்மை. இவர்களது உணர்வுகளுக்கு மதிப்பே இல்லை. பால் அடிப்படையிலான வேலைப் பாகுபாடு, கல்வி, சுய தொழில் வாய்ப்பற்ற நிலை, குடும்பம், சமூக ரீதியில் அவர்களது அர்ப்பணிப்பு அங்கீகரிக்கப்படாமை, குடும்ப ரீதியிலான வன்முறைகள், லயன் அறை வாழக்கை முறைமை, அடிப்படைத் தேவைகளுக்கான அலைச்சல், வேலைத்தள பாதுகாப்பின்மை (சிறுத்தை, பன்றி, குளவி தாக்குதல்கள், விஷ ஜந்துக்கள் கடி) வேலைத்தளத்திலும், வீட்டிலும் ஓயாத உழைப்பு, வருமான குறைவால் போஷாக்கின்மை, தொற்றுநோய், தொற்றாநோய்த் தாக்கு, பிரசவ மரணம், கருச்சிதைவு என பல பிரச்சினைகளால் நேரடியாகவே தாக்கத்துக்குள்ளாகி வருகின்றார்கள்.

ஆனால் அதுபற்றிய கரிசனையோ, விழிப்புணர்வோ ஏற்படுத்த போதிய முயற்சிகள் இங்கு எடுக்கப்படுவதில்லை. இதுபற்றி அக்கறையின்றி வருடம் ஒருமுறை வரும் மகளிர் தினத்தில் மட்டுமே இவர்களை மாண்பு படுத்திப் பேசுவதும் ஆக்ரோஷமாக கோஷம் எழுப்புவதும் இவர்களை ஏமாற்றுவதே ஆகும். நாளாந்த தொழில் ரீதியிலான பிரசினைகளுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுத்து வாக்குகளுக்காக இவர்களைப் பயன்படுத்தும் தொழிற்சங்க அரசியல் சுரண்டல்கள் நிறுத்தப்படுவது முக்கியம். மலையகப் பெண்கள் தமது சக்தியை உணர வேண்டியது கட்டாயம். எல்லாவற்றையும் தலையில் சுமந்து நாளாந்த வாழ்வியலோடு போராடி தாங்கும் இவர்கள் தாம் பிறரிலேயே தங்கியிருப்பதாக எண்ணும் தாழ்வு மனப்பான்மையிலிருந்து வெளியே வரவேண்டும். இதற்கு தன்னம்பிக்கை கட்டாயம் அவசியம்.

இதற்கு அமைப்பு ரீதியிலான செயற்பாடு தேவையாயிருக்கின்றது. மலையக தொழிற்சங்கங்கள் முயற்சித்தால் இதனை செய்யலாம். முடியாதது என்று எதுவுமே இல்லை. மலையக பெண்களுக்கு இப்போது முக்கியத்தேவையாக இருப்பது வாழ்வுரிமை. அதையாவது வழங்க முன்வருமா இச்சமூகம்? ஏனெனில் இன்று ஐ.நா போன்ற அமைப்புகளோ உலக பொருளாதாரத்தில் பெண்கள் வகிபாகம் பற்றியும் தொழிற்துறையிலும், பொதுப்பணிகளிலும் குறிப்பிடத்தக்க தாக்கங்கள் குறித்துமே பேசும் நிலை காணப்படுகிறது. மாறிவரும் தொழில் உலகில் பெண்கள் என்ற தொனிப்பொருளுடன் கடந்த வருட சர்வதேச மகளிர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது இதன் அடிப்படையிலே ஆகும்.

ஆனால் பெயருக்கு மகளிர் தினத்தை கொண்டாடும் நிலையிலேயே மலையக சமூகம் வழி நடத்தப்படுவது அவர்களது அறியாமைக்கு தீனி போடுவதாகவே அமையும். இந்நிலைமை மலையக தொழிற்சங்க, அரசியல் தலைமைகளுக்குச் சாதகமாக இருக்கலாம். ஆனால் மனிதபிமான ரீதியில் மாபெரும் துரோகம்.! நாட்டின் பொருளாதாரத்தில் இவர்களின் பங்களிப்புக்கு உரிய கௌரவம் கிடைக்கும் பட்சத்திலேயே இவர்களின் துன்பியல் வாழ்வு முற்று பெற முடியும். பெண்களின் உரிமைகள் தேவைகள் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள். முகம்கொடுக்கும் அநீதிகள் போன்றவற்றை இனங்கண்டு தீர்வுகாணும் நடவடிக்கைகளை எடுப்பதே மகளிர் தினம் பிரகடனப்படுத்தப்பட்டதன் நோக்கம்.

மலையகப் பெண்களைப் பொறுத்தவரையில் இவையாவும் வெறும் கனவுகளாகவே இருக்கின்றன. மலையக தொழிற்சங்கங்கள் மாதர் சங்கம், மகளிர் பிரிவு என்றெல்லாம் வைத்துக் கொண்டிருக்கின்றன. தொழிற்சங்க காரியாலயங்களில் குறைந்த சம்பளத்தில் பெண்கள் பலர் வேலை செய்து வருகிறார்கள். இவர்களின் அடிப்படைத் தேவைகளைக் கூட மலையகத் தலைமைகள் வழங்கத் தயாரில்லை. இந்த இலட்சணத்தில் இவர்கள் முழு மலையக பெண்களினதும் விமோசனத்துக்காக மகளிர் தினத்தில் மட்டும் குரல் கொடுப்பதும் வெறும் ஏமாற்று. மலையக சமூகம் இதனைப் புரிந்துகொண்டு தம்மைச் சுதாகரித்துச் செயல்படாதவரை பெண் விடுதலை, பெண்ணுரிமை எல்லாம் வெறும் பேசுபொருளாகவே தொடரும்.

பன். பாலா ...

## அயகம தும்பறை தோட்ட இல. 02 ஆரம்ப தமிழ் பாடசாலை

# கைவிடப்பட்ட நிலையில் உள்ள பாடசாலை கைதூக்கி விடப்படுமா?



தரம் ஒன்று முதல் 5 வரையில் எழுத்து, வாசிப்பு, கணக்கு என மூன்று பாடங்கள் கற்பிக்கப்பட்டு இயங்கிவந்த தோட்டப் பாடசாலைகள் அனைத்துமே அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டு க.பொ.த.சாதாரணதர மற்றும் உயர்தரம் வரையில் தரமுயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளும், வளங்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டு இயங்கி வருகின்றமை அறிந்த விடயமே.

இவ்வாறு பொறுப்பேற்கப்பட்டு இயங்கிவரும் பாடசாலைகளில் இன்றும் சில எவ்வித அபிவிருத்தியும், முன்னேற்றமும் ஏற்படாது குறிப்பாக தரம் 1 முதல் 5ஆம் தரம் வரையிலான பாடசாலைகள் பெயரளவில் மட்டுமே இயங்கி வருவதைக் காணமுடிகிறது. இங்கு 10, 15 மாணவர்களுடன் அதிபர், ஆசிரியர்கள் என வெளியுலகுக்குத் தெரியாமல் ஒதுக்குப்புறங்களில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான பாடசாலைகளின் நிலை பற்றி வெளிச்சத்துக்கு வருவதை அங்கு பொறுப்பாக இருந்து பாடசாலையை நடாத்தி வருபவர்கள். விரும்புவதில்லை. எப்படியோ பாடசாலை இயங்கினால் சரி என எண்ணம் கொண்டவர்களாகவே பெற்றோரும் உள்ளனர்.

இதுபோன்ற பாடசாலைகளின் நிலைபற்றி ஊடகங்களில் வெளிவருவதையும் இவர்கள் விரும்புவதில்லை. கல்வி அதிகாரிகளும் கூட பாடசாலை பக்கமே செல்வதில்லை. இதனால் இங்கு கற்கும் ஏழைப் பெற்றோரின் பிள்ளைகள் கல்வியில் முன்னேற்றம் காணும் வாய்ப்பு பெரும்பாலும் கிட்டுவதில்லை. படிக்கக்கூடிய திறமையும், ஆர்வமும் இருந்தபோதிலும் இதுபோன்ற சூழல் காரணமாக வாய்ப்பை இழக்கும் துரதிர்ஷ்ட நிலைக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இவ்வாறான நிலை காரணமாக சில பெற்றோர் தம்பிள்ளைகளை சிங்களப் பாடசாலைகளில் சேர்க்கின்றனர்.

களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய நகருக்கு அருகில் அமைந்துள்ள தோட்டங்களில் தும்பறை தோட்டம் பிரபல்யம் பெற்ற தோட்டமாகும். இது இரத்தினபுரி மாவட்டத்தின் அயகம பிரதேச சபை நிர்வாகத்துக்குட்பட்டதாகும். இங்கு நிவித்திகல கல்வி வலயத்தின் கீழ்வரும் இல. 02, இல. 82 என இரு பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இல. 82 தமிழ் வித்தியாலயம் தரம் 1 முதல் 9 வரையிலும், இல. 02 தமிழ் வித்தியாலயம் தரம் 1 முதல் 5 வரையிலும் இயங்கி வருகின்றன. இவ்விரண்டு பாடசாலைகளுக்குமிடையிலான தூரம் சுமார் ஒரு கி.மீற்றராகும்.

தரம் 05 வரையில் இயங்கிவரும் இல. 02 தமிழ் வித்தியாலயத்தின் நிலை பற்றியே இங்கு சுட்டிக்காட்ட முனைகிறோம். இங்கு அதிபருடன் ஒரேயொரு ஆசிரியை மட்டுமே கடமையாற்றுகின்றனர். தரம் 1இல் 5 மாணவர்களும், தரம் இரண்டில் 9 மாணவர்களும், மூன்றில் ஐந்து மாணவர்களும், தரம் 4இல் ஆறு மாணவர்களும், தரம் ஐந்தில் மூன்று மாணவர்கள் என 28 மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர். கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக இந்த மாணவர்களுக்கான போஷாக்கு வழங்கப்படுவதில்லையாம்.

இங்கு இரண்டு கட்டடங்கள் அமையப்பெற்றுள்ள போதிலும் அவை பொருத்தமான வசதியான சூழலில் அமையப் பெற்றிருக்கவில்லை. மேட்டுப்பகுதியில் ஒரு கட்டடமும் பள்ளத்தில் ஒரு கட்டடமும் அமையப் பெற்றுள்ளன. மேட்டுப்பகுதியிலுள்ள கட்டடம் முன்னர் கொழுந்து மடுவமாக இருந்து அது பாடசாலைக்கட்டடமாக மாற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. இங்கு தரம் 1, தரம் 2, தரம் 5 ஆகியன ஒரு கட்டிடத்திலும் மற்றைய கட்டடத்தில் தரம் 3, தரம் நான்கும் இயங்கி வருகின்றன. இங்கு மின்சார வசதி, விளையாட்டு மைதான வசதி கிடையாது. மலசலகூடம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்ட போதிலும் பூர்த்தி செய்யப்படாமல் கடந்த ஒரு வருடகாலமாக கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

இதுவரை காலமும் இப்பாடசாலை எந்தவொரு அபிவிருத்தியும் முன்னேற்றமும் ஏற்படாமல் மிகவும் பின்தங்கிய நிலையில் வெளியுலகத்துக்கு தெரியாதவாறு இருந்து வருவது குறித்து கவலை தெரிவித்துள்ள பெற்றோர் கல்விப் பகுதியினர் இப்பாடசாலை குறித்து கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். இப்பாடசாலையின் நிலை குறித்து வலயக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்புகொண்டு கேட்டபோது கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.வார்த்தையை அவர் நிகழ்த்தியும் காட்ட வேண்டும்.அயகம தும்பறை தோட்ட இல. 02 ஆரம்ப தமிழ் பாடசாலை

இங்கிரிய மூர்த்தி ...

## மலைநாட்டு எழுத்தாளர் மன்ற ஆளுமைகள்

### மலையக இளைஞர் புத்தெழுச்சிக்கு வித்திட்ட

# எழுத்தாளரும் அரசியல் செயற்பாட்டாளருமான மு.சிவலிங்கம்



(கடந்த வாரத் தொடர்)

தெளிவத்தை ஜோசப் கதை வசனம் எழுதி அக்காலகட்டத்தில் ஜ.தொ.கா பொதுச் செயலாளரான வி.பி. கணேசன் புதிய காற்று என்ற திரைப்படத்தை தயாரித்தபோது அதன் இயக்குனரான மாத்தளை எஸ். இராமநாதனுக்கு உதவி இயக்குனராக செயற்பட்டார். அத்திரைப்படத்தில் தொழிற்சங்கத் தலைவர் என்ற பாத்திரமேற்று நடித்தார். அக்கரப்பத்தனை ஹூட்டுவள்ளி தோட்டத்தில் பாடசாலை நேரத்தில் ஆசிரியராகவும் மாலை நேரத்தில் தோட்ட காரியாலயத்திலும் பணியாற்றி அக்காலத்தில் தோட்ட உத்தியோகஸ்தர்கள் தொழிலாளர்களுடன் பழகக்கூடாது, தோட்ட லயன்களுக்கு செல்லக்கூடாது, தொழிலாளர்களின் மரண நிகழ்வுகளில் பங்கேற்கக்கூடாது என்று ஒரு நடைமுறை இருந்தது. தனது தோட்ட உத்தியோக நண்பர்களுடன் இணைந்து மு.சி இந்த விதிமுறையை மீறினார். சுதந்திர இலங்கையில் தொன்றுதொட்டுவந்த பிரித்தானிய பழைமைவாத கலாச்சாரம் 1960களின் இறுதிப்பகுதியில் ஒழித்துக்கட்டப்பட்டது.

அக்கரப்பத்தனை தமிழ் வித்தியாலயத்தில் ஆங்கில ஆசிரியராக நியமனம்பெற்ற காலகட்டத்தில் வி.டி. தர்மலிங்கம், பெ. சந்திரசேகரன் ஆகியோரின் நட்பு கிடைத்தது. 1977 ஜூலை கலவரத்தில் நுவரெலியா மாவட்டத்தில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டன. பெ. சந்திரசேகரன், பி. செல்வராஜ் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்த இளைஞர் எழுச்சிக்கூட்டங்களில் ஆசிரியர் திருச்செந்தூரனும் மு.சியும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். அக்கூட்டத்தில் கலவரங்கள் ஏற்படும்போதெல்லாம் இந்தியாவுக்கு போகவேண்டும் என்ற மனநிலையை மாற்றிவிட வேண்டும். இனவாதிகள் தாக்கினால் எதிரியுடன் எதிர்த்து நிற்கும்போதுதான் அவருடன் இணைந்து வாழமுடியும் என்ற சித்தாந்தத்தை இளைஞர்களிடம் முன்வைத்தனர். இந்த இளைஞர்கள் சந்திப்பும் இவர்கள் எடுத்த நிலைப்பாடும் பிற்காலத்தில் நடந்த இனக்கலவரங்களில் மலையக மக்கள் துணிவுடன் எதிர்த்து நிற்கக் காரணமானது. 1983 இல் ஜூலை கலவரத்தின்போது மலையக இளைஞர்கள் இனவாதிகளின் தாக்குதலுக்கு எதிர்த் தாக்குதல் நடத்தினர். இனவாதிகள் பின்னோக்கி ஓடி இரவு நேரத்தில் நுவரெலியா நகர் கடைத்தொகுதிகளுக்கு தீ வைத்து கொளுத்தினர்.

1989 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இ.தொ.காவில் போட்டியிட பெ. சந்திரசேகரனுக்கு சந்தர்ப்பம் வழங்காமையால் உமா மகேஸ்வரன் தலைமையிலான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியுடன் (புளொட்) இணைந்து நங்கூரம் சின்னத்தில் முதல் தடவையாக தேர்தலில் பெ. சந்திரசேகரனும், மு. சிவலிங்கமும் பிரதான வேட்பாளராக போட்டியிட்டனர். இவர்களுடன் கேசவமூர்த்தி, மயில்வாகனம், நாகேந்திரன், கிருஷ்ணன் ஆகியோரும் பட்டியலில் இணைத்துக்கொள்ளப்பட்டனர். பெருந்தொகையான வாக்குகள் நிராகரிக்கப்படவே 10509 வாக்குகளைப் பெற்றனர். இந்த தேர்தல் களம் இ.தொ.காவிற்கு பெரிதும் பின்னடைவை ஏற்படுத்தியது. எனினும் தலைவர் எஸ். தொண்டமான் தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்றம் சென்றார். தொடர்ந்து 1989 இல் மலையக மக்கள் முன்னணி என்ற அரசியல் கட்சியையும், மலையக தொழிலாளர் முன்னணி என்ற தொழிற்சங்கத்தினையும் தோற்றுவித்தனர். முன்னணியின் உபதலைவராகவும் புதியகாற்று பத்திரிகையின் ஆசிரியராகவும் மு.சி பொறுப்பேற்றார்.

இர. சிவலிங்கம், எஸ். திருச்செந்தூரன் பி.டி. இராஜன் ஆகியோர் கண்டியில் தோற்றுவித்த மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம், எஸ்.எம். கார்மேகம் ஹட்டனில் தோற்றுவித்த மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் ஆகியவற்றில் தன்னை இணைத்துக்கொண்டு செயற்படலானார். மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் நடத்திய மூன்றாவது மலையக சிறுகதைப்போட்டியில் முதலாவது பரிசையும், நான்காவது சிறுகதைப்போட்டியில் ஆறுதல் பரிசையும் பெற்றார். ஹட்டனில் நடைபெற்ற மலைநாட்டு எழுத்தாளர் மன்ற ஏழாவது ஆண்டு விழாவில் (14.1.1971) மு. சிவலிங்கம் வரவேற்புரையை நிகழ்த்தி ஆண்டு விழாவை ஆரம்பித்து வைத்தார். 1960களின் பிற்பகுதியில் இர. சிவலிங்கம், திருச்செந்தூரன் ஆகியோரால் தொடக்கி வைக்கப்பட்ட மலையக இளைஞர் முன்னணியின் மத்தியகுழு உறுப்பினரானார். இறைஞர் முன்னணி வெளியிட்ட முன்னணி இதழின் ஆசிரியரான வனராஜன் என்ற புனைப்பெயர் கொண்ட ஆ. சுப்பிரமணியம் தாயகம் திரும்பவே முன்னணியின் ஆசிாியர் பொறுப்பை மு.சி ஏற்றார்.

மலையக மக்கள் முன்னணி 1994 பொதுத் தேர்தலில் மண்வெட்டி சின்னத்தில் போட்டியிட்டு ஒரு ஆசனத்தை பெற்றது. கட்சியை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற சிந்தனையில் ஆசிாியராக பணியாற்றிய மு. சிவலிங்கம், வி.டி. தர்மலிங்கம் இருவரும் ஆசிரிய பணியை விட்டு விலகி முழுநேர அரசியல் தொழிற்சங்கப்பணியில் ஈடுபட்டனர். மு. சிவலிங்கம், ராஜகுலேந்திரா இருவரும் 1999 இல் நடந்த மத்திய மாகாணசபை தேர்தலில் மண்வெட்டி சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றனர். சிவலிங்கம் மாகாணசபையின் உப தலைவராக நியமனம் பெற்றார்.



இவர் தனக்கு இருந்த வளங்களை வைத்து பல அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டார். 2005 ஆம் ஆண்டளவில் கருத்து முரண்பாடு காரணமாக மலையக மக்கள் முன்னணியில் இருந்து விலகிக்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

அக்காலத்தில் மலையக மக்கள் முன்னணி அரசியல் செயற்பாட்டில் இருந்து ஒதுங்கி சமூக, அரசியல், எழுத்துத் துறையில் ஈடுபட்டு தற்போது தொடர்ந்து இயங்கி வருகின்றார். இவரது 13 சிறுகதைகளை தொகுத்து 'மலைகளின் மக்கள்' என்ற நூலை பிரபல இலக்கியவாதி மாத்தளை கார்த்திகேசு தனது குறிஞ்சி பதிப்பகத்தில் வெளியிட்டார். அத்தொகுதி அவ் வாண்டு சிறந்த சிறுகதைக்கான தேசிய சாகித்திய விருதையும் விபவி இலக்கிய நிறுவனத்தின் விருதையும் பெற்றுக்கொண்டது. தொடர்ந்து மு.சி 'ஒரு விதை நெல்', 'ஒப்பாரி கோச்சி', 'வெந்து தனிந்தது காலம்', 'சிறுவர் பண்ணைகள்' என்ற சிறுகதை தொகுப்புகளையும் கவிமணி சி.வி. வேலுப்பிள்ளையின் ('Born to labour' உழைக்கப் பிறந்தவர்கள்) என்ற ஆங்கில தொகுப்பை தேயிலையின் தேசம் என தமிழாக்கம் செய்துமிருக்கிறார். நாட்டுப்புற பாடல்கள் என்ற ஒரு ஆய்வு

எச்.எச். விக்ரமசிங்க...

நூலையும் தந்துள்ளார். தனது நான்கு படைப்புகளுக்கு அரச சாகித்திய விருதினையும், கலாபூஷண விருதினையும், கனக செந்திநாதன் விருதினையும் பெற்று மலையகத்திற்கு பெருமை சேர்த்திருக்கின்றார்.

'பஞ்சம் பிழைக்க வந்த சீமை' என்ற வரலாற்று நாவல் 2015 இல் வெளிவந்தது. இவரது இந்த நாவல் இலங்கையில் மட்டுமன்றி, தமிழகம் மற்றும் பல ஐரோப்பிய நாடுகளிலும் பெரிதாக பேசப்பட்டதோடு பேரும் புகழையும் இவருக்கு ஈட்டித்தந்தது. காலி Fairway National Literary ரூபாய் ஐந்து லட்சம் காசோலையையும் இவரது துணைவியாரான ஸ்ரீமதி தமயந்தி சுப்பையா அவர்களுக்கு சிறந்த வெளியீட்டுக்கான தேசிய விருதையும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கி கௌரவித்தார்.

மலையக மக்களின் நூறாண்டுகால வாழ்வின் அவலங்களை, அவர்கள் எதிர்கொண்ட கொடூரச் சுரண்டலின் வன்மையினை, எதிர்ப்புக்குரல்களை பஸ்பமாக்கும் அடக்கு முறையின் பேயுருவை வெகு யதார்த்தமாக மு. சிவலிங்கம் இந்நாவலில் சித்தரித்திருக்கின்றார். மலையகத் தொழிற்சங்க அனுபவமும், மனிதாபிமானமும், அரசியல் அக்கறையும் மிக்க சிவலிங்கத்தின் மலையக நாட்டார் இலக்கியச் செழுமையும், பஞ்சம் பிழைக்க வந்த சீமை என்ற நாவலின் வெற்றிக்குத் துணை சேர்த்திருக்கின்றன" என்று லண்டனில் இந்நூல் குறித்த விமர்சன அரங்கில் ஆய்வாளர் மு. நித்தியானந்தன் குறிப்பிட்டிருப்பதை இங்கு நோக்குவது பொருந்தும்.

(15 பக்கம் பார்க்க)

# ஆணைக்குழு அறிக்கை:

# தப்பியிருக்கலாமென்ற மூளை எது?


**சுஐப் எம்.காசிம்**

"எந்தக் கொள்கைகளையும் பலப்படுத்தும் நோக்கில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்படவில்லை. இலங்கையில் இஸ்லாமிய அடிப்படைவாதம் இருப்பதாகக் கருதவும் முடியாது". உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கையில் இப்படியும் உள்ளதாம். இந்த ஆணைக் குழுவை நியமித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் இந்த அறிக்கை குற்றம் சாட்டியுள்ளதுதான், இதிலுள்ள ஆச்சரியம். இந்தத் தாக்குதல் நடக்கவிருந்த ஒரு தினத்துக்கு லுடன் தொடர்புள்ள மிக முக்கிய சக்திகள், தப்பித்திருப்பதையே, பேராயர் மல்கம்ரஞ்சித் ஆண்டகையின் குற்றச்சாட்டுக்கள் தத்துவார்த்தமாகக் காட்டுகின்றன. அப்படி எந்தச் சக்தி தப்பியிருக்கும்? ஆட்சிக்கு வருவதை ஆசையாகக் கொண்டு எதிர்க்கட்சி செய்திருக்குமா? பேராயரின் குற்றச்சாட்டுக்களில் இதுவும் புலப்படவில்லையே! நல்லாட்சியிலிருந்த சிறுபான்மை பிரதிநிதிகளுக்கு இது தெரிந்துள்ளதாகவா பேராயர் சந்தேகிக்கிறார்?

இத்தனை குழப்பங்களுக்கும், சட்டமா அதிபரிடம் இன்னும் ஒப்படைக்க எஞ்சியுள்ள அறிக்கையின் 22 இணைப்புக்களில்



முன்னர், ஏப்ரல் (20) வெளியான பயங்கரவாதி சஹ்ரானின் ஒலி நாடாவில், "நாங்கள் குண்டுதாரிகளாக வெடித்துச் சிதற கடும்போக்கர்தான் காரணம்" என்ற ஆவேசமும் அடங்கியிருந்தது வெளிநாடுகளில் நடத்தப்படும் ஐ.எஸ் தாக்குதல்களுக்கும் இந்தக் கடும்போக்கரா காரணம்? என எழும், நியாயங்களால் குண்டுதாரிகளின் இந்த கூற்றுக்கள் அர்த்தமிழக்கின்றன. மாறாக, துரதிர்ஷ்டமாகக் கட்டமைக்கப்படும் மதத் தீவிரத்தின் கட்டவிழ்ப்புக்கள் இந்தத் தாக்குதலுக்கு காரணமாற்றியிருக்கலாமா? அல்லது ஐரோப்பாவில் இன்றளவுமுள்ள மத நம்பிக்கைகளின் (கிறிஸ்தவ, இஸ்லாம்) இடைவெளிகள் பங்காற்றியதா? இதனால், சர்வதேசம் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தியதா? அல்லது பாதுகாப்பு பலவீனமாக இருந்த சந்தர்ப்பத்தை, இந்தியா தூண்டியதா? அப்படியானால், தனக்குச் சார்பான இலங்கை அரசை வீட்டுக்கு அனுப்பி, சீனா சார்பு அரசை ஆட்சிக்கு கொண்டு வருமளவுக்கு ராஜ்ய, ராணுவ, ராஜதந்திர அறிவு "ரோவுக்கு இல்லையா? என்ற கேள்விகளும் எழவே செய்கின்றன.




அறிக்கையிலுள்ள இந்த குழப்பங்கள் மக்களையும் இவ்வாறுதான் குழப்புகின்றன. சகல தரப்பும் இந்த ஆணைக் குழுவின் அறிக்கையை நிராகரித்துள்ளதால், பல கோணங்களின் பார்வைகளுக்கு இது உட்படுகிறது. குற்றம் சாட்டப்பட்ட தரப்பு தப்பிக்கலாம் என நினைக்கிறது. புதிய அறிக்கை வெளியானால், நாமும் குற்றம் சாட்டப்படலாமென இன்னும் சில தரப்பும் அஞ்சுகிறது. இவையெல்லாம் ஒருபுறமிருக்க, யாரைத் திருப்திப்படுத்த இந்த விசாரணை நடத்தப்பட்டதோ, அந்தச் சமூகத்தின் உயர்மட்ட மதத் தலைமை இந்த அறிக்கையை அடியோடு நிராகரித்து விட்டது.

கிறிஸ்தவர்களின் அதிருப்தியையும் இது ஏற்படுத்தலாம். இது மட்டுமா? அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறுமளவுக்கு அரசியல் நிலைமை மோசமடைந்துமுள்ளது. தாக்குத பதிலிருந்தால் போதுமானது. ஏற்கனவே ஒப்படைக்கப்பட்ட 65 பாகங்களை மாத்திரம் வைத்து, எவருக்கும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளதால், எஞ்சிய அறிக்கைகளும் சட்டமா அதிபருக்கு கையளிக்கப்பட்டேயாக வேண்டும். பயங்கரவாதத்தை ஒழித்த பெருமையிலுள்ள இந்த அரசாங்கம், நிச்சயம் இதையும் தோற்கடிப்பதில் விழிப்புடனிருக்கும். இதில், முஸ்லிம் சமூகம் நிம்மதிப்பட நிறையவுள்ளன. ஒட்டுமொத்த சமூகமும் குற்றவுணர்வுடன் நோக்கப்பட்ட நிலை நீங்கியுள்ளது. தாக்குதலுடன் இலங்கை முஸ்லிம்களுக்கு எவ்விதப் பின்புலமும் இல்லை எனத் தெளிவாகியுள்ளது. பயங்கரவாதி சஹ்ரான் முழு முஸ்லிம் சமூகத்தையும் பிரதிநிதித்துவம் செய்யாதது, ஏற்கனவே விரல் நீட்டப்பட்ட முஸ்லிம் தலைவர்கள் மீது கைவிலங்குகள் நீட்டாதது, சர்வதேச சக்திகளின் தேவைக்காக இது நடந்ததாவென, பேராயர் சந்தேகிப்பது என்பவைகளே அவை.

இன்று "கறுப்பு ஞாயிறு" பிரகடனப்படுத்தப்பட்டு, ஏப்ரல் 21ல் கிறிஸ்தவ சகோதரர்களின் வீடுகள், தேவாலயங்களில் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிடுமளவுக்கு ஒரு விடயத்தை நம்பியே, இந்த அறிக்கை நிராகரிக்கப்பட்டிருக்கிறது. இத்துடன் சகல சிறுபான்மை சமூகங்களும் கரிநாள் (கறுப்பு தினம்) கொண்டாடி, எதிர்ப்பு அரசியல் முழுமையடைகிறது.

மேலும் சில முஸ்லிம் எம்.பிக்கள் நடந்து கொண்ட விதமும், அரசியல் ஆலோசனைகளை ஆணைக் குழு உள்வாங்கியதாக ஊகிக்கப்படுவதும்தான் இந்தச் சந்தேகத்துக்கு வலுச் சேர்க்கிறது. எனினும், அறிக்கையில் சந்தேகம் இருப்பதை அரசாங்கம் பொருட்படுத்தவுமில்லை பொறுப்பெடுக்கவுமில்லை. சந்தர்ப்பம் வாய்த்ததால், அரசுக்கு சகலதும் கைகூடியே வருகிறது. எஞ்சியுள்ள அரசியல் சவால்களை அடியோடு பிடுங்க, பௌத்த கடும் போக்குகளுக்கு கடிவாளமிட, மதங்களிள் பெயரிலான தீவிரத்துக்கு அனுமதியை மறுக்க இதைவிடச் சந்தர்ப்பம் ஏது?

ஆட்சிக்கு கொண்டுவர உதவும் இதே கடும்போக்குகள்தான் சில வேளைகளில் அரசையும் வம்புக்கு இழுக்கிறதே. இவற்றை ஒரு கை பார்க்க இதைவிட நல்ல சந்தர்ப்பமும் உருவாகுமா? பங்காளிக் கட்சிகள் எதுவும் வெளியேறி, 52 நாள் நிலையை ஏற்படுத்தலாமெனக் கனவுகாணக் கூடாது, விரும்பினால் வெளியேறலாமென்று கதவையும் திறந்து விட்டுள்ளது இந்த அரசு. அப்படியென்ன குடியா மூழ்கிப்போகும்? 150 பெரும்பான்மை இப்போது எதற்கு? மாகாண சபையை நடத்த ஒரு திருத்தம் தேவை, புதிய அரசியலமைப்பைக் கொண்டு வர இவர்களது பலம் தேவை., இவ்வளவுதானே! புதிய அரசியலமைப்பை பின்னர் பார்ப்போம். தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளின் அடையாளமான, அதிகாரப் பகிர்வின் ஆரம்பமான, முப்பது வருடப் போராட்டத்தின் முகவரியான மாகாண சபையை மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வர, சிறுபான்மை கட்சிகள் குறிப்பாக, தமிழ் கட்சிகள் ஆரவளிக்கத்தானே வேண்டும். இவ்வாறு நடந்தால் ஏனையதும் இனிதாகவே நடக்கும்.


## இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

**கல்வியில் சிறப்புக் கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம்**
**(விஷேட தேவைகள்சார் கல்வி)**
**2021/2022ஆம் கல்வி ஆண்டிற்கான மாணவர்களை உள்வாங்கல்**

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் விஷேட தேவைகள்சார் கல்வித்துறையினால் நடாத்தப்படும் மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்கான 3ஆம் வருட கல்விச்செயற்பாட்டிற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிகழ்ச்சித்திட்ட காலம் :- 4 வருடங்கள்**

1ஆம் வருடம் - கற்கை மட்டம் 3
2ஆம் வருடம் - கற்கை மட்டம் 4
} இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் எந்தவொரு துறை அல்லது பீடத்தால் வழங்கப்படும் டிப்ளோமா கற்கை நெறிகள் **அல்லது** தேசிய கல்வியியற் கல்லூரியின் தேசிய கல்வி போதனாவியல் டிப்ளோமா (விசேட கல்வி) இனை பூர்த்தி செய்திருத்தல்

3ஆம் வருடம் - கற்கை மட்டம் 5
4ஆம் வருடம் - கற்கை மட்டம் 6
} பாடநெறிகள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் விஷேட தேவைகள்சார் கல்வித் துறையினால் வழங்கப்படுகின்றது.

**கல்வியில் சிறப்புக் கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் (விஷேட தேவைகள்சார் கல்வி) 3ஆம் கல்வி ஆண்டிற்கான (கற்கை மட்டம்-5) விண்ணப்பங்கள் கோரல் மற்றும் பதிவுகளை மேற்கொள்ளல் ஆகிய செயற்பாடுகள் விஷேட தேவைகள்சார் கல்வித்துறையினால் மேற்கொள்ளப்படும்.**

விஷேட தேவைகள்சார் கல்வித்துறையினால் நடாத்தப்படும் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கற்கை மட்டம் - 5 இற்கான மாணவர்களை உள்வாங்குவதற்காக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் டிப்ளோமா (கற்கை மட்டங்கள் 3, 4) கற்கை நெறி ஒன்றினைப் பூர்த்தி செய்தோர்களிடமிருந்து **அல்லது** கல்வியியற் கல்லூரிகளில் போதனாவியல் தேசிய டிப்ளோமா (விசேட கல்வி) இனை பூர்த்தி செய்தோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**ஊடக மொழி** :- சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்
(கற்பித்தல் ஊடக மொழியானது ஒவ்வொரு மொழியிலும் உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்)
**காலம்** :- 2வருடங்கள்
கல்விசார் செயற்பாடுகள் :- கொழும்பு பிராந்திய நிலையத்தில் மாத்திரம் இடம்பெறும்.

**குறிப்பு :-**

**இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு எதிர்காலத்தில் விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகளுக்கு.**

எதிர்காலத்தில் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் முதலில் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் டிப்புளோமா (கற்கை மட்டம் 3, 4) நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நிறைவு செய்திருத்தல் வேண்டும். கீழே குறிப்பிடப்பட்ட ஏதாவது ஒரு நிகழ்ச்சித் திட்டத்திற்கு முன்னுரிமை வழங்குமாறு நாங்கள் உங்களை ஊக்கமளிக்கின்றோம்.

இலங்கை திறந்த பல்கலைக்கழத்தினால் வழங்கப்படும்,

முன்பிள்ளைப்பருவம் மற்றும் ஆரம்பக்கல்வி டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டம்.
சமூக விஞ்ஞான கலைமாணிப் பட்டம் (கற்கை மட்டம் 3, 4)
முகாமைத்துவ கலைமாணிப் பட்டம் (கற்கை மட்டம் 3, 4)
இயற்கை விஞ்ஞான மாணிப் பட்டம் (கற்கை மட்டம் 3, 4)

மேலே குறிப்பிட்டவற்றில் ஏதாவது ஒரு டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டத்தை (கற்கை மட்டம் 3, 4) பூர்த்தி செய்த மாணவர்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் விஷேட தேவைகள்சார் கல்வித் துறையினால் நடாத்தப்படும் கல்விமாணி நிகழ்ச்சித்திட்டத்திற்கு உள்வாங்கப்படுவார்கள்.

**விண்ணப்பச் செயன்முறை :-**

**குறித்த நிகழ்ச்சித்திட்டத்தினுள் உள்நுளைவதற்கான நியதிகள் பதிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.**

விண்ணப்பக் காலம்: **07.03.2021** தொடக்கம் **07.04.2021** காலப்பகுதியினுள் விண்ணப்பிக்கமுடியும்
விண்ணப்ப முடிவுத்திகதி: **07.04.2021**

Apply Online

**விண்ணப்பப்படிவக் கட்டணம்: ரூபா. 350.00**

விண்ணப்பப் படிவத்திற்கான கட்டணத்தைக் கடன் அல்லது பற்று அட்டையைப் பயன்படுத்தி நிகழ்நிலை முறையின் (Online) ஊடாகச் செலுத்த முடியும். கடன் அல்லது பற்று அட்டையைப் பயன்படுத்தி கட்டணத்தைச் செலுத்த முடியாதவர்கள் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் கொழும்புப் பிராந்திய நிலையத்தில் நேரடியாகத் தங்களது கட்டணத்தைச் செலுத்த முடியும்.

நிகழ்நிலை முறையின் (Online) ஊடாக அனுப்பப்படும் விண்ணப்பப் படிவங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும். நிகழ்நிலை முறையின் (Online) ஊடான செயற்பாடுகளுக்கு உதவிகள் தேவைப்படுவோர் ஏதாவது பிராந்திய அல்லது கற்கை நிலையத்திற்கு அழைப்பினை மேற்கொண்டு கீழே பட்டியற் படுத்தப்பட்டுள்ள தகவல்களை வழங்கவும் : விண்ணப்பதாரியின் முழுப்பெயரும் முகவரியும், தேசிய அடையாள அட்டை இலக்கம், மின்னஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்.

**நிகழ்நிலை முறை (Online) தொடர்பான உதவிகள் தேவைப்படுவோர் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் ஏதாவது ஒரு பிராந்திய அல்லது கற்கை நிலையத்திற்குச் சென்று தேவையான தகவல்களையும் உதவிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.**

**கொழும்பு (நாவல), அனுராதபுரம், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கண்டி (பொல்கொல்ல), மாத்தறை (நூபே), பதுளை, குருநாகல், அம்பாறை, பண்டாரவளை, கம்பஹா, காலி, அம்பலாந்தோட்டை, ஹட்டன், திருகோணமலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, களுத்துறை, கேகாலை, மொனராகலை, பொலன்னறுவை, புத்தளம், இரத்தினபுரி, மன்னார், குளியாப்பிட்டிய, அம்பலாங்கொடை மற்றும் வவுனியா.**

கிடைக்கக்கூடிய புலமைப்பரிசில்கள் - மஹாபொல புலமைப்பரிசில், பல்கலைக்கழக மாணவர் உதவிப்பணக் கொடுப்பனவு, விரிவாக்கல் உதவிப்பணக் கொடுப்பனவு, உள்ளீர்ப்பு உதவிப்பணக் கொடுப்பனவு (மேலதிக விபரங்களிற்கு மாணவர் விவகாரங்கள் மற்றும் நலச்சேவைகள் பிரிவினைத் தொடர்பு கொள்ளவும்) - 0112881374

**மேலதிக தகவல்களுக்காக தொடர்பு கொள்ளவும் :**
பொதுத் தொடர்புகள் அலுவலகம், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட.
காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை (அனைத்து பொது விடுமுறை தவிர்ந்த நாட்கள்)
மேலதிக தகவல்களுக்கு: 0112 881327 /0112 881256

**ஏனைய நிலையங்களில் :**
காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை (ஞாயிறு, திங்கள் மற்றும் பொது விடுமுறை தினங்கள் தவிரந்த நாட்களில்)

**தலைவர்,**
**விஷேட தேவைகள்சார் கல்வித்துறை : 0112881515 /0112881492**

பதிவாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு

**IDA Credit No.: 5873 LK**

## பெறுகை அறிவித்தல்

### வட மாகாணத்தின் சோளப் பயிர்ச்செய்கைக்கு 100 எண்ணிக்கையான விசிறும் (Sprinkler) நீர்ப்பாசன முறைமை மற்றும் இயந்திரத்தினால் இயக்கப்படும் நீர்ப் பம்பிகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை வட மாகாணத்தின் சோளப் பயிர்ச்செய்கைக்கு 100 எண்ணிக்கையான விசிறும் (Sprinkler) நீர்ப்பாசன முறைமை மற்றும் இயந்திரத்தினால் இயக்கப்படும் நீர்ப் பம்பிகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதல் என்பவற்றிற்கு ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.
2. வட மாகாணத்தின் சோளப் பயிர்ச்செய்கைக்கு 100 எண்ணிக்கையான விசிறும் (Sprinkler) நீர்ப்பாசன முறைமை மற்றும் இயந்திரத்தினால் இயக்கப்படும் நீர்ப் பம்பிகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

| விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | அலகுகளின் எண்ணிக்கை | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| விசிறும் நீர்ப்பாசன முறைமைகள் | LK-MOA-PMU-221685-GO-RFB | 100 | 300,000.00 | 10,000.00 |
| இயந்திரத்தினால் இயக்கப்படும் நீர் பம்பிகள் | LK-MOA-PMU-221686-GO-RFB | 100 | 100,000.00 | 3,000.00 |

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை நிபுணரிடம் 2021-03-08ஆம் திகதியிலிருந்து 2021-03-29ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையும் பின்வரும் முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது செயற்றிட்டத்தின் நிதியிடல் முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
6. 2021-03-29ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 2021-03-29ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியில் சுயமாக வருகை தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என்பன தனித்தனியான உறைகளில் இடப்பட்டு 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என தபாலுறைகளில் குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் வேறொரு தபாலுறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கத்தைக் குறிப்பிட்டு **"வட மாகாணத்தின் சோளப் பயிர்ச்செய்கைக்கு 100 எண்ணிக்கையான விசிறும் (Sprinkler) நீர்ப்பாசன முறைமை மற்றும் இயந்திரத்தினால் இயக்கப்படும் நீர்ப் பம்பிகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதல்"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**கமத்தொழில் அமைச்சு, இல. 123/2, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல.**
**தொலைபேசி: 0777419521**
**திகதி: 07-03-2021**

---

கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும்
நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு

**வணிக நிபுணர்களிடமிருந்து தன்னார்வ ஆலோசனைச் சேவைகள்**

## 'நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு இயக்கமொன்றினைப் பலப்படுத்துதல்'

**கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சானது உள்ளூர் விவசாய உற்பத்திகள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள், உள்ளூர் உற்பத்தி நிறுவனங்கள் ஆகியவற்றைப் பலப்படுத்தும் வகையில் ஒருவலுவான கூட்டுறவு வலையமைப்பினை உருவாக்குவதற்கான தன்னார்வ ஆலோசனைச் சேவைகளை வழங்கத் தயாராகவுள்ள வணிக நிபுணர்களைப் பதிவு செய்வதற்கு விரும்புகின்றது.**

**ஆலோசனைச் சேவைகளுக்கான துறைகள்**

- விவசாயம், மீன்பிடி,மற்றும் கால்நடைகள் தொடர்பாகச் செயற்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள்
- இளைஞர்கள் மற்றும் பெண்கள் தொழில்முனைவோர்களினால் செயற்படுத்தப்படும் கூட்டுறவுச் சங்கங்கள்
- பாரம்பரிய கைத்தொழில் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்
- இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதித்து அந்நியச் செலாவணியை சேமிக்கத்தக்க பொருட்களை உற்பத்தி செய்யும் ஆரம்பநிலையிலுள்ள உள்ளூர் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்
- உயர்தரமான பொருட்களை விநியோகித்து நுகர்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடிய கூட்டுறவுச் சங்கங்கள்

**வணிக நிபுணர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் ஆலோசனைச் சேவைகள்**

1. உற்பத்திப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்துதல்
2. புத்தாக்கம் / தொழில்நுட்ப பிரயோகத்திற்கான வாய்ப்புக்களை இனங்காணல்
3. புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்கான உள்ளார்ந்த வளங்கள் தொடர்பாக அறிந்திருத்தல்
4. புதிய மூலதனத்தின் அவசியத்தினை தீர்மானித்தல்
5. புதிய சந்தை வாய்ப்புக்களைக் கண்டறிதல்
6. வளப் பயன்பாட்டினை நெறிப்படுத்துதல், குறைத்தல் மற்றும் இலகுபடுத்துதல் மூலம்

**உற்பத்திச் செலவினைக் குறைத்தல்**

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்வேறு துறைகளில் ஆலோசனை சேவைகளை வழங்கக்கூடிய வாண்மையுடைய தன்னார்வ நிபுணத்துவர்களின் சேவையினைப் பெற்றுக்கொள்வதற்காக அழைப்பு விடுக்கப்படுகின்றது. கூட்டுறவு இயக்கத்தை ஊக்குவிப்பதற்கு ஆர்வமுடைய தேர்ச்சியாளர் யாராவது அல்லது அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ள யாராவது அவர்களது அடிப்படைத் தகவல்களை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது. secretary@coopmin.gov.lk(070-1324041). கையடக்கத் தொலைபேசி இலக்கம் மற்றும் ஆலோசனை வழங்க இயலுமையுடைய துறை முக்கியமாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

ஆலோசனைச் சேவையினை வழங்கும் போது ஏனைய செலவுகள் ஏதும் ஏற்படின் அவை இராஜாங்க அமைச்சினால் மீளச் செலுத்தப்படும்.

**செயலாளர்**
**கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும்**
**நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு**
**08ஆவதுமாடி,எச் கியூ கொழும்பு கட்டிடம்,**
**இல.464 ஏ, ரி பி ஜாயா மாவத்தை,**
**கொழும்பு10,**

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

பாதுகாப்பு அமைச்சு

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

### ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலைக்காக Hybrid Uninterrupted Power Supply (UPS) இன் வழங்கல், விநியோகம், நிறுவுதல், செயற்படவைத்தல், பயிற்சி மற்றும் பராமரிப்பு

**Contract Identification No: MOD/KDU/02/2020**

1. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலைக்கு Hybrid Uninterrupted Power Supply (UPS) இன் வழங்கல், விநியோகம், நிறுவுதல், செயற்படவைத்தல், பயிற்சி மற்றும் பராமரிப்பிற்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை, இரத்மலானை, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக, துணைவேந்தர் சார்பில் பாதுகாப்பு அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

   **a. Hybrid OT உடன் Uninterrupted Power Supply (UPS) 01**

2. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. குறைந்தது 10 ஆண்டு கால வர்த்தகப் பதிவைக் கொண்ட Hybrid Uninterrupted Power Supply (UPS) வழங்கல் மற்றும் பராமரிப்பில் குறைந்தது 10 ஆண்டுகள் அனுபவத்தை பெற்ற வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. வெளிநாட்டு விலைமனுதாரர்கள் முறையாக நியமிக்கப்பட்ட (அங்கீகாரம் பெற்ற) உள்நாட்டு முகவர் (இலங்கை) மூலம் கூறுவிலை சமர்ப்பித்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் குறைந்தது 440 மில்லியன் இலங்கை ரூபா அல்லது அதற்கு இணையான பெறுமதியில் சராசரி ஆண்டுப் புரள்வை விலைமனுதாரர் பெற்றிருத்தல் வேண்டும் (கடந்த 3 ஆண்டுகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்)
   - முன்னர் கூறப்பட்ட உள்நாட்டு முகவரானவர் குறைந்தது 05 ஆண்டுகள் வர்த்தகப் பதிவை பெற்றிருத்தல் வேண்டும்.
   - அனைத்து வர்த்தகக் குறிகளும் இலங்கையில் குறைந்தது 05 ஆண்டுகள் சேவை வரலாற்றை கொண்டிருத்தல் வேண்டும்.
   - உற்பத்தியாளர்/ வழங்குநர் கடந்த 05 ஆண்டு காலத்தில் இதனை ஒத்த பண்புடைய குறைந்தது 03 ஒப்பந்தங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அந்த 03 ஒப்பந்தங்களின் ஒவ்வொன்றும் மேலுள்ள நோக்கத்தை கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு அதன் ஒவ்வொரு வழங்கலுக்கான ஒப்பந்தத் தொகை 220 மில்லியன் இலங்கை ரூபா அல்லது அதற்கு இணையான பெறுமதிக்கு குறையாதிருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் உற்பத்தியாளரிடம் இருந்து 02 ஆண்டுகள் விரிவான உத்தரவாதம் மற்றும் 10 ஆண்டுகள் முறைமை உத்தரவாதம் மற்றும் உற்பத்தியாளரிடம் இருந்து உதிரிப்பாகங்கள், நுகர்பொருட்கள், மென்பொருள் மற்றும் துணைப்பொருட்களின் கிடைக்கும் தன்மை தொடர்பில் 10 ஆண்டுகள் உத்தரவாதத்தை வழங்கல் வேண்டும்.
   - உத்தரவாதக் காலத்திற்குள் நிறுவப்பட்ட முறைமையின் எந்த ஒரு விசாரணைக்காகவும் இலங்கையில் உள்நாட்டு அலுவலகம் அல்லது உள்நாட்டில் பதிவுசெய்யப்பட்ட முகவர் ஒருவர் இருத்தல் வேண்டும்.
   - பொருட்களை உற்பத்தி செய்யாத அல்லது தயாரிக்காத விலைமனுதாரர், விலைமனு ஆவணத்தின் பிரிவு IV இல் உள்ளடக்கப்பட்ட வடிவத்தை பயன்படுத்தி உற்பத்தியாளர் அனுமதியை சமர்ப்பித்தல் வேண்டும்.
4. 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் கீழான தேவைகளை விலைமனுதாரர்கள் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதோடு அந்த சட்டத்தின் சில முக்கிய பகுதிகளின் சுருக்கம் பின்வருமாறு;

   (1) "எந்த ஒரு விலைமனுதாரர் சார்பிலும் முகவர் அல்லது உப முகவர், பிரதிநிதி அல்லது முன்மொழியப்பட்டவரான எந்த ஒரு நபரும், பிரிவு 10 இற்கு ஏற்ப பொது ஒப்பந்தத்தில் தம்மை பதிவுசெய்தல் வேண்டும் என்பதோடு பிரிவு 6 இன் கீழ் வழங்கப்பட்டிருக்கும் தேவையான விபரங்களை பதிவுசெய்வதற்கு வழங்கல் வேண்டும்."

   (2) "விலைமனுதாரர் ஒருவரின் சார்பாக அல்லது முகவர், உப முகவர், பிரதிநிதி அல்லது முன்மொழியப்பட்ட எந்த ஒரு நபராக இருப்பவரும், இந்த பிரிவின் கீழ் பொது ஒப்பந்தத்தில் தம்மை பதிவுசெய்வதற்கு அவர் பதிவாளர் முன் முதலில் தாம் முகவர் அல்லது உப முகவர், பிரதிநிதி அல்லது முன்மொழியப்பட்டவர் என்பதற்கான சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்."

   (3) (தொடர்புடையது என்றால்), 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு அமைய, விலைமனு ஆவணத்தை கொள்வனவு செய்யும்போது அல்லது அதற்கு முன்னர் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிப்பதற்கு விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.
5. ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலமானது ஒப்பந்தம் கைச்சாத்தான திகதியில் இருந்து (பயிற்சி மற்றும் பராமரிப்புத் தவிர்த்து) 90 நாட்காட்டி தினங்கள்.
6. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள்

   **தலைமை நிதி அதிகாரி I**
   **பாதுகாப்பு அமைச்சு,**
   **இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
   **கொழும்பு 03,**
   **இலங்கை (தொலைபேசி 011-2439381 தொலைநகல் 011-2390720)**

   என்ற முகவரியில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம். விலைமனு ஆவணங்களை 2021 மார்ச் 08 அன்று தொடக்கம் 2021 மார்ச் 29 அன்று வரை வேலை நாட்களில் 0900 மணி தொடக்கம் 1500 மணி வரை மேலுள்ள முகவரியில் கட்டணம் இன்றி பரீட்சிக்கலாம் ((தொலைபேசி 011-2439381 தொலைநகல் 011-2390720 மற்றும் மின்னஞ்சல் procurement@defence.lk)
7. விலைமனுதாரர் மற்றும் அவரது உள்நாட்டு முகவர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.
8. மீளளிக்கப்படாத 36,000.00 இலங்கை ரூபாவை (இலங்கை ரூபா முப்பத்தி ஆறாயிரம்) செலுத்தி 2021 மார்ச் 08 அன்று தொடக்கம் 2021 மார்ச் 29 அன்று வரை வேலை நாட்களில் 0900 மணி தொடக்கம் 1500 மணி வரை தலைமை நிதி அதிகாரி I, பாதுகாப்பு அமைச்சு, இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு 03, இலங்கை என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்.
9. விலைமனுக்களை 2021 மார்ச் 30 அன்று பி.ப. 1430 மணி அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் அல்லது கீழுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடலாம்.

   **பெறுகைப் பிரிவு,**
   **பாதுகாப்பு அமைச்சு,**
   **தரைத் தளம், இல. 15/5,**
   **பாலதக்ஷ மாவத்தை,**
   **கொழும்பு 03.**

   தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.
10. விலைமனுக்கள் 2021 மார்ச் 30 அன்று தொடக்கம் 2021 ஜுன் 28 அன்று வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும். அனைத்து விலைமனுக்களும் 2021 மார்ச் 30 அன்று தொடக்கம் 2021 ஜூலை 26 அன்று வரை செல்லுபடியானதாக நிபந்தனையற்றதும் கோரும்போது பெறத்தக்கதுமான வடிவத்தில் இலங்கை மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வங்கில் இருந்து பெறப்பட்ட மூன்று மில்லியனே முந்நூறு ஆயிரம் இலங்கை ரூபா (இலங்கை ரூபா 3,300,000.00) "விலைமனு பிணை" ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணையின் பயனாளியாக பாதுகாப்பு அமைச்சு, செயலாளர் இருத்தல் வேண்டும்.
11. தொடர்பு விபரங்கள்:

   **தலைமை நிதி அதிகாரி I**
   **தொலைபேசி : 011-2439381**
   **தொலைநகல் இல. : 011-2390720 மற்றும் மின்னஞ்சல் procurement@defence.lk**

   **பெறுகை அதிகாரி,**
   **ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலை,**
   **வேரஹர, பொரலஸ்கமுவ, இலங்கை**
   **தொலைபேசி : 0094-11-2044555/ நீடிப்பு 4373**
   **தொலைநகல் : 0094-11-2044592**
   **மின்னஞ்சல் : procurement_ uh@kdu.ac.lk**
12. பின்வரும் முகவரிக்கு எழுத்துமூலமாக அறிவிக்க விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

   **தலைமை நிதி அதிகாரி I,**
   **பாதுகாப்பு அமைச்சு,**
   **இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
   **கொழும்பு 03,**
   **இலங்கை.**

விலைமனு திறக்கும் நிகழ்வில் பங்கேற்கும் தனிநபர்கள் விலைமனு திறக்கப்படுவதற்கு குறைந்தது மூன்று (03) வேலை நாட்களுக்கு முன்னர் பெயர் மற்றும் தே.அ.அ./ கடவுச்சீட்டு இலக்கத்தை பின்வரும் முகவரிக்கு எழுத்துமூலம் அறிவிக்க விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

**தலைமை நிதி அதிகாரி I,**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு 03,**
**இலங்கை.**
**மின்னஞ்சல் procurement@defence.lk**

குறித்த பெறுகை தொடர்பிலான எந்த ஒரு உத்தியோகபூர்வ விடயங்களிலும் பங்கேற்கும் தனிநபர்களின் பெயர் மற்றும் தே.அ.அ./ கடவுச்சீட்டு இலக்கம். 13. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலை, பணிப்பாளர் மருத்துவ சேவை மாநாட்டு மண்டபத்தில் 2021 மார்ச் 17 அன்று மு.ப. 1000 க்கு இடம்பெறும்.

**தலைவர்**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு-03.**
**இலங்கை.**

2021 மார்ச் 07

# கலாவிபூஷண விருது வழங்கும் விழா

## இன்று யாழ்ப்பாணத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கலைஞர்கள் கௌரவிப்பு

சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் கலைஞர்களை கௌரவிக்கும் வகையில் நடாத்துகின்ற கலாவிபூஷண விருது வழங்கும் நிகழ்வில் முதற்கட்ட விழா இன்று யாழ்ப்பாணத்திலுள்ள இராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழா இன்று பிற்பகல் 12.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் கௌரவ அதிதியாக மனிதவுரிமைகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயலாளர் ஸ்ரீ சிவஞானசோதி கலந்துகொள்ளவுள்ள இவ்விழாவில் யாழ். மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் விசேட அதிதியாகவும் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலாளர் கே.கணகேஸ்வரன் மன்னார் மாவட்ட மேலதிக செயலாளர் எஸ்.குணபாலன், கிருபா லேணர் பணிப்பாளர் கிருபாகரன் ஆகியோர் கௌரவ அதிதியாக கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ்விழாவிலே யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட கலைஞர்கள் கலாவிபூஷண விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதுடன் பதக்கங்களும் அணிவித்து கௌரவிக்கப்படவுள்ளனர்.

இவ்விழா சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் தலைவர் துரைராசா சுரேஸின் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் நாதஸ்வரக் கச்சேரிகள், பரதநாட்டிய நிகழ்வுகள் என்பனவும் அரங்கேறவுள்ளன.

# PRONTO நிறுவனம் புது வடிவில் குருநாகலில் கிளை அங்குரார்ப்பணம்

தேசிய கூரியர் முன்னோடிகளான ப்ரொன்டோ லங்கா (பிறைவட்) லிமிட்டட் நிறுவனத்தாரால் தமது நவீனமயப்படுத்தப்பட்ட குருநாகல் கிளை கடந்த பெப்ரவரி 03ஆம் திகதி குருநாகல், நீர்கொழும்பு வீதி, 125/1, என்ற முகவரியில் சுப வேளையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நவீனமயப்படுத்தப்பட்ட புதிய அலுவலகம் நிறுவன ஊழியர்கள், விசேட அதிதிகள், வர்த்தகத் துறைசார் வாடிக்கையாளர்கள் அனைவர் முன்னிலையில் ப்ரொன்டோ லங்கா நிறுவன பொது முகாமையாளர் நளின் முனசிங்ஹ மற்றும் குருநாகல் மாநகர சபை மேயர் துஷார சஞ்ஜீவ ஆகியோரால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

சிங்கப்பூர் ட்ரான்ஸ்நேஷனல் கம்பனி லிமிட்டட் நிறுவனத்தின் முக்கிய உறுப்பினரான ப்ரொன்டோ லங்கா நிறுவனம் இந்நாட்டின் வங்கித்துறை, முன்னணி அரச நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் அனைத்துக்கும் தமது சேவைகளை வழங்கி வருகின்றது.

மூன்று தசாப்தங்களுக்கு மேலான அனுபவம் மிகுந்த இலங்கையில் மிகப் பாரிய மற்றும் கூடிய அனுபவம் கொண்ட தேசிய கூரியர் சேவையாகத் தமது வளங்களை மேம்படுத்திய வண்ணம் விசாலமாகும் வர்த்தகச் சந்தை மற்றும் ஈ-வணிகத் துறை ஆகியவற்றை இலக்காகக் கொண்டு மிகவும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தமது சேவைகளை வழங்கும் அபிலாஷையுடன் செயற்பட்டுவரும் நிறுவனமாக ப்ரொன்டோ லங்கா நிறுவனம் திகழ்கிறது.

ப்ரொன்டோ லங்கா நிறுவனம் நாடளாவிய ரீதியில் 52க்கும் மேற்பட்ட இடங்களில் தமது கிளைகளின் வலைப்பின்னலை பரவலாக்கியுள்ளது. அவற்றில் சேவைகளும், செயற்பாட்டு முறைகளும் வடிவமைக்கப்பட்டு அவற்றினூடாக 24 மணித்தியாலங்கள் முழுவதும் வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முடிவதோடு, வேகம், பாதுகாப்பு, நம்பகத்தன்மை மற்றும் பொறுப்பேற்றல் ஆகியன ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் வழங்கப்படும் சேவைகளில் முக்கியத்துவம் பெறுகின்றன.



நிறுவனம் நமது கிளை அமைப்பினை வலுவூட்டி விஸ்தரிக்கும் நோக்கில் பரந்துபட்ட துறைகள் ஊடாக போட்டிமிக்க வர்த்தகச் சந்தையை இலக்காகக் கொண்டு தமது சேவைகளை வழங்கி வருகிறது. மீளமைக்கப்பட்ட, இடவசதி மிகுந்த கிளை அலுவலகம் மூலம் ப்ரொன்டோ லங்கா நிறுவனம் தற்போதைய வாடிக்கையாளர்களைப் போன்றே குருநாகல் மற்றும் அதன் அயலில் உள்ள எதிர்கால வாடிக்கையாளர்களும் தமது சேவைகளைச் சுலபமாக பெற்றுக்கொள்ள வழி ஏற்பட்டுள்ளது.

தமது வருங்கால வாடிக்கையாளர்களுக்கு மதிப்பளிக்கும் வண்ணம் ப்ரொன்டோ லங்கா நிறுவனம் பல்வேறு சேவைகளையும் வழங்க முன்வந்துள்ளது.



நிற்பவர்கள் (இடமிருந்து வலம்): கெலும் லியனாராச்சி உதவிப்பணிப்பாளர், கிஹான் பெரேரா உதவிப் பணிப்பாளர், மெனுர வனிகசூரிய உதவிப் பணிப்பாளர், சிசிர செபிஹெல உதவிப்பணிப்பாளர், சியாமிந்த ஹேரத் கிளைத்தலைவர் குருநாகல்

அமர்ந்திருப்பவர்கள் (இடமிருந்து வலம்): பியல் புஷ்பகுமார - மனிதவள முகாமையாளர், வஜிர குலதுங்க - உதவிப் பொது முகாமையாளர் மனிதவளம், நளின் முனசிங்ஹ - பொது முகாமையாளர், சஞ்ஜீவ வர்ணகுலசூரிய - உதவிப் பொது முகாமையாளர், ரொஷான் பீரிஸ் - செயற்பாட்டு முகாமையாளர், ரொஷான் பெரேரா - விற்பனை மேம்பாட்டு முகாமையாளர்

நவீனமயப்படுத்தப்பட்ட கிளை அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றிய ப்ரொன்டோ லங்கா பொது முகாமையாளர் நளின் முனசிங்ஹ அவர்கள் இவ்வாறு தெரிவித்தார்.

"இலங்கையில் முக்கியமான வாணிப, பொருளாதார வர்த்தக மற்றும் முதலீட்டுக் கேந்திர ஸ்தானமாக மாறக்கூடிய குருநாகல் மாநகரில் எமது நவீனமயப்படுத்தப்பட்ட ப்ரொன்டோ லங்கா கிளையினைத் திறந்து வைக்கக் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரிய விடயம். அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் வளர்ச்சி காரணமாக இந்நகரம் பாரிய மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. நவீன மயப்படுத்தப்பட்ட இக்கிளை



திறக்கப்பட்டதன் விளைவாக பெறுமதிமிக்க எமது வாடிக்கையாளர்களுக்கு நாடளாவிய ரீதியில் பரந்த சேவைகளைப் பெற முடிவதோடு, நிறுவனங்களுக்கும் சிறிய மற்றும் மத்தியதர தொழில்முயற்சியாளர்களுக்கும் தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கும் இணையற்ற விஸ்தாரமான நுகர்வோர் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். உரிய அர்ப்பணிப்புடன் கூடிய எமது கிளையிலுள்ள சேவை மனப்பான்மையுள்ள ஊழியர்குழு, மதிப்புக்குரிய எம் வாடிக்கையாளர்களுக்கு அவர்களது கூரியர் தேவைகள் குறித்த நிபுணத்துவ அறிவுரைகளை வழங்கத் தயார் நிலையில் உள்ளார்கள். உங்களுக்கு மிகச்சிறந்த சேவை வழங்க நாம் எப்போதும் சித்தமாக இருக்கிறோம்.



பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

## இலங்கையில் வர்த்தக நிறுவனங்களின் படிமுறை வளர்ச்சி 4

# இலங்கை கைத்தொழிற்றுறையில் கணிசமான மாற்றத்தை ஏற்படுத்திய 1956 ஆட்சி மாற்றம்

இலங்கை தென் ஆசியாவின் தானியக் களஞ்சியம் என்னும் அடைமொழியுடன் அழைக்கப் படுவதிலிருந்து அது ஒரு விவசாயநாடு என முத்திரை குத்தப்பட்டு விடுகிறது. இலங்கையில் கைத்தொழில்களை விருத்திசெய்ய முடியுமென்றோ அல்லது அது தொடர்பான கொள்கைகளை வகுக்கவோ காலனித்துவ ஆட்சியிலோ அல்லது சுதந்திரம் பெற்ற ஆரம்ப காலங்களிலோ முனைப்புடன் முயற்சிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் காலனித்துவ ஆட்சிக்காலத்தின்போது குறிப்பாக ஆங்கிலேய ஆட்சியின்போது பெருந்தோட்டக் கைத்தொழிலுடன் தொடர்புபட்ட சில உள்ளூர் கைத்தொழில்கள் உருவாகின. அத்துடன் நுகர்வுப் பண்டங்களுடன் தொடர்புடைய கைத்தொழில்களின் வருகையையும் அவதானிக்க முடிகிறது.

ஒல்லாந்தர் ஆட்சியின்போது 1658 இலிருந்து இலங்கையில் சாராய உற்பத்தி பிரபலமாகியது. 1802இல் பிரித்தானியரால் கரையோரப் பிரதேசங்களில் தென்னந்தோட்டங்களை அமைத்து சாராய உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இலங்கையின் சாராயம் பினாங், சிங்கப்பூர், பம்பாய் போன்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. 1810 காலப்பகுதியில் 790397 கலன் சாராயம் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டதாக தகவலொன்று கூறுகிறது. எவ்வாறாயினும் 1873 காலப்பகுதியில் இறக்குமதி வரிகள் அதிகரிக்கப்பட்டதனால் பிரச்சினைகள் உருவாகி 1910 ஆகும்போது சாராய ஏற்றுமதி முற்றாகத் தடைப்பட்டுப் போனது. ஆயினும் இலங்கை வடிசாலைக் கம்பனியின் ஆரம்பம் 1913 இலிருந்து தொடங்குகிறது. 1917 தொடக்கம் 1992 வரை அரசுடைமையாக இருந்த இந்நிறுவனம் 1992இல் தனியார் மயப்படுத்தப்பட்டது. இது தவிர வேறு இரண்டு நிறுவனங்களும் சாராய உற்பத்தியில் ஈடுபட்டன.



1844இல் வில்லியம் மில்னர் என்பவரால் மில்னர் அண்ட் கம்பனி ஆரம்பிக்கப்பட்டது. 1850 டேவிட் கார்கில் என்பவரை பங்காளராக சேர்த்து மில்னர் அண்ட் கார்கில் என மாற்றம் செய்யப்பட்டது. பின்னர் இக்கம்பனி கார்கில் அண்ட் கம்பனியாக பெயர்மாற்றம் செய்யப்பட்டது. 1851 அமெரிக்காவில் தையல் இயந்திர உற்பத்தியில் கால்பதித்த சிங்கர் நிறுவனம் 1877இல் இலங்கையில் தனது கிளையைத் திறந்தது. ஆரம்பத்தில் தையல் இயந்திரத்தை முழுமையாக இறக்குமதி செய்த நிறுவனம் 1963இல் உதிரிப்பாகங்களை வரவழைத்து தையல் இயந்திரங்களைக் கூட்டிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டது. இன்னொரு முக்கிய கம்பனியாகிய மில்லர்ஸ் கம்பனி 1854இல் உருவாக்கப்பட்டது.

இலங்கையின் குளிர்பான உற்பத்தியில் ஜாம்பவான்களாக விளங்கும் எலிபன்ட் ஹவுஸ் 1866இல் சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் ஐஸ் உற்பத்தி செய்யும் கம்பனியாக உருவாக்கப்பட்டது. யானை மார்க் குளிர்பானங்களை இக்கம்பனி உற்பத்தி செய்தன. 1878இல் சார்ல்ஸ் பிக்கரிங் ஹேலீஸ் என்பவரால் காலி நகரில் ஹேலீஸ் கம்பனி உருவாக்கப்பட்டது. மேட்டுக்குடியினருக்கான ஆடம்பரப்பொருட்களை இறக்குமதி செய்யும் அதேவேளை, வாசனைத்திரவிய ஏற்றுமதியிலும் அது ஈடுபட்டது. தேயிலை உற்பத்தி மற்றும் ஏற்றுமதித்துறையில் பிரபலமாகிய லிப்டன் தேயிலைக் கம்பனி 1890களில் 5500 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட ஒரு பெருந்தோட்டக் கம்பனியாக உருவெடுத்தது. புரூக்போன்ட் தேயிலைக் கம்பனி 1923இல் உருவாக்கப்பட்டது. 1929இல் லீவர் பிரதர்ஸ் சவர்க்காரக் கம்பனி இலங்கையில் கிளைபரப்பியது.

இவ்வாறு உலகளாவிய ரீதியில் பிரபலமான வர்த்தக நாமங்களைக் கொண்ட நிறுவனங்களும் இலங்கையில் தமது கிளைகளை ஆரம்பித்திருந்த அதேவேளை உள்ளூர் நிறுவனங்களும் உருவாக்கப்பட்டிருந்தன. சிற்றளவில் தேயிலைப் பொதியிடல் பெட்டி ஒட்டுப்பலகை, கண்ணாடி மற்றும் தோற்பொருள் தயாரிப்பு இனிப்புப் பொருள் தயாரிப்பு போன்ற துறைகளில் சிற்றளவு நிறுவனங்கள் ஈடுபட்டிருந்தன. 1939 தொடக்கம் 1944 வரையிலான காலப்பகுதியில் இரண்டாம் உலக மகாயுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் இறக்குமதிகள் தடைப்பட்ட காரணத்தினால் உள்ளூரில் கைத்தொழில்களை ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு சில கைத்தொழில்கள் இயங்கின. ஆயினும் யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து இறக்குமதிகள் மீண்டும் இடம்பெற ஆரம்பிக்கவே உள்ளூர் கைத்தொழில்கள் மீண்டும் முடங்கிப் போயின.

எனவே காலனித்துவ ஆட்சியின்போது இலங்கையின் கைத்தொழிற்துறையில் முக்கிய கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இலங்கையில் உருவாகிய மேலே நாம் குறிப்பிட்ட கம்பனிகள் ஒன்றில் பெருந்தோட்டத்துறை ஏற்றுமதிகளோடு தொடர்புபட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டவையாக இருந்தன. பரும்படியாகக் கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்ட கம்பனிகளை அடையாளங்காண்பது கடினம். அத்துடன் காலனித்துவ ஆட்சியாளர்களின் கொள்கை காலனித்துவ நாடுகளை கைத்தொழில்மய நாடுகளாக ஆக்குவதன்றி ஆட்சியாளர்களின் அந்நாடுகளில் இடம்பெற்றுவந்த கைத்தொழிற் புரட்சிக்கு அவசியமான மூலப்பொருள்களை உற்பத்தி செய்யும் நாடுகளாகவும் அதேவேளை கைத்தொழில் முடிவுப்பொருள்களின் சந்தைகளாகவும் காலனித்தவ நாடுகளை மாற்றியமைத்துக் கொள்வதாகவும் இருந்தது.

இந்நடவடிக்கைக்கு எதிராக இந்தியா மேற்கொண்ட அந்நியப்பொருள் எதிர்ப்புக் கொள்கை மிகப்பிரபலமானது. இந்தியாவின் தேசபிதா என்றழைக்கப்படும் மகாத்மா காந்தி இங்கிலாந்தில் சட்டம் பயின்று பாரிஸ்டர் பட்டம் பெற்ற ஒரு வழக்கறிஞர். தென்னாபிரிக்காவில் அவர் இருந்தபோது ஆங்கிலேயரைப் போல முழு சூட் ஆடையில் தான் அவரைப் பார்க்க முடியும். ஆனால் அதே காந்தி இந்தியாவில் வெறும் இரண்டுதுண்டு கதராடைகளை மட்டும் வாழ்நாள் முழுதும் அணிந்தமைக்கு அந்நியப் பொருள் எதிர்ப்பு என்ற ஒரேயொரு காரணம்தான் உண்டு. அக்காரணத்திற்காக அவரை அப்போதைய பிரித்தானியப் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் அரை நிர்வாணப்பக்கிரி என அழைத்தமையும் குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் இதயமாக விளங்கிய பருத்திக் கைத்தொழிலைச் சூறையாடிய பிரித்தானியாவிற்கான எதிர்வினையாகவே காந்தியின் நடவடிக்கை அமைந்திருந்தது. இந்தியாவின் கடந்த அரசாங்கம் வரையிலும் ஆட்சியாளர்கள் கதராடைகளையே அணிந்தமைக்கும் இதுவே காரணமாகும்.



ஆனால் இலங்கையில் அந்நிய ஆட்சிக்கு முன்னரும் சொல்லிக் கொள்ளக் கூடிய அளவுக்கு எந்தக் கைத்தொழிலும் பிரபலமடைந்திருந்ததாகக் குறிப்புகள் இல்லை. ஒரு விவசாய நாடாகவே அது பார்க்கப்பட்டது, கருதப்பட்டது. இலங்கையின் ஒப்பீட்டு நன்மை விவசாயத்துறையில் இருப்பதாகக் கருதப்பட்டமையினாலும் பழங்கால தானியக்களஞ்சியக் கதைகளாலும் இலங்கையை ஒரு கைத்தொழில் நாடாக மாற்றமுடியும் என்ற முயற்சியில் எவரும் ஈடுபடவில்லை. எனவேதான் இலங்கையின் இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கை ஏனைய குடியேற்ற நாடுகளைப் போல் கைத்தொழிற்துறையிலன்றி விவசாயத்துறையிலேயே ஏற்பட்டது.

சுதந்திரம் பெற்ற காலப்பகுதியில் கைத்தொழில் துறையில் பெரிய மாற்றங்களைக் கொண்டுவர 1948ல் பதவியேற்ற அரசாங்கம் பெரியளவில் முயற்சிக்காமல் போனமைக்கு அக்காலப்பகுதியில் அது எதிர்நோக்கிய உணவுப்பொருள் விலையதிகரிப்பே முக்கிய காரணமாகும். 1956 வரையில் இலங்கையின் கைத்தொழிற்துறையில் குறிப்படத்தக்களவு மாற்றங்கள் ஏற்படவில்லை. 1956 இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து சந்தைப் பொருளாதாரத்திற்குப் பதிலாக திட்டமிட்ட பொருளாதாரத்தை மாற்றீடு செய்யவும் சோவியத் ஒன்றியத்தைப் பின்பற்றிய பொருளாதாரத் திட்டமிடலை மேற்கொள்ளவும் இந்தியப் பொருளாதார மாதிரியை முயற்சிக்கவும் எதிர்பார்க்கப்பட்டது.

அதனொரு அங்கமாக அரச முயற்சியில் பாரியளவிலான பாரக் கைத்தொழில்கள் வெளிநாடுகள் வழங்கிய அன்பளிப்பில் இலங்கையில் தாபிக்கப்பட்டன. ஒருவல என்னும் இடத்தில் இரும்புருக்குக் கைத்தொழிற்சாலையும், காங்கேசன்துறையில் சீமெந்துத் தொழிற்சாலையும், வாழைச்சேனையில் காகிதத் தொழிற்சாலையும், பரந்தனில் இரசாயனத் தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை வடக்குக் கிழக்குப் பிரதேசங்களிலேயே ஆரம்பிக்கப்பட்டன என்பதையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தம். இவற்றில் நிலவிய அரசியல் தலையீடுகள் காரணமாகவும் நாட்டில் நிலவிய யுத்த சூழல் காரணமாகவும் எதிர்பார்த்த கைத்தொழில் விரிவாக்கத்தை இலங்கையினால் அடைய முடியவில்லை.

தனியார்துறை குடும்ப முயற்சிகளாக உபாலி விஜேவர்தனாவின் உபாலி நிறுவனம் மோட்டார் வாகன உற்பத்தி முதற்கொண்டு டெல்டா டொபி வரையிலான கைத்தொழில்களை வெற்றிகரமாக ஆரம்பித்து முன்கொண்டு சென்ற போதிலும் எதிர்பாராவிதமாக அவரது சொந்த விமானம் மலேசியாவில் காணாமல் போனதுடன் அந்நடவடிக்கைகள் முடிந்து போயின.

தாஸ நிறுவனம் என்றழைக்கப்படும் உள்ளூர் குடும்ப நிறுவனம் சூர்ப்பர் மார்க்கட் முறையை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியதுடன் கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. அரசியல் தலையீடுகளும் அழுத்தங்களும் அந்நிறுவனத்தை வளர விடவில்லை. உரிமையாளரின் மரணத்தைத் தொடர்ந்து அக்கம்பனியும் வலுவழந்து போனது.

தனியார்துறை தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் பழுதுபட்டதாக இருந்ததுடன் அரசியல் தலையீடு மிக்கதாகவும் இருந்த காரணத்தினால் அவை வளர்வதற்கான புறச்சூழல் இருக்கவில்லை.

# மாற்றங்களை நோக்கிப் பயணிக்கும் ஆற்றலர்கள் அற்ற தமிழ்ச் சமூகம்

கருணாகரன்

தமிழ் மக்களின் நெருக்கடிகளுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வைக் காணக் கூடிய தலைமைகள் எதுவும் இல்லை. அரச ஆதரவுக் கட்சிகள், அரச எதிர்ப்புக் கட்சிகள். மேற்குச் சாய்வைக் கொண்ட கட்சிகள். இந்திய ஆதரவுத் தலைமைகள். இடதுசாரிகள். வலதுசாரிகள். முன்னாள் இயக்கங்கள். பின்னர் உருவாகிய புதிய கட்சிகள், பேரவை, சிவில் அமைப்புகள். போதாக் குறைக்கு நாடு கடந்த அரசாங்கம், நாடு கடக்க முடியாத அரசாங்கம் என்று பல தரப்புகள் இருந்தாலும் இவை ஒன்றினாற் கூட உருப்படியாகச் செயற்பட முடியவில்லை. அப்படிச் செயற்படக் கூடிய தரப்புகளை மக்கள் இனங்கண்டு ஆதரிப்பதுமில்லை. ஆகவேதான் நெருக்கடிகள் வரவரக் கூடிக் கொண்டு போகின்றன. தமிழ்ச்சமூகம் வரவர நலிவடைந்து செல்கிறது.

இதற்குக் காரணம், இந்தத் தலைமைகளினதும் கட்சிகள், அமைப்புகளினதும் அறிதிறனும் தூர நோக்கும் போதாது என்பதே. அதையும் விட இவற்றிடம் வினைத்திறனே இல்லை எனலாம். முன்னர் ஆயுதந்தாங்கிய இயக்கங்களாக இருந்து அரசியற் கட்சிகளாகிய தரப்புகளும் இப்பொழுது படு பஞ்சிக்குமுக்களாகி விட்டன. நல்லதொரு உதாரணம், புளொட்டும் சித்தார்த்தனும். 1970 களின் பிற்பகுதியிலும் 1980 இன் நடுப்பகுதி வரையிலும் மிகச் சிறப்பாக மக்கள் பணியாற்றி வந்த புளொட் இப்பொழுது உலக மகா பஞ்சிக்கட்சியாகி விட்டது. பாராளுமன்றத்திலும் வெளியிலும் தூங்கும் அரசியற் தலைவர்களில் சித்தார்த்தனும் ஒருவராகி விட்டார். ரெலோவைப் பற்றிச் சொல்வே வேண்டாம். அதில் ஒரு முக்கியமான முகமாக விளங்கிய சிவாஜிலிங்கம் பல சந்தர்ப்பங்களிலும் அரசியற் கோமாளியாகி விட்டார். ஆனாலும் சில சந்தர்ப்பங்களில் அவர் மட்டுமே சரி, பிழைகளுக்கு அப்பால் துணிச்சலான ஒருவராகவும் உள்ளார். இருந்தாலும் அரசியல் வழிமுறையொன்றில்லாமல், அதற்கான சிந்தனையும் செயற்திட்டமும் இல்லாமல் வெறும் துணிச்சல் மட்டும் எந்தப் பயனையும் தராது. இந்தத் துணிச்சல் கூட போர்க்கால துணிச்சல்களோடு ஒப்பிடும்போது கழுதை கெட்டுக் கட்டெறும்பாகிய கதைதான்.

அரசியல் என்பது நுண்மதியும் வினைதிறனும் உடையது. இதற்கு அர்ப்பணிப்பும் துணிச்சலும் வேண்டும். எதையும் ஜனநாயக ரீதியில் ஏற்றுக் கொள்ளவும் விட்டுக் கொடுக்கவும் கூடிய பண்பும் மனப்பாங்கும் தேவை. செயற்பாட்டுத் திறனும் அதற்கான கட்டமைப்புகளும் அவசியம். மக்கள் மீதான கரிசனை வேண்டும். பிரச்சினைகளை வளர்க்காமல், அவற்றுக்குத் தீர்வு காணக் கூடிய வல்லமையும் அதற்கான சிரத்தையும் வேண்டும். இதொன்றுமில்லாமல், மக்களுக்கான அரசியலை முன்னெடுக்கவே முடியாது என்பதால்தான் தமிழ்ச்சமூகத்தின் அரசியல் படுகுழிக்குள் விழுந்து சுற்றிக் கொண்டிருக்கிறது.

இதைப் புரிந்தும் புரியாத மாதிரி நம்முடைய அரசியல் ஆய்வாளர்களாக அடையாளம் காட்டுவோரும் ஊடகத்துறையினரும் உள்ளனர். இதற்குள் ஏதாவது அதிசயங்கள் நிகழ்ந்து விடாதா என்ற நப்பாசையோடு விக்கினேஸ்வரனா, கஜேந்திரகுமாரா, சுமந்திரனா, சாணக்கியனா என்ற ஆருடக் கனவுகள் வேறு இவர்களுக்கு. இவர்கள் ஒவ்வொருவருக்குப் பின்னும் அணிகள் வேறு. இந்த அணிகள் எல்லாம் வெறும் முசுப்பாத்திக் கொம்பனிகள் போலவே உள்ளன. மறுவளத்தில் சம்மந்தனைப் பற்றிய நம்பிக்கைகள் எல்லாம் அவருடைய முதுமையைப்போல முடிந்து வெகு காலமாகி விட்டது. இதில் ஆகப் பெரிய துயரம் என்னவென்றால், ஆயுதமேந்திய விடுதலைப் போராட்டப் பாரம்பரியத்திலிருந்து வந்த அரசியல் நோக்கர்கள் கூட தளம்பித் தள்ளாடி, மக்களைப் பற்றியோ சமூகத்தைப் பற்றியோ நம்முடைய சூழலைப் பற்றியோ எந்த வகையான அக்கறையும் இல்லாத பிரமுகர்களின் (விக்கினேஸ்வரன், கஜேந்திரன், சுமந்திரன், சாணக்கியன்) பின்னால் இழுபடுகிறார்கள் என்பது.

இதனால்தான் தமிழ் மக்கள் தொடர்ந்தும் தோற்றுக் கொண்டேயிருக்கிறார்கள். தோல்வியின் படிக்கட்டிலேயே பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தீர்க்கதரிகளும் இல்லை. தலைவர்களும் இல்லை. வழிகாட்டிகளும் இல்லை என்று தொடர்ச்சியாகவே குறிப்பிட்டு வருகிறேன். ஒரு சமூகத்துக்குத் தீர்க்கதரிசிகளும் வழிகாட்டிகளும் நேர்மையான தலைவர்களும் விசுவாசமான தொண்டவர்களும் (தொண்டர்கள் என்பது கட்சிகளுக்கும் அமைப்புகளுக்கும் தலைவர்களுக்குமே இருக்க வேண்டும் என்றுதான் பலரும் நம்புகிறார்கள். இது தவறு. உண்மையான தொண்டர்கள் மக்களுக்கு விசுவாசமானவர்கள். மக்களுக்கே தொண்டாற்றுகின்றவர்கள். மக்களுக்கு மாறாக அமைப்போ தலைமையோ செயற்படுமாக இருந்தால் அதை மக்களின் நிலை நின்று எதிர்ப்போராகவே இருப்பர்) இல்லையென்றால் அந்தச் சமூகம் நெருக்கடிக்குள்ளாகும். இதனால்தான் இலங்கையில் தமிழர்களின் அரசியல் மிகுந்த நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. இந்த அரசியல் நெருக்கடி மக்களுடைய வாழ்க்கைக்கான நெருக்கடியாக, அவர்களுடைய எதிர்காலத்துக்கான நெருக்கடியாக உள்ளது.



இங்கே நாம் ஒரு விசயத்தைக் கவனிக்க வேண்டும். மக்கள் நெருக்கடிக்குள்ளாகிக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்குப் புதிய புதிய பிரச்சினைகள் உருவாகிக் கொண்டேயிருக்கின்றன. ஆனால் கட்சிகளும் தலைவர்களும் அதிகரித்துக் கொண்டிருப்பது மட்டுமல்ல, அவர்கள் கொழுத்துக் கொண்டுமுள்ளனர். இது மக்கள் அரசியலுக்கு எதிரானதல்லவா!

உண்மையான தலைமைத்துவம் என்பதும் உண்மையான அரசியற் கட்சி என்பதும் மக்களுடைய வாழ்க்கைச் சூழலோடு கலந்தது. பின்னிப் பிணைந்தது. இந்தப் பிராந்தியத்தில் இதற்கு நல்லதொரு உதாரணம், காந்தியும் அவர் உருவாக்கிய கட்சியுமாகும். அதிலும் அடிநிலை மக்களின் அடையாளம் எப்படியிருந்ததோ அதை காந்தி பிரதிபலித்தார். அந்த மனநிலையும் அதைப் பிரதிபலிக்கும் பேராற்றலும் அதற்கான துணிவும் காந்தியிடமிருந்தன. அதனால்தான் அவர் பல்லாயிரம் முரண்களையும் பல நூறு அடையாளச் சிக்கல்களையும் கொண்ட அந்தப் பெரிய இந்திய தேசத்தின் விடுதலையைச் சாத்தியமாக்கினார். காலத்தைக் கடந்து, இன்றும் நின்றொளிர்கிறார்.

இலங்கைச் சூழலில் தமிழர்களும் தமிழ் பேசும் மக்களும் சந்தித்த நெருக்கடிகளும் சந்தித்துக் கொண்டிருக்கும் நெருக்கடிகளும் சாதாரணமானவையல்ல. அதிலும் தமிழ் – முஸ்லிம் சமூகங்கள் அரசினாலும் தமக்கிடையிலும் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்தவை. அதிலும் தமிழர்கள் சந்தித்த நெருக்கடி இன்னும் பெரியது. போரின் அழிவை நேரடியாகவே சந்தித்தவர்கள். எழுபது ஆண்டுக்கும் அதிகமான கால ஒடுக்குமுறையையும் முப்பது ஆண்டுகாலப் போரையும் எதிர்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள். இப்பொழுது போரின் அழிவிலிருந்து மீள முடியாதிருப்பவர்கள்.

இந்தக் கனதியை உணர வேண்டுமாக இருந்தால் முப்பது லட்சம் மக்களைக் கொண்ட தமிழ்ச் சமூகத்தில் எண்பது ஆயிரத்துக்கு மேற்பட்ட பெண்கள் தங்கள் துணையை இழந்து நிற்கின்றனர். மூவாயிரத்துக்கு மேற்பட்டோர் காணாமலாக்கப்பட்ட தங்கள் உறவினர்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். ஐம்பது ஆயிரத்துக்கும் அதிமானோர் உடல் உறுப்புகளை இழந்து முடங்கிய நிலையில் உள்ளனர். பல ஆயிரக்கணக்கானோர் உளச்சிதைவுக்குள்ளாகியிருக்கிறார்கள். சொத்திழப்பு, உடமை இழப்பு, உறவினர் இழப்பு போன்றவற்றினால் வாழ முடியாத கஸ்டத்துக்குள்ளாகியோர் ஐந்து லட்சத்துக்கும் அதிகமானோர்.

இப்படியான நிலையில் அந்த மக்களுக்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்கக் கூடியவர்களிடம் இருக்க வேண்டிய பண்பு, ஆற்றல், செயற்பாட்டுத்திறன், அர்ப்பணிப்பு, மனப்பாங்கு, சமூகக் கரிசனை, அரசியல் அறிவு, நிதானம், பொறுப்புணர்ப்பு, நேர்மை, விசுவாசம் எல்லாம் எப்படியிருக்க வேண்டும்? இன்றுள்ள எந்தத் தலைமையிடமாவது இவையெல்லாம் திருப்தி தரக் கூடிய நிலையில் உண்டா? அப்படி உண்டென்றால் அந்தத் தலைமையை, அந்தத் தரப்பை உங்கள் மனசாட்சியின் முன்னிறுத்தி அடையாளம் காட்டுங்கள்.

இப்படி நான் எழுதிய உண்மையை – கருத்தை – எதிர்கொள்ள முடியாமல் பதறிய பலர் என்னைத் தனிப்பட்ட ரீதியில் தாக்குவதற்கு முயற்சித்தனர். அது உண்மையை எதிர்கொள்ள முடியாமையின் குறைபாடாகும். அவர்களுக்கு ஒன்றை மட்டுமே சொல்லலாம், நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் தமிழ்ச்சமூகத்தின் ஈடேற்றத்துக்கும் தமிழ் பேசும் சமூகங்களின் நிலையான எதிர்காலத்துக்குமாக உருப்படியாக எதையாவது செய்யப் பாருங்கள். அதைப் புதிய முறையில் செய்ய முயற்சி செய்யுங்கள் என்றே. அவர்கள் செய்ய வேண்டியதும் அதுதான். பதிலாக உண்மைகளை மறைக்க முயற்சிப்பதும் உண்மையுரைப்போரின் குரல்வளை நெருப்பதும் அவர்கள் மீது சேற்றை வாரி அவதூறாக எறிவதுமல்ல.

எல்லாவற்றுக்கும் அடிப்படையாக ஒரு தவறு நடந்திருக்கிறது. ஆயுதமேந்திய விடுதலைப்போராட்டம் தோல்வியைத் தழுவது மட்டுமல்ல, அது ஏற்கனவே நிராகரித்திருந்த தரப்பிடம் – தலைமையிடம் நிபந்தனையின்றிச் சரணாகதியடைந்தமையாகும். இதில் கட்சிகள், குறித்த இயக்கங்கள், தலைமைகள் மட்டுமல்ல, அதன் வழியாக வந்த அரசியல் நோக்கர்கள், வழிகாட்டுநர்கள், ஆய்வாளர்களும்தான். இவர்களுடைய தோல்வியும் சரணாகதியும் மிகப் பெரிய வரலாற்றுப் பிழையாகி விட்டது. பின்னடைவாகியுள்ளது. குறிப்பாக புலிகள் பின்னாளில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற பேரில் செய்த அரசியல் தவறு நிராகரிக்கப்பட்ட – செல்வநாயகத்தினாலும் அமிர்தலிங்கத்தினாலும் கைவிடப்பட்ட தமிழரசுக் கட்சியை உயிரூட்டுவதில் போய் முடிந்தது. தமிழரசுக் கட்சியோ காலங்கடந்த ஒன்று. அதைக் காலம் கழித்து Dust pin (குப்பைத் தொட்டி) க்குள் போட்டது. புலிகளோ அதை எடுத்து திரும்பவும் மேசையில் வைத்தனர்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

# பயணப் பைக்குள் தலையற்ற பெண்ணுடல்!

## ஹங்வெல்லையில் காதலனால் பெண்ணுக்கு நேர்ந்த கொடூரம்!





**கடந்த வாரத்தில் பெரும் சர்ச்சைக்கு வழிவகுத்த பயணப் பையொன்றினுள் அடைக்கப்பட்ட தலை இல்லாத பெண் ஒருவரின் சடலம் தொடர்பான மர்மம் தற்போது வெளியாகியுள்ளது. சடலம் மீட்கப்பட்ட 24 மணி நேரத்தினுள் அக்கொலையின் அனைத்து விபரங்களும் பொலிஸாரின் மிகத் திறமையான விசாரணைகளின் பெறுபேறாக வெளிவந்தன. இரண்டு மனித உயிர்களின் அகால இழப்பின் கதை இவ்வாறுதான் தொடங்குகின்றது.**

கடந்த முதலாம் திகதி வழமைபோன்று சந்தடி நிறைந்து காணப்பட்ட வெல்ல வீதி பொலிஸ் நிலையத்திற்கு மாலை 2.30 மணியளவில் வந்த தொலைபேசி அழைப்பில், வெல்ல வீதியின் ஓரிடத்தில் கறுப்பு நிறத்திலான பெரிய பயணப் பை ஒன்று மிக நீண்ட நேரமாக காணப்படுவதாகத் தகவல் வழங்கப்பட்டது. இந்த தகவலைப் பெற்றுக் கொண்ட வெல்ல வீதி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜித் பேதுருஆராச்சி, பிரிவுக்குப் பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கும் இது தொடர்பில் தகவலை வழங்கியதன் பின்னர் விசாரணைகளை ஆரம்பித்தார்.

மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் நேரடி கண்காணிப்பில் கொழும்பு மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் தமயந்த விஜயஸ்ரீயின் உத்தரவில் கொழும்பு மத்திய பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிசாந்த சந்திரசேகரவின் நடவடிக்கையில் வெல்ல வீதியின் பொலிஸார் குறித்த பயணப் பை அவ்விடத்திற்கு எங்கிருந்து கொண்டு வரப்பட்டது போன்ற விபரங்களை அருகிலுள்ள ஏராளமான சீசீடிவி கெமராக்களில் பதிவாகியிருந்த நூற்றுக்கணக்கான காட்சிகளை அடிப்படையாக வைத்து ஆராய்ந்தனர்.





இதன் போது கம்பீரமான நபர் ஒருவர் தனது முதுகில் பேக் ஒன்றுடன், பெரியதொரு பயணப் பையுடன் அவ்விடத்திற்கு வரும் காட்சி மிகத் தெளிவாக சீசீடிவி கெமராக்களில் பதிவாகியிருந்தது. அந்த கெமராக்களின் காட்சிகளை மேலும் ஆராய்ந்த போது குறித்த நபர் 143ம் வீதி இலக்கத்திற்குரிய ஹங்வெல்ல புறக்கோட்டைக்கான WP NA 3729 என்ற பஸ்ஸில் புறக்கோட்டைக்கு வந்து ஐந்துலாம்புச் சந்தியில் இறங்குவது பதிவாகியிருந்தது.

அந்த பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துனர் ஆகியோரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது, குறித்த நபர் மிகப் பாரமான பேக் ஒன்றுடன் ஹங்வெல்லயில் பஸ்ஸில் ஏறியதாகத் தெரிவித்திருந்தனர்.

"சேர்.... பஸ் ஹங்வெல்லயிலிருந்து பயணத்தை ஆரம்பித்த போது பஸ்ஸில் நான்கு ஐந்து பேர்தான் இருந்தனர். அவர்களுள் இந்த நபரும் பின் ஆசனத்தில் இருப்பதைக் கண்டோம்" என பஸ்ஸின் சாரதியும், நடத்துனரும் கூறியதையடுத்து ஹங்வெல்ல பஸ் தரிப்பிடத்திற்கு விரைந்த பொலிஸார் அவ்விடத்தில் பொருத்தப்பட்டிருந்த சீசீடிவி கெமராக்களில் பதிவான காட்சிகளை நோட்டமிட்டதில், குறித்த நபர் நீல நிற டீசல் முச்சக்கர வண்டியொன்றில் பஸ் தரிப்படத்தில் வந்திறங்கி அன்று காலை 11.15 மணியளவில் அந்த பஸ்ஸின் பின்புற வாசல் வழியாக பஸ்ஸில் ஏறும் காட்சி பதிவாகியிருந்தது. அதனைத் தொடர்ந்து பொலிஸார் அந்நபர் வந்த நீல நிற டீசல் முச்சக்கர வண்டியைத் தேடினர். சிறிது நேரத்தில் அந்த முச்சக்கர வண்டியின் சாரதியை பொலிஸார் கண்டுபிடித்தனர். தான் அன்றைய தினம் கொழும்புக்கு வேலைக்குச் செல்லும் போது குறித்த நபர் பாரமான பையுடன் வீதியில் வந்து கொண்டிருந்ததாகவும், பின்னர் அந்நபரை தனது முச்சக்கர வண்டியில் ஏற்றிக் கொண்டதாகவும் அந்த முச்சக்கர வண்டியின் சாரதி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

பெண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்ட தினத்திற்கு மறுதினம் தினசரி பத்திரிகைகள் இது தொடர்பில் பொலிஸாருக்கு ஒத்துழைப்பை வழங்கி, குறித்த நபரை இனங்கண்டு கொள்ளும் வகையில் விரிவான ஊடகச் செய்திகளை பிரசுரித்திருந்தன. இதனிடையே அன்று காலை ஹங்வெல்லயின் ஓரிடத்திலிருந்து பெண் ஒருவரின் ஆடைகளுடன் கூடிய பேக் ஒன்று கண்டெடுக்கப்பட்டிருந்தது. இந்த பேக் தொடர்பில் இரண்டாம் திகதி காலை ஹங்வெல்ல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வசந்த குமாரவின் தலைமையில் பொலிஸ் நிலையத்தின் குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி சுஜித் ஹெட்டியாராச்சி விசாரணைகளை மேற்கொண்ட போது, ஹோட்டல் ஒன்றின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்திற்கு வந்துள்ளார்.

"சேர்.... நான் நேற்று காலை எனது ஹோட்டலில் மேல் மாடியில் இருந்த போது பெரிய பேக் ஒன்றுடன் ஒருவர் ஹோட்டலிலிருந்து வெளியே போவதைக் கண்டேன்.... அவர் பொலிஸாரால் தேடப்படுபவர் போல உள்ளது....."

இந்த தகவல் தொடர்பில் உடன் உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து "மிட்வே" என்ற அந்த ஹோட்டலுக்குச் சென்ற பொலிஸார் அவ்வாறு ஹோட்டலிலிருந்து வெளியேறிச் சென்ற நபர் தொடர்பில் ஆராய்ந்தனர். இந்த விசாரணைகளின் போது, குறித்த நபர் யுவதி ஒருவருடன் கடந்த 27ம் திகதி இரவு 10 மணிக்கு ஹோட்டலுக்கு வந்து தேசிய அடையாள அட்டையினை வழங்கி பதிவு செய்து கொண்டு அங்கு தங்கியிருந்ததை பொலிஸார் அறிந்து கொண்டனர். ஹோட்டலில் தங்குபவர்களின் விபரங்களைப் பதிவு செய்யும் ஏட்டில் குறித்த இருவரின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் பதியப்பட்டுள்ளது.

"அவர்கள் இருவரும் 27ம் திகதி இரவு 10 மணியளவில் ஹோட்டலுக்கு வந்தார்கள். அவர்கள் கடந்த முதலாம் திகதி காலை 10 மணிக்கு ஹோட்டலிலிருந்து வெளியேறினார்கள். குறித்த நபர் என்னிடம் வந்து 4100.00 ரூபாய் பணத்தைச் செலுத்திவிட்டு இரண்டு அடையாள அட்டைகளையும் பெற்றுச் சென்றார். ஆனால் அவருடன் வந்த பெண் திரும்பிச் செல்வதைக் காணவில்லை. மறுநாள் காலை தொலைக்காட்சியில் பத்திரிகைச் செய்திகள் வாசிக்கப்படும் போதுதான் இவ்வாறு பெண் ஒருவரின் சடலம் ஒன்றை பயணப்பை ஒன்றில் போட்டு கைவிட்டுச் சென்றது பற்றி நாம் அறிந்து கொண்டோம். அதன் பின்னர்தான் எனக்கு ஞாபகம் வந்தது. அதேபோன்று இரண்டாம் திகதி காலை தொலைபேசி அழைப்பொன்றும் வந்தது. அடையாள அட்டையை நீங்கள் புத்தகங்களில் பதிவீர்களா?, அவ்வாறு பதிந்தால் அதனை அழிக்க முடியாதா? யாராவது வந்து கேட்டால் கொடுப்பீர்களா? போன்ற கேள்விகளை பேசியவர் கேட்டார். பொலிஸார் வந்து கேட்கும் போது அவர்களுக்கு தகவல்களை வழங்க நாம் கட்டுப்பட்டிருக்கின்றோம் என நான் அவருக்கு பதிலளித்தேன். அதன் பின் அந்நபர் போனை வைத்துவிட்டார்..." என அந்த ஹோட்டலில் பணியாற்றும் பெண் தெரிவித்தார்.

இவ்வாறு ஹோட்டலுக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டவர் ஹோட்டலிலிருந்து பேக் ஒன்றை எடுத்துச் சென்ற நபர் தான் என்ற சந்தேகம் ஹோட்டல் உரிமையாளருக்கு ஏற்பட்டது. அந்த ஹோட்டலில் குறித்த இருவரும் 106ம் இலக்க அறையிலேயே தங்கியிருந்துள்ளனர். பொலிஸார் அந்த ஹோட்டலின் 106ம் இலக்க அறையினை சோதித்தனர். அந்த அறையின் எல்லா இடங்களும் நீரால் கழுவப்பட்டு சுத்தம் செய்யப்படிருந்ததை பொலிஸார் கண்டு கொண்டனர். அத்துடன் அந்நபர் ஹங்வெல்ல நகரில் வர்த்தக நிலையம் ஒன்றில் 6250 ரூபாய்க்கு பயணப்பை ஒன்றை வாங்கி, ஹங்வெல்லயில் திங்கட்கிழமை சந்தையில் கத்தி ஒன்றை வாங்குவதும் சீசீடிவி கெமராக்களில் பதிவாகியிருந்தது. மேலும் அந்த நபரும், யுவதியும் ஹோட்டலில் தங்கியிருந்த நாட்களில் ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரமே அந்நபர் அந்த யுவதியுடன் வெளியே சென்ற போதிலும் ஏனைய சந்தர்ப்பங்களில் அந்நபர் மாத்திரமே வெளியே போய் வந்ததைக் கண்டதாக ஹோட்டலில் பணியாற்றுபவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு 27ம் திகதி இரவு 10 மணிக்கு ஹோட்டலில் தங்குவதற்காக வந்து அடையாள அட்டையினை வழங்கியிருந்தவர்கள் மொனராகலை, படல்கும்புற, வெஹெரகொட என்ற முகவரியைச் சேர்ந்த 52 வயதுடைய அதிகாரி முதியான்சேலாகே பிரேமசிரி என்பவரும், குருவிட்ட, தெப்பனாவ பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய திலிணி யசோதா ஜயசூரிய என்ற யுவதியுமாகும்.

உடன் செயற்பட்ட இரு பொலிஸ் குழுக்களும் அந்த முகவரியைத் தேடிச் சென்றன. அவ்வாறு தெப்பனாவ பிரதேசத்தில் அமைந்துள்ள அந்த யுவதியின் வீட்டுக்குச் சென்ற பொலிஸாருக்கு கிடைத்த தகவல், திலிணி என்ற அந்த யுவதி தனது நண்பர்களுடன் ஸ்ரீபாத யாத்திரை செல்வதாகக் கூறி 27ம் திகதி வீட்டிலிருந்து வெளியேறிச் சென்றார் என்பதாகும்.

அதேநேரம் படல்கும்புர பிரேமசிரி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது, அந்நபர் புத்தல பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் உப பொலிஸ் பரிசோதகர் என்ற விடயத்தை பொலிஸார் அறிந்து கொண்டனர்.

புத்தல பொலிஸ் நிலையத்தில் மோசடி ஒழிப்பு தொடர்பான கடமைகள் மற்றும் கோவிட் 19 தொடர்பான கடமைகளில் ஈடுபட்டிருந்த அவர், கடந்த 27ம் திகதி தாய்க்கு அன்னதானம் நிகழ்வு எனக் கூறி 3 நாட்கள் விடுமுறை பெற்றுக் கொண்டு பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியாகியுள்ளார். அத்துடன் அவர் சில காலம் அமைச்சு பாதுகாப்பு பிரிவில் பணியாற்றியதும் மேலதிக விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. அத்துடன் பிரேமசிரி ஒரு பொடி பில்டர் மற்றும் பொலிஸ் குத்துச் சண்டை அணியில் அங்கத்தவராகவும் இருந்தார் என்பதும் தெரியவந்துள்ளது.

2015ம் ஆண்டிலிருந்து 2018ம் ஆண்டு காலப்பகுதியினுள் ஹேஷா விதானகேவிடம் பணியாற்றிவிட்டு பின்னர் உப பொலிஸ் பரிசோதகராக பதவி உயர்வு பெற்ற அவர் புத்தல பொலிஸ் நிலையத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

ஹேஷா விதானகேவிடம் பணியாற்றிய சமயத்தில் அரசியல் வேலைகளுக்காக ஹேஷாவைச் சந்திக்க வந்த திலிணியுடன் உறவை ஏற்படுத்திக் கொண்டிருந்துள்ளார். திலிணியின் ஒரே அண்ணனான பிரபாத் ஜயசூரிய குறுவிட்ட பிரதேச சபையின் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினராகும். திலிணி ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி காலத்தில் இரத்தினபுரி இளைஞர் முன்னணியின் பொருளாளராகவும் செயற்பட்டு இளைஞர் படையணி போன்ற வேலைத்திட்டங்களிலும் ஈடுபட்ட ஒரு யுவதியாகும்.

குறுவிட்ட மற்றும் நாரத மத்திய மகா வித்தியாலயங்களில் கல்வி கற்றுள்ள திலிணி, சீதாவகபுர தொழிற்பேட்டையில் தொழில் செய்துவிட்டு பின்னர் கடுவளை பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் தொலைபேசி நிறுவன கிளையில் பணியாற்றி வந்துள்ளார். கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் நோய்வாய்ப்பட்டிருக்கும் தனது தாயான 80 வயதுடைய கே. கே. சோமாவதி என்பவரைக் கவனித்துக் கொள்வதற்காக திலிணி தனது தொழிலை விட்டு விலகியுள்ளார். திலிணியின் தந்தையும் சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் மரணமடைந்துள்ளார்.


பிரேமசிரி மற்றும் திலிணி ஆகியோர் தொடர்பான அனேக தகவல்கள் வெளிவந்த நிலையில் பிரேமசிரியின் வீடு அமைந்துள்ள பிரதேசத்திற்குரிய படல்கும்புர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியான சுனில் திசாநாயக்கவும் உயர் பொலிஸ் அதிகாரிகளின் ஆலோசனைக்கு அமைவாக இந்த விசாரணைகளில் பங்கெடுத்துள்ளார். இதனடிப்படையில் படல்கும்புர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் பிரேமசிரியின் வீட்டுக்கு புலனாய்வு அதிகாரிகள் இருவர் அனுப்பப்பட்டது அங்கு அவர் இருக்கிறாரா என்பதை சந்தேகமின்றி அறிந்து கொள்வதற்காகும். இது நடந்தது இரண்டாம் திகதி மாலையிலாகும்.

அந்நேரத்தில் வீட்டிலிருந்த பிரேமசிரி அங்கு வந்த பொலிஸ் அதிகாரிகளைக் கண்டதும் அருகிலிருந்த காட்டு பகுதிக்குள் தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர். எனினும் 26 வயதுடைய கொழும்பில் தொழில் புரியும் மகன் உள்ளிட்ட17 மற்றும் 11 வயதுகளையுடைய இரு பெண் பிள்ளைகளின் தாயும் பிரேமசிரியின் மனைவியுமான ரமணி கிருஷாந்தியிடமிருந்து பிரேமசிரிய தொடர்பான அனேக தகவல்கள் பொலிஸாருக்கு கிடைத்தன. பிரேமசிரி 27ம் திகதி விடுமுறை பெற்று வீட்டுக்கு வந்த உடனேயே கொழும்பில் இடம்பெறும் செயலமர்வு ஒன்றில் பங்கு பற்ற வேண்டும் எனத் தெரிவித்துவிட்டு வீட்டிலிருந்து வெளியேறிச் சென்றதாகவும், மீண்டும் இரண்டாம் திகதி அதிகாலையில் வீட்டுக்கு வந்ததாகவும் பிரேமசிரியின் மனைவி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். அத்துடன் பிரேமசிரி மற்றும் திலிணி ஆகியோருக்கிடையிலான தொடர்பு தொடர்பில் பிரேமசிரியின் மனைவி அனேக தகவல்களைத் தெரிவித்துள்ளார். ஒருநாள் தமது இளைய மகள் மாத்திரம் வீட்டிலிருக்கும் போது அந்தப் பெண்ணுடன் பிரேமசிரி வீட்டுக்கும் வந்து சென்றுள்ளதாகவும் பிரேமசிரியின் மனைவி தெரிவித்துள்ளார்.

அதேபோன்று திலிணிக்கு பல தடவைகள் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு தனது கணவருடன் உள்ள தொடர்பை துண்டித்துக் கொள்ளுமாறும் பிரேமசிரியின் மனைவி கேட்டுக் கொண்டுள்ளார். வீட்டிலிருந்து தப்பிச் சென்ற பிரேமசிரியைத் தேடிக் கண்டுபிடிக்க பொலிஸார் விரிவான விசாரணைகளில் ஈடுபட்டாலும் இரண்டாம் திகதி இரவாகும் வரையில் அவரைத் தேடிக் கொள்ள முடியாது போனது. எனினும் அவரது வீட்டிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் ஐந்தாம் கட்டை பிரதேசத்தில் அமைந்துள்ள இறப்பர் தோட்டத்தில் மூன்றாம் திகதி அதிகாலை 5.00 மணியளவில் இறப்பர் பால் வெட்டுவதற்காகச் சென்றவர்கள் பிரேமசிரி இறப்பர் மரம் ஒன்றில் தொங்கியவாறு தற்கொலை செய்து கொண்டிருந்ததைக் கண்டனர். அருகிலிருந்து நஞ்சுக் குப்பி ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

**அமில விமலசூரிய...**
தமிழில்: எம்.எஸ்.முஸப்பிர்
(புத்தளம் விசேட நிருபர்)

# நகரத்திலிருந்து கிராமத்துக்கு மாறும் நிர்வாகம்



## மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொரகொட

**கொவிட் தொற்று அச்சுறுத்தல் உலகில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. மக்களின் இயல்பு வாழ்க்கை சிரமத்துக்கு ஆளாகியுள்ளதோடு அநேகமான நாடுகளும் மற்றும் நகரங்களும் தற்காலிகமாக மூடப்பட்டன. தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டது ஓரளவு நிம்மதியை அளிக்கிறது. தடுப்பூசி மூலம் நோய் எதிர்ப்பு சக்தி ஏற்படுத்தப்படுகிறது. சிகிச்சையை கண்டு பிடிப்பதற்கும் அப்பால் சென்று தீர்வினை காணுவது குறித்து கவனம் செலுத்த சில நாடுகள் முயற்சி செய்து வருகின்றன. கடமைக்காக நகருக்கு அழைப்பதற்கு பதிலாக, மக்களிடம் சேவை பிரிவையும் நிர்வாகத்தையும் கொண்டு செல்வதற்கான நடவடிக்கையை ஆரம்பித்துள்ளன. அரசாங்கத்தின் முக்கிய காரியாலயங்களையும் சில நிறுவனங்களின் பிரிவுகளையும் பிரதான நகரங்களுக்கு அப்பால் அமைப்பது ஒரு திட்டமாகும்.**

**இலண்டன் நகரை மையமாகக் கொண்டு இயங்கி வந்த சில திணைக்களங்களை வேறு மாகாணங்களில் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரித்தானிய செய்திகள் தெரிவிக்கின்றன. சில அமைச்சுகளும் மற்றும் விசேடமாக திறைச்சேரியின் ஒரு பகுதியும் வட பிரதேசத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எதிர் வரும் பத்து ஆண்டுகளுக்குள் அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்களில் நூற்றுக்கு இருபத்தைந்து சத வீதமானோரை வெளி மாகாணங்களில் பணியாற்றும் வகையில் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவும் இதற்கு சமனான கொள்கையை பின்பற்ற முடிவு செய்துள்ளது. அரசுக்கு சொந்தமான அமைச்சுகளை தலைநகருக்கு வெளியே அமைக்க ஜனாதிபதி பிரேமதாச தனது பதவி காலத்தில் முயற்சி செய்தார். வெற்றி பெறவில்லை. மக்கள் கூடுவதை தடுக்கும் அவ்வாறான தீர்மானங்கள் இன்றுள்ள நிலைமையில் நோக்கும் போது மிகவும் பயனுள்ளதாகும்.**

**பொது மக்கள் கொழும்புக்கு வருகை தருவதை குறைத்து மக்களின் உயிரை பாதுகாக்க எடுக்கும் நடவடிக்கையாக அரசின் பிரதான பிரிவுகளை தலைநகருக்கு வெளியே அமைக்க முடியும். மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படும் அமைச்சர்கள் கூட தாங்கள் வசிப்பதற்கு தலைநகரையே தெரிவு செய்கிறார்கள். அமைச்சுகளையும் திணைக்களங்களையும் தங்களுக்கு அருகிலேயே அமைத்துக்கொள்கிறார்கள். தூர இடங்களில் உள்ள மக்கள் தமது தேவைகளுக்காக அங்கு வர வேண்டியுள்ளது. அரச மற்றும் அரசு இணைந்த பணிகளில் ஈடுபடும் பதினைந்து லட்சத்துக்கும் அதிகமானவர்கள் தினந்தோறும் மேலே குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு பணியாற்ற வருகிறார்கள். இதுபற்றி ஆராய்ந்தால் மக்கள் தொகைக்கு இணைந்ததாக கடமைக்காக அதிகளவானோர் அங்குமிங்கும் நாள்தோறும் பயணிக்கும் நாடாக எமது நாட்டை குறிப்பிடலாம். பெருமளவு வளங்கள் வீணாகின்றன. அதிகாரிகளையும் மக்களையும் நகருக்கு அழைப்பதால் ஏற்படும் சனநெரிசல் குறித்து ஆச்சரியபடத் தேவையில்லை. பெரும் செலவு மாத்திரமல்ல உயிருக்கும் ஆபத்து உள்ள நிலைமையில் நகருக்கு வருபவர்களை கட்டுப்படுத்துவதை நோக்காகக் கொண்டு சரியான திட்டங்கள் முன்மொழியப்படவேண்டும்.**

**இலங்கையில் அடிப்படை வசதிகள் வளர்ச்சி கண்டுள்ளது. விசேடமாக வீதிகள் அதிவேக பாதைகளாக மாறி வருகின்றன. தொழில்நுட்பம் நிறுவனங்களுக்கிடையே தொடர்பாடலை இலகு படுத்தியுள்ளது. அடுத்ததாக கொழும்பு மற்றும் கொழும்பை அண்டிய பிரதேசங்களில் காணிகளின் விலை அதிகரித்துள்ளது. சில அமைச்சுகள், அரச காரியாலயங்கள் மற்றும் திணைக்களங்கள் அதிகளவு வாடகை செலுத்தப்படும் கட்டடங்களில் செயல்படுகின்றன. அதிலிருந்து வெளியேறுவது நன்மையே.**

**அமைச்சரோ அதிகாரியோ கண்ணுக்கெட்டிய தூரத்தில் இருக்க வேண்டுமென்பது தற்போதைய காலத்துக்கு பொருந்தாததாகும். அரசுக்கு சொந்தமான சில பிரிவுகளை மேற்கு மாகாணத்துக்கு வெளியே நிறுவ முடியாதா?யாழ்ப்பாணம்,திருகோணமலை, காலி, கண்டி போன்ற நகரங்களைப் பற்றி ஏன் நாம் சிந்திப்பதில்லை? மீன் பிடித்துறை அமைச்சை கொழும்பில் அமைக்க வேண்டிய அவசியம் என்ன? மீனவர்களின் வாழ்வு மற்றும் அமைச்சர் பிரதிநிதித்துவம் செய்யும் தேரதல் தொகுதியையும் எடுத்துக்கொண்டால் காரியாலயத்தை மாத்திரம் ஏன் கொழும்பில் அமைக்க வேண்டும். விவசாய, நீர்வள, சிறு ஏற்றுமதி பயிர்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு போன்றவற்றை தலைநகருக்கு வெளியே அமைக்க முடியாதென்றில்லை அல்லவா? புத்த சாசன அமைச்சை கூட கண்டியிலோ அல்லது அநுராதபுரத்திலோ அமைக்காதது ஏன்? அவ்வாறான முடிவுகள் அதிகாரத்தை பரவலாக்கும் கொள்கைக்கும் உதவியாக இருக்கும்.**

**ஆரம்ப நடவடிக்கையாக பத்து வருட திட்டமொன்றை தயாரிப்பது நல்லது. மேற்கு மாகாணத்திலிருந்து அகற்றி வேறு மாகாணத்தில் அமைக்கக்கூடிய அரசுக்கு சொந்தமான இடங்களை பட்டியலிட வேண்டும்.**

**பெருந்தொகைக்கு வாடகைக்கு பெறப்பட்ட கட்டடங்களை பொருளாதார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தி அரச செலவை கட்டுப்படுத்தலாம். அது மக்களிடமிருந்து பெறப்படும் வரியை குறைக்கும் மறைமுக வழியாகும். கொவிட் தொற்று காலத்தில் மக்களின் பாதுகாப்புக்கும் பொருளாதார மறுமலர்ச்சிக்கும் எடுக்கக் கூடிய சிறந்த முடிவாகும்.**

தமிழில்: வீ.ஆர்.வயலட்

# மகளிர் தினம்



வான்மதி

அடுப்பு ஊதும் பெண்ணுக்கு
படிப்பதற்கு? கேட்டவர் அன்று
பெண்ணும் தொழில் பார்த்தால்
தான் குடும்ப வண்டி ஓடும் என்றனர் இன்று
தாய்ப்பால் ஊட்டிய தாய்
இன்று வீரத் தாயாய் தெரிகின்றாள்
ஆராரோ பாடிய தாய் வீரத்தாலாட்டும்
சேர்த்து கற்றுக் கொடுக்கின்றாள்
அகரம் தொட்டு சிகரம் தொடுகின்றாள்
சாதனைகள் பல புரிகின்றாள்
மண்ணைத் தொட்டு விண்ணைத் தொட்டு
கம்பீரமாக மார்த்தட்டிச் செல்லும்
பெண்கள் எங்கே?
ஊரையே ஏன் உலகையே ஆட்சி
புரியும் பெண்கள் எங்கே?
பாரதி கண்ட புதுமைப் பெண்
வாழ்க மகளிர்!




# பெண்ணே போற்றி

றுசைனா ஹாசீம். அக்கரைப்பற்று 02

மாநிலம் போற்றும் மகோன்னத பிறப்பு உந்தன் பெண்மை
நல்லோர்கள் வாழ்த்தும் நாற்குணம் உந்தன் தன்மை
மானிடர்கள் புகழ் பாடும் உந்தன் மகிமை
உன் பிறப்பே மாதவம் என்று சான்றோர் சொன்னார்கள் உந்தன் பெருமை
பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் நீயும் பாதம் பதி
அதில் அழிந்து போகும் உனை வீழ்த்துபவர்கள் சதி
உன் உயர்ச்சியால் மேலெழுந்து நிற்கும் உன் மதி
அதில் இல்லாமல் போகும் வீண் வினையால் வந்த விதி
தோல்வி கண்டு துவழாதே. துணிந்து நில்
நல்லோர்கள் பின்னே நீயும் செல்
உழைப்பால் உன் உரிமைகளை நீயும் வெல்
மேதினி போற்றும் அளவு கல்வியை நீயும் கல்
தடைகளைத் தாண்டி நீயும் பயில் நடை
சோதனைகளைத் தாண்டி சாதனைகள் நீயும் படை
கௌரவம் பேண வேண்டும் உந்தன் உடை
கயவர்களின் காழ்ப்புணர்வுக்கு நீ கொடு விடை
நீ பெற வேண்டும் பல வெற்றிகள்
அதில் அதிசயமாய் நிமிர வேண்டும் பல நெற்றிகள்
உனைச் சுற்றி பொறாமைகளாய் எரிகின்றன பல பற்றிகள்
உலக மகளிர் தினத்திலே உன் புகழ் சொல்லும் பறைசாற்றிகள்

# தாயின் பொறுப்பு



கலாபூஷணம்,
நிந்தவூர் மக்கீன் ஹாஜி

தாயவளை
ஏன்?
புறக்கணிப்பு
ஆம்...
தாயே நீ...
ஏன் உன்மகளுக்கு
தாய்ப்பால் கொடுப்பதில்
செய்தாய்,
இருட்டடிப்பு
அதனால்தான்
ஏற்பட்டதோ
பாசத்தில்
வெடிப்பு
இஸ்லாம் சொன்னதே
குழந்தைக்கு
இரண்டுவருட
பால் கொடுப்பு
இன்று என் மகள்
கவனிக்கிறாளில்லையே
என்ற உன்
கொதிப்பு
நீயோ
மாட்டுப்பாலை,
கொடுத்தது
பெருந் தப்பு
அதனால் தானோ என்னவோ
இன்று,
உன் மகளுக்கு
உன்னிலுள்ள
வெறுப்பு



# மழை தூறலின் லீலைகள்

கிண்ணியா ஜெனீரா ஹைறுல் அமான்.

மின்னல் மின்னுது வானில் – அதை
மிரட்டி வருகுது இடிமுழக்கம்
பின்னால் வீசுது குளிர்காற்று – அதனால்
பிஞ்சு உள்ளம் நடுங்குது
சின்னஞ் சிறுதுளிகளாய் சிந்துது – இதனால்
சந்து பொந்தெலாம் நனையுது
பென்னம் பெருசத்தமாய்ப் பெய்யுது – பின்
பெருக் கெடுத்தோடுது வெள்ளமாய்
கூரையால் வடியுது தண்ணீர்
குதித்து விளையாடுது காணீர்
பாரை நனைக்குது மழைநீர்
பரவுது வீதியில் நன்னீர்
யாரையும் குறை கூறாது
யாவர்க்கும் வாரி வழங்குது பார் – மழை
நீரை சேமித்துப் பழகியோர் – பயன்
நிறையவே பெறுவார் காணீர்!
மேகம் வடித்த கண்ணீரிலே
மேதினி குளிர்மை கண்டதுவே
தாகம் தணிந்த உயிரினமோ
தன்னை மறந்து களித்திடுதே
சோகம் களைந்த மனிதயினம்
சீருஞ் சிறப்பாய் வாழுகிறான்
வேகம் எழுந்து வாழ்வினிலே
வளர்ச்சி கண்டு மகிழுகிறான்...!

# கலியுக இராமன் வனவாசம்....



பாண்டியூர் பொன். நவநீதன்

கலியுக இராமன்
இராச்சியமிழந்து
கானக வாசம்
போகிறான் தனியே!
கலியுகச் சீதையின்
கையில் பேஸ்புக்கும்
இலக்குவன் கையில்
செல் போனும்
இருப்பதால் இருவரும்
இராமனின் பிறகே வனம்
போக வரவில்லை!
இதனைக் கண்ட
கடத்தல் பேர்வழி
இராவணனுக்கு – அந்த
சீதை(ப்) பிடிப்பு இல்லை!
அதனால் வந்த
அசோக வனத்தில்
அனுமனுக்கும்
அலுவல் இல்லை!

இந்தக் கலியுக இராமனின்
கானகக் கதையிதை
எந்தக் கம்பன் வந்து
எழுதப் போகிறான்!

# வாராய்... நீ பாராய்

ரம்புக் எலையூரான்

வாராய்... உன்னையே நீயறிய வாராய்
வாழ்வில் வழுக்கி விட்ட மனிதராய் – நீ
விழாமல்; புகழ் பூத்திட நீ வாராய்
நின் பயணம் நீண்டது என்பதை அறிவாய்
கல்லும் குழியும் முட்களும் நிறைந்தது பாராய் – வழி
கெடுப்பதில் முனையும் மாந் தரைநீ காண்பாய்
பள்ளியில் கசடறக் கற்றிட நீ வாராய் – பெரும்
பேருபெற்றிட்ட மகான்களை நீ பாராய்
மாந்தரில் நாய்களும் நரிகளும் இருக்க காண்பாய்
மறைந்து கொல்லும் பேய்களையும் நீ காண்பாய்!
உறிஞ்சும் அட்டைகளும் மனிதர்களில் இருப்பார்
உள்ளம் கவர்மகா ஆத்மாக்களும் இருப்பார்
நண்பரில் நாகங்கள் நீ காண்பாய் – நலம்
நாடும் நேசர் களையும் நீ காண்பாய்
பாதி யுலகில் பாதகரையும் பாவிகளையும் பாராய்
மீதி யுலகில் அன்பான பண்பாளர்களை பாராய்!
ஆசையில் மோசமாகும் ஆண்களும் அணங்குகளும் காண்பாய்
அவனியிலே நேர்மை நீதியுள்ளோரையும் காண்பாய்
யாவும் பணமே என்றிருப்போரை பாராய் – உலகில்
பூவும் போற்றும் மென் மனமுடையோரையும் பாராய்!
காசினியில் அற்புதம் காண நீ வாராய் – வாழ்வில்
கற்க வேண்டும் கடலளவு என்பதை நீ பாராய்!!

# சிறந்தவை!

கே.எப். மில்ஹானி, ஏறாவூர்.



அறங்கள் அனைத்திலும்
இல்லறம் சிறந்தது!
இல்லறத்திலும்
நல்லறம் சிறந்தது!
பண்பனைத்திலும்
அன்பு சிறந்தது!
அன்பிலும் பே
ரன்பு, சிறந்தது!
மனம் அனைத்திலும்
மனிதம் சிறந்தது!
மனிதத்திலும்
புனிதம் சிறந்தது!
உரை அனைத்திலும்
அறிவுரை சிறந்தது!
அறிவுரையிலும்
அறவுரை சிறந்தது!
வழியனைத்திலும்
நல்வழி சிறந்தது!
நிறமனைத்திலும்
வெண்ணிறம் சிறந்தது!
இசையனைத்திலும்
இன்னிசை சிறந்தது!
குறள் அனைத்திலும்
திருக்குறள் சிறந்தது!
வாய்மையும், தூய்மையும்
வாழ்வில் சிறந்தவை!
நேர்மையும் ஓர்மையும்
வாழச் சிறந்தவை!

# உண்மை

கவிமணி நீலாபாலன்

எல்லேதரும் எல்லாமும்
சேர்ந்ததுதான் உலகமென்று
எடுத்துச் சொன்னால்
பல்லை நறுநறெனக் கடித்தபடி
ஒரு சிலபேர் சினக்கின்றார்,
முறைக்கின்றார்!...
ஏன் ஏன்?
ஏன்... ஏன்?
எல்லாமும் எல்லோரும்
இல்லாமல்,...
எது எதுதான்
இங்கிருக்கும்?
எங்கிருக்கும்!
இங்கு
உள்ளதனைச் சொன்னால்
உள்ள பிழைகளைச்
சுட்டிக்காட்டினால்..
முறைக்கின்றீர்
பல்லைக் கடிக்கின்றீர்
ஏன்... ஏன்...
இதுதானே உண்மை
சரியா?
உங்கள் போக்கும்
நோக்கும் சரியா?
இதுதானே உண்மை
எல்லோரும் எல்லாமும்
சேர்ந்ததுதானே உலகம்
இதுதானே உண்மை

# ஐயா பெரியவரே

சஹறுல் சலாஹுதீன் – உக்குவெல.

மதிப்பிற்குரிய ஐயா பெரியவரே
அகிலம் போற்றும் உத்தமரே
ஆழி சூழ் எம் தீவின்
இலக்கிய ஆசானே இனிய விமர்சகரே
பல்கலை வேந்தரே சகலசலாவல்லவரே
தினகரன் வாரமஞ்சரி தன்னில்
தங்களின் சுகயீன செய்தியை
தாசிம் அகமது சேர் அவர்கள்
அழகு தமிழில் விபரித்திருந்தார்கள்
யாருக்குத்தான் இல்லை ஐயா உடல்நலக் குறைவு
மனிதர்க்கும் மாக்களுக்கும் அது இயற்கையன்றோ
இருப்பினும்,
தங்களுக்கும் இந்நிலை வந்தது கண்டு
மனம் மிக நொந்து
எழுதுகிறேன் சிறு கவிதையொன்று
தவறுகள் இருப்பின் மன்னிக்கவும்
அழகான தங்கள் விமர்சனங்களை
தவறாது கண்ணுறுபவள் நான்
அச்சொட்டான ஆழமான பிசகில்லாத
இலக்கிய ஆய்வுகளை அள்ளிவழங்கும்
தங்கள் திறன் கண்டு வியக்கும் அனைவரதும்
பிரார்த்தனைகள் என்றென்றும் தங்களுக்குண்டு
கருணையுள்ள இறைவனவன்
கண்திறப்பான் சுகம் தருவான்
உடலும் உள்ளமும் நலம் பெற்று
தாங்கள் முன்னர் போலெழுந்து நடமாட
எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவான்

# எது?



இர்ஷாத், வாழைச்சேனை.

நான் பசியோடு இருந்தேன்
அவன் பரிவோடு பகிர்ந்தான்
மூன்றாமவன்
“சாப்பிடாதே!
கடவுளுக்குப் படைத்தது”
என்றான்
நான்காமவன் எழுந்து
“கடவுளே நம் படைப்புத்தான்”
என்றான்
நான் பசியோடு
வெளியில் வந்தேன்

## ஒருவரின் உளநலத்தை...

(18ஆம் பக்கத் தொடர்)

அதாவது பிழையைப் பிழை எனச் சுட்டிக்காட்டும் பெற்றோர், சிறு சிறு தண்டனைகளை வழங்குபவர்கள், இவர்கள்தான் பிள்ளைகளுக்கு நம்பிக்கையை ஊட்டுபவர்கள்.

இவ்வாறு இல்லாத நிலையால்தான் பிள்ளைகள் தவறான வழியில் சென்று வீதியில் தண்டிக்கும் நிலைக்குத்தள்ளப்படுவார்கள். இளைய சமுதாயம் பாதிக்கப்படாமல் இருப்பதற்குப் பெற்றோரும் ஆசிரியர்களும்தான் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்பதை வலியுறுத்திச்சொல்வேன்."

"ஒரு குடும்பம் உளநலம் பாதிக்கப்படாமல் சீராக இருப்பதற்கு உங்களுடைய ஆலோசனை என்ன?"

"எல்லோருடயை உள்ளமும் கொள்ளைகொள்ளப்பட வேண்டும். எல்லோருடைய கருத்துகளும் விருப்பு வெறுப்புகளும் மதிக்கப்பட வேண்டும். கலந்தாலோசனை நடத்தப்பட வேண்டும். ஒவ்வொருவருடைய உணவு விருப்புகளுக்கும் மதிப்பு கொடுக்க கொடுத்துச் செயற்பட வேண்டும். திறந்த மனத்துடன் ஒவ்வொருவரையும் மதிக்கும் மனப்பான்மை வேண்டும். சுகிசிவம் சொல்கிறார், பெற்றோர் பிள்ளைகளைப் பிரசவிக்கிறார்கள் என்பதற்காக அவர்களின் அடிமைகள் அல்லர் பிள்ளைகள். யாருக்கும் அடிமையாகாதே! யாரையும் அடிமைப்படுத்தாதே என்ற கருத்தைச் சிந்தித்துச் செயற்பட்டால், குடும்பங்களில் நிம்மதி பூத்துக்குலுங்கும்" என்கிறார் இந்தக் குடும்ப நட்சத்திரம்!

## சவுதியரேபியாஅமெரிக்க...

(18ஆம் பக்கத் தொடர்)

அதனாலேயே சவுதி அரேபியா மீதான அணுகுமுறைகளை தனித்துவமானதாக ஆக்குவதுடன் சவுதியின் எண்ணெய் வளத்தினை தனது செல்வாக்கிலிருந்து இஸ்ரேல் தகர்த்துவிடும் என்ற அச்சமும் அமெரிக்காவிடம் உண்டு.

ரஷ்யா சீனாவின் ஆபத்தென்பதை கடந்து இஸ்ரேலின் ஆதிக்கம் அமெரிக்காவின் மேற்காசிய நலனை பாதிக்கும் என்ற நோக்கு நிலையிலேயே புதிய நிர்வாகத்தின் அணுகுமுறை அமைந்துள்ளது.

ஆறு அமெரிக்க ஆட்சித்துறையில் எழுந்துள்ள கட்சி ரீதியான அரசியலும் இத்தகைய அணுகுமுறைக்கு ஒரு காரணமாகும். இதன் வாயிலாக சவுதி அரேபியாவை புதிய நிர்வாகம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான முனைப்புக்களை உருவாக்க முனைகிறது. குறிப்பாக ட்ரம்பின் சவுதியுடனான எல்லையற்ற நெருக்கம் ஜோ பைடன் அரசியலுக்கு நெருக்கடியாக அமைந்துவிடும் என்ற நோக்கு நிலையிலும் சவுதி மிதான அணுகுமுறையை புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

எனவே மேற்காசிய அரசியலில் ட்ரம்ப் நிர்வாகம் விட்டுச் சென்ற வெற்றிடத்தை மீளவும் சரி செய்ய ஜோ பைடன் நிர்வாகம் முனைகிறது. அதன் மைய அரசியல் ஈரானாகவே அமைந்துள்ளது. ஈரானின் படைகளையும் அதன் ஆதரவு பெற்ற கிளர்ச்சியாளரையும் சிரியாவின் எல்லையிலும் சவுதியின் எல்லையிலும் வைத்து தாக்க அமெரிக்கா விரும்புகிறதே அன்றி அதன் எல்லைக்குள் தந்திரோபாய ரீதியான உறவை உருவாக்க திட்டமிடுகிறது. அதனடிப்படையிலேயே சிரியாவிலுள்ள ஈரான் படைநிலைகளை நோக்கிய அமெரிக்க விமானங்களின் தாக்குதல் அமைந்திருந்தது.

ஈரானை நோக்கிய நகர்வையே அமெரிக்கா இப்பிராந்தியத்தில் தந்திரோபாய ரீதியில் மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு நகர்வே சவுதி அரேபியாவின் பத்திரிகையாளர் மீதான புலனாய்வு அறிக்கையும் அமெரிக்காவின் எச்சரிக்கையுமாகும். சீனா ரஷ்யா மட்டுமல்ல இஸ்ரேலையும் புறந்தள்ளி மேற்காசியாவுக்குள் அமெரிக்காவை மீளமைப்பதாகும்.

## மாற்றங்களை நோக்கிப்...

(12ஆம் பக்கத் தொடர்)

பிரபாகரன் இழைத்த மாபெரும் தவறுகளில் ஒன்று இதுவாகும். அதாவது அவர் எதை மறுதலித்தாரோ பின்னர் அதையே ஏற்றுக்கொண்டார். இது அவருக்கும் ஏற்பட்ட தோல்வியாகும். அவர் சரியாக இனங்கண்டிருக்க வேண்டிய தரப்புகளைச் சரியாக அடையாளப்படுத்தியிருந்தால், இன்று இந்த அளவுக்கு தமிழ்ச்சமூகமும் தமிழ் பேசும் சமூகங்களும் நெருக்கடிப்பட்டிருக்காது. ஒரு புதிய ஒளி பிறந்திருக்கும்.

இதில் இன்னும் துயரம் என்னவென்றால், அவரைக் கடந்து சிந்திக்கக் கூடிய – மாற்றங்களை நோக்கிப் பார்க்கவும் பயணிக்கவும் கூடிய ஆற்றலர்கள் வரவில்லை என்பதுதான். சிலர் இந்த நிலையை மாற்றுவதற்கு முயற்சிக்கிறார்கள் என்பது உண்மையே. ஆனால், அவர்களிடம் பலத்த குழப்பமுண்டு. ஒரு சாரார் தாம் அபிப்பிராய உருவாக்கிகள் என்ற நோக்கில் புதிய தலைமையைக் குறித்துச் சிந்திக்கிறார்கள். இது அரசியற் தலைமையை ஒன்றையும் அரசியற் போக்கொன்றையும் உருவாக்குவதாகும். இது நல்லதே. ஆனால் இதை எளிதில் செய்து விட முடியாது. மிக மிகமிகக் கடினமான ஒன்றிது. உள்நாட்டுச் சூழல், பிராந்திய நெருக்கடி, சர்வதேச அரசியற் பொருளாதார அசைவுகள், போட்டிகளுக்குள்ளால் இதைச் செய்ய வேண்டும். அடுத்தது, உள்ள நிலைமையில் சூழலைக் கையாள்வதைப் பற்றிச் சிந்திப்போர். இதில் சமகாலத்தில், சம தளத்தில் நிற்கும் சக்திகளைப் பயன்படுத்தி விசயங்களைக் கையாள்வது. இதுவும் சவால் மிக்க ஒன்றுதான். இதற்கு மிகக் கூரிய, கூடிய மதிநுட்பம் வேண்டும். அத்துடன் நான் முன்னர் குறிப்பிட்டுள்ள அத்தனை அரசியல் அடிப்படை அம்சங்களும் வேண்டும். மக்கள் ஆதரவு உள்பட.

ஆகவே இவற்றைக் குறித்தே தமிழ்ச்சமூகம் ஆழமாகச் சிநதிக்க வேண்டும். இல்லையென்றால், எந்தச் சிறு மாற்றமும் முன்னேற்றமும் கிட்டாது. வரவரவரவர வர நெருக்கடிகள் கூடி, அதிகரித்து அதை நோகடித்துச் சாகடித்து விடும்.

## மலையக இளைஞர்...

(08ஆம் பக்கத் தொடர்)

தமிழ் எழுத்தாளர்களுக்கு தோன்றாத் துணையாக இருக்கும் சிங்கப்பூர் முஸ்தபா அறக்கட்டளை, தமிழ் நாடு தஞ்சாவூர் பல்கலைக்கழகத்துடன் இணைந்து கரிகாற் சோழன் விருதை கொழும்பு தமிழ்ச் சங்கத்திற்கு நேரில்வந்து விருதை மு.சி.க்கு வழங்கி கௌரவித்தது. இவருடைய 'பஞ்சம் பிழைக்க வந்த சீமை' எனும் புதினம் தோட்டப்புற மக்களின் வலிமிகு தருணங்களை இணைக்கும் வரலாறாகத் திகழ்கிறது. எதிர்வரும் தலைமுறையினருக்கு முன்னோடி ஆவணமாக நின்று நடைமுறை சமூகத்தை வடிவமைக்கவும் இந்நாவல் உதவுவதால் கரிகாற்சோழன் விருதைப் பெறுகிறது' என்று தஞ்சாவூர் பல்கலைக்கழக துணைவேந்தர், முதல்வர் க. பாஸ்கரன் விருதிற்கான தகுதி உரையில் குறிப்பிட்டுள்ளார்.

முக்கியமாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் அமரர் பெ. சந்திரசேகரனோடு கருத்து வேறுபாடு காரணமாக 2005 இல் விலகிச்சென்ற போதிலும் தனது தாய் சங்க தலைவரை எப்போதும் மதித்து நடந்துகொண்டவர் என்ற ஒரு அடையாளம் மு.சிக்கு உண்டு. இன்று பலரும் ஏறிவந்த ஏணியை எட்டி காலால் உதைத்துத் தள்ளி புது அவதாரங்கள் எடுக்கும் காட்சியை மலையக மக்கள் அவதானித்து வருகின்றனர். ஆனால் மு. சிவலிங்கம் யாருடனும் பகைமையை வளர்த்துக்கொள்ளாது இன்றும் பலராலும் பாராட்டப்படுகிறார்.

---

**ஆண்/பெண் தொழிலாளர்களுக்கான வேலை வாய்ப்புக்கள்**

குருநாகல் தென்னந்தோட்டத்திற்கு மற்றும் கண்டி வயலுடனான காணிக்கு தங்கி வேலை செய்வதற்கு ஆண்/பெண் ஊழியர் குடும்பம் உடன் தேவை.

- ➢ தொழிலாளர்கள் ஆண்/பெண்
- ➢ பயிர்செய்கை அனுபவம்
- ➢ டிரக்டர் மற்றும் கனரக வாகன சாரதிகள்
- ➢ பால் பண்ணை ஆண்/பெண் ஊழியர்
- ➢ சுத்திகரிப்பு ஆண்/பெண் ஊழியர்
- ➢ உணவு சமைக்கும் கோக்கி ஆண்/பெண்

சம்பளம் 30,000 வரை
உணவு இலவசம் (புபே முறையில்)
தங்குமிடம் மற்றும் மருத்துவ வசதிகள்

**அழையுங்கள் – 0778711913, 0776443062, 0770818906**

---

# விலைமனுக்களின் அழைப்பிற்கான திருத்தம்

## அக்குரேகொடவிலுள்ள பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதியின் 03ஆம் தொகுதிக்கான சீலிங்குகளை வழங்கல், ஒருங்கிணைத்தல் மற்றும் நிறுவுதல் மற்றும் மேற்பார்வை செய்தல்

**ஒப்பந்த இல.: DHQC/CEILING/3/2020**

1. மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தம் தொடர்பாக 2021.02.14 ஆம் திகதியன்று தினகரன் வாரமஞ்சரியில் பிரசுரிக்கப்பட்ட விலைமனுக்களுக்கான அழைப்பு தொடர்பானது.
2. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விலைமனுக்களுக்கான அழைப்பில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
   - ❖ விலைமனு திறத்தல்/ மூடும் நேரம் ஆகியன 2021 மார்ச் 15 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளன.
   - ❖ விலைமனுக்கள் 2021 ஓகஸ்ட் 9 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
   - ❖ விலைமனுப்பிணையானது 2021 செப்டம்பர் 6 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
3. முன்னைய விலைமனுக்களுக்கான அழைப்பின் அனைத்து ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பெற்று, விலைமனுக்கோரல் ஆவணங்களை 2021 மார்ச் 14 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கொழும்பு-03, பாலதக்ஷ மாவத்தை, 15/5 ஆம் இலக்கத்திலுள்ள பாதுகாப்பு அமைச்சின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகை குழுத் தலைவரிடமிருந்து கொள்வனவு செய்யலாம்.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகை குழு,**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு-03, இலங்கை.**
**தொலைபேசி : 0094-11-2390719**
**தொலைநகல் : 0094-11-2390720**
**மின்னஞ்சல் : procurement@defence.lk**

---

**பண்ணை விலங்கு, பண்ணை மேம்பாடுகள் மற்றும் பாலுற்பத்தி மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சு**

NLDB **தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை**

# பதவி வெற்றிடம்

இலங்கையின் தகுதியுள்ள பிரஜைகளிடமிருந்து பின்வரும் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவிகள் :**

**1. கால்நடை மருத்துவர் (Veterinary Surgeon) – MM 1-1 – 2016**

**தகைமைகள்** : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட கால்நடை மருத்துவப் பட்டம் (BVSc) மற்றும் இலங்கை கால்நடை மருத்துவப் பேரவையில் (BVSL) பதிவு செய்யப்பட்டிருத்தல்.

**2. உதவி முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) – MM 1-1 – 2016 (01 பதவி வெற்றிடம்)**

**தகைமைகள்** : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட கணக்கியல் / முகாமைத்துவம் / வர்த்தகவியல் பட்டம் அல்லது ICASL அல்லது CIMA அல்லது ACCA அல்லது HNDA (04 வருடங்கள்) இடைநிலைத் தகைமையுடன் கீர்த்தி வாய்ந்த அரச அல்லது தனியார் துறை நிறுவனத்தில் கணக்கியல் மற்றும் நிதி / கணக்காய்வில் தகைமைக்குப் பின்னரான 03 வருட கால அனுபவம்.

**வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்** : **MM 1-1-2016**: ரூபா. 53,175/- - 10x1,375/- - 15x1,910/- - 95,575/-

**3. உள்ளக கணக்காய்வு அதிகாரி – JM 1-1 – 2016 (01 பதவி வெற்றிடம்)**

**தகைமைகள்** : கணக்கியலில் பட்டம் அல்லது கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்டு பெற்றுக்கொண்ட பட்டம் அல்லது ICASL அல்லது CIMA அல்லது ACCA அல்லது HNDA (04 வருடங்கள்) இடைநிலைத் தகைமையுடன் தோட்டம் / நிறுவனத்தில் கணக்காய்வு / கணக்கியல் மற்றும் நிதி என்பவற்றைக் கையாள்வதில் தகைமைக்குப் பின்னரான 01 வருட கால அனுபவம்.

**வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்** : **JM 1-1-2016**: ரூபா. 42,600/- - 10x755/- - 18x1,135/- ரூபா 70,580/- மேலேயுள்ள சம்பளத்திற்கு மேலாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட படியும் மேற்குறிப்பிட்டுள்ள பதவிக்கு வழங்கப்படும்.

**மேலதிக நன்மைகள்** : உள்ளக மற்றும் வெளிப்புற மருத்துவ நன்மைகள் ஒவ்வொரு விண்ணப்பதாரியும்

- i. இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
- ii. பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கான உடல் உள ஆரோக்கியத்தையும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கான தகுதியையுடையவராகவிருத்தல் வேண்டும்.
- iii. சிறந்த குணநலன்களையுடையவராகவிருத்தல் வேண்டும்.

2021 மார்ச் 26ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனைத்து சுயதரவு மற்றும் உறவினரல்லாத இருவரின் பெயர்கள், அவர்களின் முகவரிகள் மற்றும் தொலைபேசி எண்கள் ஆகியவற்றை அடக்கிய சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அத்துடன் சான்றிதழ்களின் பிரதிகள் என்பவற்றை பதிவுத் தபாலில் தலைவர், தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை, இல. 40, நாவல வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு-05 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தயவு செய்து குறிப்பிடவும்.

அரசாங்க நிறுவனங்களில் சேவையாற்றும் ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத்தின் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு: உயர் தகைமைகள் மற்றும் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு குறும்பட்டியலிடப்பட்டு நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர் மற்றும் நேர்முகத் தேர்வில் காட்டும் செயல்திறனுக்கமைய தெரிவு செய்யப்படுவர்.

**தலைவர்,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை,**
**இல. 40, நாவல வீதி,**
**நாராஹேன்பிட்ட,**
**கொழும்பு-05.**

---

**கல்வி அமைச்சு**

**நாட்டின் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் ஆங்கில ஆசிரிய வெற்றிடங்கள் மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தொடர்பாக தகவல் தொழில்நுட்பம், மனையியல், அழகியல் பாடங்களுக்கு (சித்திரம், சங்கீதம், நடனம்) ஆகிய பாடங்களுக்காக இலங்கை ஆசிரிய சேவையில் 3 ஆம் வகுப்பின் 1(இ) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போட்டிப் பரீட்சை – 2021**

நாட்டின் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் ஆங்கில ஆசிரிய வெற்றிடங்கள் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தொடர்பாக தகவல் தொழில்நுட்பம், மனையியல், அழகியல் பாடங்களுக்கு (சித்திரம், சங்கீதம், நடனம்) ஆகிய பாடங்களுக்காக இலங்கை ஆசிரிய சேவையில் 3 ஆம் வகுப்பின் 1(இ) தரத்திற்கு டிப்ளோமாதாரர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக தகைமை பெற்ற ஆண், பெண் இருபாலாரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மாதிரி படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2021.03.19 ஆம் தினத்தில் அல்லது அதற்கு முன்னதாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ. 1503, கொழும்பு." என்ற முகவரிக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். மேலதிக தகவல் தொடர்பாக கல்வி அமைச்சின் www.moe.gov.lk வலைத்தளத்திற்கு பிரவேசிக்கவும்

**செயலாளர்**
**கல்வி அமைச்சு**

---

**சுதேச மருத்துவ பட்டப்பின் பட்ட நிறுவகம் (PGIIM)**

**கொழும்பு பல்கலைக்கழகம்**

# பதவி வெற்றிடங்கள்

2021.03.26 ஆம் திகதி வரையும் பின்வரும் பதவிகளுக்காக பொருத்தமான தகைமையுள்ள நபர்களிடமிருந்து கொழும்பு பல்கலைக்கழக சுதேச மருத்துவ பட்டப்பின் பட்ட நிறுவகமானது விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளும்.

**அ. உதவி நூலகர்:**

**கல்வித் தகைமைகள்:**

(1) (i) விஷேட பட்டதாரிப் பட்டமொன்றில் முதலாவது அல்லது இரண்டாம் வகுப்பொன்றில் (மேல் பிரிவு)

**அல்லது**

(ii) பட்டதாரிப் பட்டமொன்றில் இரண்டாம் வகுப்பொன்று (கீழ் பிரிவு) அல்லது பொது பட்டதாரிப் பட்டமொன்றில் இரண்டாம் வகுப்பொன்று (மேல் பிரிவு)

**அல்லது**

(iii) பட்டதாரி பரீட்சையில் சித்தியொன்று அத்துடன் ஆய்வறிக்கை/கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வுக்கட்டுரை தொடர்பான ஆராய்ச்சி ஆக்கக்கூறுடனான நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானத்துறையில் ஆகக் குறைந்தது 2 கல்விசார் வருட காலப்பகுதியில் பட்டதாரிப் பின் பட்ட சித்தியொன்று.

**குறிப்புக்கள்:**

(அ) மேலேயுள்ள (i) அல்லது (ii) ஆகியவற்றின் கீழ் தகைமையுள்ள விண்ணப்பதாரி/ விண்ணப்பதாரிகள் இல்லாவிடின் மாத்திரமே மேலேயுள்ள (iii) இன் கீழேயுள்ள விண்ணப்பதாரியொருவர் தகுதியாக இருந்தால், அவர் நியமனத்திற்கு பரிசீலிக்கப்படுவார்.

(ஆ) மேலேயுள்ள (i) இன் கீழ் தகைமையுள்ள விண்ணப்பதாரி/ விண்ணப்பதாரிகள் இல்லாவிடின் மாத்திரமே மேலேயுள்ள (ii) இன் கீழேயுள்ள விண்ணப்பதாரியொருவர் தகுதியாக இருந்தால், அவர் நியமனத்திற்கு பரிசீலிக்கப்படுவார்.

**சம்பள அளவுத்திட்டம்:** யு-ஏசி 3 (IV) – மாதாந்தம் 54,600 – 10 x 1,335 – 67,950 ரூபா.
**ஆட்சேர்ப்பு முறைமை:** பகிரங்க விளம்பரத்தினூடாக நடாத்தப்படும்.

**ஆ. முகாமைத்துவ உதவியாளர் (கணக்கு பேணுதல்) தரம் III**

**தகைமைகள்:**

01. பின்வருவனவற்றில் பெற்ற திறமைச்சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
    - i. சிங்கள மொழி/தமிழ் மொழி
    - ii. ஆங்கில மொழி/ஆங்கில இலக்கியம்
    - iii. கணிதம்

**மற்றும்**

02. ஒரே அமர்வில் சாதாரண பொதுப் வினாத்தாள் நீங்கலாக க.பொ.த. (உ/த) பரீட்சையில் அனைத்து பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பின்வருவனவற்றைக் கொண்டிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(அ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றிலிருந்து ஆறு (06) மாத காலப்பகுதிக்கு குறையாத அளவில் கணனி பிரயோகங்களில் பெறப்பட்ட ஏற்றுக் கொள்ளத்தக்க தகைமையொன்று.

**மற்றும்**

**(ஆ)** கணனி பிரயோக பொதிகளின் பாவனையில் இரு வருட அனுபவம்.

*** நிருணயிக்கப்பட்ட பின்னரான தகைமைகள்:**

அ) திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்தொழில் பயிற்சி அமைச்சின் கீழுள்ள இலங்கை தொழில்நுட்ப கல்லூரி/தொழில்நுட்பவியல் கல்லூரி ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட கணக்கிடல் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவகத்திலிருந்து பெறப்பட்ட வேறேதாவது நிகரான தகைமை.

**அல்லது**

ஆ) க.பொ.த. (உ/த) தகைமையானது வர்த்தக துறையில் இருத்தல் வேண்டும்.

**வயது:** விண்ணப்பங்களை மூடும் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்தல்:** எழுத்துமூல பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சையின் மூலமாக தெரிவு மேற்கொள்ளப்படும்.

**சம்பள அளவுத்திட்டம்:** யுஎம்என் I(III A) மாதாந்தம் 30,725 – 17x300 – 35,825 ரூபா.

**நன்மைகள்:**

01. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் அவர்களின் (ஆண்/பெண்) அடிப்படைச் சம்பளத்திலிருந்து மாதாந்த கழிவுகளாக பத்து (10%) வீதத்திற்கு நிகரான தொகையை பங்களிப்பதற்கு ஆரம்பிப்பார்கள். பல்கலைக்கழகமானது இதற்கு மேலதிகமாக அதனது நிதியங்களிலிருந்து அதே வேளையில் விண்ணப்பதாரியின் (ஆண் /பெண்) ஈட்டல்களிலிருந்து ஏழு (7%) விகிதத்திற்கு நிகரான தொகையை பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கும் அவரது (ஆண் / பெண்) எட்டு வீத (8%) தொகையை ஓய்வூதிய நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்யும்.
02. ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், பல்கலைக்கழகமானது விண்ணப்பதாரியின் மூன்று (03%) இற்கு நிகரான தொகையை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யும்.
03. மேற்குறிப்பிட்டுள்ள சம்பளத்திற்கு மேலாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவு படி மற்றும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறைமை:**

பொரளை, கொட்டா வீதி, ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, 5 ஆம் மாடி, பட்டப்பின் பட்ட சுதேச மருத்துவ நிறுவகம், சிரேஷ்ட உதவி பதிவாளர் என்ற முகவரிக்கு நேரடியாகவே வருகைதருவதன் மூலம் அல்லது 9" x 4" அளவுள்ள முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட தபாலுறையொன்றை அனுப்புவதன் மூலம் விண்ணப்பப் படிவங்கள் மற்றும் உரித்தான விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

உரிய முறையில் விதிக்கப்பட்ட படிவங்களில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரித்தான சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் 2021.03.26 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் ''சிரேஷ்ட உதவி பதிவாளர், சுதேச மருத்துவ பட்டப்பின் பட்ட நிறுவகம், 5 ஆம் மாடி, ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, கொட்டா வீதி, பொரளை'' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.

பல்கலைக்கழக முறைமை, அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் ஊழியர்கள் அவர்களின் விண்ணப்பங்களை அவர்களின் உரித்தான நிறுவனங்களின் தலைமைகளூடாகவே அனுப்புதல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்படுத்தல்களுக்கு ஒத்திசையாத விண்ணப்பங்கள், பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் மூடும் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**பணிப்பாளர்,**
**சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம்**

# வாரமஞ்சரி சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

Tata tipping 407 Ex Dump truk tipping 2012 வருடம் விற்பனைக்கு. தொ.பே 0719242958. 017495

### 121 வாகனங்கள் தேவை தேவை

அரச நிறுவனமொன்றிற்கு சிறிய வேன் வண்டியொன்று வெகன் 12, முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் தேவை. நீண்ட கா லக் குத்தகைக்கு. 0764422653. 011302

சி றிய வேன் வண்டியொன்று தேவை. மாத்தறை, இரத்மலானை, கொழும்பு, மாத்த றை, கண்டி, மன்னார், ஹம்பாந்தோட்டை. நீண்ட காலத்திற்கு. 0764422653. 011304

## வேலைவாய்ப்பு

### 303 உயர்தொழில்துறையாளரின் ஆலோசனை பொதுவான சேவைகள்

நீர்க்கசிவு, ஸ்லெப், சுவர், குளியலறை , நீர்த்தாங்கி பேஸ்மண்ட் கூரை உட்பட தடுக்க முடியாத நீர்க்கசிவுகள் நிறுத்தப்படும் ஸ்பிரே பொலிஷ், ஸ்பிரே பெயின்ட் சுவர், வாகன பெயின்ட் அலங்காரமாக செய்து தரப்படும். 0774164647. 016345

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

ஒரு முன்னணி நிறுவனம் கொழும்பு புறநகர் பகுதியில் சந்தைப்படுத்தல் அலுவலர்களை ஆட்சேர்க்கின்றது. மருத்துவம், வாகனம், போனஸ், சம்பளம், வெளிநாட்டுப் பயணங்கள் இதில் உள்ள டங்கும். 50 வயதிற்குக் குறைவான வ ர்கள் அழையுங்கள். 0773928246, 07 16 226578, 07 77 697622, 07 13 530876, 0114201539 012513

### 311 வெற்றிடங்கள் தகவல் தொழில்நுட்பம்

கணனி IT பிரத்தியேக உதவியாளர் தேவை. பகுதிநேரம் தொடர்பு 0759145679. 016953

கிரபிக் வடிவமைப்பாளர் (பெண்) ஆங்கிலம்/ சிங்களம்/ தமி ழ் அறிவு தேவை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும். வேலை செய்த அனுபவம் தேவை. சுய தரவு Coreldraw, Illustrator, Pho t oshop போன்ற வைக ளை கையாளுதல். E.L.1/5, டயஸ் பி ளேஸ், கொழும்பு 1. தொ லைபே சி 0 7 70737782/ 0 7 54060963. எம். லியாவ். 016077

### 316 வெற்றிடங்கள் ஆடை தயாரிப்பு/ புடவைகள்

தேவை. வத்தளையில் அமைந்துள்ள எமது துணி உற்பத்தி தொழிற்சாலைக்கு பயிற்சிபெற்ற/ பயிற்சி பெறாத ஆ ண்/பெண் ஊழியர்கள் தேவை. ஒரு நா ள் சம்பளம் ரூ.120 0/ - மாதாந்த சம்பளம் வழங்கப்படும். இல வச தங்குமிட வச தி யுடன் சகாய விலையில் மூன்று நேரமும் உணவும் வழங்கப்படும். நேரில் வரவும். இல.18, வெலியமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொடர்புகளுக்கு 0766200300 018233

### 317 வெற்றிடங்கள் டெயிலர்கள்/ டிரஸ்மேக்கர்கள்

பெண்க ள் மற்றும் சிறு வர் ஆடைகளை வெட்டித் தைக்கக்கூடிய பெண்கள் தேவை. அழையுங்கள் 0773764164. 016594

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

கிருளப்பனை எப்பார்ட்மன்ட்ஸ் Complex இல் உள்ள ஒரு சிறிய குடும்பம் வசிக்கும் வீடொன்றில் தங்கி வேலை செய்வதற்கு அனுபவமுள்ள பெண் ஊழியர் ஒருவர் தேவை. மேலதிக தொடர்புகளுக்கு. 0777313478. 017919

மெத்சில பராமரிப்பு சேவை உங்களது அன்பான முதியோர்களை உங்கள் வீட்டிலேயே மிகவும் பாதுகாப்பாக பார்த்துக் கொள்வதற்கு அனுபவம் வாய்ந்த பராமரிப்பு ஊழியர்கள் முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் சேவையை பெற்றுக்கொள்வதற்கு எம்மைத் தொடர்பு கொள்ளவும். 0112445621, 0372054277, 0760981707, 0741148835, 0766570238, methsisila336@gmail.com 018275

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

க தி ர்காமம் பிரபல சுற்றுலா விடுமுறை விடுதிக்கு உள்நாட்டு/ வெளிநாட்டு வீட்டுத் தோட்ட வேலைகள், உணவு சமைத்தல் மற்றும் ஏனைய சகல வேலைகளுக்கும் அனுபவம் வாய்ந்த தம்பதியர் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கலாம். வருகை தரும் போது சான்றிதழ்கள் மிகவும் முக்கியம். 0776055340, 0771718177, 0112863763. 017420

கேகாலையில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றுக்கு கொத்து, அப்பம், ரைஸ் வேலைகள் தெரிந்த ஒருவர் தேவை. சம்பளம் நாளொன்றுக்கு 2500.00. 0719230436. 018267

### 322 வெற்றிடங்கள் மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்

மேசன்பாஸ், உதவியாளர்கள் உடன் தேவை. வேலையின் படி சம்பளம் உண்டு. தங்குமிட வசதியுண்டு. 077-8641097, 070-1181536. 017492

### 323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

பிரபல நிர்மாண கம்பனிக்கு மன்னார் பிரதேச செயற்றிட்டத்திற்காக தொழிலாளர்கள் தேவை. கவர்ச்சியான சம்பளம் மற்றும் தங்குமிட வசதிகள். அழையுங்கள். 0702335474. 017220

### 325 தொழில்துறை பொது

ஆண்கள், நவீன சலூன் ஒன்றுக்கு வேலைக்களுக்காக சகல வேலைகளும் தெரிந்தவர்கள் தேவை. கம்பஹா. 0775823864. 017794

கிருளப்பனை எப்பார்ட்மன்ட்ஸ் Building இல் Cleaning வேலை செய்வதற்கு பெண் ஊழியர் ஒருவர் தேவை. கிருளப்பனை நுகேகொடை அருகாமையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. மேலதிக தொடர்புகளுக்கு. 0777313478. 017903

கொழும்பு சுத்திகரிப்பு நி றுவனத்திற்கு ஆண் சுத்திகரிப்பு ஊழியர்கள். House Keeper மற்றும் சுப்பர்வைசர், வெற்றிடங்கள் உ ண்டு. அழையுங்கள் 0772771022. 017511

கோனபலவில் அ மைந்துள்ள தொழிற்சாலைக்கு ஊழியர்கள் தேவை. தங்குமிட வசதியுண்டு. 0770674646, 0712650892. 017864

சில்லறைக் கடைக்கு ஒருவர் மற்றும் ஹாட்வெயார் இற்கு ஒருவர் தேவை. திரீவீல் லைசன் மிகவும் பொருத்தமானது. 0112924762. 017868

தங்கொட்டுவையில் அமைந்திருக்கும் தொழிற்சாலைக்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை. ஒருநாள் சம்பளம் ரூ. 1200/- (மாதாந்த சம்பளம்) இலவச தங்குமிட வசதி உணவுக்கான கொடுப்பனவு மாதம் 3500/- வழங்கப்ப டும். கீழ்கண்ட விலாசத்துக்கு வரவும். இல. 08, கைத்தொழில் பேட்டை, தங்கொட்டுவ. தொ.பே 031-7401 050/ 0772229947/ 0 77-2884959. 018234

திருமண அழைப்பிதழ் மற்றும் பல்வேறு வகையான பெட்டிகள் போன்றவற்றை ஒட்டக்கூடியவர்கள் தேவை. மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள். அனுபவம் கட்டாயமானது. 0777313478. 017911

18 -25 இடைப்பட்ட ஆண் தொழிற்சாலை கையுதவியாட்கள்/ நாளாந்தம் 12 50 + பகலு ணவு இலவசம். 0773077813, 0722273273. 017607

## சொந்த விடயம்

### 528 தங்குமிட வசதிகள்

தெஹிவளையில் இரண்டு அறை கள் அல்லது வே லைக்கு செல்லும் பெண்கள் அல்லது மாணவர்கள் (Sharing Conciderd) தொடர்பு 0779502080 015010

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

உஸ்வெட்டகய்யாவவில் 40 பேர்ச் சதுரக்காணி பழைய வீட்டுடன் விற்பனைக்கு. களஞ்சியம், குடியிருப்புக்கு உகந் தது. தொடர்பு - 071-3186375. 016584

கடுவலை நவகமுவ சுற்றிவர மதில் சகிதம் 40 பேர்ச் காணி மற்றும் வீடு, உடன் விற்பனைக்கு. கொழும்பு அவிசாவளை பிரதான வீதிக்கு 50 மீற்றர். 20 அடி அகலப்பாதை சகிதம், நவகமுவ தேவாலயம், வைத்தியசாலை உட்பட பிரசித்தமான இடத்திற்கு அண்மையி ல் அமைந்துள்ள பெறுமதியான காணி. நீர், மின்சார வசதிகள் சகிதம். அமைதியா ன சூழல். 0702 769095. 018270

நுகேகொட, அம்புல்தெனியா பழைய கொட்டாவ வீதியில் இருந்து 50M தொ லைவில் 16 பேர்ச்சஸ் காணி விற்பனைக்கு உள்ளது. ஒரு பேர்ச்சஸ் 26 இலட்சம் பெறுமதி. (விலை பேசித் தீர்மானிக்கலாம்.) மேலும் தகவலுக்கு 0766956672 ஐ அழைக்கவும். 017358

பாதுக்க போபே 125 கொழும்பு இங்கிரிய வீதியில் 300 மீற்றர் தூரத்தில் 20 அடி பாதை சகிதம் 2 ஏக்கர் 35 பேர்ச் சமதரை காணி விற்பனைக்கு. துண்டுகளாக விற்பனை செய்வதற்கும் பொருத்தமானது. ஒரு பேர்ச் 85000.00 (தரகர்கள் தேவையில்லை) 0768885043. 018277

மாலபே SLIT-SITM HORIZON இற்கு அருகாமையில் வலிவிட்ட பாதையில் விஜயபா மாவத்தையில் 10 பேர்ச் 3 அறைகள் பான்ரி, ஹோல், ஊழியர் அறை, 4 வாகனங்கள் நிறுத்துமிடம் ஒருவ ரும் வசிக்காத புதிய வீடு விற்பனைக்கு LK 240, 0773222571. 015738

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

துனகஹ வீனஸ்பார்க் 29 பேர்ச் காணி விற்பனைக்கு. ஒரு பேர்ச் 65, 000.00. மரவள்ளிக் கிழங்கு பயிர்செய்கைக்கு உகந்தது. 0778300400. 018264

வத்தளை அல்விஸ்டவுன் 18 பேர்ச் வீடு, அனெக்ஸ், நீ ச்சல் குளத்து டன் உடனடியாக விற்பனைக்கு. 85m 0712384433/ 0706 604433, 070-3284433. 017860

### 620 வீடு சொத்து புத்தளம் மாவட்டம் விற்பனைக்கு

அபிவிருத்தி அடைந்து வருகின்ற சிலாபம் நகரின் உடப்பு பிரதேசத்தில் வாழ்க்கைக்கும் வியாபாரத்திற்கும் முதலீட்டிற்கும் உகந்த வகையில் அமைதியான சூழலுடனும் அனைத்து வசதிகளுடனும் நியாயமான விலையில் அதிர்ஷ்டமான காணி உடப்பு வலம்புரி. முன் பதிவுக்கு ரூ. 100,000/= நில மதிப்பி லிருந்து 40% செலுத்தி இன்று உங்கள் வேலையைத் தொடங்குங்கள். அழையுங்கள் 0715371371/ 0713481481. 017403

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

இரத்மலானை புதிய வீடு வாடகைக்கு. மூன்று அறைகள், இரண்டு குளியலறைகள், பென்ட்ரி கபட், பார்க்கிங். தரக ர்கள் தேவையில்லை. 0 7 14323545, 0772368545. 018274

### 642 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

வத்த ளை அல்விஸ்டவுன் வீ டு, நீச்சல் குளத்துடன் குத்தகைக்கு. 125/ - 4 படுக்கையறை மேல்மாடி. 0712384433/ 0706604433, 070-3284433. 017863

# பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி

## தரமான வாகனங்களின் ஏல விற்பனை

டீசல் மற்றும் பெட்ரோல் மோட்டார் வாகனம், முச்சக்கர வண்டி மற்றும் டிரக்டர் உட்பட 100 வாகனங்கள்

**2021 மார்ச் 13 ஆம் திகதி சனிக்கிழமை BMICH** இன் "மிஹிலேக மெதுர" வில் காலை 10.00 தொடக்கம் இடம்பெறும். முதல் முறையாக இலங்கையில் முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் தேர்வு செய்யப்பட்ட 9 கிளைகள் ஊடாக நேரடி ஏல விற்பனையுடன் தொடர்பு கொள்வதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அன்றைய தினத்தில் கீழ் குறிப்பிடப்பட்ட கிளைகளுக்கு வந்து உங்களுக்கு இந்த ஏல விற்பனையில் கூறு விலையைச் சமர்ப்பிப்பதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கம்பஹா/ மாத்தறை/ தம்புள்ள/ பொலன்னறுவை/ மொனராகலை/ கண்டி/ குருணாகல் / சிலாபம் / பண்டாரவளை

பரிசீலிப்பது மார்ச் 10 புதன்கிழமை தொடக்கம் மார்ச் 12 வெள்ளிக்கிழமை வரை. காலை 9.00 தொடக்கம் மாலை 5.00 வரையான காலத்தில் மாபிம, மாலபே, மருதானை மற்றும் கலேவலயில் அமைந்துள்ள வாகனக் கூடங்களில்.

மாலபே: 0761 064 773/ மருதானை: 0112 688 026/ மாபிம: 0112 401 031/ கலேவல 0662 287 355

### கலேவல வாகனக் கூடம்

| VEHICLE NO. | MODEL | YEAR |
|---|---|---|
| **பஸ்** | | |
| WP-ND-9XXX | LEYLAND VIKING,SEAT 42 | 2011 |
| NW-GP-8XXX | LEYLAND VIKING,SEAT 42 | 2002 |
| CP-NB-2XXX | LEYLAND VIKING,SEAT 42 | 2012 |
| NP-HJ- 1XXX | LEYLAND VIKING,SEAT 42 | 2003 |
| 061-3XXX | MITSUBISHI FUSO,SEAT 33 | 1986 |
| NC-ND-3XXX | MITSUBISHI SKG-BE640J,SEAT 31 | 2012 |
| NC-NB-4XXX | TATA CITY RIDE LP407,SEAT 24 | 2012 |
| NP-ND-6XXX | TATA LP01512,SEAT 57 | 2010 |
| EP-NC-9XXX | TOYOTA BDG-XZB40 COASTER,SEAT 25 | 2009 |
| **கார்** | | |
| NW-HG-2XXX | DAEWOO MUSSO-JEEP | 1999 |
| 032SRI5XXX | DAIHATSU | 1984 |
| 016SRI3XXX | TOYOTA SPRINTER AE81 | 1985 |
| **கம்பைன் ஹார்வெஸ்டர்** | | |
| | LAND MARK 4L2-2.2 TRACK HARVESTER | 2018 |
| **லொறி** | | |
| CP-LN-8XXX | ISUZU BKG-NPR85AN | 2010 |
| CP-LA-8XXX | MITSUBISHI KK-FE53EC | 2000 |
| 047-7XXX | TATA 1612-CLOSED | 1995 |
| **முச்சக்கர வண்டி** | | |
| NW-AAE-1XXX | PACE PACE-435-DS | 2012 |
| **டிப்பர் வண்டி** | | |
| SG-LN-6XXX | LANKA ASHOK LEYLAND 1616 | 2018 |
| SG-LN-5XXX | LANKA ASHOK LEYLAND 1616 | 2018 |
| **வேன்** | | |
| WP-HF-3XXX | DAIHATSU HIJET | 1999 |
| 058-8XXX | NISSAN V-VRGE24 | 1992 |
| **டிரக்டர் வண்டி** | | |
| NC-RF-7XXX | KUBOTA L_3408 | 2017 |
| CP-RF-8XXX | KUBOTA L_4508GR | 2018 |
| NC-RB-8XXX | MAHINDRA 575DI | 2010 |
| NW-RE-9XXX | MASSEY FERGUSON MF 1540 | 2018 |
| CP-RG-0XXX | SONALIKA DI 50 RX-2WD | 2018 |
| NC-RF-6XXX | SWARAJ 855 55HP TRACTOR | 2017 |

| | | |
|---|---|---|
| **பிரைம் மூவர்** | | |
| WP-LY-3XXX | VOLVO FM 11-450 | 2011 |
| **டிப்பர் வண்டி** | | |
| WP-LL-2XXX | DONGFENG T-LIFT DFL3251AS | 2012 |
| **டிரக்டர் வண்டி** | | |
| SP-RA-8XXX | KOMATSU V-1248 | 2000 |
| **டிரெய்லர்** | | |
| WP-LX-3XXX | TANTRI TFB40 | 2017 |

### மாபிம வாகனக் கூடம்

| VEHICLE NO. | MODEL | YEAR |
|---|---|---|
| **பஸ்** | | |
| 063-4XXX | LEYLAND VIKING,SEAT 42 | 2000 |
| WP-JN-6XXX | LEYLAND VIKING,SEAT 42 | 2004 |
| WP-NA-9XXX | LEYLAND VIKING,SEAT 58 | 2011 |
| WP-ND-3XXX | HINO PDG-XZB50M LIESSE II,SEAT 26 | 2009 |
| WP-ND-8XXX | MITSUBISHI U-MS729S,SEAT 54 | 1992 |
| 063-0XXX | NISSAN -,SEAT 28 | 1993 |
| 061-5XXX | NISSAN CIVILLIAN,SEAT 29 | 1984 |
| WP-NB-6XXX | NISSAN DIESEL KC-RA531MBN,SEAT 50 | 1996 |
| CP-NA-2XXX | TATA LP713,SEAT 30 | 2006 |
| WP-NA-5XXX | TATA LP0 1512,SEAT 54 | 2007 |
| 060-7XXX | TOYOTA ,SEAT 25 | 1985 |
| WP-NB-0XXX | ZONDA YCK6849HP,SEAT 33 | 2011 |
| **ஜீப்** | | |
| SP-PX-3XXX | MAHINDRA MAXXIMO PLUS | 2014 |
| WP-DAB-5XXX | MAHINDRA MAXXIMO PLUS- VX | 2015 |
| **மின்பிறப்பாக்கி** | | |
| | NIPPON SHARYO NES220SH | 1999 |
| **பௌசர் வண்டி** | | |
| 047-8XXX | LANKA ASHOK LEYLAND TUSKER | 1995 |
| **லொறி** | | |
| SP-JT-9XXX | EICHER 20.16 | 2004 |
| WP-LI-3XXX | FAW CA1071PK2YA81 | 2007 |
| WP-LG-7XXX | MITSUBISHI PA-FE72D8V | 2005 |
| WP-LB-9XXX | NISSAN KG-SR4F23 | 2000 |
| WP-LE-4XXX | TATA LPT7138 | 2007 |
| NW-LB-6XXX | TEMPO EXCEL 4 FORCE | 2005 |

### மாலபே விற்பனை பிரிவு

| VEHICLE NO. | MODEL | YEAR |
|---|---|---|
| **பஸ்** | | |
| SP-NA-8XXX | LEYLAND VIKING,SEAT 41 | 2011 |
| WP-ND-8XXX | LEYLAND VIKING,SEAT 42 | 2010 |
| WP-HQ-2XXX | LEYLAND VIKING,SEAT 42 | 2003 |
| SP-GS-4XXX | LEYLAND VIKING,SEAT 42 | 2002 |
| WP-NA-0XXX | LEYLAND VIKING,SEAT 42 | 2005 |
| WP-NA-8XXX | LEYLAND VIKING, SEAT54 | 2011 |
| WP-NE-8XXX | NISSAN DIESEL JA530RANMJ,SEAT 43 | 2011 |
| WP-NC-7XXX | TOYOTA PB-XZB50 COASTER,SEAT 28 | 2007 |
| **கார்** | | |
| WP CAF-9XXX | HONDA FIT | 2015 |
| WP CAB-1XXX | HONDA RU3 VEZEL | 2014 |
| SP KP-6XXX | MARUTI ASTAR VXI | 2011 |
| SP KD-5XXX | MERCEDES BENZ E220CDI | 2005 |
| EP-KF-6XXX | PEUGEOT 407 | 2007 |
| WP CAQ-6XXX | SUZUKI ALTO LX1800 | 2016 |
| WP CAF-6XXX | SUZUKI ALTO LX1800 | 2015 |
| WP CAK-2XXX | SUZUKI WAGON R | 2014 |
| WP KX-3XXX | TOYOTA AQUA | 2012 |
| WP KX-8XXX | TOYOTA AQUA DAA.NHP10 | 2013 |
| WP KK-4XXX | TOYOTA AXIO DBA-NZE 141 | 2007 |
| WP CAR-3XXX | TOYOTA DAA NHP 10 AQUA | 2013 |
| WP CAF-7XXX | TOYOTA DAA NKE 165 AXIO | 2014 |
| WP CAA-9XXX | TOYOTA DAA NKE 165 AXIO | 2015 |
| WP CAG-8XXX | TOYOTA DAA NKE 165 AXIO | 2015 |
| **வேன்** | | |
| WP PI-2XXX | SUZUKI HBD.DA13V.EVERY | 2017 |
| 062-2XXX | TOYOTA HIACE | 1992 |
| WP NC-1XXX | TOYOTA HIACE | 2008 |
| WP NC-6XXX | TOYOTA KDH | 2015 |
| WP PC-0XXX | TOYOTA KR KDH220K | 2006 |
| **கெரியர் வண்டி** | | |
| WP LJ-9XXX | ISUZU CARRIER | 2008 |

### மருதானை வாகனக் கூடம்

| VEHICLE NO. | MODEL | YEAR |
|---|---|---|
| **கார்** | | |
| WP-KT-0XXX | KIA SORENTO | 2012 |
| WP-KL-4XXX | LAND ROVER RANGE ROVERSPORT HSE | 2010 |
| 018-5XXX | MARUTI - | 1993 |
| WP-KN-7XXX | MERCEDES BENZ C 180 KOMPRESSOR | 2010 |
| 014SRI8XXX | NISSAN B11 | 1984 |
| 300-9XXX | OPEL - | 1998 |
| UP-KQ-9XXX | TATA NANO | 2011 |
| WP-KP-7XXX | TATA NANO | 2011 |
| WP-KR-5XXX | TATA NANO | 2011 |
| WP-KN-6XXX | TATA NANO | 2011 |
| 014SRI9XXX | TOYOTA | 1984 |
| **முச்சக்கர வண்டி** | | |
| WP-QT-5XXX | BAJAJ BAJAJ 4S | 2009 |
| WP-YP-9XXX | TVS KING | 2011 |
| WP-YM-7XXX | TVS KING | 2011 |
| **வேன்** | | |
| 060SRI0XXX | ISUZU | 1985 |

**விற்பனை நிபந்தனைகள்**

- உள் நுழைவு அரசின் சுகாதார சட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் கீழ் நடத்தப்படும்.
  ஏல விற்பனை திகதியில் முதலில் வருகை தரும் முறைக்கு அமைய அனுமதிச் சீட்டு வழங்கப்படும்.
  கொழும்பின் பிரதான ஏல விற்பனைக்காக உள்நுழையும் கட்டணம் ஒருவருக்கு மீளளிக்கப்படாத 2000 ரூபா அனுமதிச் சீட்டு மற்றும் 10,000 ரூபா என மீளளிக்கப்படும் வைப்புத் தொகை பெறப்படும்.
  வலைப்பின்னல் அடிப்படையிலான ஏல விற்பனைக்கான பதிவு குறித்த கிளைகள் ஊடாக ஏல விற்பனைத் தினத்தில் இடம்பெறும்.
- கொடுப்பனவு சுத்தியல் வைக்கப்பட்ட உடன் மீளளிக்கப்படாத 25% அடிப்படை வைப்பு முன்பணமாகச் செலுத்துதல் வேண்டும் என்பதோடு எஞ்சிய 75% தொகையை 2021 மார்ச் 17 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன்னர் இல. 1161, மருதானை வீதி, கொழும்பு 08 என்ற முகவரியில் அமைந்துள்ள பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் தலைமை அலுவலகத்தில் செலுத்தி வாகனத்தை அகற்றிக்கொள்ளல் வேண்டும்.
- எந்த ஒரு வாகனத்தையும் முன்னறிவித்தல் இன்றி ஏல விற்பனையில் இருந்து அகற்றிக்கொள்ளும் உரிமை முகாமைத்துவத்தின் வசமானது.
- ஏல விற்பனையாளரின் முடிவு இறுதி முடிவாகும்.

ANA AUCTIONEER Black Tie Service with True Aloha!

**ஏ என் அல்கெவத்த ஒக்ஷனிய(ர்)**
**A N ALGEWATHTHA AUCTIONEER**
#333, Janajaya City, Rajagiriya.
+94 71 790 5 790 | info@anaauctioneer.com
www.anaauctioneer.com

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT App Store Google play Windows Store
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE

SriLankan Airlines oneworld

## கொள்முதல் அறிவிப்பு
## ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட்

**குறிப்பு எண்: SMAGS / 2020 / EPC / SPA / CMB**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க (சி.எம்.பி) இல் செரெண்டிப் லவுஞ்சிற்கான எஸ்பா சேவை வழங்குநரின் தேர்வு**

ஏல படிவங்களை பின்வரும் இணைப்பிலிருந்து நேரடியாக பதிவிறக்கம் செய்யலாம்
**https://www.srilankan.com/en_uk/coporate/tender-notices**

ஏலம் நிறைவு தேதி: 20 மார்ச் 2021 1700 மணிக்கு. (இலங்கை நேரம்)

2021 மார்ச் 29 ஆம் தேதி 1000 மணிக்கு எம்எஸ் அணிகள் வழியாக ஏலம் திறக்கப்படும்
மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள தொலைபேசி எண். 0197332577 அல்லது 0197332573 உடன் தொடர்பு கொள்ளவும்.

2021 மார்ச் 12 ஆம் தேதி 1000 மணிக்கு ஒரு முன் ஏலக் கூட்டம் ஒன்று செரண்டிப் லவுஞ்ச், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் கட்டுநாயக்கவில் நடைபெறும்.ஏலத்திற்கு முந்தைய கூட்டத்தில் கலந்துகொள்வது கட்டாயமாகும். முன் ஏல கூட்டத்தில் கலந்து கொள்ளாத விற்பனையாளர்களின் ஏலம் நிராகரிக்கப்படும்.

**என்டர்பிரைஸ் கொள்முதல் கமிட்டியின் தலைவர்,**
**சுற்றுலா மற்றும் விமான அமைச்சகம்**
**ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் சார்பாக**

நாளை 08ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம்

# பெண் தொழிலாளர்கள் என்றால் அவர்கள் ஆடு மாடுகளா?

**‘ தேயிலை மலைகளில் பெண்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை பெண்கள் வெளிப்படையாக பேச வேண்டும். மாதவிடாய் காலத்தில் நாங்கள் மிகவும் கஸ்டப்படுகிறோம். சிறுநீர் கழிக்க பற்றைகளில் ஒதுங்க வேண்டியிருக்கிறது. கை கழுவக்கூட தண்ணீர் இல்லை. சாப்பிட ஒரு இடம் இல்லை. எந்த சங்கமும் இதுபற்றி பேசுவது இல்லை. கம்பனிகள் வேலை நடந்தால் போதும் என நினைக்கின்றன ’**

சர்வதேச உழைக்கும் பெண்கள் தினத்தை முன்னிட்டு தேயிலை தோட்டங்களில் தொழில் புரியும் தொழிலாள பெண்கள் முகம் கொடுக்கும் பிரதான பிரச்சினைகளை அவர்களிடம் கேட்டுத்தெரிந்து கொள்வோம்.

பேசணும். மலையில முகம் கொடுக்கும் இப் பிரச்சினைகளை பெண்கள் கதைக்க தொடங்குங்க வேலைத்தளத்தில் நீர் வசதியுடன் கூடிய மலசல கூடம் அவசியம் என்ற செய்திய எல்லா இடத்திலயும் கதைங்க.

நாங்க குடுக்குற அழுத்தத்துல

நான் மடுல்களை தோட்டத்தில் வேலை செய்கின்றேன். நாங்கள் காலையில் 7 மணிக்கு மலைக்கு வேலைக்குச் சென்று பின்னேரம் 5 மணிக்கு மேல் வீட்டுக்கு வருகின்றோம். கிட்டத்தட்ட 10 மணி நேரம் வேலைத்தளத்தில் இருக்கும் எங்களுக்கு இது வரையிலும் கம்பனிகளினால் நீர் வசதிகளுடன் கூடிய மலசல கூடம் தேயிலை தோட்டங்களில் அமைத்துக் கொடுக்கப்படவில்லை. மரங்களுக்கு அடியிலும், புதர்களுக்குள்ளும் சென்று எமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டியுள்ளது. இது மிகவும் அருவருக்கத்தக்க விடயமாகும்.

ஆண் தொழிலாளர்கள் யாரும் இருக்கின்றார்கள், துரைமார், சுப்பர்வைசர்மார் வருகிறார்களா என சுற்றும் முற்றும் பார்க்க வேண்டியுள்ளது. பயந்து பயந்து பல மணி நேரம் சிறுநீரை கட்டுப்படுத்துவ

யென்பது எமது சுயமரியாதையை கேள்விக்குட்படுத்துகிறது. எங்களை தொழிலாளர்களாகவோ, சகமனிதர்களாகவோ இந்நாட்டில் அங்கீகரிக்கவில்லை என்றே நான் கூறுவேன்.

எங்களை இந் நாட்டு பிரஜைகளாக ஏற்றிருந்தால் எமக்கு இவ்வாறான ஒரு அநீதி இழைக்கப்படுவதை கண்டும் காணாதது போல அரசாங்கங்கள் இருந்திருக்குமா? எனவே சர்வதேச உழைக்கும் பெண்கள் தினத்தில் ஏனைய தொழிலாளர்களுக்கு கூறும் செய்தி.

வேலைத்தளத்தில் மலசல கூடம் இல்லாத காரணத்தால் முகம் கொடுக்கும் அசௌகரியங்களை உணர்ந்து அதனை எதிர்த்து போராடி எமது உரிமையை வென்றெடுக்க எங்களுடன் ஒன்றுபடுங்கள் என்பதாகும்.

இப்பிரச்சினை இந்தவருடத்திலாவது மாற வேண்டும். அனைத்து தொழிலாளர்களும் மலைகளில் நீர் வசதியுடன் கூடிய சாப்பிடும் இடம் தேவை. எங்களுடைய பிரச்சினையை தீர்க்க ஒன்றுபட வேண்டும். கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

## தேவிகா :



## சுப்பிரமணியம் முத்துக்குமாரி :



ஹெட்லி டிவிசனில் வேலை செய்கின்றேன். நாங்க காலையில 7.30 மணிக்கு வேலைக்கு போவோம். சாப்பாட்டை சுத்தி எடுத்துகிட்டு போவோம். அங்க போனதும் கொழுந்து கூடையில சாப்பாட வச்சிட்டு கொழுந்து எடுப்போம் அவ்வாறு சாப்பாட்டை வைத்துவிட்டு கொஞ்ச தூரம் சென்றுவிட்டால் தோட்டத்துக்குள் ஓடித்திரியும் நாய்கள் கூடைய சாய்த்து சாப்பாட்ட இழுத்து போட்டிருக்கும். அந்த மாதிரியான நேரத்தில் சாப்பிடாம கொண்டு போன தண்ணிய மட்டும் குடிச்சி வேல செஞ்சதுல மயக்கம் வந்து விழுந்து வீட்டுக்கு வந்திருக்கேன்.

# தேயிலை மலைகளில் மலசல கூடங்களும் சாப்பாட்டு அறைகளும் அமைக்கப்பட வேண்டும்

## இராமையா மங்கலேஸ்வரி :

வட்டவளை B1 தோட்டத்தில் வேலை செய்கின்றேன். தொழிலாளி இந்நாட்டின் முதுகெலும்பு என்பார்கள். ஆனால் எங்களது முதுகெலும்பை நிமிர்த்தி நிக்க முடியாத அளவிற்கு சுயமரியாதை இழந்து நிற்கிறோம். தேயிலை மலைகளில் நீர்வசதியுடன் கூடிய மலசலகூட வசதி இல்லை. அவசரமாக சிறுநீர் கழிக்க வேண்டுமானால் கிடைத்த இடத்தில் அமர வேண்டியிருக்கிறது. ஆண்கள் பார்த்து விடுவார்களோ என அக்கம் பக்கம் பார்த்துக்கொண்டிருக்கும் போது பூச்சிபட்டை கடிச்சிடும்.

தண்ணீர் வசதி இல்லாததால் துப்பரவு செய்ய முடிவதில்லை. அரிப்பு, புண்கள் வர காரணமாகிறது. பெரிய அவஸ்தை படுகிறோம். இது அதிகமான பெண் தொழிலாளர்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சினை.

இந்த நாட்டுல உள்ள அதிகாரிகளுக்கு இது எவ்வளவு பெரிய கொடுமை என்பது தெரியவர வேண்டாமா? தொழிலாளினா சுத்தமா இருக்க கூடாதா? தொரமாருக்கு மட்டுமா சுத்தம்? நாங்க வீட்டுல என்னதான் சுத்தமா இருந்தாலும் பலன் இல்லை.

வேலை செய்யும் இடத்துல இப்படியான பிரச்சினை எமக்கிருக்கும் போது. இந்த பிரச்சினைய வெளியுலகத்துக்கு கொண்டு போக விரும்புகிறோம். மலைக்கி வேலைக்கு போகும் போது திடீர்னு மாதவிடாய் வந்துரும்.

உடன உடுப்ப மாத்தணும், அதற்கு உதவியா மலையில் ஒரு மலசல கூடம் தண்ணியோட இருந்தா எவ்வளவு உதவியா இருக்கும், தெரியுமா? அந்த வசதி இல்ல என்பதால ஓடிப்போய் கங்காணி, சுப்பர்வைசர் கிட்ட அவசரமா வீட்டுக்கு கொஞ்சம் போகணும் என்போம். அவங்க அதை புரிஞ்சிக்காம ஏன் ஏதுக்குனு துருவித் துருவி கேட்டு உயிரெடுத்துருவாங்க. எல்லா வீட்டுலயும் பெண்கள் இருக்காங்க தானே? அவசர பிரச்சினைன்னு சொன்னா அதைப் புரிஞ்சிக்க வேண்டாமா?

இப்படித்தான் பெண் தொழிலாளர்கள் கெஞ்சி அசிங்கப்பட்டு அவமானப்படும் நிலையில் இருக்கின்றோம். தொழிலாளர்களாகிய எங்களுக்கு சுயமரியாதை உள்ளது. எங்கள் பிரச்சினைகளை உடைச்சி வெளிப்படையாத்தான் சொல்றேன்.

ஏன்னா, பெண் தொழிலாளர்கள் முகம் கொடுக்கின்ற இந்த பிரச்சினை வெளிய வந்தாகணும். நம்ம பிரச்சினைய நாமதான்

கம்பனிகளும், அரசாங்கமும் இந்த பிரச்சினைய தீர்க்க உடனடி நடவடிக்கை எடுக்கணும்.

## ஸ்ரீதேவி :

தெனியாய எனசல்வத்த தோட்டத்தில் வேலை செய்கின்றேன். பெண் தொழிலாளர்கள் தோட்டங்களில் மலசலகூடம் இல்லாமல் பல துன்பங்களை சந்திக்கின்றார்கள். விசேடமாக கர்ப்பிணி பெண்கள் அடிக்கொரு முறை சிறுநீர் கழிக்க வேண்டிய தேவை உள்ளது.

இக் காலப்பகுதியில் அதிகமான கர்ப்பிணி பெண்கள் சிறுநீரக கோளாறுகளுக்கும், அல்ர்ஜிகளுக்கும் முகம் கொடுக்கிறார்கள். நாங்கள் அவசர தேவைக்கு பக்கத்தில் வீடுகள் காணப்பட்டால் அங்கு சென்று வருவோம். அதன் போது கிருமி தொற்றுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

இவ்வாறன பிரச்சினை ஏற்படும் போது வேலைக்கு செல்லாமல் விடுமுறை எடுக்க வேண்டி ஏற்படுகின்றது. மறைவான இடங்களை தேடி செல்லும் போது பூச்சிபட்டைகள் எங்களுக்கு தெரியாமலேயே எங்களை கடிக்கலாம். இதன் காரணமாக உடல் சார்ந்த அலர்ஜிகளுக்கு முகம் கொடுக்கின்றோம்.சிலசந்தர்ப்பங்களில்இவ்வாறு மறைவாக செல்லும் போது வழுக்கி விழுந்து அடிப்பட்டுள்ளது.

இவ்வாறான பிரச்சினைகளை தோட்ட நிர்வாகத்திடம் கலந்துரையாட தொழிலாள பெண்கள் தயாராக இல்லாத காரணத்தினால் நிர்வாகம் இப் பிரச்சினைகளை கண்டும் காணாமல் இருக்கின்றது.

இந்நிலை மாற வேண்டும். நாங்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை வெளிப்படையாக கதைக்க வேண்டும். எங்களுக்கு வேலை செய்யும் மலைகளில் நீர் வசதியுடன் கூடிய மலசல கூடங்களை அமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு நிர்வாகத்தை கேட்டுக்கொள்கின்றோம்.

## கமலாம்பாள் :



தால் சிறுநீரக நோய்களுக்கு முகம் கொடுக்கின்றோம். இப் பிரச்சினைகளை யாரும் உணர்வதில்லை. இதை பெண் பிரச்சினையாகப் பார்க்கப்படாமல் வேலைத்தளத்தில் பெண் தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினையாக பார்க்கப்பட வேண்டும்.

## ராமகுமாரி :



தெனியாய எனசல்வத்த தோட்டத்தில் வேலை செய்கின்றேன். தேயிலை மலைகளில் தண்ணீர் வசதியுடன் கூடிய மலசல கூடம் இல்லாதது ஒரு பிரச்சினை என்று எடுத்துச் சொல்ல வேண்டிய நிலையில் கம்பனிகளும், அரசாங்கமும் இருப்பது மிகவும் வேதனையளிக்கிறது. 8 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்யும் ஒரு வேலைத்தளத்தில் மலசலகூட வசதிகள் காணப்பட வேண்டும் என்பது சாதாரண விடயம். ஆனால் 150 ஆண்டுகளை கடந்து தொழில் புரியும் எமது சமூகத்தின் இப்பிரச்சினை இன்றுவரை தீர்க்கப்படவில்லை. யாரும் கண்டு கொள்வதுமில்லை. மாதவிடாய் காலங்களில் பெண்கள் துப்பரவாக இருப்பது மிகவும் அவசியம். ஆனால் நாங்கள் மலைகளில் வேலை செய்யும்போது துப்பரவாக இருப்பதற்கு எங்களுக்கு எந்த வசதியும் செய்து கொடுக்கப்படுவதில்லை. ஆடு, மாடுகளைப் போல தொழிலாளர்களை நினைத்துக்கொண்டு இருக்கின்றார்கள். இப் பிரச்சினை காரணமாக மாதவிடாய் காலங்களில் பெருமளவு பெண்கள் வேலைக்கு செல்வதில்லை. வேலைக்குப் போகாததால் எங்களுடைய வருமானம் குறைகின்றது. நாங்கள் ஒரு 4 நாள் வேலைக்கு செல்லவில்லை என்பது எவ்வளவு பெரிய நஸ்டம் தெரியுமா?

## சத்தியபாமா :

பிரவுன்ஸ்விக் தோட்டத்தில் வேலை செய்து வருகின்றேன். தேயிலை மலைகளில் நீர் வசதியுடன் கூடிய மலசல கூடங்கள் இல்லை

## அமராவதி :



நான் கோம்பர தோட்டத்தில் வேலை செய்கின்றேன். எங்களது வேலைத்தளத்தில் நீர்வசதியுடன் கூடிய சாப்பாட்டு அறைகள் இல்லாத காரணத்தால் மழைக்காலங்களில் தொழிலாளர்கள் சாப்பிடுவதே இல்லை. மழை கொட்டும் போது சாப்பாட்டை விரித்து வைத்து சாப்பிட முடியுமா? மழையில் நனைந்து குளிரில் நடுங்கி சாப்பிடாமல் வேலை செய்து வருகின்றோம். மூன்று வேலை சாப்பாட்டிற்காகவே நாங்கள் இவ்வளவு கஸ்டப்படுகின்றோம். அப்படி இருக்க, ஒழுங்காக சாப்பிடகூட வசதிகள் இல்லாத வேலைத்தளங்களில் வேலை செய்வது மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்துகின்றது. கற்பனை செய்து பாருங்கள் மழை பெய்யும் போது பொலித்தீனால் உடம்பை சுத்திக்கொண்டு முகத்தில் நீர் வடிய ரொட்டித் துண்டையும், சோற்றை அள்ளி வாயில் திணிப்பதை! யாருக்காவது இவ்வாறு செய்ய இயலுமா? உங்களால் இப்படி வாழ முடியுமா?தொழிலாளி என்ற காரணத்தினால் எங்களை எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம் என்று நினைக்கிறீர்களா? இந்த நாட்டில் வாழும் தொழிலாளர்கள் இவ்வாறு கஸ்டப்படுவது தொழிலாளர்களுக்காக இயங்கும் தொழில் அமைச்சு, அதிகாரிகளுக்கு புரியவேண்டும் அல்லவா? 8 மணிநேரத்திற்கு மேல் தொழிலாளர்கள் வேலை செய்யும் ஒரு வேலைத்தளம் இவ்வாறான அடிப்படை வசதிகள் இன்றி இருப்பது அனைவரும் வெட்கித் தலைகுனிய வேண்டிய ஒரு விடயமாகும். அது மட்டும் அல்ல ஒரு போத்தல் தண்ணீரை கொண்டு சென்று கை கழுவவும், குடிக்கவும் வேண்டும். சில நாட்களில் கொழுந்து எடுக்கும்போது கொழுந்தில் இருக்கும் புழுக்கள் கையோடு ஒட்டிரும். கொஞ்ச தண்ணில கைய கழுவிட்டு சாப்பிடும்போது அது எப்படி சாப்பாட்டு வேளையாக இருக்கும்?

மஸ்கெலிய மொட்டிங்கம் தோட்டத்தில் வேலை செய்கின்றேன்.

பகல் உணவை மலையில் வைத்து சாப்பிடுகின்றோம்.

ஆனால் எங்களுக்கு கைகளை கழுவி, ஒழுங்காக அமர்ந்து சாப்பிடுவதற்கு ஒரு இடம் கிடையாது.


பாதை ஓரங்களிலும், மரங்களுக்கு அடியிலும், கற்பாறைகளிலும் அமர்ந்து சாப்பிடுகின்றோம். கைகளை சவற்காரமிட்டு கழுவுவதற்கோ, குறைந்தது கைகளை தேய்த்து கழுவுவதற்கோ தண்ணீர் இல்லை.

நாங்கள் கொண்டு செல்லும் ஒரு போத்தல் தண்ணீரை வைத்துக்கொண்டு சமாளிப்பது மிகவும் கஸ்டம்.

அது மட்டுமல்ல, அல்சர் போன்ற வியாதிகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

எனவே கம்பனிகள் எங்களுக்கு மலைகளில் நீர் வசதியுடன் கூடிய சாப்பாட்டிடத்தை அமைத்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். கம்பனிகளுக்கு அரசு அழுத்தம் கொடுத்து இவ் வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

## வீ.முனியம்மா :



நான் தெனியாய பிரதேசத்தில் மத்துகொப தோட்டத்தில் வேலை செய்து வருகின்றேன்.

நாங்கள் புதர்களிலும், மரங்களிலும் சாப்பாட்டை தொங்க வைத்துவிட்டு வேலை செய்கின்றோம்,

அந்த நேரத்தில் குரங்கு, நாய் எதாவது தோட்டத்திற்குள் நுழைந்து சாப்பாட்டை தூக்கிக்கொண்டு ஓடிவிடும்.

பாதை ஓரத்தில் உட்கார்ந்து வாகனப்புகை, தூசிக்கு நடுவில் சாப்பிட வேண்டியுள்ளது. கைகளை சுத்தப்படுத்திக் கொள்ள போதுமான நீர் கிடைப்பதில்லை.

சாப்பிட்டு குடிப்பதற்கு நீரை வீட்டிலிருந்து எடுத்துச் செல்ல வேண்டும். இந்நிலை மாற வேண்டும்.

இன்னொரு நாள் கூடையில சாப்பாட்டை வைக்காமல் கொழுந்து தூரில் மறைத்துவைத்தேன். திறந்து பார்த்தா அரணை. சாப்பாட்ல இருந்திச்சி.

இப்படி பூச்சு பட்டைகள், மிருகங்கள் சாப்பாட்டை குறி வைக்கிறதால், எங்களுக்கு மலைகளில் சாப்பாட்டை பாதுகாப்பாக வைப்பதற்கும் ஓய்வாக உட்கார்ந்து சாப்பிடுவதற்கும் சாப்பட்டறைகளை அமைத்து கொடுக்க நிர்வாகங்கள் நடவடிக்கைளை எடுக்க வேண்டும். பெண் தொழிலாளர்கள் என்றால் அவர்கள் ஆடு மாடுகளா?

தொகுப்பு:
**பி.வீரசிங்கம்**

## கண்ணியம் செய்திடுவீர்!!

வாழ்க வளர்கவென
மகளிர் தினத்தில்
மகிமைமிக்க மகளிர்க்கும்
மகளிரை மதிக்கும்
ஆண்களுக்கும் வாழ்த்துக்களைப்
பூவாய்த் தூவுகின்றேன்!
இறை நாட்டத்தில்
அரங்கேறும் அச்சாணியில்
உவகை சிந்திச்சிந்தி
உலகை உயிர்ப்பிக்கும்
உன்னத உயிர் மகளிரே!
உங்களை வாழ்த்துகின்றேன்!!
பெண் என்றாலே
அடுக்களைக்குள் அடுப்பூதி
அவதி கொடுக்கும்
அந்தப் பழைமையொழிந்து
இன்று புதுப்பொழிவோடு
என்றும் வாழப்பிரார்த்திக்கிறேன்!
ஆணை விடப்பெண்
திறமைசாலி தைரியசாலி!
ஈரைந்து மாதங்கள்
கருவறைதனில் சுமந்து
உலகிற்கு ஈன்றிடும் அந்தவுன்னத
உயிர் வாழ வேண்டுகிறேன்!!
பெண்ணாகப் பல படிகள்
தாண்டிப் பல பெண்களோடு
இன்னும் பல ஆண்களையும்
பார் போற்ற வழி நடாத்த
பாக்கியம் கிடைத்தமைக்கு
பெண்ணாகப் பெருமைப்படுகிறேன்!
ஆவதும் பெண்ணாலே
அழிவதும் பெண்ணாலேயென
பெண்களைப் பாராட்டும்
கேடாகக் குறைகூறும்
சமூகத்தைக் கேட்கின்றேன்!!
ஆண்களால் எதுவுமே
ஆனதில்லையா அழிந்ததுமில்லையா??
பெண்ணாய்ப் பிறந்தீர்!
நற்பயன்கள் அறிந்திடுவீர்!
நற்செய்திகள் பரிமாறிடுவீர்!
நற்செயல்கள் செய்திடுவீர்!!
பெண்களைப் போற்றிடுவீர்!
கண்ணியம் செய்திடுவீர்!!

கவியரசி
**எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா**
பஸ்யால

# ஒருவரின் உளநலத்தை அவர் அணியும் ஆடையைக்கொண்டே அறிந்துகொள்ளலாம்!



**டாக்டர் (திருமதி) அத்ஹரா சாதீக் (பல் மருத்துவர், உளநல ஆலோசகர்)**

**சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம். எனவே, ஒருவருக்கு உடல் நலந்தான் முக்கியமானது என்பார்கள். ஆனால், உடல் நலத்தையும் ஒருசேர வலுப்படுத்துவது உளநலம் என்கிறார் டாக்டர் (திருமதி) அத்ஹரா சாதீக். உளநலம் ஒரு மனிதனுக்கு முக்கியமானது. ஏனெனில், எந்தவொரு பிரச்சினையையும் சமாளித்துச் சவாலுடன் முகங்கொடுப்பதற்கு உடல்நலம் மாத்திரம் முக்கியமானதன்று. உளநலமும் மிக முக்கியமானது என்கிறார் டாக்டர் அத்ஹரா.**

மன்னார், எருக்கலம்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட டாக்டர் அத்ஹரா, ஆரம்பக் கல்வியை மன்னாரிலும், கல்விப் பொதுத் தராதரம் வரை கேகாலை சாஹிராக் கல்லூரியிலும் கற்றுப் பட்டப்படிப்பைப் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பூர்த்திசெய்தவர். தற்போது கொழும்பு மாநகர சபையின் முகத்துவாரம் மருந்தகத்தின் பல் மருத்துவராகவும் குடும்ப உளநல ஆலோசகராகவும் பணியாற்றி வருகிறார்.

“பல் வைத்தியரிடம் வருபவர்கள் பல்வேறு மனப்பயத்துடன்தான் வருவார்கள். பல்லைக் கழற்றுவதற்குப் பல்வேறு பயங்கர கருவிகளைப் பயன்படுத்துவார்கள் என்று பிள்ளைகளைப் பயமுறுத்தியே பெற்றோர் அழைத்து வருவார்கள். எம்மைச் சுற்றியுள்ள கருவிகளைப் பார்த்த மாத்திரத்தில் அவர்களுக்கு ஒருவிதப் பீதி ஏற்பட்டுவிடும். ஆகவேதான், ஒரு மருத்துவர் வெறுமனே சிகிச்சையை மாத்திரம் வழங்குபவராக அல்லாமல், உளநலம் வளம்பெற்றவராக இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். குடும்பத்தில் உள்ள அங்கத்தவர்கள் புரிந்துணர்வுடன் வாழ்வதால் நிறைய நோய்கள் எம்மைவிட்டுப் போய்விடும். ஆகவே, கல்வி கற்கும் மாணவர்களுக்கும் சரி, ஏழைக் குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களுக்கும் சரி, உளநலத்தையும் வளப்படுத்திவிட வேண்டும் என்று எண்ணினேன். வீட்டுவேலையில் சதா மூழ்கியிருக்கும் மனைவிக்கும், அதே நேரம், பிள்ளைகளால் கவலையடைந்து நொந்துபோயுள்ள பெற்றோர்களுக்கும் உளநலம் நூறு வீதம் நன்றாக இருக்கும்போது அவர்களின் உடல்நலமும் சிறப்பாக இருக்கும் என்பதை உணர்ந்துகொண்டேன். அதனால்தான், பிரத்தியேகமாகக் குடும்ப உளநல ஆலோசனை பற்றியும் கற்றேன். அந்த வகையில் உளநலம் பற்றிய விடயங்களை மக்களிடமும் சமூகத்திலும் பல்வேறு கோணங்களில் பகிர்ந்து வருகின்றேன்”

“ஒருவரைச் சந்திக்கும்போது அவரின் உரையாடலைக்கொண்டு அவருக்கு உளநலம் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்று அறிந்து, அவருக்கு அலோசனை வழங்குவீர்களா?”

“அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். அகம் என்பது எங்களின் மனம் தானே! மனத்தின் ஆரோக்கியத் தன்மையை ஒருவரின் ஆளுமையை, தோற்றத்தை வைத்தே கணித்துவிட முடியும். ஒருவருடைய செயற்பாடுகளைக் கவனிக்கின்றபோது, அவர் ஏதோ ஒரு வகையில் மனத்தளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். அவருடைய பேச்சு வடிவம், அவர் ஆடை அணிந்திருக்கும் தன்மையைக்கொண்டே அவரைப் புரிந்துகொள்ள முடியும். ஒருவர் ஆடை அணியும் விதத்தின் மூலம், அவர் உடலளவிலும் மனத்தளவிலும் மகிழ்ச்சியாக இருக்கிறார் என்ற முடிவுக்கு வரமுடியும். உளக்குறைபாடு உள்ள ஒருவர் தன்னுடைய உடையில் கவனம் செலுத்த மாட்டார். உடல் சுகாதாரத்தில் கவனம் செலுத்தமாட்டார். எதிலும் ஓர் அலட்சியப் போக்கைக் கடைப்பிடிப்பார். அதேபோல்தான் பாடசாலைக்கு அல்லது பல்கலைக் கழகத்திற்கு வரும் மாணவர்களின் போக்கினைக்கொண்டு அவர் எவ்வாறான குடும்பப் பின்னணியிலிருந்து வருகிறார் என்பதைக் கண்டறிந்துவிட முடியும். குடும்பச் சூழ்நிலையால் தன்னம்பிக்கையை இழந்துவிட்ட மாணவர்களைக் கண்டுபிடித்துவிடலாம். அவர்களுக்கு ஓர் உளநல ஆலோசனை தேவை என்பதை நாங்கள் முடிவுசெய்துவிடுவோம்.”

“பிள்ளைகளின் உளவளத்தை மேம்படுத்துவதில் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் எவ்வாறான வகிபாகம் இருப்பதாகக் கருதுகிறீர்கள்?”

“முன்பள்ளி முதல் உயர்தரம் வரைக் கூடுதலான நேரத்தைப் பிள்ளைகள் பாடசாலைகளில் கழிக்கிறார்கள். மிகுதி நேரத்தில்தான் பெற்றோருடன் இருக்கிறார்கள். பெற்றோரை இருவகையாகவும் எடுத்துக்கொள்ளலாம். பிள்ளைகளைப் பெற்றவர்கள் ஆசிரியர்களாகவும் இருக்கலாம். இவர்கள் முழு நேரமாகப் பிள்ளைகளுக்கு வழிகாட்டிக்கொண்டிருப்பார்கள். மற்றையவர்கள் பெற்றோர் என்ற வகையில் வீட்டில் பிள்ளைகளுக்கு வழிகாட்டியாக இருப்பார்கள். பெற்றோரும் ஆசிரியர்களும் உளநலம் பாதிக்கப்பட்ட ஒரு பிள்ளையை எவ்வாறு அடையாளம் காண்பது? வீட்டிலிருந்து ஒரு பிள்ளை முன்பள்ளிக்குச் செல்லும்போது சரியான மனநிலையில் அனுப்பிவைக்கவேண்டிய பொறுப்பு பெற்றோருடையது. இல்லாவிட்டால், அந்தப் பிள்ளை மறுநாள் பாடசாலைக்குச் செல்வதற்குத் தயக்கம் காட்டும். பெற்றோர் வீட்டில் அதிகக் கண்டிப்பை வெளிப்படுத்தினால், பிள்ளைகள் எந்தப் பிரச்சினையையும் வீட்டில் சொல்லாமல் மனத்திற்குள் வைத்துக்கொள்ளும். அதேநேரம், பெற்றோரின் விருப்பு வெறுப்புகளைப் பிள்ளைக்குத் திணிக்கக்கூடாது. ஆசிரியர்களைப் பொறுத்தவரை எல்லாப் பிள்ளைகளையும் சமமாக நடத்த வேண்டும். இன்றைய பாடசாலைகளில் தொண்ணூறுவீதம் பாகுபாடு காட்டப்படுகிறது. பாடசாலைக்குக் கூடுதல் நிதி வழங்கும் பெற்றோருக்கும் சமூக அந்தஸ்து உள்ள பெற்றோருக்கும் காண்பிக்கப்படும் கரிசனை சாதாரண குடும்பத்திலிருந்து வரும் பிள்ளைகளுக்குக் கிடைப்பதில்லை. ஒரு விளையாட்டுப்போட்டியோ அல்லது வேறு போட்டிகளோ நடைபெறும் பட்சத்தில் குறிப்பிட்ட ஒருசில பிள்ளைகளையே தொடர்ந்து தெரிவுசெய்யும் போக்கு இன்று எல்லாப் பாடசாலைகளிலும் காணப்படுகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் பிள்ளைகளின் மனநிலையைப் பாதிக்கும். செல்வாக்கு உள்ள பெற்றோரின் பிள்ளைக்குச் சலுகை வழங்குவதன் மூலம் குறித்த அந்தப் பாடசாலையின் அதிபர் தனது செல்வாக்கை மேம்படுத்திக்கொள்ளும் நிலையும் வளர்ந்துசெல்கிறது. பிள்ளைக்குத் திறமையிருக்கின்றதோ இல்லையோ, தன்னைப் புகழக்கூடிய பெற்றோரின் பிள்ளைகளுக்குக் கூடுதல் வாய்ப்புகளை வழங்குகிறார்கள். கல்வி கற்பதனால் அந்தப் பிள்ளைகள் பெறும் அடைவுகளை மாற்ற முடியாவிட்டாலும், இணைப் பாடவிதானங்களில் பாகுபாடுகள் நிறையவே காணப்படுகின்றன. பாடசாலைகளில் நடைபெறுகின்ற விழாக்களில் பிரமுகர்களை வரவேற்பது, வரவேற்புரை நிகழ்த்துவது, மாணவத் தலைவர்களாக நியமிப்பது, கலை நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளச் செய்வது எனப் பல வழிகளிலும் செல்வாக்கான பிள்ளைகளுக்குச் செல்வாக்குச் செலுத்துகிறார்கள். இது மிகத்தவறான செயற்பாடாகும். ஆசிரியர்களும் அதிபர்களும் காட்டுகின்ற பாரபட்சம் பிள்ளைகளை மிகக் கடுமையாக மனத்தளவில் பாதிக்கச் செய்யும். மனநலம் குன்றிவிடும். அதன் காரணமாக வீட்டிற்கு வந்து பெற்றோருடன் பிள்ளைகள் முரண்படுவார்கள். இளைய சமுதாயமே ஒரு நாட்டின் முதுகெலும்பு. அந்த முதுகெலும்பை உருவாக்கக்கூடிய முக்கியமான களம் பாடசாலை. ஆனால், இன, மத தனித்துவங்களுடன்கூடிய அனைத்துப் பாடசாலைகளிலும் இந்தப் பாகுபாடு நிலவுகிறது என்பதை என்னுடைய அவதானிப்பிலிருந்து உறுதியாகக் கூறமுடியம். இந்த இடத்தில்தான் மனநலம் குன்றிப்போகும் நிலை உருவாகிறது.”

“சில வேளைகளில் பிள்ளைகளால் பெற்றோர் மனவளம் குன்றிப்போகும் நிலையும் ஏற்படுகிறது அல்லவா! பெற்றோரை உதாசீனம் செய்வது, புத்திமதியைக் கேளாமல் விடுவது போன்ற காரணங்களால்?”

“அந்த இடத்தில்தான் தவறு நேர்கிறது. பிள்ளைகளின் மனநிலையை அறிவதற்கு யாரும் முயற்சிப்பதில்லை. சில சந்தர்ப்பங்களில் பிள்ளைகளுக்குத் தங்களின் வறுமை நிலையைச் சுட்டிக்காட்டி, இவ்வளவுதான் எங்களுக்கு இறைவன் கொடுத்த வசதி, நீ இப்படித்தான் வாழக்கற்றுக்கொள்ள வேண்டும் என்று புத்திமதி சொல்வார்கள். இதுவும் பெற்றோர் மீதும் வாழ்க்கை மீதும் ஒரு வெறுப்பு ஏற்படக் காரணமாகிவிடும். ஒருநாளும் பிள்ளைகளின் முன்னேற்றத்தை முடக்கும் இவ்வாறான அறிவுரையைச் சொல்லக்கூடாது. முயற்சிசெய்தால், நாங்கள் முன்னேற முடியும் என்றுதான் சொல்ல வேண்டும். ஓலை வீட்டில் இருந்தால் கல்வீடு கட்டாலாம் என்றோ, இருசக்கர வாகனம் இருந்தால் அதற்கு அடுத்ததை முச்சக்கர வண்டி, கார், வான் வாங்குவோம் என்று பிள்ளைகளை உற்சாகப்படுத்த வேண்டுமே தவிர ஏழ்மையைச் சொல்லிச்சொல்லிப் பிள்ளையை முடக்கக்கூடாது. பணக்காரர்களின் அடிமைகள்தான் நாங்கள் என்பதைப்போன்ற எதிர்மறைச் சிந்தனையை விடுத்து உடன்பாட்டுச் சிந்தனையை ஊக்குவிக்க வேண்டும்.”

“நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள்! ஆனால், வீட்டில் கண்டிக்கப்படாத பிள்ளை வீதியில் கண்டிக்கப்படும் என்று இன்னொரு சாரார் சொல்கிறார்களே!?”

“இது நல்ல கேள்வி! நான்கு வகையான பெற்றோர்களை நாம் பார்க்க முடியும். பிள்ளைகள் எது செய்தாலும் கண்டுகொள்ளாத பெற்றோர், எதற்கெடுத்தாலும் கண்டிப்பு, தண்டனை என்கின்ற பெற்றோர், இவர்கள் கடும்போக்குவாதிகள், கண்டிப்புடன்கூடிய பெற்றோர் **(15ஆம் பக்கம் பார்க்க)**

**ஷான் மதுர்...**

---



**கலாநிதி**
**கே.ரீ.கணேசலிங்கம்**
**யாழ். பல்கலைக்கழகம்**





# சவூதி அரேபிய அமெரிக்க முறுகல்

## ஈரானை நோக்கிய தந்திரோபாய நகர்வா?

**சவுதியரேபிய நாட்டுப் பத்திரிகையாளர் ஜமால் கசாக்கி கொலை செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு பின்னர் அமெரிக்காவுக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையில் பெரும் முரண்பாடொன்று ஆரம்பித்துள்ளது. ஜமால் கொலை செய்யப்பட்டதற்கு அந்நாட்டு இளவரசர் சல்மானின் உத்தரவே காரணம் என அமெரிக்காவின் தேசிய புலனாய்வுத் துறை அண்மையில் அறிக்கை வெளியிட்டிருந்தது.**

ஜமால் சவுதி அரேபியாவின் புகழ் மிக்க பத்திரிகையாளர். 1980கள் முதல் அவரது எழுத்துக்கள் முதன்மை பெற்றதுடன் அமெரிக்கன் போஸ்ட் பத்திரிகையில் சவுதி அரச குடும்பம் பற்றிய விமர்சனங்களை ஆங்கிலத்திலும் அரபு மொழியிலும் வெளியிட்டு வந்திருந்தார். அவர் தனது காதலியை திருமணம் செய்வதற்காக துருக்கி சென்ற சமயம் துருக்கியின் இஸ்தான்புல் நகரில் அமைந்துள்ள சவுதி தூதரகத்தில் கொடூரமான முறையில் கொல்லப்பட்டிருந்தார். இக்கட்டுரையும் அமெரிக்காவின் சவுதியுடனான முரண்பாட்டுக்கான அரசியலைத் தேடுவதாக அமையவுள்ளது.

முதலாவது பத்திரிகையாளர் ஜமால் கசாக்கியை கொலை செய்ய சவுதி இளவரசர் சல்மான் உத்தரவிட்டார் என்று நாங்கள் நடாத்திய விசாரணையில் தெரியவந்துள்ளது என அமெரிக்க தேசிய புலனாய்வுத் துறை அறிக்கை வெளியிட்டுள்ளது. மேலும்' பத்திரிகையாளர்கள், செயல்பாட்டாளர்கள் மீது சவுதி நடாத்தும் தாக்குதல்களை நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் இதனை அமெரிக்கா பொறுத்துக் கொள்ளாது எனவும் எச்சரிக்கையை அமெரிக்கா விடுத்துள்ளது.

இரண்டாவது சவுதியரேபியாவின் பத்திரிகையாளர் ஜமால் கொலைக்கு சவுதி அரேபியாவை பொறுப்பேற்க வைப்பேன் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து இவ்விடயம் பற்றி கூறும்போது நான் சவுதி மன்னனுடன் பேசினேன். இளவரசரிடம் அல்ல. ஆட்சி மாற்றப்பட்டு விட்டது. சில மாறுதல்களை கொண்டுவரப் போகிறோம் என்று நான் அவரிடம் கூறினேன் என்றார் . மனித உரிமை மீறல்களுக்கு சவுதி நிச்சயம் பொறுப்பேற்க வேண்டும். அதனை நாங்கள் நிச்சயம் செய்வோம். ஜமால் கொலை தொடர்பாக வெளியான அறிக்கையை கடந்த அரசு வெளியிடவில்லை. எங்களிடம் அறிக்கை வந்தடைந்ததுடன் வெளியிட்டுள்ளோம் என்று ஜோ பைடன் தெரிவித்தார்.

மூன்றாவது ஜமால் கொல்லப்பட்டத்தற்கு காரணமாக இருந்த சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் தாமதமின்றி தண்டிக்கப்பட வேண்டும். குற்ற மற்ற மற்றும் அப்பாவித்தனமான ஒருவரை கொடூரமான முறையில் கொலை செய்யதமையை மன்னிக்க முடியாது. அவர் தண்டிக்கப்படாது விட்டால் அது என்றென்றும் அனைவருக்கும் ஆபத்தை விளைவிக்கும். நமது மனித குலத்திற்கு கறையாக அமைந்துவிடும். இது நாம் தேடும் நீதியை மட்டுமல்ல இது போன்ற செயல் மீளவும் நடவாது தடுக்க முடியும் என ஜமாலின் காதலியான துருக்கியைச் சேர்ந்த ஹேட்டீஸ் செங்கிஸ் வலியுறுத்தியுள்ளார்.

இங்கு பிரதான கேள்வி ஏன் அமெரிக்காவின் புதிய நிர்வாகம் ஜமால் விடயத்தை முதன்மைப்படுத்துகிறது என்பதாகும். டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் சவுதியுடன் மிக நெருக்கமாக செயல்பட்டதுடன் ஜமால் மீதான கொலைக்கு கண்டனம் தெரிவித்தது மட்டுமே நிகழ்ந்தது. விரிசலற்ற நட்புறவை பாதுகாத்துக் கொண்டது. ஆனால் புதிய நிர்வாகம் சவுதியோடு அதிக முரண்பாட்டை வெளிப்படையாக காட்டுவதில் சிரத்தையுடன் செயல்படுகிறது. அதற்கான காரணங்களை தேடுவது அவசியமானது.

ஒன்று மேற்காசியா தொடர்பான கடந்த கால அமெரிக்க நிர்வாகம் பின்பற்றிய கொள்கையிலிருந்து விலகிச் செல்ல புதிய நிர்வாகம் திட்டமிடுகிறது. காரணம் அமெரிக்கா மேற்காசிய பரப்பிலிருந்து முழுமையாக வெளியேற்றப்பட்டுள்ளதாக புதிய நிர்வாகம் மட்டுமல்ல ஆய்வுகளும் அதனையே தெரிவிக்கின்றன. ட்ரம்ப் நிர்வாகத்தின் தவறான கொள்கைகளால் அப்பிராந்தியத்தில் அமெரிக்காவுக்கிருந்த நலன்கள் பாதிப்படைந்துள்ளன. சீனாவும் ரஷ்யாவும் அப்பிராந்தியத்தை தமது நலனுக்கு ஏற்ற வகையில் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. அதில் வளைகுடா நாடுகளாயினும் சரி எண்ணெய்வள நாடுகளாயினும் சரி அனைத்து நாடுகள் மீதும் சீனாவும் ரஷ்யாவும் ஆதிக்கம் செலுத்திவருவதனைக் காணமுடிகிறது. எனவே இந்த நிலையிலிருந்து மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நிலை அமெரிக்காவின் புதிய நிர்வாகத்திற்கும் ஏற்பட்டுள்ளது.

இரண்டு இஸ்ரேல் அமெரிக்க உறவிற்காக ஒட்டுமொத்த பிராந்தியத்தையும் ட்ரம்ப் நிர்வாகம் இழந்துள்ளதாகவே தெரிகிறது. ஒபாமா நிர்வாகத்தின் காலத்தில் கட்டுப்பாட்டுடன் செயல்பட்ட இஸ்ரேல் ட்ரம்ப்பின் காலத்தில் மேற்காசியாவின் அமெரிக்க கொள்கையை தீர்மானிக்கும் சக்தியாக மாறியிருந்தது. அமெரிக்க நிர்வாகம் கருதுகிறது.

மூன்று ட்ரம்ப் நிர்வாகம் ஈரானை அழிப்பதன் வாயிலாக மேற்காசிய அரசியல் கையாளத் திட்டமிட்டது. அதன் விளைவுகள் பாரதூரமானதாக மட்டுமல்ல அதன் மூலமான அமெரிக்க எதிர்ப்புவாதம் வளர்ந்ததுடன் அதனை பிற வல்லரசுகள் சாதகமாக பயன்படுத்தி இப்பிராந்தியத்தில் எழுச்சியடைந்தன. இதனை தடுத்து நிறுத்த தவறும் நிலையில் அமெரிக்கா முற்றாக அப்பிராந்தியத்தை இழக்கும் நிலை ஏற்படும் என்ற சூழல் வளர்ந்துள்ளது. ஈரானை இராஜீக ரீதியில் கையாள வேண்டிய நிலையையே ஜோ பைடன் நிர்வாகம் விரும்பு

அதனால் மேற்காசியா முழுவதும் இஸ்ரேலின் நலனுக்காக அமெரிக்கா செயல்பட்டதே அன்றி அமெரிக்காவின் நலனுக்காக இஸ்ரேலை செயல்பட வைக்க முடியவில்லை. இதனை மாற்றியமைக்கும் உத்திகளை அமெரிக்காவின் புதிய நிர்வாகம் மேற்கொள்ள தொடங்கிவிட்டது. இஸ்ரேலையும் ஏனைய மேற்காசிய நாடுகளையும் ஒரே அளவீட்டுக்குள் வைத்துக் கொள்வதன் மூலம் பிராந்தியம் மீதான செல்வாக்கினையோ அல்லது கட்டுப்பாட்டையோ அல்லது ஆதிக்கத்தினையே வைத்துக் கொள்ள முடியுமென

கிறது. அதுவே சிறந்த உத்தியாக அமையும் எனவும் அமெரிக்க கருதுகிறது. அதற்கான வலுவான காரணம் ரஷ்ய மற்றும் சீனாவின் அணுகுமுறைகள் ஈரானுடன் மிக நெருக்கமாக அமைவதுடன் இரு நாடுகளும் அணுவாயுத வல்லரசுகள் என்ற அடிப்படையிலும் அமெரிக்கா தந்திரமான அணுகுமுறைகளை நோக்கி நகரவிரும்பகிறது. ஈரான் ஏற்கனவே அணுவாயுதத்தை உருவாக்கும் திறன் உடைய நாடாக விளங்குகிறது என்பதையும் கருத்தில் கொள்ள ஜோ பைடன் தவறவில்லை. அதனால் இப்பிராந்தியத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது. அதனால் சவுதி அரேபியாவின் மனித உரிமை மீறல்களை கையாளுவதன் வாயிலாக ஈரானையும் அணுக விரும்புகிறது.

நான்கு ஈரானின் ஆதரவு பெற்ற ஹவுத்தி கிளர்ச்சிப் படைகள் சவுதி அரேபியாவைத் தாக்குவதாகவும் அதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளையும் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதில் ஜோ பைடன் நிர்வாகம் கரிசனை கொண்டுள்ளது. அதனை ஈரானிலிருந்து ஆரம்பிப்பதை விட சவுதி அரேபியாவிலிருந்து ஆரம்பிப்பது இலகுவானதாக அமெரிக்க நிர்வாகம் கருதுகிறது. யெமன் போரையும் அவ்வாறே கையாள திட்டமிட்டிருந்தது கவனிக்கத் தக்கதாகும். ஹவுத்தி கிளர்ச்சிப் படைகள் மிக அண்மையில் (04.03.2021) நடத்திய ஏவுகணைத் தாக்குதலை சவுதி மறைத்ததுடன் அது தொடர்பில் அமெரிக்க ஹவுத்தி கிளர்ச்சிப் படையின் தளபதிகளுக்கு எதிராக பொருளாதார கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இவை அனைத்தும் ஈரானை நோக்கிய நகர்வுகளாக அமைந்தாலும் அதனை பிராந்திய ரீதியாகவும் சவுதி அரேபியாவை மையப்படுத்தியதாகவும் கையாள முனைகிறது அமெரிக்கா .

ஐந்து சவுதி அரேபியா இஸ்ரேல் நெருக்கம் ட்ரம்ப் நிர்வாகத்தால் அமெரிக்க தேர்தலுக்கு பின்பு அவசரஅவசரமாக உருவாக்கப்பட்டது. அவ்வாறே ஐக்கிய அரபு அமீரகத்துடனான இஸ்ரேலிய உறவும் உருவாக்கப்பட்டது. ஏறக்குறைய புதிய நிர்வாகத்தின் அணுகுமுறையை கருத்தில் கொண்டு இஸ்ரேலின் நலன்களுக்கு ஏற்ற வகையில் பொருளாதார இராணுவ மற்றும் அரசியல் உறவினை அமெரிக்காவின் பழைய நிர்வாகம் மேற்கொண்டிருந்தது. இதனால் மேற்காசியாவில் இஸ்ரேல் தனக்கான அணியை அமெரிக்காவை புறந்தள்ளி உருவாக்கி வருவதனையே அமெரிக்க புதிய நிர்வாகம் தடுக்க முனைகிறது. **(15ஆம் பக்கம் பார்க்க)**

# உலக ஒருமை தினம்



மனிதகுலத்தின் நலன் மீதுள்ள மிகுந்த ஆர்வம் காரணமாக ஸ்ரீப்ரீதாஜி மற்றும் ஸ்ரீகிருஷ்ணாஜி, உலக ஒருமை தினத்தை நிறுவியுள்ளார்கள்.

ரீப்ரீதாஜியும் ஸ்ரீகிருஷ்ணாஜியும் மார்ச் 7 ஆம் திகதி 'உலக ஒருமை தினத்தை' தொடங்குகின்றனர், இது ஒரு மணி நேர உலகளாவிய நேரடி ஆன்லைன் நிகழ்வாக இருக்கும். உலக ஒருமை என்பது பூமியை பாதிக்கும் ஒரு பெரிய அதிர்வு! உலகெங்கிலும் இருந்து 10 மில்லியனுக்கும் அதிகமான மக்கள், ஒருமையின் அற்புதமான நிலைகளுக்குச் செல்வார்கள். உலக ஒருமைப்பாட்டை நோக்கி நகர்ந்த 10 மில்லியன் மக்களும் தீக்ஷை என்ற ஆன்மீக பரிமாற்றத்தை வழங்குவார்கள்.

தீக்ஷை என்பது ஒரு பண்டைய நிகழ்வு. இதனை பெறுபவர்களின் மூளையில் முழுமையை நோக்கி ஒரு நரம்பியல் மாற்றத்தைத் தொடங்குகிறது . தீக்ஷயின் போது உங்கள் மூளை மற்றும் விழிப்புணர்வுநிலை, உங்கள் சொந்த தெய்வீக சக்தியை உணர வழி வகுக்கிறது.

உலக ஒருமை தினத்தில் தீக்ஷை வழங்கும் 10 மில்லியன் மக்களும் ஒன்னெஸ் மெடிடேட்டர்கள் என்று அழைக்கப்படுவார்கள். இந்த ஒன்னெஸ் மெடிடேட்டர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தீக்ஷயின் மூலம் உருவாக்கும் அதிர்வுகள் , மனித சைதன்யத்தில் ஒரு பெரிய எதிரொலியை ஏற்படுத்துகின்றன.

ஹார்ட்மத் இன்ஸ்டிடியூட் மற்றும் உலகெங்கிலும் உள்ள வேறு சில ஆராய்ச்சி நிறுவனங்கள் இந்த அற்புதமான தீக்ஷயின் தாக்கத்தை அன்றைய மனிதகுல உணர்வில் அளவிட எங்களுடன் இணைத்துள்ளனர்.

இன்று விஞ்ஞானம் சைதன்யத்தின் தாக்கத்தை கூட கவனிக்கும் அளவிற்கு வளர்ந்துள்ளது. உலக உணர்வு மீது நமது தீக்ஷயின் தாக்கம் காந்தமானிகள் (மெகனடோமீட்டர்) மூலம் அளவிடப்படும் என்பது உற்சாகமூட்டுகிறது. அந்த நேரத்தில் ஏற்படும் அதிர்வலைகளின் எண்ணிக்கையும் பதிவு செய்யப்படும்.


இந்த அலையை உருவாக்குவதற்கும், மில்லியன் கணக்கான மக்களுக்குள் தீக்ஷை சக்தியை உருவாக்குவதற்கும், ஸ்ரீப்ரீதாஜி மற்றும் ஸ்ரீகிருஷ்ணாஜி 21 நாட்களுக்கு மகா தபஸில் நகர்ந்துள்ளனர். மகா தபஸ் பெரும் புண்ணியம் சார்த்த நடவடிக்கைகளை உள்ளடக்கியது. மேலும் அவர்களின் மகா தபஸின் பலன் உலக ஒருமைக்காக வழங்கப்படும் வகையில் மிக உயர்ந்த சைதன்ய நிலையில் அவர்கள் வாழ்கின்றனர். பிப்ரவரி 13 ஆம் தேதி, ஸ்ரீப்ரீதாஜி மற்றும் ஸ்ரீகிருஷ்ணாஜி ஆகியோர் தங்கள் மகா தபஸைத் தொடங்கி விட்டனர்.

மார்ச் 7 ஆம் திகதி அன்று, ஸ்ரீஅம்மாவும், ஸ்ரீபகவானும் தங்கள் ஆசீர்வாதங்களுடன் நம்முடன் இணைவார்கள்.

ஸ்ரீப்ரீதாஜி மற்றும் ஸ்ரீகிருஷ்ணாஜி ஆகியோர் தங்களது மகா தபஸுடன் இணைவார்கள். பிப்ரவரி 13 ஆம்திகதி தீக்ஷை கொடுப்பவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட, தீக்ஷைக்குத் தயாரான அனைவரும் அவர்களுடன் தபஸில் இணைவார்கள்.

## இன்றைய "தூவானம்" நிகழ்ச்சியில் மாத்தளை கமால்







பிரபல கவிஞரும், பாடகரும், எழுத்தாளருமான "மக்கள் கவிஞர்" மாத்தளைக் கமால் பங்குகொள்ளும் நேர்காணல் இன்று (07/03) மாலை 5 மணிக்கு "வசந்தம்" தொலைக்காட்சியின் தூவானம் நிகழ்ச்சியில் ஒளிபரப்பாகவுள்ளது. கலைத்துறைக்கான தனது 40 வருட பங்களிப்புகள் பற்றிய கலைஞர் கமாலின் நினைவலைகள் இந் நிகழ்ச்சியில் பகிரப்படவுள்ளன. கவிஞரும், பாடலாசிரியருமான பொத்துவில் அஸ்மின் தயாரித்தளிக்கும் இந் நிகழ்ச்சியின் நேர்காணலை அறிவிப்பாளர் நாகபூஷணி நடத்தவுள்ளார்.

# விலைகோரல் அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**இலங்கை மத்திய வங்கியில் களஞ்சியப்படுத்தப்பட்ட இனி உபயோகத்தில் இல்லாத, உபயோகித்து முடிவுற்ற, பாவனைக்குதவாத மற்றும் மேலதிகப் பொருட்களை கொள்வனவு செய்து அகற்றுவதற்கான விலைக்கோரல் மனுக்கள் கோரப்படுகின்றன.**

| | |
|---|---|
| விலைக்கோரல் பெயர் மற்றும் இலக்கம் | அளவீட்டுச் சபை - 2020 09/04/003/0003/020 |
| விலைக்கோரல் விபரம் | **இலங்கை மத்திய வங்கியில் களஞ்சியப்படுத்தப்பட்ட இனி உபயோகத்தில் இல்லாத, உபயோகித்து முடிவுற்ற, பாவனைக்குதவாத மற்றும் மேலதிகப் பொருட்களை கொள்வனவு செய்து அகற்றுவதற்கான விலைக்கோரல் மனுக்கள் கோரப்படுகின்றன.** இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01 மற்றும் வங்கித்தொழில் கற்கைகள் ஆய்வு நிலையம், இல.58 சிறி ஜயவர்த்தனபுர மாவத்தை, இராஜகிரிய |
| உள்ளடங்குகின்ற பொருட்கள் | மரத்தளபாடங்கள், உலோக அலுமாரிகள், அச்சுப் பொறிகள், அச்சுப்பிரதி சாதனங்கள், தாள் எண்ணும் சாதனங்கள், இடைத்தடலங்கலற்ற வலு வழங்கும் சாதனங்கள் (UPS), தீயணைக்கும் கருவிகள், குளிரூட்டிகள், இலத்திரனியல் தூக்கிகள் (Forklift), அலுமினிய மற்றும் உலோகப் பாகங்கள் மற்றும் ஏனையவை. |
| விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளல் | **2021 மாச்சு 05ஆம் திகதி தொடக்கம் 2021 மாச்சு 17ஆம் திகதி வரை** மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப.3.00 மணி வரை வங்கி வேலை நாட்களில் |
| | இடம்: அஞ்சல் அறை, தரைத்தளம், தலைமை அலுவலகக் கட்டடம், இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01. |
| பொருட்களின் மேற்பார்வை | 09,10,16 மற்றும் 17 மாச்சு 2021 மு.ப.9.00 மணியிலிருந்து பி.ப.3.00 மணி வரை |
| விலைக்கோரல் முடிவுறுத்தல் மற்றும் திறத்தல் | **திகதி:** 2021 மாச்சு 18 **நேரம்:** மு.ப. 10.00 மணி |
| | இடம்: தரைத்தளம், தலைமை அலுவலகக் கட்டடம், இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01. |

■ இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய குடும்ப அங்கத்தவர்கள் இந்த விலைக்கோரலுக்கு மனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு தகுதியற்றவராவர்.

மேலதிக தகவல்களுக்கு, தொடர்புகளுக்கு - 011-2477549 அல்லது 011-2477646

## பெருந்தோட்ட அமைச்சு

## இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

### தலவாக்கலை



## ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான கேள்வி

### இலங்கையின் தேயிலை நிலங்களில் தெரிவு செய்து கொழுந்துபறிக்கும் ஒரு இயந்திரத்தை வடிவமைத்தலும் அறிமுகப்படுத்தலும்

இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையமானது (TRI) இலங்கை தேயிலையின் உற்பத்தித்திறன் மற்றும் தரத்தினை மேம்படுத்துவதன் மூலம் பங்குதாரர்களுக்கு நிலையான அதியுயர் இலாபத்தை ஈட்டுவதற்கான விஞ்ஞான அறிவினையும் தொழில்நுட்பங்களையும் விருத்திசெய்வதற்கான நிறுவனமாகும்.

கையால் கொழுந்து பறித்தலானது அதிகளவு வேலையாட்கள் தேவைப்படும் மற்றும் அதிக உற்பத்தி செலவிற்குரிய வெளிக்கள செயற்பாடாக காணப்படுவதால், நிலையான தேயிலைத் துறையின் எதிர்காலத்திற்கு கொழுந்துபறித்தல் செயற்பாட்டை இயந்திரமயமாக்கல் அவசியமான தேவையாக இனங்காணப்பட்டுள்ளது.

கொழுந்தினை தெரிவு செய்து பறித்தலானது இலங்கை தேயிலையின் அதியுயர் தரத்தினை உறுதிசெய்வதுடன் சிலோன் தேயிலை எனும் கீர்த்தியை உயர்தரத்தில் பேணுகின்றது. எவ்வாறாயினும் தற்காலத்தில் எந்தவொரு இயந்திர கொழுந்து பறித்தல் செயற்பாட்டின் மூலமும் இதனை ஈடுசெய்ய முடியாது.

**முன்மொழியப்பட்ட திட்டம்**

இலங்கை தேயிலை நிலத்தின் தன்மை, வளர்ச்சி தன்மை மற்றும் உற்பத்தி முறைக்கமைய உள்நாட்டு/ வெளிநாட்டு பங்குதாரர்களுடன் இணைந்து தெரிவு செய்து கொழுந்து பறிக்கும் மோட்டார் இயந்திரத்தை வடிவமைப்பதற்கான மூன்று வருட இணை திட்டமானது தேயிலை ஆராய்ச்சி நிலையத்தினால் முன்மொழியப்படுகிறது.

**TRI உள்ளீடுகள்**

- அனைத்து பின்புல தகவல்களையும் அணுகக்கூடியது
- மேற்குறித்த TRIயின் கடந்தகால ஆய்வுகளின் தகவல்களை அணுகக்கூடியது
- தேயிலை பங்குதாரர்களுடனான கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல்
- கருத்து வடிவமைத்தலுக்கான விமர்சனங்களை வழங்குதல்
- புரோடோடைப் பரிசீலனை மற்றும் வெளிக்கள பரிசீலனை வசதிகளை ஏற்பாடு செய்தல்
- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரியுடன் கலந்துரையாடி முதலீடுகள் தீர்மானிக்கப்படும்

**இயந்திரத்திற்கு இருக்க வேண்டிய அடிப்படை செயற்றிறன்கள்**

- தேயிலை செடியில் குறைந்தது 80% இளம் அரும்புகள் எஞ்சியிருக்க வேண்டும்
- கொழுந்திற்கும் செடியில் உள்ள அரும்புகளுக்கும் இயந்திரத்தினால் பாதிப்பு ஏற்படக்கூடாது
- இயந்திரத்தினை மழைக்காலங்களிலும் ஈரலிப்பானகால நிலையிலும் பயன்படுத்த கூடியதாக இருக்க வேண்டும்.
- தனிநபரினால் (பெண்களும்) கொழுந்து பறிக்ககூடியதாக இருக்க வேண்டும்
- எதிர்பார்க்கப்படும் உற்பத்தித்திறன்: மணிக்கு 25 கிலோ மற்றும் ஒருநாளில் 0.5 ஹெக்டயார் நிலத்தில் உள்ள கொழுந்துகளை பறிக்க வேண்டும்
- பயன்படுத்த இலகுவாகவும், வலுவானதாகவும் பணிச்சூழலியலுடனும் வடிவமைப்பதன் மூலம் பயன்படுத்துவதற்கு குறைந்தளவு பயிற்சி போதுமானதாக இருக்க வேண்டும்.
- சக்தி மூலமானது வெளிக்களத்தில் குறைந்தது ஆறு மணித்தியாலங்கள் தொடர்ந்து செயற்பட போதுமானதாக இருக்க வேண்டும்.

**வடிவமைப்பாளரின் பொறுப்புக்கள்**

- நிலத்தின் தன்மை மற்றும் வளர்ச்சித் தன்மை தொடர்பான பின்புல ஆய்வுகளை மேற்கொள்ளல்
- இயந்திரம் தொடர்பான பங்குதாரர்களின் விரும்பத்தக்க எண்ணக்கருக்களை பெற்றுக்கொள்ளல்
- மேலதிக கலந்துரையாடல் மற்றும் திட்டத்தின் தொடர்ச்சிக்கான MOU விற்கான கருத்து அமைப்பை வடிவமைத்தல்
- புரோடோடைப் மாதிரிகளை வடிவமைத்தலும் பரிசோதித்தலும்
- TRIயின் அனுமதியுடன் வர்த்தக மயமாக்கலுக்கான முயற்சிகளை மேற்கொள்ளல்
- நீண்டகால இணை ஒப்பந்தத்தை உறுதிப்படுத்துதல்

**தெரிவு செய்தல் செயற்பாடும் வடிவமைத்தல் படிகளும்**

1. பெறப்பட்ட **EOI**ல் இருந்து குறுகிய பட்டியலை அமைத்தல்
2. பட்டியல்படுத்திய விண்ணப்பதாரிகளின் விளக்கமான முன்மொழிவுகளை மதிப்பிடல்
3. சிறந்த கருத்திற்கான ஆரம்ப வெகுமானமாக தொடர்ச்சிக்கான **MOU** விநியோகிக்கப்படும்
4. இறுதியாக நீண்டகால இணைப்பிற்கான ஒப்பந்தம்

TRI இணையதளத்தில் (www.tri.lk) கோரப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் விளக்கங்கள் வழங்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவு தபால் மூலமாகவோ மின் அஞ்சல் ஊடாகவோ (director@tri.lk) 2021.03.21 ம் திகதி அல்லது அதற்கு முன்னராக வழங்கிய வடிவமைப்பின் EOIஆனது பணிப்பாளர், TRIஎனும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் அனுப்பிவைக்கவும்

மேலதிக தகவல்களுக்கு கலாநிதி M A விஜேரத்ன, தலைவர், தாழ்நாட்டு பிராந்திய நிலையம், இரத்தினபுரி. தொலைபேசி 0452228851-2, மின்அஞ்சல் madawalawije@yahoo.co.uk

**பணிப்பாளர்**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்**
**சென் கூம்ஸ், தலவாக்கலை**
**இலங்கை**

# ஈ.டி.ஐ. பினான்ஸ் எல்டிடீ

## மீட்கப்படாத அடகு தங்க ஆபரணங்களின் பகிரங்க ஏல விற்பனை

ஈ.டி.ஐ. பினான்ஸ் எல்டிடீ இன் பின்வரும் கிளைகளில்,
2019.11.30, 2019.12.31 மற்றும் 2020.01.31
திகதிகள் வரை அடகு வைக்கப்பட்டு 2021.03.16 அன்று அல்லது அதற்கு முன்னர் மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் தலைமை அலுவலகத்தில் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்கப்படும்.
ஒவ்வொரு நாளும் மு.ப.9.30 மணிக்கு ஏல விற்பனை ஆரம்பமாகும்.

| அடகு வைக்கப் பட்ட திகதி | அடகு வைக்கப்பட்ட கிளைகள | ஏல விற்பனை நடைபெறும் இடம் மற்றும் திகதி |
|---|---|---|
| 2019.11.30 2019.12.31 2020.01.31 வரை | அம்பாறை, அம்பலாங்கொடை, பதுளை, பண்டாரவளை, எஹலியகொடை, எம்பிலிபிட்டிய, காலி, திஸ்ஸமஹாராமை, கேகாலை, குருநாகல், மாத்தறை, மொனராகலை, வெலிமடை, இரத்தினபுரி, அவிசாவளை, பம்பலப்பிட்டி, பத்தரமுல்ல, தெமட்டகொட, கம்பஹா, கிராண்ட்பாஸ், ஹோமாகம, ஹொரண, களுத்துறை, கடவத்தை, கடுவளை, கந்தான, கிரிபத்கொட, கொட்டாஞ்சேனை, கொட்டாவ, பிலியந்தல, மஹரகம, மலே வீதி, மருதானை -143, மருதானை -435, புறக்கோட்டை, மொறட்டுவை, கல்கிசை, நீர்கொழும்பு, நுகேகொடை, பாணந்துறை, வோர்ட் பிளேஸ், (கொழும்பு- 07), பொரளை, (டீ.எஸ்.எஸ். மாவத்தை) வெள்ளவத்தை -307, வெள்ளவத்தை -99, செட்டியார்தெரு, மத்துகம, தம்புள்ளை | இல.114, வோர்ட் பிளேஸ், கொழும்பு -07 பொரளை கிளை 17-03-2021, 18-03-2021, |

இந்த ஏல விற்பனையில் கலந்துகொள்ளும் அனைவரும், தமது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும்.

மேலதிக அறிவித்தல்களின்றி குறித்த ஏல விற்பனையை இரத்துச் செய்யும், ஒன்றிணைக்கும் அல்லது பிற்போடும் உரிமையை, குறித்த நிறுவனமானது தன்வசம் வைத்துள்ளது.

**இல. 114, வோர்ட் பிளேஸ், கொழும்பு -07.**
**தொலைபேசி இலக்கம்: 0117534200, பெக்ஸ் இலக்கம்: 0112674435**

# வாகனங்கள் விற்பனைக்கு

## KADAWATHA VEHICLE YARD

THREE WHEEL

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| AAB-68XX | AAO-31XX | JZ-52XX | QQ-25XX | QW-69XX | YC-45XX | YQ-13XX |
| AAE-86XX | AAP-87XX | QE-56XX | QQ-32XX | QW-69XX | YD-36XX | YT-58XX |
| AAE-89XX | AAQ-84XX | QF-11XX | QR-68XX | QX-26XX | YE-18XX | YW-50XX |
| AAF-94XX | AAR-78XX | QF-20XX | QT-30XX | QX-46XX | YG-72XX | YX-50XX |
| AAH-32XX | AAS-71XX | QJ-70XX | QT-82XX | QX-56XX | YH-41XX | YX-99XX |
| AAJ-43XX | AAY-35XX | QK-53XX | QT-90XX | QX-72XX | YL-74XX | YY-08XX |
| AAK-00XX | AAZ-65XX | QK-57XX | QT-93XX | QZ-80XX | YM-12XX | YY-55XX |
| AAK-14XX | ABA-09XX | QL-73XX | QV-87XX | YA-00XX | YO-14XX | YZ-31XX |
| AAL-64XX | ABD-20XX | QL-82XX | QW-10XX | YA-73XX | YO-79XX | YZ-69XX |
| AAN-15XX | ABH-12XX | QM-39XX | QW-57XX | YB-11XX | YP-35XX | |

OTHER VEHICLES

| VEHICLE NO | MODEL | MAKE | VEHICLE NO | MODEL | MAKE |
|---|---|---|---|---|---|
| BET-59XX | DEMARK | MOTOR CYCLE | BIY-14XX | TVS | MOTOR CYCLE |
| BHV-23XX | HERO | MOTOR CYCLE | BHI-19XX | APACHE | MOTOR CYCLE |
| BHW-28XX | SUZUKI | MOTOR CYCLE | DAF-62XX | FORTON | MOTOR LORRY |
| BIA-53XX | HONDA | MOTOR CYCLE | PV-00XX | MAHINDRA | DUAL PURPOSE |
| BIF-91XX | HERO | MOTOR CYCLE | | | |

## HORANA VEHICLE YARD

THREE WHEEL

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| AAA-55XX | AAJ-74XX | AAX-32XX | QM-54XX | QV-79XX | YF-85XX | YQ-29XX |
| AAB-60XX | AAK-16XX | ABG-81XX | QM-65XX | QW-59XX | YI-24XX | YV-64XX |
| AAD-07XX | AAP-27XX | QA-18XX | QO-68XX | QW-72XX | YI-41XX | YY-15XX |
| AAE-78XX | AAP-64XX | QB-39XX | QS-98XX | QZ-66XX | YK-25XX | YY-96XX |
| AAF-02XX | AAR-16XX | QL-61XX | QU-40XX | QZ-78XX | YK-58XX | YZ-19XX |
| AAG-61XX | AAU-17XX | QL-73XX | QV-20XX | QZ-88XX | YM-77XX | YT-96XX |
| AAI-93XX | AAV-37XX | QM-37XX | QV-27XX | YB-01XX | YO-45XX | QZ-99XX |

OTHER VEHICLES

| VEHICLE NO | MODEL | MAKE | VEHICLE NO | MODEL | MAKE |
|---|---|---|---|---|---|
| BIC-64XX | BAJAJ | MOTOR CYCLE | BIJ-18XX | MAHINDRA | MOTOR CYCLE |
| BIF-21XX | HONDA | MOTOR CYCLE | BIL-38XX | HERO | MOTOR CYCLE |
| | | | 13SRI78XX | MITSUBISHI | MOTOR CAR |

## KULIYAPITIYA VEHICLE YARD

THREE WHEEL

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| AAG-37XX | AAL-81XX | AAZ-62XX | QL-56XX | QU-18XX | QZ-29XX | YS-18XX |
| AAH-65XX | AAW-56XX | ABF-99XX | QN-36XX | QZ-10XX | YQ-25XX | YS-29XX |
| | | | | QZ-11XX | YQ-37XX | YY-85XX |

OTHER VEHICLES

| VEHICLE NO | MODEL | MAKE | VEHICLE NO | MODEL | MAKE |
|---|---|---|---|---|---|
| LN-69XX | ISUZU | MOTOR LORRY | | | |

## ANURADHAPURA VEHICLE YARD

THREE WHEEL

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| AAD-70XX | AAX-20XX | QE-62XX | QO-46XX | QQ-51XX | YE-44XX | YU-55XX |
| AAH-36XX | AAY-58XX | QL-95XX | QO-81XX | QV-66XX | YK-81XX | YU-74XX |
| AAN-08XX | ABA-28XX | QN-31XX | QP-09XX | QW-80XX | YU-52XX | YY-23XX |
| | | | | | | AAA-95XX |

OTHER VEHICLES

| VEHICLE NO | MODEL | MAKE | VEHICLE NO | MODEL | MAKE |
|---|---|---|---|---|---|
| BGY-79XX | BAJAJ | MOTOR CYCLE | BHA-91XX | GIXXER | MOTOR CYCLE |
| BGN-72XX | HONDA | MOTOR CYCLE | BGZ-02XX | HERO | MOTOR CYCLE |
| BHI-64XX | HERO | MOTOR CYCLE | BHD-98XX | HONDA | MOTOR CYCLE |
| | | | 227-92XX | TOYOTA | MOTOR LORRY |

## NITTAMBUWA VEHICLE YARD

THREE WHEEL

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| AAD-76XX | AAT-50XX | QG-19XX | QR-51XX | QV-46XX | YD-57XX | YW-21XX |
| AAE-56XX | AAT-95XX | QJ-31XX | QS-99XX | QW-06XX | YJ-13XX | YY-46XX |
| AAF-95XX | AAV-15XX | QM-46XX | QT-47XX | QX-17XX | YQ-85XX | YY-87XX |
| AAJ-76XX | ABD-78XX | QN-95XX | QT-66XX | QX-18XX | YR-98XX | YY-98XX |
| AAP-91XX | ABE-19XX | QQ-12XX | QV-24XX | QZ-35XX | YS-01XX | YZ-98XX |
| AAT-07XX | ABG-68XX | QQ-77XX | QV-39XX | QZ-85XX | YV-33XX | HH-03XX |
| | | | | | | YE-64XX |

OTHER VEHICLES

| VEHICLE NO | MODEL | MAKE | VEHICLE NO | MODEL | MAKE |
|---|---|---|---|---|---|
| BGX-07XX | SALUTO | MOTOR CYCLE | BHP-34XX | APACHE | MOTOR CYCLE |

வாகனபரி சோதனை

**Kadawatha Vehicle Yard.** No. 125/F, Ragama Road, Kadawatha.
**Horana Vehicle Yard.** No. 166, Anguruwathota Road, Horana.
**Kuliyapitiya Vehicle Yard.** No. 259, Madampe Road, Kuliyapitiya.
**Anuradhapura Vehicle Yard.** Chanal 05, Kurunegala Road, Rathmale, Shrawasthipura.
**Nittambuwa Yard.** No.655, Jayasooriya Mawatha, Nittambuwa.

மேற்படி வாகனங்கள் எதிர்வரும் 2021 மார்ச் 08 ஆம் 09 ஆம் 10 ஆம் 11 ஆம் திகதிகளில் மு:ப 10.00 முதல் பி:ப 4.00 வரை பார்வையிடலாம். (கேள்வி 2021 மார்ச் 11 ஆம் திகதி பி:ப: 4.00 க்கு முடிவடையும்)

மீள செலுத்தப்படாத ரூபா.250.00 செலுத்தி கேள்விப்பத்திரங்களை ஹொரண, நிட்டம்புவஇ குளியாப்பிடிய, கடவத்த மற்றும் அநுராதபுர **CDB** கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பதாரிகள் வாகனங்களை அந்த நேரத்தில் காணப்படும் நிலையிலேயே ஏற்றுக்கொள்ள வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் தொலைபேசி மூலம் அறிவிக்கப்படுவார்கள். அறிவிக்கப்பட்டு 07 நாட்களுக்குள் வாகனத்தின் முழுக் கட்டணத்தையும் செலுத்திக் கொண்டு செல்ல வேண்டும். மேலும் வாகனங்களில் நிலுவையாக உள்ள அரசாங்க வரி மற்றும் வருமான வரி என்பவற்றை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

* முன் அறிவித்தலின்றி வாகனத்தை மீளபெறும் உரிமை நிறுவனத்துக்குண்டு.

**CITIZENS DEVELOPMENT BUSINESS FINANCE PLC**
No. 125/F, Ragama Road, Kadawatha.
Tel: 0112 920 665 / 0112 925 044 / 034-22 66 244 / 025-205 26 32

# விலைமனுக்களின் அழைப்பிற்கான திருத்தம்

## அக்குரேகொடவிலுள்ள பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதியின் 04ஆம் தொகுதிக்கான சீலிங்குகளை வழங்கல், ஒருங்கிணைத்தல் மற்றும் நிறுவுதல் மற்றும் மேற்பார்வை செய்தல்

**ஒப்பந்த இல.: DHQC/CEILING/4/2020**

1. மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தம் தொடர்பாக 2021.02.14 ஆம் திகதியன்று தினகரன் வாரமஞ்சரியில் பிரசுரிக்கப்பட்ட விலைமனுக்களுக்கான அழைப்பு தொடர்பானது.
2. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விலைமனுக்களுக்கான அழைப்பில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
   - ❖ விலைமனு திறத்தல்/ மூடும் நேரம் ஆகியன 2021 மார்ச் 15 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளன.
   - ❖ விலைமனுக்கள் 2021 ஓகஸ்ட் 9 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
   - ❖ விலைமனுப்பிணையானது 2021 செப்டம்பர் 6 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
3. முன்னைய விலைமனுக்களுக்கான அழைப்பின் அனைத்து ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பெற்று, விலைமனுக்கோரல் ஆவணங்களை 2021 மார்ச் 14 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கொழும்பு-03, பாலதக்ஷ மாவத்தை, 15/5 ஆம் இலக்கத்திலுள்ள பாதுகாப்பு அமைச்சின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகை குழுத் தலைவரிடமிருந்து கொள்வனவு செய்யலாம்.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகை குழு,**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு-03, இலங்கை.**
**தொலைபேசி : 0094-11-2390719**
**தொலைநகல் : 0094-11-2390720**
**மின்னஞ்சல் : procurement@defence.lk**

## தெங்கு, கித்துல் மற்றும் பனை பயிர் மேம்பாடு மற்றும் சார்ந்த கைத்தொழில் உற்பத்திகள் மற்றும் ஏற்றுமதி பல் வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

### தெங்கு அபிவிருத்தி அதிகார சபை

## தென்னம் சிரட்டை சுவாலை அடுப்புகள் நிர்மாணித்தல் ஊக்குவிப்பதற்காக முதலீட்டு உதவிகளை வழங்குதல்

சுற்றாடலை நேசிக்கும் தரமான தென்னம் சிரட்டை கரி உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக சுவாலை அடுப்புகளை நிர்மாணிப்பதற்கு தொழிலாளர்களுக்கான முதலீட்டு சலுகைகளை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

தினமும் கிட்டத்தட்ட 7500 சிரட்டைகளை ஒன்று சேர்க்கக்கூடிய, இடவசதியுள்ள (குறைந்த பட்சம் கிட்டத்தட்ட 01 ஏக்கர்) நிதி மற்றும் வியாபாரத் திறமையுள்ள கைத்தொழிலாளர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்கலாம்.

சுவாலை அடுப்புகளை நிர்மாணிப்பதற்காக ஏற்படும் செலவுகளில் 50% தொகையை (அதி கூடியதாக ரூ.100,000/- இற்கு உட்பட்டு) அதிகார சபையினால் முதலீட்டுச் சலுகையாக வழங்கப்படும்.

முதலீட்டுச் சலுகைகளை பெற்றுக்கொள்ள எதிர்ப்பார்ப்பின் குறித்த விண்ணப்பத்தை தெங்கு அபிவிருத்தி அதிகார சபையால் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் பிரதேச அதிகாரிகள் மூலம் அல்லது www.cda.gov.lk இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2021.03.30ஆம் திகதி அல்லது அதற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**வடமேல், கிழக்கு மற்றும் ஊவா மாகாணம் - திரு.எச்.ஆர்.சந்தன - தொ.பே.இல - 071-4406874, திரு.சானக்க ரணசிங்ஹ - தொ.பே இல- 071-3376526, மேல் மாகாணம் - திரு. சோமசந்ர - தொ.பே.இல - 071-8364081, தென் மாகாணம் - திருமதி.திசும் வாதுவகே - தொ.பே.இல - 071-4817487, வடமத்திய மற்றும் வடமாகாணம் - திரு. நாலக்க ஹேரத் - தொ.பே.இல - 071-9609226, சப்ரகமுவ மாகாணம் - திருமதி.டபிள்யூ.டி.மதுஷானி - தொ.பே.இல - 071-2504989, மத்திய மாகாணம் திரு.சாணக்க ரணசிங்க - தொ.பே.இல - 0713376526.**

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "முதலீட்டு உதவிகளை பெற்றுக்கொள்ளல் - சுவாலை அடுப்புகளை நிர்மாணித்தல்" என்று குறிப்பிடுங்கள்.

(குறித்த தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்)

**தலைவர்,**
**தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை**
**இல.54,**
**நாவல வீதி,**
**நாராஹேன்பிட்ட,**
**கொழும்பு - 05**

**விபரங்கள் - 011-2322793-6**



*Charities Network நிறுவனத்தின் வேண்டுகோளின் பேரில் Memon Aid நிறுவனம் முல்லேரியா கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையின் கொரோனா பிரிவுக்கு இரண்டு High Flow Nasal Oxygen இயந்திரங்களை வழங்கியது. இந்நிகழ்ச்சியில் வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் பிரியந்த கருணாரத்ன, டாக்டர் முதிதா பெரேரா, டாக்டர் அப்லாஹ் சாதிகீன் MemonAid நிருவனத்தின் அமீன் பஹிலா, ஹனிப் யூசுப்மற்றும் அப்சால் சத்தார் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

*படம் : ருசெக் பாரூக்*

*மலையக மக்கள் முன்னணியின் உயர்பீட உறுப்பினர்களுக்கும், எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று அண்மையில் எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தில் இடம்பெற்றது. உத்தேச அரசியலமைப்பு தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு ம.ம.மு கையளித்துள்ள முன்மொழிவுகளின் அறிக்கை சஜித் பிரேமதாசவிடம் கையளிக்கப்பட்டது. மலையக மக்கள் தற்போது எதிர்நோக்கும் சம்பள உயர்வு, வீடமைப்பு, பொருளாதார பிரச்சினைகள், கல்வி மற்றும் 13வது திருத்தத்தின் அடிப்படையில் மாகாண மட்டங்களில் அதிகார பரவலாக்கம் தொடர்பாக அரசாங்கத்தை வலியுறுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.*

*இச்சந்திப்பின் போது மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி ராதாகிருஷ்ணன், செயலாளர் எஸ். விஜயசந்திரன், சிரேஷ்ட உப தலைவர் சதீஷ்குமார் சிவலிங்கம், நிதிச்செயலாளர் புஸ்பா விஸ்வநாதன் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.*














உடபா, கசாயி, தூரியன் அஜா, கெலாட் மற்றும் நெகடோன் துலான் மற்றும் கெப்பஸ் என்ற பெயர்களில் விற்கப்படும் பலகைகளை நம்பி

**நீங்கள் ஏமாற வேண்டாம்...**

வாழ் நாள் முழுவதும் நிலைத்து நிற்கும் உங்கள் கூரைக்கு சிறந்த ஒரிஜினல்

**துலான் மற்றும் கெம்பஸ்**

**பெற்றுக் கொள்வதற்கு தொடர்பு கொள்ளுங்கள்**
**(ரூப் சீலின் இற்கு விசேடமானது)**
**3" x 4" கூரை பலகைகளுக்கு அழையுங்கள்**
**பைன் மற்றும் லுனுமிதெல்லவும் பெற்றுக் கொள்ளலாம்.**

**பியங்கிகா பலகை விற்பனை நிலையம்**

| மாரவில பிரதான கிளை | ஜாஎல கிளை, |
|---|---|
| 032-2255628 | 011-2226900 |
| 077-7325300 | 077-1771275 |

யுக்ரேனிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
2 x 4 பைன் வுட் விற்பனைக்கு உண்டு.
(பலகை சீவும் பாஸ் மற்றும் உதவியாளர் தேவை)




இலங்கை ஒலிபரப்பு கூட்டுத் தாபன ஆனந்த சமரக்கோன் மண்டபத்தில் கடந்த வாரம் நடைபெற்ற பொன்மாலைப் பொழுது நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பணிப்பாளர் நாயகம் சந்திரபால் லியனகே புற்றுநோய் ஆதார உண்டியலை ஆரம்பித்து அதில் நிதி உதவி செய்வதையும், கலந்து கொண்ட அனுசரனையாளர்களான அஹமட் ரியாஸ், ஹிதாயா ரயாஸ், கே. முத்துக்குமார், குமுதா முத்துக்குமார், மனோஜ் கிருஸ்ணமூர்த்தி, மோகனசுகந்தி மலர்மாரன், கலாநிதி குமரகுருபரன் ஆகியோரையும், சூரியா இசைக் குழுவினர் இசை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

படப்பிடிப்பு கொழும்பு வடக்கு நிருபர்.


தினகரன் BUDGET adz

It suits your budget




**Advertise Here**

5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,000/- +VAT

Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com


## தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு
### அனர்த்த முகாமைத்துவ நிலையம்

## பெறுகை அறிவித்தல்

தீவைச் சுற்றியுள்ள கடற்கரையில் நிறுவப்பட்டுள்ள ஆரம்ப எச்சரிக்கை தகவல் தொடர்புகளுக்கு பிணைய தொழிநுட்ப பயன்பாட்டு செயற்திட்டத்தினை நிறுவுவதற்கான முன்மொழிவுகளை வழங்குபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

எழுத்து மூல விண்ணப்பத்தை **2021.03.08** ஆம் திகதியிலிருந்து **2021.03.22** ஆம் திகதி வரை **09.00** மணியிலிருந்து **15.00** மணி வரையான காலப்பகுதியினுள் வித்யா மாவத்தை, கொழும்பு 07 இல் அமைந்துள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இரண்டாம் மாடியில் நிதிப்பிரிவில் மீளச்செலுத்தப்படாத ரூ.1,000.00 இனைக் கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். மனுக்கோரல் விண்ணப்பத்துடன் கொள்முதல் ஆவணத்தையும் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

மனுதாரரினால் சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் **2021 மார்ச் 23** ஆம் வியாழக்கிழமை மு.ப **10.00** மணிக்கு அல்லது அதற்கு முன் **"ஆரம்ப எச்சரிக்கை தகவல் தொடர்புகளுக்கு பிணைய தொழிநுட்ப பயன்பாட்டு செயற்திட்டத்தினை நிறுவுவதற்கான "** என தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலின் மூலம் அல்லது கொள்முதல் பிரிவில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடவேண்டியதுடன், குறித்த வெளிப்படுத்தல்கள் அதே தினத்தில் மு.ப **10.30** மணிக்கு அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதான ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெறும்.

தலைவர்,
விலைமனுக்கோரல் சபை,
**அனர்த்த முகாமைத்துவ நிலையம்**
இல 120/2, வித்யா மாவத்தை, கொழும்பு 07

## களனிப் பல்கலைக்கழகம் - இலங்கை

# வெற்றிடங்கள்

கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 2021.03.22ம் திகதி வரை என்னால் ஏற்கப்படும்.

❖ **உடற்கல்விப் பிரிவு**
- **உடற் கல்விப் பணிப்பாளர்**

❖ **பதிவாளர் பணிமனை,**
- **வலையமைப்பு ஆய்வு நிகழ்ச்சித் தயாரிப்பாளர்**
  (Programer Cum System Analist Gr. II)

**விண்ணப்பிக்கும் முறை**

இப் பதவியுடன் சம்பந்தப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை அலுவலக நேரங்களில் பிரதிப் பதிவாளர்/ நிறுவனக் கல்வியிடம் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறே இணையதளத்தின் www.news.kln.ac.lk பல்கலைக்கழக இணையதளத்திற்கு பிரவேசித்து குறித்த விண்ணப்பம் மற்றும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை தபாலில் பெற்றுக்கொள்வதற்கு அவசியமாயின் அதற்கான வேண்டுதலுடன் முகவரி எழுதப்பட்ட முத்திரையுடனான 23 x 10 செ.மீ. அளவான உறையொன்றை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் ஒவ்வொரு பதவிக்கும் வேறுவேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் அத்துடன் விண்ணப்பங்களை குறித்த சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2021.03.22 அல்லது அதற்கு முன்பு பிரதிப் பதிவாளர்/ நிறுவனக் கல்வி, களனிப் பல்கலைக்கழகம், களனி என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும். பூர்த்தியற்ற, தெளிவற்ற அல்லது தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரச கூட்டுத்தாபனங்கள், நியதிகள் சபைகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தை நிறுவனத் தலைமை ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். தேவைப்படின் தகைமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முக தேர்விற்கு கோருவதற்கு பல்கலைக்கழகத்திற்கு ஏற்பாடுகளை செய்ய முடியும்.

**பதிவாளர்,**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**களனி.**
2021.03.02

---

'நீர் ஓர் மனித உரிமை - சுகாதாரம் ஓர் வரப்பிரசாதம்'

நீர் வழங்கல் அமைச்சு

**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**

## நீர் வழங்கல் திட்டங்களுக்கான வெற்றிடங்கள் (திட்ட ஒப்பந்த அடிப்படை)

**01. பொறியியலாளர் (சிவில்/மின்னியல்/இயந்திரவியல்)**
**02. அளவை அளவையாளர்**
**03. சமூகவியலாளர்**
**04. பொறியியல் உதவியாளர் (சிவில்/மின்னியல்/இயந்திரவியல்)**

கொடையாளர் நிதியிடப்பட்ட மேலே குறிப்பிடப்படும் வெற்றிடங்களுக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை இணையதளத்தில் குறிப்பிடப்படும் விண்ணப்பங்களின் மூலம் பொது நிபந்தனைகள், கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவங்கள் நிரப்பப்படல் வேண்டும். மூடப்படும் திகதி 2021 மார்ச் 20 ஆகும். போதிய தகவல்களுக்கு தே.நீ.வ.வ.ச இணையத்தளம் www.waterboard.lk தயவு செய்து பார்வையிடவும்.

**மேலதிக பொது முகாமையாளர்**
**நீர் வழங்கல் திட்டப்பிரிவு**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**
**காலி வீதி, இரத்மலானை**

---

## நீதி அமைச்சு

### வீட்டு வாடகை சட்டத்தை திருத்தியமைப்பதற்கு பொது மக்களின் கருத்துக்களை கோரல்

கௌரவ நீதி அமைச்சரினால் பின்வரும் விடயங்கள் பற்றி ஆராய்வதற்கான ஆலோசனைக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது.

01. தற்போது அமுலில் உள்ள வீட்டு வாடகை சட்டத்தை மீளாய்வு செய்து அமுலில் உள்ள வீட்டு வாடகை சட்டத்தின் பலவீனங்கள், பலம்கள் பற்றி இனங்காணல்.
02. தற்போது வீட்டு வாடகை சட்டத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை நீக்குவதற்கான நடவடிக்கைகளை பிரேரித்தல்.
03. வாடகை அடிப்படையில் நிருவகிக்கப்படுகின்ற வளவுகள் தொடர்பில் மாதாந்த வாடகையை கணிப்பிடுவதன் நீதி, நியாயத்தன்மை மற்றும் பொருத்தமான முறையியல் ஒன்றை பிரேரித்தல்.
04. வீட்டு வாடகைச் சட்டத்திலிருந்து வளவை விடுவிக்கும் ஏற்பாடுகளை மீண்டும் ஆராய்தல் மற்றும் யாதாயினுமொரு வளவு வீட்டு வாடகைச் சட்டத்தினால் நிருவகிக்கப்படுகின்றதா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்கு அமுலில் உள்ள ஏற்பாடுகளுக்குப் பதிலாக மென்மேலும் தெளிவான ஏற்பாடுகளை பிரேரித்தல்.
05. வீட்டு வாடகைச் சபை மற்றும் மீளாய்வுச் சபை வெறும் நிறுவனமாக மாத்திரம் செயற்படுவதற்குப் பதிலாக மாற்று பிணக்குகளைத் தீர்ப்பதற்கான நிறுவனமாக மென்மேலும் வினைத்திறன்மிக்கதாக்கும் பொருட்டு முறையியல் ஒன்றை இனங்காணல்.
06. குறிப்பாக வீட்டு வாடகைச் சட்டத்தின் கீழ் கொள்ளப்படாத ஆவணங்கள் தொடர்பில் வாடகை குடியிருப்பாளர்களினால் கையகப்படுத்தப்பட்டுள்ள போதிலும் ஆதன உரிமையாளர்களின் ஆதனங்களின் இருப்பாட்சியை மீளப் பெற்றுக் கொள்வதற்காக மேற்படி ஆதன உரிமையாளர்களுக்கு வினைத்திறன் மற்றும் துரித முறையியல் ஒன்றை உறுதி செய்யும் கட்டமைப்பை இனங்காணல் மற்றும் பிரேரித்தல்.
07. அமுலில் உள்ள வீட்டு வாடகைச் சட்டத்தின் சிக்கல்களை இனங்காணல் மற்றும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு மிகப்பொருத்தமான சட்டகத்தினுள் வீட்டு வாடகைச் சட்டத்துக்கான திருத்தங்களை கொண்டுவருவதற்கு பிரேரித்தல்.

மேலுள்ள விடயங்கள் தொடர்பிலான பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் கருத்துரைகளை 2021 மார்ச் மாதம் 31 ஆம் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர், ஏற்பாட்டாளர், வீட்டு வாடகையை மீளாய்வு செய்யும் ஆலோசனைக் குழு எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு இந்த ஆலோசனைக் குழு இத்தால் கோரிக்கை விடுக்கின்றது.

மின்னஞ்சல் ஊடாக அனுப்பப்படும் கருத்துக்களை rentlawreview@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்க முடியும் என்பதுடன், எழுத்து மூலமாக அனுப்பப்படுகின்ற அவ்வாறான கருத்துக்களை, அவற்றை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வீட்டு வாடகை சட்டதை மீளாய்வு செய்யும் ஆலோசனைக் குழுவுக்கான பிரேரணைகள்" எனக் குறிப்பிட்டு, பின்வரும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிவைக்க முடியும் அல்லது நேரடியாகக் கையளிக்க முடியும்.

**ஏற்பாட்டாளர், வீட்டு வாடகைச் சட்டத்தை மீளாய்வு செய்யும் ஆலோசனைக் குழு,**
**நீதி அமைச்சு,**
**மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி,**
**நீதிமன்ற மாவத்தை,**
**கொழும்பு 12**

---

# இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் – மிஹிந்தலை

# வெற்றிடங்கள்

**2021.03.25 ஆம் திகதி வரை கீழ்க்காணும் பதவிகளுக்கு பொருத்தமான தகைமையுள்ள நபர்களிடமிருந்து இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் விண்ணப்பங்களை கோருகின்றது.**

### 01. மருத்துவ அதிகாரி

**தகைமைகள் :**

மருத்துவ பயிற்சியாளராக குறைந்தபட்சம் மூன்று (3) வருட அனுபவத்துடன் ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மருத்துவ பட்டம்

**சம்பள அளவு :** ரூ.55,350-10X1335,1X1630-70,330 P.M U-MO 1 (II) சம்பளத்திற்கு மேலதிகமாக, சுகாதார அமைச்சுடன் இணைந்த மருத்துவ அதிகாரிகளுக்கான சம்பளத்துடன் மருத்துவ/பற்சிகிச்சை வகுதியின் கீழான நியமனங்களுக்குச் சமமான கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.

**சலுகைகள்**

01. a) மேலே குறிப்பிடப்பட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக, வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்பட ஏனைய கொடுப்பனவுகளும் நிரந்தர நியமனம் பெறுபவர்களுக்கு செலுத்தப்படும்.
    b) நிரந்தர நியமனம் பெறுவோர் பல்கலைக்கழக சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் அங்கத்தவராக மற்றும் பல்கலைக்கழக ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்பவராக இருப்பர்.
    C) மருத்துவ அதிகாரி பதவியைக் கொண்டிருப்போர் வாகன அனுமதிப்பத்திரத்திற்கு உட்படுத்தப்படுவர்

**விசேட குறிப்பு**

பணி விடுவிப்பு/பணியிடை விடுமுறை/ஒப்பந்த அடிப்படை/பணி ஒதுக்கீட்டு அடிப்படையில் இணைவதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகளும் விண்ணப்பிக்கலாம்.

### 02. திட்ட முகாமையாளர்

**தகைமைகள் :**

01. a) ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து B.sc பொறியியல் பட்டத்தைக் கொண்டிருத்தல்/சிவில் பொறியியலில் HEI விசேடத்துவம்
    அல்லது
    ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து B.sc பொறியியல் பட்டத்தைக் கொண்டிருத்தல்/அளவை அளவையியலில் HEI விசேடத்துவம்
    அல்லது
    இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் (IESL) அங்கீகரிக்கப்பட்ட சமமான தொழில்சார் தகைமைகள்
    மற்றும்
    b) ஓர் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஓர் கூட்டு அங்கத்துவம்
    அல்லது
    ஓர் அங்கீகரிக்கப்பட்ட அளவை அளவையியல் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஓர் கூட்டு அங்கத்துவம்
    மற்றும்
    C) நிர்மாண திட்டங்கள் நேரடி தொழிலாளர் முகாமைத்துவம் போன்ற ஒப்பந்தங்களை கையாள்வதில் குறைந்தபட்சம் 10 வருட சமமான அனுபவம்

**சேர்த்துக்கொள்ளும் முறை**

கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்

**சம்பள அளவு :** RS.66,180 - 8X1335,6X1630-89,900 P.M U-EX 2 (II)

### 03. தொழில்நுட்ப அதிகாரி (கட்புல செவிப்புல) தரம் III

**தகைமைகள் :**

I. ஏதாவது துறையில் ஒரே அமர்வில் க.பொ.த (உ.த) பரீட்சையில் மூன்று (3) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும்

II. a) பாராளுமன்றத்தினால் சட்டம் நிறைவேற்றப்பட்டு உருவாக்கப்பட்ட மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு அல்லது நியதிகள் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் நிறுவனத்திலிருந்து இலத்திரனியல் மற்றும் தொலைதொடர்பு/இலத்திரனியல்/பல்லூடகம் அல்லது கற்புல செவிப்புல துறையில் N.V.Q.லெவல் 5 இற்கு குறையாத ஓர் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்
    அல்லது
    b) நம்பகரமான நிறுவனத்தில் கட்புல செவிப்புல வேலைகளில் ஒரு வருட **அனுபவத்துடன் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் மேற்படி தகைமைகளான (ii) a இற்கு சமமான இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு/இலத்திரனியல்/பல்லூடக அல்லது கட்புல செவிப்புல தொழில்நுட்பத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட துறையில் தொழில்நுட்பத் தகைமையைக் கொண்டிருத்தல்**

**சம்பள அளவு :** ரூ.31,625 - 7X300,10X355-37275 U-MT I (III A)

**வயது :** 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல்

**சேர்த்துக்கொள்ளும் முறை**

எழுத்துமூல மற்றும்/அல்லது செயன்முறைப் பரீட்சை மற்றும் ஓர் நேர்முகத்தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்

### 04. தொழில்நுட்ப அலுவலர் (ICT) தரம் III

**தகைமைகள் :**

I. ஏதாவது துறையில் ஒரே அமர்வில் க.பொ.த (உ/த) பரீட்சையில் மூன்று (3) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும்

தகவல் தொலைத்தொடர்பு மற்றும் பல்லூடக தொழில்நுட்பம்/தகவல் மற்றும் தொலைதொடர்பு தொழில்நுட்பம்/தகவல் தொழில்நுட்பம் அல்லது அதற்கு சமமான துறையில் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/தொழில்சார் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் N.V.Q. லெவல் 5 இற்கு குறையாத ஓர் தேர்ச்சிச் சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ICT **இல் வேலை அனுபவத்தை கொண்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

**சம்பள அளவு :** ரூ.31,625 - 7X300,10X355-37275 U-MT 1 (III A)

**வயது :** 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல்

**சேர்த்துக்கொள்ளும் முறை**

எழுத்துமூல மற்றும்/அல்லது செயன்முறைப் பரீட்சை மற்றும் ஓர் நேர்முகத்தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்

### 05. முகாமைத்துவ உதவியாளர் தரம் (III) (Book Keeping)

**தகைமைகள் :**

I. சிங்கள மொழி/தமிழ்மொழி
II. ஆங்கில மொழி/ஆங்கில இலக்கியம்
III. கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு(06) பாடங்களில் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்
மற்றும்
2. ஒரே அமர்வில் க.பொ.த (உ/த) பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் (பொது வினாப்பத்திரம் நீங்கலாக) சித்தியடைந்திருத்தல்
மற்றும்
3. திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சின் கீழ் இலங்கை தொழில்நுட்ப கல்லூரி/தொழில்நுட்ப கல்லூரியில் கணக்கியல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ்
   அல்லது
   b) வர்த்தக துறையில் க.பொ.த (உ/த) தகைமை
   - கீழ்காணும் விடயங்களைக் கொண்டிருப்பவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
   a) ஓர் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் ஆறு (06) மாத காலத்திற்கு குறையாத கணனி பயன்பாடுகளில் ஓர் ஏற்கக்கூடிய தகைமை
   மற்றும்
   b) கணனி விண்ணப்ப பொறி பாவனையில் இரண்டு வருட அனுபவம்

**குறிப்பு : தகைமைகள் :**

a) இலங்கை பிரஜையாக இருத்தல்
b) விண்ணப்ப முடிவுத்திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல்
c) சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல்

**சம்பள அளவு :** ரூ.30,725 - 17X300-35825 U-MN 1 (III A)

**வயது :** 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல்

**சேர்த்துக்கொள்ளும் முறை**

எழுத்துமூல பரீட்சை மற்றும் நேர்முகத்தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்

**விண்ணப்பிக்கும் முறை**

பல்கலைக்கழக இணையத்தளமான www.rjt.ac.lk இற்கு விஜயம் செய்து விண்ணப்பப்படிவங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

அரச சேவைகள், அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் விண்ணப்பதாரிகள் அவர்களது விண்ணப்பங்களை முறையே அந்த நிறுவனங்களின் தலைமையூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

கல்வி/தொழில்சார் தகைமைகள் மற்றும் ஏதாவது சேவை சான்றிதழ்கள் இருப்பின் அவற்றின் உறுதி செய்யப்பட்ட போட்டோப் பிரதிகளை விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

மூடப்படும் நாளின் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள், பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தில் தரப்பட்டுள்ள முறைமைகளுக்குப் பொருந்தாத விண்ணப்பங்கள் மற்றும் பூர்த்தியற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**முகவரி:**

**உதவிப் பதிவாளர்**
**கல்விசாரா நிறுவனக் கிளை,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,**
**மிஹிந்தலை**

**பதிவாளர்**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,**
**மிஹிந்தலை**
**07.03.2021**

வர்த்தக அமைச்சு

கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்

## வாடகை அடிப்படையில் அலுவலக வளாகங்கள் மற்றும் களஞ்சியங்களை பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக்கோரல்

கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்திற்கு சொந்தமான கீழ்க்காணும் அலுவலக வளாகங்கள் மற்றும் களஞ்சியங்களை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன

| தொ. இல | இடம் | ச.அ.அளவு |
|---|---|---|
| 01 | ராஜகிரிய, இல.01/274 | 508 |
| 02 | 165, சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10, கட்டிட இல.05 | 90.44 |
| 03 | 160, சதொச களஞ்சிய கட்டிடத்தொகுதி, மாளிகாவத்தை, கொழும்பு - 10 | - |
| | கட்டிட இல 1 | 2190 |
| | கட்டிட இல 2 | 117 |
| | கட்டிட இல 3 | 100 |
| 04 | 595, சதொச களஞ்சிய கட்டிடத்தொகுதி, நீர்கொழும்பு வீதி, வெலிசர | 286 |
| 05 | நிகிரிஸ் கட்டிடம், இல-109, யோர்க் வீதி, கொழும்பு - 01 | 25092 |
| 06 | பதுளை சதொச வளாகம், இல.29, பண்டாரவெல வீதி, பதுளை | 21522 |
| 07 | மாத்தளை சதொச, இல-16, குட்செட் வீதி, மாத்தளை | 21207 |
| 08 | கண்டி டீ.எஸ்.சேனாநாயக்க மாவத்த, இல.137, முதலாம் மாடி | 3450 |
| 09 | டீ.ஆர்.விஜேவர்தன மாவத்த, இல.40, கொழும்பு - 10 | 15508 |
| 10 | சதொச களஞ்சியம், கதுருவெல, மானிக்கப்பட்டிய இல.04 | 9124 |
| 11 | சதொச களஞ்சியம், ஹுலங்காவ சந்தி, இல.519, மொனராகல | 8607 |
| 12 | சதொச வளாகம், நந்திமித்ர மாவத்த, கதிர்காமம், முதலாம் மாடி | 1350 |

காசாளருக்கு மீளளிக்கப்படாத ரூ.1000.00 கட்டணத்தை செலுத்திய பின்பு பெறுகை பிரிவிலிருந்து கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம். கேள்விகளை சமர்ப்பிக்கும் போது ரூ.25,000.00 மீளளிக்கப்படும் கேள்வி வைப்பை 2021.03.23 மு.ப.10.00 இற்கு முன் செலுத்துதல் வேண்டும்.

கேள்வி விண்ணப்பங்களை 2021.03.23 மு.ப.1200 மணிக்கு முன் இல.04, கேள்விப்பெட்டியில் இடுதல் வேண்டும் அத்துடன் அவ் வேளையிலேயே விலைமனுக்கள் திறக்கப்படும். அவ்வேளையில் விண்ணப்பதாரர்க்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

அலுவலக வளாக பரிசீலனை 2021.03.15 முதல் 2021.03.19 வரை அரச அலுவலக வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை இடம்பெறலாம். மேலதிக தகவல்கள் மற்றும் அலுவலக வளாக பரிசீலனைக்காக கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்தை அழைத்து விபரங்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

- தொ.பே.இல - 0112337549/2435554
- கையடக்கத் தொ.பே.இல - 0776939606 (திரு.சம்பத்)

இறுதித்தீர்மானம் கேள்விச் சபைக்கு உரியது.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்,**
**இல-27, வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு - 02.**

# வவுனியாவில் துப்பாக்கியுடன் இளைஞன் கைது

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியாவில் சட்டவிரோத துப்பாக்கியுடன் இளைஞன் ஒருவரை விஷேட அதிரடி படையினர் கைது செய்துள்ளனர்

புளியங்குளம் விஷேட அதிரடிபடையினரிற்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் (05) இரவு 10.30 மணியளவில் மேற்கொண்ட நடவடிக்கையின் போது வவுனியா பாலமோட்டை வயல் பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்ற இளைஞனிடம் சோதனை மேற்கொண்ட போது குறித்த இளைஞனிடமிருந்து சட்டவிரோத துப்பாக்கியை மீட்டதோடு (இடியன் துப்பாக்கி) இளைஞனையும் கைது செய்த விஷேட அதிரடி படையினர் ஓமந்தை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இந்த இளைஞன் பாலமோட்டை பகுதியை சேர்ந்த 32 வயதுடையவர் என்பதுடன் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக ஓமந்தை பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு

## ஆர்வ வெளிப்பாட்டுக்கான கோரிக்கை (REOI)

**ஒப்படைத் தலைப்பு** : டிஜிட்டல் சேவை முகாமைத்துவ முறைமையின் வடிவமைப்பு, மேம்படுத்தல், செயற்படுத்தல், பயிற்சி மற்றும் பராமரிப்பின் பெறுகை

**ஒப்படை இல.** : **CAA/Digital System/2021**

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது (CAA) கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இயங்குவதோடு, நியாயமற்ற மற்றும் கட்டுப்படுத்தக்கூடிய வர்த்தக நடைமுறைகளுக்கு எதிராக வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களை பாதுகாத்து, வர்த்தகம் மற்றும் பொருட்கள் மற்றும் சேவை விலைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த பாதுகாப்பை வழங்குகிறது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் வின் எல்லைக்கு உட்பட்ட தற்போதைய செயற்பாட்டு மற்றும் நிர்வாக விவகாரங்களை கையாள்வதோடு CAA வின் தேவைகளை பகிர்ந்தளிப்பதில் மேம்பட்ட தீர்வுகளை பெறுவதற்கும் அதன்மூலம் அனைத்து பங்குதாரர்களுக்கும் சிறந்த சேவையை வழங்குவதற்கும் டிஜிட்டல் சேவை முகாமைத்துவ முறைமை ஒன்றை மேம்படுத்துவது அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்திய மேம்பட்ட அம்சங்களுடன் டிஜிட்டல் சேவை முகாமைத்துவ முறைமையின் வடிவமைப்பு, மேம்படுத்தல், செயற்படுத்தல், பயிற்சி மற்றும் பராமரிப்புக்கு மென்பொருள் உருவாக்குநர் நிறுவனம் ஒன்றை ஈடுபடுத்துவதற்கு CAA எதிர்பார்ப்பதோடு தீர்வை செயற்படுத்துவதற்காக மூன்று (03) ஆண்டுகளுக்கு உதவி மற்றும் பராமரிப்பை வழங்கல் வேண்டும்.

முக்கிய வியாபாரம் மற்றும் நிதி, வர்த்தக நிர்வாக வலுத்தன்மை/ நிலைத்தன்மை, பணித் தள அனுபவம், இதனை ஒத்த பண்பு மற்றும் சிக்கற்பாடுடைய ஒப்படைகளை மேற்கொண்டதன் அனுபவம், நிறுவனத்தின் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ ஏற்பாடு, நிறுவனத்தின் முக்கிய ஊழியர்களின் தொழில்நுட்ப திறன்கள் மற்றும் பொருத்தமான திறன்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய தகவலுக்கு உதவும் ஆவண அத்தாட்சிகளுடன் சேர்த்து "EoI தகவல் படிவத்தில்" குறிப்பிடப்பட்டவாறு தேவையான தகவல்களை உள்ளடக்கியதாக ஆர்வ வெளிப்பாட்டுக்கான (EoI) தமது ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கு திணைக்கள ஆலோசகர்கள் பெறுகைக் குழு தகுதியுடை மென்பொருள் உருவாக்குநர் நிறுவனங்களுக்கு தற்போது அழைப்பு விடுக்கிறது.

"சேவை விபரம்" மற்றும் "EoI விபரப் படிவம்" CAA இணையதளத்தில் தற்போது கிடைக்கப்பெறுவதோடு ஆர்வமுடைய நிறுவனங்கள் https://www.caa.gov.lk/download என்ற இணையதளத்தில் இருந்து ஆவணங்களை தரவிறக்கம் செய்யலாம்.

தரம் மற்றும் செலவு அடிப்படையிலான தேர்வு முறையை (QCBS) பின்பற்றிய ஆலோசகர்களின் தேர்வு மற்றும் பணியமர்த்தலுக்கான அரசாங்க பெறுகை வழிகாட்டியில் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளுக்கு அமைய மென்பொருள் உருவாக்குநர் நிறுவனம் தேர்வுசெய்யப்படும். அனைத்து ஆவணங்களும் ஆங்கில மொழியில் இருத்தல் வேண்டும் என்பதை அனைத்து ஆர்வமுடைய தரப்புகளுக்கும் அறிவிக்கப்படுகிறது. கூட்டு முயற்சிகள், கூட்டமைப்பு, துணை ஆலோசனை நிறுவனங்கள்.'. அல்லது வேறு எந்த வடிவிலான கூட்டாண்மைகளும் இந்த ஒப்படையின் கீழ் அனுமதிக்கப்படமாட்டாது.

ஆர்வம் கொண்ட தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் தொலைபேசி: +94117755456, மின்னஞ்சல்: caahradd@gmail.com, (நிர்வாம் மற்றும் மனித வள) பிரதிப் பணிப்பாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 27, வொக்சல் வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் CWE செயலக கட்டிடம், 2ஆவது மாடி, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை, நிர்வாக மற்றும் மனித வள பிரிவில் EoI ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்க முடியும்.

தேவையான அனைத்து தகவல்கள் உட்பட REOI இற்கான பதில்கள் 2021 மார்ச் 22 அன்று 15.00 மணிக்கு முன்னர் dgcaa@sltnet.lk என்ற முகவரிக்கு மின்னணு முறையில், நேரடியாக ஒப்படைத்தல் அல்லது தலைவர் (CPCD), பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை, 2ஆவது மாடி, CWE செயலக கட்டிடம், 27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 என்ற முகவரிக்கு தபால் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

EOIஇனை கொண்ட கடித உறை மற்றும் மின்னஞ்சலின் தலைப்பில் "REOI for CAA/Digital System 2021" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்**
**திணைக்கள ஆலோசகர்கள் பெறுகைக் குழு,**
**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை,**
**2ஆவது மாடி, CWE செயலக கட்டிடம்,**
**27, வொக்சல் வீதி, கொழும்பு-02, இலங்கை.**
**தொலைபேசி: +94117755456, தொலைநகல்: +94112399149,**
**www.caa.gov.lk**
2021 மார்ச் 07

# சிவஜோதி எனும் ஆளுமை... நினைவு நிகழ்வு இன்று



மறைந்த ஊடகவியலாளர் வைதீஸ்வரன் சிவஜோதியின் நினைவு தினத்தை முன்னிட்டு இன்று பல்வேறு நிகழ்வுகள் நடாத்தப்படவுள்ளன.

கிளிநொச்சியைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'மக்கள் சிந்தனைக் கழகமும் லிற்றில் எய்ட் அமைப்பும் இணைந்து இந்நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளன.

மக்கள் சிந்தனைக் கழகத்தின் உருவாக்கத்தில் சிவஜோதி முக்கிய பங்கெடுத்துக்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. சிவஜோதி 2017 முதல் லிற்றில் எய்ட் அமைப்பின் இணைப்பாளராகப் பணியாற்றி அதன் முக்கிய தூண்களில் ஒன்றாக இருந்தவர். சிவஜோதியின் இந் நிகழ்வையொட்டி அவுஸ்ரேலியாவில் பொறியியலாளராகக் கடமையாற்றும் மு. தயாநிதி ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான கணணிகளை லிற்றில் எய்ட்க்கு அன்பளிப்புச் செய்துள்ளார். இதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னதாகவும் இவர் இதேயளவு பெறுமதியான கணணிகளை சிவஜோதியிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது. சிவஜோதியை அறிந்திராக லிற்றில் எய்ட் அமைப்பின் நட்புவட்டத்தைச் சேர்ந்த த சஞ்ஜீவ்ராஜ் குடும்பத்தினர் சிவஜோதியின் சமூக அக்கறையை கௌரவிக்குமுகமாக 100 தென்னங்கன்றுகளை வழங்க உள்ளார்.

ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயம் 500 அப்பியாசக்கொப்பிகளை வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்துள்ளது. இந்நிகழ்வில் 'சிவஜோதி எனும் ஆளுமை...' என்ற தலைப்பிலான சிவஜோதியின் வாழ்க்கை மற்றும் சமூகப் போராட்டத்தை பற்றிய நினைவுகளைத் தாங்கிய நூலும் வெளியிட்டு வைக்கப்படும்.

இந்நூலுக்கான பதிப்பு அனுசரணையை யா. விக்ரோரியாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் பொறுப்பேற்றுள்ளனர். இந்நூலை லிற்றில் எய்ட் நிறுவனம் வெளியிடுகின்றது.

ப. தயாளன் (ஆசிரியர். செயலாளர் லிற்றில் எய்ட், இலங்கை) தொகுத்துள்ள இந்நூலில் உயிர் தந்த தாயும் தந்தையும் என்ற தலைப்பில் சி. வைத்தீஸ்வரன் (நிர்வாக முகாமையாளர், யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கம்), எழுதிய ஆக்கமும் சிவஜோதியை செதுக்கிய சிற்பி என்ற தலைப்பில் சோ. தேவராஜா (சிரேஷ்ட சட்டத்தரணி, பதில் நீதிபதி. தேசிய கலை, இலக்கிய பேரவை)எழுதிய ஆக்கமும் சமூகச் செயற்பாடுகளில் கரம்கோர்த்தவர் என்ற தலைப்பில் சி. இதயராஜா (ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர். தலைவர், லிற்றில் எயட், இலங்கை) எழுதிய ஆக்கமும் இதில் இடம்பெறவுள்ளது.

அதேபோல மதங்களைக் கடந்த நட்பு என்ற தலைப்பில் வண. பிதா. சி. யோசுவா (இயக்குநர், காவேரிக் கலா மன்றம்) எழுதிய ஆக்கமும் அரசியல் அற்ற நட்பு என்ற தலைப்பில் முருகேசு சந்திரகுமார் (பொதுச்செயலாளர், சமத்துவக்கட்சி) எழுதிய ஆக்கமும் சமூக செயற்பாடுகளில் கரம்கோர்த்தவர் என்ற தலைப்பில் அ. பங்கையற்செல்வன் (அதிபர், கிளி. வட்டக்கச்சி ஆரம்பப் பாடசாலை) எழுதிய ஆக்கமும் சமூக செயற்பாடுகளில் கரம்கோர்த்தவர் என்ற தலைப்பில் திருமதி. ஜெ. மாணிக்கவாசகர் (அதிபர், கிளி. விவேகானந்தா வித்தியாலயம்) எழுதிய ஆக்கமும் ஒன்றுபட்ட சிந்தனைகளால் உருவான நட்பு என்ற தலைப்பில் சு. சிவகுமார் (தலைவர், மக்கள் சிந்தனைக் கழகம் விரிவுரையாளர், பொறியியல் பீடம் யாழ் பல்கலைக்கழகம்) எழுதிய ஆக்கமும் திறந்த பல்கலைக்கழகத்து நட்பு என்ற தலைப்பில் அ. ப. ஆல்பிறேட் (பதிவாளர், இலங்கை ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவனம், கிளிநொச்சி) எழுதிய ஆக்கமும் பள்ளியில் கூடித் திரிந்த காலத்து நட்பு என்ற தலைப்பில் வி. குணபாலா (சிரேஷ்ட கலை, கலாச்சார அலுவலர், கிழக்கு மாகாணம்) எழுதிய ஆக்கமும் பள்ளியில் மலர்ந்த நட்பு என்ற தலைப்பில் ந. சுதாகரன் (பொறியியலாளர் பிரதி பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்) எழுதிய ஆக்கமும் சமூகச் செயற்பாடுகளால் பிணைக்கப்பட்ட நட்பு என்ற தலைப்பில் மு. மயூரன்(கலை, இலக்கிய, சமூக செயற்பாட்டாளர்) எழுதிய ஆக்கமும் கிளிநொச்சி மண்ணில் சமூகப் பணிகளில் உருவான நட்புக்கள் என்ற தலைப்பில் ப. குகன் (சமாதான நீதவான். பராசக்தி கல்வி வளர்ச்சி மன்றம்) எழுதிய ஆக்கமும் மு. தமிழ்ச்செல்வன் (ஊடகவியலாளர்) எழுதிய ஆக்கமும் க.விஜயசேகரன்(ஆசிரியர், மக்கள் சிந்தனைக்கழகம்) எழுதிய ஆக்கமும் செல்வி. இர. குலேபா (ஆசிரியயை லிட்டில் எய்ட்) எழுதிய ஆக்கமும் செல்வி அரிமர்த்தனா கணேசன் (மாணவி, லிற்றில் எய்ட் & களனி பல்கலைக்கழகம்) எழுதிய ஆக்கமும் சி. கருணாகரன் (எழுத்தாளர்) எழுதிய ஆக்கமும் 'சிவஜோதி எனும் ஆளுமை' யின் மறுபாதி என்ற தலைப்பில் ஹம்சகௌரி சிவஜோதி எழுதிய ஆக்கமும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது.

இலங்கை துறைமுக அதிகார சபை

## பதவி வெற்றிடங்கள்

கீழே குறிப்பிடப்படும் பதவிக்கு வேண்டப்படும் தகைமைகளையுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி : வைத்திய அலுவலர் (சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம் 3)**

**(அ) தகுதித்திறன்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட MBBS பட்டம் அல்லது அதற்கு சமனான பட்டமொன்றுடன் இலங்கை மருத்துவ சபையில் வைத்திய அலுவலரொருவராக பதிவு செய்திருத்தல்.

அத்துடன்

**அனுபவம்**

தகைமைகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் இலங்கை அரசின் அல்லது தனியார் துறையின் வைத்திய அலுவலரொருவராக மூன்று(03) வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

சுகாதார கைத்தொழில் துறையில் சேவையாற்றியுள்ள வைத்தியர்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படும்.

**(ஆ) சம்பளம்**

சம்பள வகையீடு : 3 : 3 (SLM 3)
ஆரம்பச் சம்பளம் : ரூ. 61,500/=
வருடாந்த சம்பள ஏற்றம் : ரூ. 1,555/=

கொடுப்பனவுகள் அடங்கலாக மாதாந்த மொத்தச் சம்பளம் ரூ.111,700 அளவினதாக இருக்கும்.

**குறிப்பு 1 :**
தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அதிகார சபையினால் பராமரிக்கப்படும் வாகனமொன்றுடன் ஏனைய அனுகூலங்களும் உரித்தாகும்.

**குறிப்பு 11 :**
சேவைத் தேவைப்பாட்டின் மீது ஆண் அபேட்சகர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**கவனிக்க**

மேலே பதவி தொடர்பில் விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரிகளும் 45 வயதை விட குறைந்தவராக இருத்தல் வேண்டும். (இவ்வயதெல்லை அரச துறை அல்லது அரச கூட்டுத் தாபனங்களிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதல்ல.)

இலங்கைத் துறைமுக அதிகார சபையினால் ஏற்கனவே விதிக்கப்பட்ட அல்லது எதிர்காலத்தில் விதிக்கப்படக் கூடிய சகல சட்டதிட்டங்களுக்குமிணங்க நியமனம் பெறுபவர் செயற்படுதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தேவைக்கேற்ப நாட்டின் எந்தவொரு பகுதியில் /பிரிவில் / பிரதேசத்தில் சேவை புரிய உட்படுத்தப்படுவர்.

விண்ணப்பங்கள் வயது, கல்வி, தொழில் தகைமைகள், அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் பிரதான மனிதவள முகாமையாளர், இலங்கை துறைமுக அதிகாரசபை, கொச்சிக்கடை, கொழும்பு -13 என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக 2021-03-20 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது மின்னஞ்சலில் **(chairman@slpa.lk)** அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும்.

சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இந்த அறிவித்தல் www.slpa.lk என்ற இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்களம்/கூட்டுத்தாபன தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். மேலே பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் திணைக்களம்/கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க இணங்கும் குறிப்பொன்றும் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்**

லங்கா சதொச — தேசத்திற்கு விலை நிர்ணயிப்பவர்

## விலைமனுக்கோரல்

### லங்கா சதொச மொத்த களஞ்சியசாலைக்கு தூய்மைப்படுத்தும் சேவைகளை வழங்குதல்

இரண்டு வருட காலப்பகுதிக்கு லங்கா சதொச லிமிட்டெட் களஞ்சியசாலை இற்காக **தூய்மைப்படுத்தும் சேவைகளை வழங்குதல்,** தொழிலாளர் சேவைகளை வழங்குவதற்காக ஆர்வமுள்ள சேவை வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை லங்கா சதொச லிமிட்டெட்டின் தலைவர் கோருகின்றார்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் **2021.03.07 ஆம் திகதியிலிருந்து 2021.03.30 ஆம் திகதி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,500 ரூபாவைச்** செலுத்திய பின்னர், கொழும்பு-02, வொக்ஷோல் தெரு, கூமொறி செயலக கட்டிடம், 27 ஆம் இலக்கத்திலுள்ள லங்கா சதொச லிமிட்டெட்டின் 3 ஆம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவிற்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**2021.03.15 ஆம் திகதியன்று மு.ப. 11.00 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.**

**2021.03.30 ஆம் திகதியன்று பி.ப. 1.00 மணிக்கு** அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-02, வொக்ஷோல் தெரு, கூமொறி செயலக கட்டிடம், 27 ஆம் இலக்கத்திலுள்ள லங்கா சதொச லிமிட்டெட்டின் 3 ஆம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். முத்திரையிடப்பட்ட விலைமனுவை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"எல்.எஸ்.எல் கிடங்குகளுக்கு தூய்மைப்படுத்தும் சேவைகள வழங்குதல்"** என குறிப்பிடப்படல் வேண்டும்.

அனைத்து கட்டணம் செலுத்தப்பட்ட ஆவணங்களுடன் இணைக்கப்பட்டுள்ள தெளிவாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள **விலைமனுப்பிணை** பிரகடனத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளல் **2021.03.30 ஆம் திகதியன்று பி.ப. 1.00 மணிக்கு** மூடப்பட்டு அவைகளை மூடிய பின்னர், உடனடியாகவே விலைமனுதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். **வெற்றிகரமான விலைமனுதாரர்** மீளளிக்கப்படாத கட்டணமாக **5,000 ரூபா மற்றும் 8% VAT மற்றும்** (பதிவு பெற்ற வழங்குனர்கள் நீங்கலானவர்கள்) **முதல் மாத விலைப்பட்டியல் மதிப்பில் 5% செயல்திறன் பாதுகாப்பு தொகை** ஆகியவற்றை செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் (செயல்திறன் பாதுகாப்பு தொகையாக மீளளிக்கப்படும்).

**தெளிவுறுத்தல்களுக்காக கீழே குறிப்பிட்டுள்ள அலுவலருடன் தொடர்பு கொள்ளவும்.**
பிரதி பொது முகாமையாளர், பெறுகை லசிலி - **071 1506120**
கேள்வி:. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான இறுதி தீர்மானத்தை எடுப்பதற்கான உரிமையை **லங்கா சதொச லிமிட்டெட்டின் தலைவர்** கொண்டுள்ளார்.

லங்கா சதொச லிமிடட்
சதொச பொதுச் செயலாளர் அலுவலகம்
இலக்கம் 27 செயற்பாட்டுப் பிரிவு 4ஆவது மாடி
வொக்ஷோல் வீதி கொழும்பு - 02

# ஹற்றன் உதைபந்தாட்ட சம்மேளனத்திற்கு எதிராக வீரர்கள் ஆர்ப்பாட்டம்



ஹற்றன் விசேட நிருபர்

ஹற்றன் உதைபந்தாட்ட சம்மேளனம் ஒரு உதைபந்தாட்ட கழகத்திற்கு தனது தீர்ப்பின் மூலம் அநீதி இழைத்துள்ளதாக தெரிவித்து யம் மேட்ஸ் விளையாட்டு கழக வீரர்கள் நேற்று (06) பதாதைகளை ஏந்தியவாறு அமைதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இது குறித்து தெரிய வருவதாவது,...

ஹற்றன் தலைவர் உதைபந்தாட்ட கிண்ணம் கடந்த வருடம் நடைபெற்றுள்ளது. குறித்த கிண்ணத்திற்காக யம் மேட்ஸ் விளையாட்டு கழகம்,ஸ்மோல் டிரேட்டன் விளையாட்டு கழகம் ஆகிய இரண்டுக்கும் எதிராக செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய இதனை விசாரணை செய்த ஹற்றன் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஒழுக்காற்று குழு ஒரு விளையாட்டு வீரர் பதிவு செய்யப்பட்ட ஒரு கழகத்திற்கு மாத்திரம் விளையாட வேண்டும் குறித்த காலிமுத்து கிசாந்தன் என்பவர் இரண்டு கழங்களில் விளையாடி விதிமுறைகளை மீறி செயப்பட்டது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் எனவே இரண்டு கழகங்களையும் 2020.01.31. இருந்து 2021.01.31 வரை தடை செய்துள்ளதாக எழுத்து மூலம் அறிவித்துள்ளனர்.

இவ்வாறான ஒரு சூழ் நிலையில் அதே ஹற்றன் தலைவர் கிண்ண இறுதி போட்டிக்கு ஒரு குழுவினை மாத்திரம் மீண்டும் இணைத்துக்கொண்டு இதில் யம் மேட்ஸ் கழகத்திற்கு அநீதி இழைத்துள்ளதாக விளையாட்டு வீரர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 312

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | 07 | | 08 | | 09 |
| 10 | | 11 | 12 | 13 | 14 |
| | 15 | 16 | 17 | | 18 |
| 19 | 20 | 21 | | 22 | |
| | 23 | | 24 | 25 | 26 |

பெயர் ........................................
வகுப்பு ........................................
பாடசாலை பெயர் ........................................
பாடசாலை முகவரி ........................................
........................................

.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

1. வானத்தில் உயரத்தே வட்டமிட்டபடி, தரையில் உள்ள இரையைக் கண்டு, திடீரெனப் பறந்து வந்து வேட்டையாடிச் செல்லும் பறவை.
6. கற்பாறையைத் தகர்த்தால் கிடைக்கின்ற இதனைக் கொண்டு கட்டடம் கட்ட முடியும். வீதியில் கிடந்தால் காலைப் பதம் பார்த்து விடும். (தலைகீழான சொல்)
11. புவியின் வடக்கு, தெற்கு முனைகளை இவ்வாறு குறிப்பிடுவதுண்டு.
15. கால்நடையைக் குறிக்கும் சொல். (தலைகீழான சொல்)
19. எழுத்துகள் சேர்ந்தால் சொல். சொற்கள் சேர்ந்தால் வாக்கியம். அது போன்று வாக்கியங்கள் சேர்ந்த தொகுதி இது. (தலைகீழான சொல்)
24. முதுகில் மூன்று கோடுகள் கொண்ட, பாலூட்டி உயிரினம்.

**மேலிருந்து கீழ்**

1. இரவு நேரத்தில் பூச்சிகளை பிடித்து உண்பதற்காக சுவரில் இப்பிராணி ஊர்ந்து திரிவதைக் காணலாம்.
2. உயிரங்கிகளின் மிகச்சிறிய கூறு கலம் ஆகும். கலத்தின் உள்ளே இது காணப்படும். (தலைகீழான சொல்)
4. நோய் குணமாக வேண்டுமானால் இது அவசியம். (தலைகீழான சொல்)
5. நுளம்பு, வண்ணத்துப்பூச்சி போன்றவற்றின் வாழ்க்கைப் பருவத்தில் இரண்டாவது இது.
11. விளையாட்டு உபகரணங்களில் முக்கியமானது. (தலைகீழான சொல்)
15. பல்வேறு கடைகள் கொண்ட தொகுதி. (தலைகீழான சொல்)
22. ஆலயங்களில் ஒலி எழுப்புவது.

**போட்டி இல. 312**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834.**
**கொழும்பு**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 311

### விடைகள்

**இடமிருந்து வலம்**

1. கருணை 4. உடை 7. வீடு 10. வார்
12. வறுமை 15. ஏடு 18. நாள் 21.குளம்பு

**மேலிருந்து கீழ்**

1. கருவாடு 3. வீணை 5. உண்மை 8. வடு
11. ஏர் 13. ஆறு 18. நாம் 19. புள்
20. தேன்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 310

### பரிசு பெறுவோர்


**முதலாம் பரிசு**
**எஸ். சிவஹரேசன் சிவகுமார்,**
தரம் 10 பி, ஹைலன்ஸ் கல்லூரி,
ஹட்டன்.

**இரண்டாம் பரிசு**
**எஸ். ஷஞ்சிதா,**
தரம் 08 பி,
தி/உவர்மலை விவேகானந்தா வித்தியாலயம்,
திருகோணமலை.

**மூன்றாம் பரிசு**
**ஆதிகா பஹ்மி,**
தரம் 08,
க/தெனு/அல்மனால் தேசிய பாடசாலை,
அம்பாபொல, ஹந்தெஸ்ஸ.

### பாராட்டு பெறுவோர்

1. **எஸ் சவிலக் ஷனா,**
தரம் 09 ஏ,
பது/தமிழ் மகளிர் மகா வித்தியாலயம்,
பதுளை.
2. **சாரா ரிம்ஷான்,**
தரம் 08, மாறை/ அல் மினா ம.வி.,
மீயல்லை.
3. **ஆயிஷா இஸ்மா ஸியாத்,**
தரம் 07ஏ, க/ பதியுதீன் பாலிகா வித்தியாலயம்,
கண்டி.
4. **பி. அதிகன்,**
தரம் 05, பரிதோமாவின் கல்லூரி,
கல்கிசை.
5. **யும்னா மின்ஹாஜ்,**
தரம் 04 ,
மா/ஆமினா மகளிர் தேசிய பாடசாலை,
மாத்தளை.



குறளமுதம் :

**ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை**
**சொல்ஆடார் சோர விடல்.**

***தெளிவுரை :*** *முடியும் செயலையும் முடியாதபடி செய்து கெடுப்பவரின் உறவை, அவர் அறியுமாறு ஒன்றும் சொல்லாமலே தளரச் செய்து கைவிட வேண்டும்.*

## முயற்சி

வாழ்க்கை ஒரு புத்தகம். அது பல பக்கங்களால் நிறைந்திருக்கும். அதில் இன்பமான பக்கங்களும் இருக்கும். சோக பக்கங்களும் இருக்கும். வெற்றி நிறைந்த பக்கங்களும் இருக்கும். தோல்வி நிறைந்த பக்கங்களும் இருக்கும். சிலர் வாழ்க்கையில் ஒரேயொரு தோல்வியைக் கண்டால்கூட வாழ்க்கையை முடித்துக் கொள்கின்றனர். முயற்சி செய்யுங்கள். முயற்சி இல்லாத வாழ்க்கையும் நிலவு இல்லாத வானும் ஒன்றே.

முயற்சிக்கு உதாரணமாக ஓர் கதையை இங்கு குறிப்பிடலாம். ஓர் ஆலமரத்தில் தூக்கணாங்குருவி ஒன்று முட்டையிடுவதற்காக கூடு ஒன்றைக் கட்டியது. மீண்டும் அது விழுந்தது. இவ்வாறு பலமுறை நடந்தது. கடைசியாக ஆறாவது முறையாக கூடு கீழே உறுதியாகவிருந்தது. முயற்சி திருவினையாக்கும் என்பதற்கு இதுவே சிறந்த எடுத்துக் காட்டாகும். ஆகவே கோழையாக இருக்காமல் முயற்சி செய்யுங்கள். முயற்சி செய்தால் முடியாதது என்று எதுவுமில்லை. விடாமுயற்சி வெற்றிக்கு வழிவகுக்கும்.

**வரக்காமுறை மர்யம்,**
தரம் 08 E,
மா/ஆமினா மகளிர் தேசிய பாடசாலை,
மாத்தளை.

## நீரும் நாமும்

நீங்கள் கடற்கரையோரத்தில் குடியிருந்தால், தண்ணீருக்கு என்றாவது தட்டுப்பாடு வரும் என்று உங்களால் சிந்திக்க முடியுமா?

கடலில் அல்லது சமுத்திரத்தில் சங்கமித்திருக்கும் எல்லாமே தண்ணீர்தான். கடலில் இருப்பது உவர் நீர். அதனை நாங்கள் குடிக்க முடியாது. உவர் நீர், எமது பூமியில் உள்ள மொத்த நீரின் அளவில் 97 வீதம் இதனுடன் 2 வீத நீர் ஆர்ட்டிக் துருவப் பிரதேசத்தில் உறைந்து போய் இருக்கின்றது. மீதமுள்ள ஒரு வீத தண்ணீர் மாத்திரமே மனிதனின் தேவைக்கு எஞ்சியிருக்கின்றது.

எஞ்சியிருக்கும் இந்த நீர் முற்றாக அசுத்தமடைந்து, அருந்துவதற்கு பாதுகாப்பற்றதாக மாறினால் அது நமக்கு பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் விலங்குகளும் நோய்வாய்ப்படவோ அல்லது இறக்கவோ நேரிடலாம்.

இப் பூமியில் கோடிக்கணக்கான மக்கள் உயிர் வாழ்ந்து கொண்டிருந்தபோது நான் வெறுமனே ஒரு மனிதன்தானே என்று சிலர் சிந்திப்பதுண்டு. எனது நடவடிக்கைகள் இதில் தாக்கத்தை ஏற்படுத்த முடியுமா என்றும் அவர்கள் நினைப்பார்கள். நான் மட்டும் சுற்றாடலுக்குத் தீங்கிழைக்காமல் இருந்தால் சுற்றாடலைப் பாதுகாக்க முடியுமா என்றும் அவர் கேள்வி எழுப்பலாம்.

நாம் நமது உற்ற தோழனான தண்ணீருக்கு இரு வழிகளில் தீங்கிழைக்கின்றோம். ஒன்று நீரை அசுத்தப்படுத்தல். மற்றையது வீண் விரயம் செய்தல். நாம் கடற்கரைகளிலும் கடலுக்குள்ளும் ஏனைய நீர் நிலைகளிலும் கழிவுகளை வீசுகின்றோம். நீர் நிலைகளில் கலக்கக்கூடியதாக கிருமிநாசினிகளையும் இன்னபிற இரசாயனங்களையும் பயன்படுத்துகின்றோம்.

எண்ணெய், மின்கலம் போன்ற இலத்திரனியல் கழிவுகளையும் சவர்க்காரம் சலவை போன்றவற்றையும் நீர் நிலைகளில் ஒதுக்குகிறோம்.

நாங்கள் வீதியோரங்களில் வீசும் கழிவுப் பொருட்கள் வடிகான்களில், நீரோடையில், ஆற்றில், வாவியில், ஏரியில் சேர்ந்து கடலில், சமுத்திரத்தில் சங்கமமாகி விடுகின்றது. அது கடலில் வாழும் உயிரினங்களுக்கு பேராபத்தை விளைவிக்கின்றது. நீங்கள் தெருவில் வீசிய கழிவுப் பொருளை, இரசாயனத்தை உண்ணும் மீன்கள் இறுதியில் உங்கள் சாப்பாட்டு மேசைக்கே வந்து உங்களுக்கே நஞ்சூட்டலாம். மனிதர்கள் தண்ணீருக்குச் செய்யும் விரோதச் செயல்களுக்கு தீர்வுகாண்பதே இன்று நாம் எதிர்நோக்கும் பெருஞ் சவாலாகும்.

**ஏ.எச். அப்துல் அலீம்,**
அலிகார் தேசிய கல்லூரி,
ஏறாவூர்.

## விருப்புடன் வாழ்வோம்...!

*பண்பை கூட்டி நாங்கள்*
*பள்ளி நாளும் சென்றிடுவோம்*
*அன்பைக் காட்டி யெங்கள்*
*அறிவை தாமே வளர்த்திடுவோம்*

*உண்மையை நாடி யுலகில்*
*உயர்வை நாளும் பெற்றிடுவோம்*
*வன்மையை மூடி எங்கள்*
*வாழ்வி லொளி ஏற்றிடுவோம்*

*விதியால் நொந்து யாரும்*
*விழாது புவியில் காத்திடுவோம்*
*நதியாய் பாய்ந்து யார்க்கும்*
*நலமே நாளும் செய்திடுவோம்*

*சதி செய்யும் மாந்தரை*
*சமாதி கட்டி புதைத்திடுவோம்*
*மதை மேவும் மனிதரை*
*மாணிக்க நிலவாய் போற்றிடுவோம்*

*ஆசைக் கொண் டலையும்*
*ஆணவ உலகை அழித்திடுவோம்*
*நேசம் கொண் டுலவும்*
*நேரிய உலகை ஆக்கிடுவோம்*

*பாசம் நெஞ்சில் தேக்கி*
*பாவம் மண்ணில் போக்கிடுவோம்*
*வேசம் எம்மில் நீக்கி*
*விருப்புடன் வாழ பழகிடுவோம்..!*

**வறக்காமுறையூர் ராசிக்**

## ஒலி வேறுபாடுகள்

### 'ன/ண'கர வேறுபாடுகள்

| | | |
|---|---|---|
| மன்னவன் | - | மன்னன் |
| மண்ணவன் | - | மனிதன் |
| அன்னம் | - | சோறு, பறவை |
| அண்ணம் | - | மேல்வாய் |
| ஆனி | - | ஒரு மாதம் |
| ஆணி | - | இரும்பு ஆணி |
| ஊன் | - | மாமிசம் |
| ஊண் | - | உணவு |

### 'ர/ற'கர வேறுபாடுகள்

| | | |
|---|---|---|
| அரி | - | அரிதல் |
| அறி | - | அறிந்துகொள் |
| அரம் | - | (கூராக்கும்) கருவி |
| அறம் | - | தருமம் |
| அரை | - | பாதி |
| அறை | - | வீட்டின் அறை |
| மரித்தல் | - | இறத்தல் |
| மறித்தல் | - | தடுத்தல் |
| விரகு | - | தந்திரம் |
| விறகு | - | எரிகொல்லி |

**ஆ. லிங்கேஷ்,**
தரம் 07, நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயம்,
நோர்வூட்.

## அன்பு..!

*எதையும் சாதிக்கும் அன்பு அது*
*எதிரியை வீழ்த்திடும் அம்பு!*
*இதையும் சற்று நீ நம்பு இனி*
*இல்லை உனக்கொரு வம்பு!*

*ஆத்திரம் கொள்வது தீங்கு வரும்*
*அதனால் வீண் பொல்லாங்கு!*
*பாத்திரம் அறிந்தே பழகு உன்*
*பகுத்தறிவே ஒன்று அழகு!*

*இனிய சொல்லையே புழங்கு அதை*
*இதயம் குளிர்ந்திட வழங்கு!*
*அணிந்துன் கருத்தினை முழங்கு நீ*
*தூய மனத்தோடு விளங்கு!*

*பணியும் உனக்குத் தேவை மிகப்*
*பலரின் உறவும் தேவை*
*இனி உன் காலம் நாளை இது*
*நீ ஏற்றம் பெறும் வேளை..!*

**எம். எப்சிபா விக்நேஷியா,**
தரம் 09,
முல்லோயா தமிழ் வித்தியாலயம்,
ஹேவாஹெட்ட.

## மாணவர் கழக அனுமதி

மாணவர் பெயர் ........................................
பிறந்த திகதி ........................................
வகுப்பு ........................................
பாடசாலை ........................................
........................................

........................................
வகுப்பாசிரியர் கையொப்பம்

**வர்ணப் புகைப்படம்**

**மாணவர் கழகம்**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834 கொழும்பு.**

## இவ்வார சிரிப்பு





தியாகராஜ் / சந்திரஜோதி,
பாமஸ்டன், தலவாக்கலை.






**எஸ். தனீஷா,**
தரம் 05 (E) A,
கொ/ பௌத்த பெண்கள் கல்லூரி,
கொழும்பு 07.



**ச. அக்ஷயன்,**
தரம் 08, சென். பெனடிக் கல்லூரி,
கொழும்பு 13.



**ஜே.எப். இல்மா,**
ப/ வெளிமடை முஸ்லிம் மகா வித்தியாலயம்,
வெளிமடை.



**கதீஜா அமீன்,**
தரம் 03, ஸாஹிரா ஆரம்பப் பாடசாலை,
தர்கா நகர்.

# விளையாட்டு

## இலங்கை அணியின் அனுசரணையாளராக ஜெட் ஹோல்டிங்ஸ்



இலங்கை மக்களின் மனம்கவர்ந்த கிரிக்கெட் விளையாட்டின் முன்னேற்றத்துக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் ஜெட் ஹோல்டிங்ஸ் நிறுவனம் 2020/2021 பருவகாலத்துக்காக எதிர்வரும்

மே மாதம் 31ஆம் திகதி வரை இலங்கை கிரிக்கெட் அணியின் வெளிநாட்டு சுற்றுப்பயணங்களுக்கான உத்தியோகப்பூர்வ அனுசரணையாளராக செயற்படவுள்ளது.

இலங்கையின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான ஜெட் ஹோல்டிங்ஸ் நிறுவனம், இறுதியாக நடைபெற்ற இலங்கை கிரிக்கெட் அணியின் தென்னாப்பிரிக்கா சுற்றுப்பயணம் மற்றும் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் இலங்கைக்கான சுற்றுப்பயணம் ஆகியவற்றின் பிரதான அனுசரணையாளராக செயற்பட்டிருந்தது.

கொரோனா வைரஸ் காரணமாக பல நிறுவனங்கள் நிதி நெருக்கடிக்கு மத்தியில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற இத்தருணத்தில் ஜெட் ஹோல்டிங்ஸ்நிறுவனம் இலங்கை கிரிக்கெட் அணிக்காக அனுசரணை வழங்குவதற்கு முன்வந்துள்ளமை பாராட்டத்தக்க விடயமாகும்.

இதன்படி, தற்போது நடைபெற்று வருகின்ற மேற்கிந்திய தீவுகள் சுற்றுப்பயணம் மற்றும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள பங்களாதேஷ் கிரிக்கெட் அணியுடனான டெஸ்ட் தொடருக்கான பிரதான அனுசரணையாளராக ஜெட் ஹோல்டிங்ஸ் நிறுவனம் செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறித்த அனுசரணை தொடர்பில் இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரி ஏஷ்லி டி சில்வா கருத்து தெரிவிக்கையில்,

தென்னாப்பிரிக்கா, இங்கிலாந்து அணிகளுடனான டெஸ்ட் தொடர், தற்போது நடைபெற்று வருகின்ற மேற்கிந்திய தீவுகள் அணியுடனான ரி 20 மற்றும் ஒருநாள் தொடர்கள், ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள பங்களாதேஷ் அணிக்கெதிரான டெஸ்ட் தொடர் என்பவற்று ஜெட் ஹோல்டிங்ஸ் நிறுவனம் அனுசரணை வழங்க முன்வந்தமை தொடர்பில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். கிரிக்கெட்டில் கூட்டாண்மை எப்போதும் முன்னுரிமை பெறுகிறது. இந்த கூட்டாண்மை இன்னும் இன்னும் வலுப்பெறும்போது, ஜெட் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் நாமத்தையும் சர்வதேச அளவில் பிரபல்யப்படுத்துவதற்கான வாய்ப்பு கிடைக்கு என நம்புகிறேன்.

முன்னதாக நடைபெற்ற லங்கா ப்ரீமியர் லீக் தொடர், 2017இல் நடைபெற்ற இலங்கை கிரிக்கெட் அணியின் அவுஸ்திரேலியாவுக்கான சுற்றுப்பயணம், பங்களாதேஷில் நடைபெற்ற BPL போட்டித் தொடர் உள்ளிட்ட பல முக்கிய தொடர்களில் ஜெட் ஹோல்டிங்ஸ் நிறுவனம் அனுசரணையாளராக செயற்பட்டது.

2020 – 2023 காலப்பகுதிக்கான இலங்கை கிரிக்கெட் அணியின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு அனுசரணையாளராக ITW Consulting தனியார் நிறுவனம் செயற்பட்டு வருவதுடன், அவர்களின் வழிகாட்டலுடன் ஜெட் ஹோல்டிங்ஸ் நிறுவனம் இலங்கை கிரிக்கெட்டுடன் கைகோர்த்துள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.



### மேற்கிந்திய அணியுடனான 2வது T20 போட்டி:

## இலங்கை அணி வெற்றி







மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான இரண்டாவது 20க்கு 20 போட்டியில் சுழல் பந்துவீச்சாளர்களின் முழுமையான பங்களிப்பு, தனுஷ்க குணதிலக்க மற்றும் பெதும் நிசங்கவின் ஆரம்ப இணைப்பாட்டத்தின் ஊடாக இலங்கை அணி 43 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதன்படி, களமிறங்கிய இலங்கை அணியில் நுவான் பிரீதீப்புக்கு பதிலாக லக்ஷான் சந்தகன் இணைக்கப்பட்டதுடன், மேற்கிந்திய தீவுகள் அணி மாற்றங்களின்றி களமிறங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இலங்கை அணியில், ஆரம்ப துடுப்பாட்ட வீரராக நிரோஷன் டிக்வெல்லவுக்கு, பதிலாக புதுமுக வீரர் பெதும் நிசங்க களமிறங்கினார். ஆரம்ப விக்கெட்டுக்காக மிகச்சிறந்த இணைப்பாட்டத்தை பெதும் நிசங்க மற்றும் தனுஷ்க குணதிலக்க ஆகியோர் வழங்கினர்.

தனுஷ்க குணதிலக்க தன்னுடைய 3வது 20க்கு20 போட்டியின் அரைச்சதத்தை பதிவுசெய்ததுடன், இலங்கை அணி 10 ஓவர்களில் விக்கெட்டிழப்பின்றி 96 ஓட்டங்களை குவித்தது. பின்னர், ஒரு சிக்ஸர் மற்றும் 4 பௌண்டரிகள் அடங்கலாக 37 ஓட்டங்களை பெற்றிருந்த பெதும் நிசங்க ரன்அவுட் மூலம் ஆட்டமிழக்க, 2 சிக்ஸர்கள் மற்றும் 4 பௌண்டரிகள் அடங்கலாக 56 ஓட்டங்களை பெற்றிருந்த தனுஷ்க குணதிலக்க, டுவைன் ப்ராவோவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

முதல் விக்கெட்டுக்காக அதிசிறந்த ஓட்ட எண்ணிக்கை பெறப்பட்ட போதும், இலங்கை அணியின் மத்தியவரிசை வீரர்கள் ஏமாற்றத்தை வழங்கினர். தொடர்ச்சியாக வருகைத்தந்த அனுபவ துடுப்பாட்ட வீரர்களான அஞ்சலோ மெத்திவ்ஸ், தினேஷ் சந்திமால் மற்றும் திசர பெரேரா ஆகியோர் ஓட்டங்களை பெறாமல், ஏமாற்றமளிக்க, ஓட்டவேகமும் குறைவடைந்தது.



புதுமுக வீரர் அஷேன் பண்டார 19 பந்துகளில் 21 ஓட்டங்களையும், இறுதிக்கட்டத்தில் வேகமாக துடுப்பெடுத்தாடிய வனிந்து ஹசரங்க 11 பந்துகளில் 19 ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க, இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில், 6 விக்கெட்டுகளை இழந்து 160 ஓட்டங்கள் என்ற போட்டி கொடுக்கக்கூடிய ஓட்ட எண்ணிக்கையை பெற்றுக்கொண்டது. பந்துவீச்சில் டுவைன் ப்ராவோ 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணியின் துடுப்பாட்ட வீரர்கள் இலங்கை அணியின் சுழல் பந்துவீச்சாளர்களை எதிர்கொள்ள தடுமாறியதுடன், அந்த அணி 18.4 ஓவர்களில் 117 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியை தழுவியது.

முதல் போட்டியில் அதிரடியான ஆரம்பத்தை பெற்றிருந்த போதும், இந்தப் போட்டியில் இலங்கை அணியின் பந்துவீச்சாளர்கள் மிக துள்ளியமாக பந்துவீசி ஓட்டங்களை கட்டுப்படுத்தினர். அது மாத்திரமின்றி சீரான இடைவெளிகளில் விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

மேற்கிந்திய தீவுகள் அணி சார்பாக பத்தாம் இலக்க துடுப்பாட்ட வீரர் ஒபெட் மெக்கோய் அதிகபட்சமாக 7 பந்துகளில் 23 ஓட்டங்களை பெற்றதுடன், லெண்டல் சிம்மன்ஸ் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்.

இலங்கை அணியின் பந்துவீச்சில் சுழல் பந்துவீச்சாளர்கள், மேற்கிந்திய தீவுகள் அணிக்கு அதிகமாக நெருக்கடி கொடுத்திருந்த நிலையில், வேகத்தில் துஷ்மந்த சமீர மிரட்டியிருந்தார். அதிகபட்சமாக லக்ஷான் சந்தகன் மற்றும் வனிந்து ஹசரங்க ஆகியோர் 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதுடன், துஷ்மந்த சமீர 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இலங்கை அணி கடந்த 2019ம் ஆண்டு பாகிஸ்தானில் வைத்து 20க்கு 20 தொடர் வெற்றியை பெற்றிருந்தது. அதற்கு பின்னர் நடைபெற்ற 8 20க்கு20 போட்டிகளில் தோல்வியுற்றிருந்த நிலையில், இன்றைய தினம் நீண்ட இடைவெளிக்கு பின்னர் 20க்கு20 போட்டியொன்றில் வெற்றியை தக்கவைத்துள்ளது.

தொடரில் இலங்கை அணி பெற்றுக்கொண்ட இந்த வெற்றியுடன் 1-1 என தொடர் சமனிலையை எட்டியுள்ளதுடன், தொடரை தீர்மானிக்கும் 3வது போட்டி நாளை (08) நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### இலங்கை அணி

நிரோஷன் டிக்வெல்ல, தனுஷ்க குணதிலக்க, பெதும் நிசங்க, தினேஷ் சந்திமால், அஞ்செலோ மெதிவ்ஸ் (தலைவர்), அஷேன் பண்டார, திசர பெரேரா, வனிந்து ஹசரங்க, அகில தனன்ஜய, துஷ்மந்த சமீர, லக்ஷான் சந்தகன்

### மேற்கிந்திய தீவுகள் அணி

லெண்டல் சிம்மன்ஸ், எவின் லிவிஸ், க்ரிஸ் கெயில், நிக்கோலஸ் பூரன், கீரன் பொல்லார்ட் (தலைவர்), ஜேசன் ஹோல்டர், பெபியன் எலன், டுவைன் பிராவோ, கெவின் சென்கிலையர், ஒபெட் மெக்கோஸ், பிடெல் எட்வர்ட்ஸ்

## மைதானங்களின் தேவை அதிகரிக்கும் போது வைத்தியசாலைகளின் தேவை குறையும்!

### பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ



யுத்தத்தை வெல்வதற்கான பொறுமையும், போராடும் குணமும், தேகாரோக்கியமும் இராணுவ வீரர்களுக்கு விளையாட்டுக்களின் மூலமே கிடைத்தது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ "கிராமத்துக்கு ஒரு மைதானம்" என்னும் வேலைத்திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் 332 மைதானங்களை அடிப்படை வசதிகளுடன் அபிவிருத்தி செய்யும் நோக்கில் அலரி மாளிகையில் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். அங்கு மேலும் கருத்துத் தெரிவித்து உரையாற்றிய பிரதமர்:

கடந்த வாரம் இலங்கைக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்ட பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் கூறும் போதும் ஆரம்ப காலத்தில் எனது கட்சி தோல்வி கண்ட போதும் தொடர்ந்து முயற்சி செய்து பிரதமராவதற்கு உந்து சக்தியாக இருந்தது ஆரமப காலத்தில் விளையாட்டின் மூலம் வளர்த்துக் கொண்ட சகிப்புத்தன்மையும் போராட்ட குணமுமாகும் எனத் தெரிவித்தாகவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

விளையாட்டு மைதானமொன்றை அமைக்கும் போது அப்பிரதேசத்தில் ஒரு வைத்தியசாலையை அமைக்கும் தேவை குறையும் எனவும் பிரதமர் இதன் போது தெரிவித்தார்.

எமது பெற்றோர்கள் அன்றாடம் கூறும் ஒரு கருத்துத்தான் தற்போதைய இளைய தலைமுறையிடம் சகிப்புத் தன்மை இன்மை, பிறரை மதிக்கும் மனப்பான்மையின்மை, எதற்கெடுத்தாலும் பதற்றப்படும் நிலைமை வளர்ந்து வரும் இளைஞர் யுவதிகளிடம் காணப்படுவாகவும், கைத்தொலைபேசிப் பாவனை, லெப்டொப் போன்றவைகளினால் அவர்களின் இளமைக்காலம் வீணாகக் கழிகிறது என பல பெற்றோர்கள் அங்கலாய்க்கன்றனர். வேறு சிலர், மதுவிலும், போதை பொருளிலும் இளம் சமூகம் அழிகிறது என புலம்புகின்றனர். இவர்கள் இப்படி தமது பிள்ளைகளை நினைத்து கவலைப்படுகின்றார்களே தவிர அதற்கான காரணத்தை தேடிப்பார்க்க அவர்கள் முனைகிறார்கள் இல்லை.

முன்பு இந்நாடே ஒரு விளையாட்டு மைதானமாகவே இருந்தது. அக்காலத்தில் விசாலமான வீட்டுத் தோட்டங்கள் இருந்தது. மாலை வேளையில் இளைஞர் அத் தோட்டங்களில் எல்லா வகையான விளையாட்டுக்களிலும் ஈடுபடுவார்கள். ஆனால் நாம் இன்று பாதையில் போதும் போது பார்க்கக் கூடிய ஒரு காட்சிதான் பாதையின் இரு மருங்கிலும் வானுயர்ந்த கட்டிடங்கள் அமைந்துள்ளன. இது கிராமம், நகரம் என்ற பாகுபாடின்றி எல்லா இடங்களிலும் காணக்கிடைக்கின்றன. தற்போதைய பெற்றோர்களிடம் வாகன தரிப்பிடம் ஒன்றை அமைக்கும் இடத்தை ஒதுக்கும் மனநிலை உள்ளதே தவிர பிள்ளைகள் கூடி விளையாடுவதற்கான ஒரு இடத்தை ஒதுக்கும் மனநிலை இல்லை. அதனால்தான் இன்று எமது நாட்டிலுள்ள மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

ஒரு ஊரில் பாடசாலை ஒன்றைத் திறந்தால் சிறைக்கூடம் ஒன்று மூடப்படும் என்ற வழக்குமொழியொன்று உள்ளது. அதே போல் விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்கும் போது வைத்தியசாலைகளின் தேவைகள் குறைகிறது. விளையாட்டின்



மூலம் தேகாரோக்கியம் பெருகுவதால், நோயாளிகள் குறைவடைகின்றனர். இன்று எமது நாட்டின் ஆயுள் காலம் 80 வயதைத் தாண்டியதாகவுள்ளது. அந்த 80 வயதிலும் சுகதேகியாக வாழ்வதற்கு விளையாட்டுகள் துணை புரிகின்றன.

விளையாட்டுக்கள் காலத்தை வீணாக்கும் செயல் என்று கூறும் பெற்றோர்கள் எமது மத்தியில் உள்ளனர். ஆனால் இன்று விளையாட்டுக்கள் உலகளவில் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. வர்த்தக ரீதியாகவும் இன்று விளையாட்டு வளர்ந்துள்ளது. இன்று பெரும் பணக்காரர்களாக விளையாட்டு வீரர்களும் உள்ளனர். ரொனால்டோ, லயனல் மெஸி, வீனஸ் வில்லியம், பெடரர், ஹெமில்டன், கோஹ்லி என பெயர் பட்டியல் நீளுகிறது. விளையாட்டுக் கழகங்களை வழி நடாத்தும் பெரும் பணக்காரர்களின் பட்டியலும் நீளுகிறது. எனவே விளையாட்டு என்பது உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதோடு பெரும் பணக்காரர்களாகவும் விளையாட்டு வீரர்களை உருவாக்கும்.

தற்போது எமது நாட்டில் 30 விளையாட்டுடன் கூடிய பாடசாலைகள் உள்ளன. இந்நிலைமையை எதிர் காலத்தில் இன்னும் அதிகரிக்க நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இன்று எமக்குக் கிடைத்துள்ள விளையாட்டு அமைச்சர் சிறந்த விளையாட்டு வீரர். நான் தந்தையாக இருந்த காலத்திலும், எம்.பி.யாக, அமைச்சராக, பிரதமராக, ஜனாதிபதியாக இருந்த போதும் நாமல் ராஜபக்ஷ பங்குகொள்ளும் ஒவ்வொரு போட்டியையும் கண்டு ரசிக்க மைதானத்துக்கு செல்வேன். அங்கு கிடைக்கும் அனுபவங்கள் எங்கள் வாழ்க்கையை திறம்படக் கொண்டு செல்வதற்கு உதவியாக இருக்கும்.

என்னால் இப்போது உணர முடிகின்றது. நாமல் ராஜபக்ஷ ரக்பி வீரராக இருந்து மைதானத்தில் ஓடியதை விட தற்போது எமது விளையாட்டுத்துறையை முன்னேற்றுவதற்காக ஓய்வில்லாமல் ஓடுகிறார். அவருக்கு இந்தளவு சுறு சுறுப்பாக இயங்குவதற்கும், அநீதிகளை எதிர்த்துப் போராடுவதற்குமான மன வலிமையையும், உடல் வலிமையையும் கிடைத்திருப்பது அவர் ஒரு விளையாட்டு வீரராக இருந்தமையினால்தான் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இலங்கை விளையாட்டு வரலாற்றில் முதல் தடவையாக கிராம விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத் திட்டம் மட்டுமல்ல பிரதமர் மற்றும் ஜனாதிபதியின் தலைமையின் கீழ் அவர்களின் கண்காணிப்பின் கீழ் தேசிய மற்றும் சர்வதேச வெற்றிகளை நோக்கி பயணமாவதோடு புதிய விளையாட்டு காலாசாரமொன்றையும் உருவாக்குவோம் என இக்கூட்டத்தில் உரையாற்றிய இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

விளையாட்டுக் கலாசாரத்தின் மூலம் கட்டுக்கோப்பான மற்றும் ஆரோக்கியமான ஒரு சமுதாயத்தை உருவாக்குவதோடு, வர்த்தக ரீதியாக விளையாட்டை முன்னேற்றுவதற்கும் நாம் எதிர்பார்த்துள்ளோம்.

இதன் முதற்கட்டமாக கிராமிய விளையாட்டு, பாடசாலை விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்யும் முகமாக ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆலோசனையின் பேரில் விசேட இராஜாங்க அமைச்சொன்றை உருவாக்கியுள்ளோம். அதனடிப்படையில் இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே தலைமையின் கீழ் நாடுபூராவுமுள்ள பிரதேச சபை, நகர சபைகளிலுள்ள எல்லா விளையாட்டுக் கழகங்களையும் இணைத்துக் கொண்டு கிராம விளையாட்டை முன்னேற்றுவதற்காக நாம் முயற்சிப்போம். புதிதாக ஆரம்பித்துள்ள இந்த வேலைத் திட்டம் எதிர்காலத்தில் சிறந்த ஒரு விளையாட்டுடன் கூடிய இளைய தலைமுறையை உருவாக்க முடியும் என நாம் நம்புகிறோம். இவ்வேலைத்திட்டத்துடன் இணையுமாறு கிராமிய இளைஞர் விளையாட்டுக்கழங்களுக்கும், இளைஞர், யுவதிகளுக்கும், பெற்றோருக்கும் விளையாட்டுத்துறை அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.










# துரிதமாக அழகு படுத்தப்படும் மட்டுநகர்

வீடு முதல் நாடு வரையில் அனைத்து இடங்களையும், சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்திருக்க வேண்டிய தலையாய பொறுப்பு அனைவரிடமும் உள்ளது. அந்த வகையில்தான் நாட்டில் உள்ள அனைத்து பொது இடங்களிலும், தனியார் இடங்களிலும் உள்ள மதில்கள், சுவர்கள் என அனைத்திலும் வர்ணப்பூச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டு நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களும் புத்தெழுச்சியுடன் மிளிர்வதை அவதானிக்க முடிகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனையின் அடிப்படையில் நகரங்களை அழகுபடுத்தும் வகையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேசங்களிலும் தற்போது சுவர் ஓவியங்கள் வரையப்பட்டு அழகுறக் காட்சியளிப்பதை அவதானிக்க முடிகின்றது.

மட்டக்களப்பு புற நகர்ப்பகுதியான பிள்ளையாரடி பிரதேசத்தில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சுற்று மதிலில் இலங்கையின் புராதன அபிவிருத்தி நிகழ்வுகளை சித்தரிக்கின்ற ஓவியங்களும், மட்டக்களப்பு நகரிலுள்ள பொலிஸ் விடுதி மதில்கள், வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக் கழகத்தின் சுவர்கள், மற்றும் பாடசாலை, சுவர்கள், தனியார் மதில்கள் உள்ளிட்ட இன்னோரன்ன பகுதிகளில் மட்டக்களப்பு மாவட்டத்தின் தொன்மைகளை எடுத்தியம்பும் வகையில் சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் எண்ணக்கருவிற்கமைய நாட்டைத் தூய்மைப்படுத்தும் செயற்பாட்டை அனைவரும் வரவேற்றுள்ளனர். ஆனாலும் இவ்வாறு சுவர்களில் வரையப்படும் புராதன கலைப் படைப்புக்கள், தொன்மையான விடயங்கள், மாவட்டத்தைச் சித்தரிக்கும் ஓவியங்களாக வரையப்படுமானால் இலங்கையிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுலாத் துறையினரைக் கவர்வதற்கும், தற்போதைய சந்ததியினர் ஓவியங்கள் வாயிலாக வரலாற்றை அறிந்து கொள்வதற்கும், ஏதுவாக அமையும்.

எது எவ்வாறு அமைந்தாலும், தமது வீட்டுச் சூழல் உட்பட அனைத்து இடங்களையும், அவரவர் தாமாகவே உணர்ந்து காலத்திற்குக் காலம் சுத்தமாகவும், சுகாதாரமாகவும், வர்ணங்கள் பூசி இவ்வாறு பிறருக்கும் பயன்படும் வகையில் ஓவியங்களை வரைந்தும் காட்சிப்படுத்தும் பழக்க வழக்கங்களை கைக்கொள்ள வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளை தற்போதுள்ள இளைஞர்களும் பெரியவர்களும், கைக்கொள்ளும் பட்சத்தில் வருகின்ற புதிய சந்ததியினரும் அதனைக் கைக்கொள்வர்கள் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

வ.சக்திவேல்

## வாழ்வாதாரமா சேதாரமா

169



தமிழ்க் கவி பேசுகின்றார்

# கணவனின் அராஜகங்களை நியாயப்படுத்தும் மனைவியின் விட்டுக்கொடுப்பு



நாளை விடிந்தால் சர்வதேச மகளிர்நாள். அனைத்து உலகத்திலும் பெண்கள் கொண்டாட வேண்டிய, பெண்களை போற்ற வேண்டிய நாள். இத்தினத்தை அகில இலங்கை மட்டத்திலுள்ள அரச அலுவலகங்கள் முன்னேற்பாடுகளுடன் அனுட்டித்தும் வருகின்றன.

என்ன ஒரு குறை அத்தினத்திலல்லாது அத்தினத்தை முன்னிட்டோ பின்னிட்டோ நிகழ்ச்சிகள் ஒழுங்கமைக்கப்படுகின்றன. பெண்கள் தமக்கான உரிமைகளை வென்றெடுத்தமைக்காக இந்தநாள் கொண்டாடப்படுகிறது. சம வேலை வாய்ப்பு சம ஊதியம், சம வேலை நேரம் என்பவற்றுக்கான போராட்டத்தின் வெற்றி நாள் இது.1975ம் ஆண்டு இலங்கையில் மகளிர் ஆண்டாக பிரகடனப்படுத்தப் பட்டது.

பெண்கள் வலிமை குறைந்தவர்கள் ஆதலால் ஒரு ஆணுடைய வேலை நேரத்தை விட அவர்களை அதிக நேரம் உழைக்க கட்டளையிடப்பட்ட காலம் இருந்தது. அப்போதும் அவர்கள் தமது வீட்டு வேலைகளை அவர்களே முடித்துவிட்டு, நெடுந்தூரம் சென்று நீர் கொண்டு வரவும், விறகுகள் சேகரிக்கவும் அதன்பிறகு பண்ணைகளில் வேலை செய்யவும் வேண்டியிருந்தது. இதை அவர்கள் செய்தே ஆகவேண்டிய நிலையில் அவர்களுக்கான கூலியும் மிக குறைவாகவே இருந்தது.

இவர்களுக்காக கோப்பன்ஹேகன் நகரில் கிளாரா செட்கின் அம்மையார் தலைமையில் நடந்த போராட்டங்கள்(1911) பெற்ற வெற்றி இப்போதுள்ளது போல அவ்வளவு பெரிய வெற்றியல்ல என்றாலும் அது ஆரம்பப்படியாக இருந்தது.. படிப்படியாக பெண்கள் கல்வி கற்கும் உரிமையை பெற்றனர். வெளியே சென்று வேலை பார்க்க முடிந்தது. எனினும் வாக்குரிமை பெற நீண்டகாலம் சென்றது. முதன்முதலாக வாக்குரிமை பெற்ற பெண்களாக டென்மார்க், இலங்கைப் பெண்களே இருந்தனர். அதன்பின்னராக வுட்ரோ வில்சன் ஜனாதிபதியாக அமெரிக்காவை ஆண்ட போது அமெரிக்கப் பெண்களுக்கும் வாக்குரிமை வந்தது. அதிலும் பல சிக்கல்கள் இருந்தன. அது தனிக் கட்டுரையாக வேண்டிய விடயம்.

இன்றைக்கும் அடிப்படை உரிமைகளைக் கூட அனுபவிக்காத பெண்கள் நம்மிடையே உண்டு. பெண்களுக்கு சட்டம் தன்னாலியன்றளவு பாதுகாப்பை வழங்கியுள்ளது. ஆனால் அதை பெறவோ, அணுகவோ சாமானியப் பெண்களால் முடியாதுள்ளது. பெண்கள் சிறுவர் துஸ்பிரயோகங்களை கவனிக்க, தவிர்க்க ஊர்கள்தோறும் அமைப்புகள் இருக்கின்றன. ஆனால் அவற்றை அணுகுவதும் சாதாரணப்பெண்களால் இயலாத காரியமாக உள்ளது. அவர்களுக்கு நியாயம் வேண்டும். அவர்களுக்கான பாதுகாப்பு உண்டு ஆனால் தினம் வதைபடுவதை சகித்துக் கொண்டே வாழ்வதை அவர்கள் விரும்புகிறார்களா என எண்ணத் தோன்றுகிறது. தான் பெற்ற மகள் பூரண உரிமைகளோடு வாழ வேண்டும் என விரும்புகிற ஆண்கள் நிறைய இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் தாம் நினைத்த அந்த சுதந்திரத்தில் எத்தனை வீதம் தமது மனைவிக்கு கொடுக்கிறார்கள். என்பதை கணக்கெடுத்தோமானால் அதிர்ச்சிதான் மிஞ்சும். இப்படித்தான் அடித்தளப் பெண்களுக்கு மகளிர்தினம் பற்றிய அறிவும் உள்ளது. படித்த அரசியலில் உள்ள பெரும் பதவிகளில உள்ள பெண்களுக்கே மகளிர்தினம் வருகிறதோ என்ற ஐயம் எனக்குண்டு.

பெண்களின் பெருமைபற்றியும் அவர்களுடைய அர்ப்பணிப்பு பற்றியும் நூற்றுக்கணக்கான புத்தகங்கள், பத்திரிகை, கட்டுரைகள், வெளிவந்திருக்கின்றன. வந்து கொண்டுமிருக்கின்றன. அவற்றை வாசித்தறிய வேண்டிய சாதாரண பெண்கள். கைகளுக்கு அவை கிடைப்பதில்லை. வாசிப்பு எனபதை அறவே அவர்கள் செய்வதில்லை. அதற்கு அவர்களுக்கு நேரமுமில்லை. அவர்களை கவர்வதெல்லாம் தொலைக்காட்சிகளே.

தொலைக்காட்சி நாடகங்களே இன்றைய பெண்களுக்கான உபதேசியார். எல்லாத் தொடர்களிலும் கதாநாயகி உண்மையை தெரிந்து கொண்டாலும் அதை வாய்திறந்து யாருக்கும் கூறமாட்டாள். கூறக்கூடாது. வில்லியாக வருபவளும் பெண்ணே. கல்யாணமான ஒருவனை அவனுடைய குடும்பத்தை கலைத்து வேறொரு பெண் அந்த ஆணை அடைய முயல்வாள். .பொதுவாக இப்படி ஒரு பாத்திரம் இல்லாத நாடகங்கள் கிடையாது. என்ன நடந்தாலும் கோவில் பூசை விரதம், பரிகாரம் என்று செய்து கொண்டே அநீதியை சகித்துக் கொண்டும், வீட்டு வேலைகளை முழுது மாக தன்மீது இழுத்துப் போட்டுக் கொண்டும். இருக்க வேண்டும் கணவனையோ, மாமியாரையோ, எதிர்த்து பேசாமல், அது எவ்வளவு படித்த பெண்ணாக இருந்தாலும் தான் மௌனமாக கண்ணீர் விட்டுக் கொண்டே வாழ வேண்டும். எவ்வளவுதான் கொடுமை நடந்தாலும் விட்டைவிட்டு பெற்றவர்களிடம் வரக்கூடாது. பெற்றாரும் ஏற்க மாட்டார்கள். எல்லாத் தொடர்களிலும் பேசாமடந்தைகளாக வந்தால் அவள்தான் உத்தமபத்தினி.

ஊருக்குள் என்ன நடக்கிறது சொந்த உழைப்பைக்கூட தனது விருப்பப்படி செலவிட முடியாது. கணவன் உழைப்பதில் பெரும்பகுதியை குடித்துவிட்டு வருவான். மனைவி உழைக்கும் பணத்தில் குடும்பம் நடக்கும்.

எனக்கு தெரிந்த ஒரு சமூக சேவகி ஓடியோடி ஊருக்கு ள் வேலை செய்வாள் மாலை ஐந்து மணியானால் என்ன வகையிலும் அவளை தடுக்க முடியாது வீட்டுக்கு ஓடிவிடுவாள். ஆறுமணிக்குள் வீட்டில் இருக்க வேண்டும் என்பது அவளுடைய கணவனின் கட்டளை. இத்தனைக்கும் அவள் ஒரு பட்டதாரி ஆசிரியராக இருந்தாள். கலியாணத்துக்குப்பின் அவளை வேலையை விடச்சொல்லி விட்டான் கணவன். அவன் சாதாரண சங்கக்கடை மனேஜர்தான். ஆனால் மனைவி சம்பாதித்தால் கணவனை மதிக்க மாட்டாள் என்பது அவனுடைய கருத்து. வீட்டைக்கவனிக்கவும் கணவனுக்கு தொண்டு செய்யவும் பட்டப்படிப்பு முக்கியமா என்பது எனக்கு தெரியவில்லை. இது ஒரு வகை.

போர் நடந்து கொண்டிருந்தது. மடு தேவாலய வளாகத்தில் முப்பத்தையாயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் இருந்தன. அறுபது எழுபதடி நீண்ட கொட்டகையை பிரித்து பத்துக்குபத்தடி பரப்பளவுள்ள அடைப்புகள் ஒவ்வொரு குடும்பத்துக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. எல்லாக் கொட்டகையும் ஒரேமாதிரி. எங்கோ தொலைவுக்கு வேலைக்குப் போன கணவன் வீட்டின் அடையாளம் தெரியாமல் போதையில் பக்கத்து வீட்டுக்குள் நுழைந்தான். மனைவியும் பிள்ளைகளும் உறங்கிக் கொண்டிருந்தனர். இவன் பக்கத்திலேயே படுத்து விட்டான். அவர்களை எழுப்பவில்லை .சற்று நேரத்தின் பின் அந்த வீட்டின் உண்மையான கணவன் வந்தான். தனது இடத்தில் வேறு யாரோ கிடப்பதைக் கண்டதும் வாசலில் கிடந்த பொல்லை எடுத்து குழறியபடியே வீச முன்னர் வந்தவன் எழுந்து வெளியே ஓடிமறைந்தான். ஆனால் இவன் மனைவியை சந்தேகித்து சரமாரியாக திட்டி அடித்து அதகளம் பண்ணிவிட்டான். அவனும் போதையில் தான் இருந்தான்.

விடிந்ததும் பக்கத்துக் குடிசைகளில் கோழி வைத்திருப்பவர்களிடம் போய் இந்த அடிபட்ட பெண், "அக்கா முட்டையாக்கா இருக்கு" என்று விசாரிக்கிறாள் ஒரு நாலைந்து வீடு தள்ளி இரண்டு முட்டைகளை வாங்கிக் கொண்டு வந்தவளை நான் கேட்டேன். "என்ன மாலா முட்டையோட"? என்று அவள் கன்னம் கைகள் எல்லாம் அடிபட்ட தழும்பு புடைத்திருந்தது. அவள் சொன்னாள்.

" அக்கா வேலைக்கு போற மனிசனக்காராராவா கமறிக் கொண்டு கிடந்தாரக்கா ஒரு முட்டைக்கோப்பி போட்டு குடுக்கவக்கா பாவம்." என்றாள். அவளுடைய புருசன் இதையெல்லாம் பார்த்து கொண்டு வாசலில் பரிதாபமாக குந்தியிருந்தான்.

இவளிடம் போய் நான் பெண்ணுரிமைபற்றி பேசமுடியுமா? இன்னும் இதேபோல ஏராளமான சம்பவங்களை நான் கண்டிருக்கிறேன் உண்மையான அன்பு புரிந்துணர்வு ஒருவருக்கொருவர்விட்டுக்கொடுப்பு என்பனபல அராஜகங்களை நியாயப்படுத்தி விடுகிறது.

போரிலேயே பங்கு கொண்டு பெண் விடுதலையுடன் மண் விடுதலையையும் மீட்போம் என்ற கோசத்தோடு களமிறங்கிய பெண்களில் பத்து சதவீதம்கூட தமது ஆளுமையை, தீர்மானிக்கும் ஆற்றலை, படைநடத்திய மாண்பை திருமணத்தின் பின் நிலை நிறுத்த முடியாமல். வீட்டுக்குள் முடங்கிப்போயினர்.

## நினைவின் தாழ்வாரங்கள்

– நபீல்

# வேரும் கிழங்கும்



அரளிப் புதருக்குள் விழுந்த பனம்பழம் புண்டு போயிருந்தது. இன்று போலிருக்கிறது. ஆவணி மாதம் வந்தால் வாப்பாவிடம் சொல்லித் தோல் செருப்பு வாங்குவேன். அதற்காக நொண்டி நொண்டி நடந்து பனம்பழம் பொறுக்கவும் முதல் மழைக்கு வேர் பிடித்திருக்கும் பனங்கிழங்கு பிடுங்கவும் எனக்குப் பழகிப் போனது. அப்படிதான் குதி காலில் முள்ளுக் குத்தி விட்டதென்றால் காலைப் பிடித்துக்கொண்டு சுடுமணலில் உட்கார்ந்து விடுவேன். பெறண்டையைக் கல்லில் வைத்துத் தட்டி உள்ளங்காலில் ரத்தம் வரும் இடத்தில் தேய்த்து விட்டால் ரத்தம் மூச்சுப் பிடித்த மாதிரி நிற்கும். இல்லையென்றால் முள்ளுக் குத்திய வாயை முள்ளாலேயே குத்தி விட்டு எருக்கலம்பாலை வைப்பது தான். விடிவதற்குள் முள்ளு வெளியே வந்து விடும்..

குருத்து ஓலை மேலே வராமல் பதமான ஆழத்துக்குக் கிழங்கு இறங்கியிருக்கும். பொது பொதுன்னு முழங்கால் வரை புதையும் களி மண்ணைத் தோண்டிப் பலம் கொண்ட மட்டும் இழுத்து எடுப்போம். கிழங்கோடு வெளியேறும் பனங்கொட்டையை அருவாளால் பிளந்தால் கல்கண்டு மாதிரி உள்ளே சீம்பு இருக்கும். அது அவ்வளவு ருசி. இப்போது நினைத்தாலும் வாயில் எச்சில் ஊறுது..

"அடியே முந்தநாத்து முளைத்த பனங்கொட்டைக்கு வாயாம் வாய்.." எனறு பக்கத்தில் கிழங்குக்காரிச் சாலிஹா கத்துவது யாரோ அவரைத் தனகி விட்டான் என்று புரிகிறது. கிழங்கும் வேருமான வாழ்வு அவருடையது. வழக்கத்தை விட அன்று சற்றுக் கனமான சுறுளித் தலையை மீண்டும் மீண்டும் வாருவதும் கலைப்பதும் இடது புறம் வலது புறம் திரும்பியும்

நிலைக்கண்ணாடிக்கே கழுத்து வலிக்கும் அளவுக்கு அந்தக் கொஞ்ச நஞ்ச முடியையும் படாதபாடு படுத்திக்கொண்டிருந்தார். காலையில் மூன்று சாக்குகளில் அடைந்திருந்த மரவள்ளிக் கிழங்கு நேர காலத்தோடு விற்றுத் தீர்ந்த சந்தோசமாகவும் அது இருக்கலாம். ஏழே கால் றாத்தல் நிறையுள்ள ஒரு தூக்குக் கிழங்கு, அந்நாளில் இரண்டு ரூபாய்தான். அவரிடம் விலையைக் குறைத்து யாரும் கேட்டுவிட்டால் போதும் நெருப்புத் துண்டம்போல மாறி விடுவார்...

எங்கள் ஸ்கூலுக்குக் கிழக்கே புளிய மரத்து நிழல்தான் அவரின் சமையல் கூடம். கூடப் படிக்கின்ற தோழர்களோடு சேர்ந்து மதிலால் ஏறிக் குதித்து அங்கு சென்றால் சாலிஹாவோடு இன்னும் சில பெண்கள் கூடி வெங்காயம் அரிந்து கொண்டிருப்பார்கள். பொழுது சித்திரைக் கோடையாக இருந்தால் பட்டறைபோட்டு வைப்பதற்கான வேலைகள் நடக்கும். கூட மாட நாங்களும் நிற்போம். சேமித்து வைக்கின்ற வெங்காயத்தின் தலையை மட்டும் அரிந்தால்போதும் அப்போதுக்கப்போது விற்பதென்றால் தழையும் வேரும் அரியனும் என்று கட்டளையிடுவார்கள்,..

வெள்ளாடு வேலங் காய்க்கு ஓடுவதுபோல தை மாசி மாதங்களில் தாமரைக் கிழங்கு தேடி குளக்கரைப் பக்கம் மேய்ந்து திரிவோம். மின்ன மரத்தின் மேலே உயரமாகச் சூரா முள்ளு படர்ந்த்திருக்கும். மெல்ல நீவி உள்ளே நுழைவோம். சில காய்ந்த கிழவன் கட்டைகள் 'குளத்தை' போய் இருப்பார்கள். இரண்டு பேரின் ஒரே இழுவையில் கிழங்கு நெட்டி உடைந்து வரும். தென்னை மரத்தடியில் பன்னாடையும் காய்ந்த பாளைகளும் விழுந்து கிடக்கும். கல்லடுக்கிப் பானை வைத்து அவித்து உண்போம்..

"கொம்பன் யானை கோடு கீறு. கொம்பன் யானை கோடு கீறு" என்று கிடுகு வேலிக்குள் சின்னஞ் சிறிய கொம்பு வண்டை வைத்து விரலால் வளையம் போடுவோம். அப்போது வண்டு குழிபோட்டு மண்ணை ஆழத் துளைத்துச் செல்லுகையில் வெள்ளை வெள்ளையாக வேர்கள் எதிர்ப்படும். அவைதான் அறுலோட்டுக் கிழங்கு; இறாலின் ஓடுபோல் மேல்தோல் தெரியும். இதனைக் காயவைத்து இடித்து டப்பாக்களில் அடைத்து சில வீடுகளில் விற்பார்கள். "அவளை மாதிரி முடியாது.." என்ற பெயர் பெற்ற பெண்களும் ஊருக்கு நாலு பேர் இருப்பார்கள். யாரும் சொல்லித் தராத பிழைப்புக்கான வேலையாக இதனைப் பழகியிருந்தோம். பிடுங்கிச் சிறு கோணியொன்றில் கட்டி கடைகளுக்குக் கொண்டு செல்லும் வழியில், குயில் குஞ்சென்று அறிந்ததும் காகம் விரட்டி விரட்டிக் கொத்தும். சமயம் பார்த்துக் குஞ்சைக் காப்பாற்றிக் கூட்டிச் செல்லத் தாய்க் குயில் வந்திருக்கும். "மனிஷனோட பிழைப்பும் காகம் மாதிரித்தான்" என்று பேசிக்கிட்டே போவோம்...

தோட்டத்துப் பந்தலுக்குள் படுத்திருந்த செவளை நாய் குரைத்துக்கொண்டே ஓடி வந்து தன்னை அப்பச்சிக்கு அடையாளம் காட்டியது. இரண்டு சோடி மாடுகள் வாய்க்கூடை கட்டியிருந்ததால் வாயில் நுரை வடிய சிரமப்பட்டு அசை போட்டன. அங்கே குவிந்து கிடந்த வெற்றிலை வள்ளிக் கிழங்குகள் மனிதர்களின் கால் கைகள், சிறு குழந்தைகள் போன்றும் தெரிந்தன. கொடி வகையைச் சேர்ந்த தாவரம், கொடியிலும் வேரிலும் கிழங்குகள் தோன்றுவதே அதன் அதிசயம். குழந்தையொன்றை இடுப்பில் வைத்துக்கொண்டு நட்டால் குழந்தைகள் மாதிரியே இந்தக் கிழங்குகளும் செழித்து வளருமாம் எனறு சொல்லியே என்னை அழைத்து வந்திருக்கிறார். இரண்டொரு மணித்தியாலங்கள் அப்பச்சியின் இடுப்பில் சவாரி செய்தபோது எனக்குள் கிளுகிளுப்பாகவே இருந்தது...

"கொட்டிக் கிழங்கிருக்கு கோ.." என்று குளக்கரையை ஒட்டிய புறத்திலுள்ள சதுப்பு நிலங்களில் இறங்கிப் போயிருக்கும் இக் கிழங்கினத்தை அகன்று அவித்தெடுத்து ஓலைப் பெட்டிகளில் வைத்துத் தெருவில் பெண்கள் கூவி விற்பார்கள். கொட்டிக் கிழங்கென்றால் எனக்கு உசிர்தான். உம்மா வாங்கி ஒரு சுளகில் பரப்பி அதன் கறுப்புத் தோலை நீவிக் கிழங்கை முந்தானையில் துடைத்து விட்டுத் தந்தால் அதன் பால்சுவையை இரண்டு மடங்காக உணர்வேன்... நீரின் மட்டம் வரை, கிட்டத்தட்ட ஆறு அடி அளவிற்கு வளரக் கூடியது. அல்லி, தாமரைகள்போல காற்று அறைகளுடன் கூடிய தண்டுகளைக் கொண்டது; குளம் வற்றிய காலங்களில் கிழங்குகளில் சேறு மூடிக் காய்ந்துபோகும். பல வருடங்கள் கழித்து மழை பெய்தால் கூட மறுபடியும் துளிர்விடும் நீண்ட ஆயுளுடையது. கொட்டிக் கிழங்கு கெண்டிவரப் போனவர்கள் நிறையக் கிழங்குகள் கிடைத்து விட்டால் அந்தச் சந்தோசத்தில் அல்லித் தண்டுகளைச் சின்னச் சின்னதாக உடைத்து அல்லி மாலைகளாகக் கழுத்தில் அணிந்து கொண்டு வருவார்கள்..

அக்காலங்களில் கிழங்குச் சேனைகளில் 'கிழங்கு மடை' என்ற பெயரில் புதிரில், சாகுபடி செய்த கிழங்கு வகை சந்தைக்கு அனுப்புவதற்கு முன்னர் பிரமுகர் ஒருவர் வரவழைக்கப்பட்டுக் காரியங்கள் நடந்தன; பாரம்பரியமாக விவசாயம் பேணுகின்ற வம்சத்தில் மாந்திரீகமும் வைத்தியமும் எப்படியோ வந்து ஒட்டி விடுகிறது. தோட்டத்துக்குக் கொஞ்சம் தள்ளி வாய்க்கால் நெடுகிலும் தென்னை மரம், அதனோரம் கேட்ட விருத்தம் முடிந்து காற்றின் சுழற்சி அடங்கிற்று. முன்னே மீசை முறுக்கிக் கொடுவாள் தூக்கிய ஒரு ரூபம் நின்றது; அதுதான் அந்தப் பிரமுகர் என்று யூகிக்க மீசை முடியும் கிருதா நீளமும் போதுமானதாகத் தெரிந்தது. அதன் காலடியில் மாமாவின் தோட்டத்தில் பிடுங்கிய அனைத்து ரகக் கிழங்குகளில் தடித்ததும் பெருப்பமானதும் அடுக்கப்பட்டிருந்தன...

பக்கத்துக் கொறங்காட்டில் ஆள்காட்டிகள் வீரிட்டதுபோலக் கத்திக் கொண்டிருந்தன. "ஆஹோ" என்ற சத்தத்தோடு கிழங்குகள் மீது கொடுவாள் பாய்ந்தது. பிரமுகரின் தலை நிமிர்ந்தது கண்களைத் திறந்தார். சுற்றும் முற்றும் பார்த்தார். ஓங்கிய விசையில் மண்பறந்து அவர் கண்கள் அரிப்பெடுத்திருக்க வேண்டும். ஈரத் துண்டைத் தேடி எடுத்துக் கண்களைத் துடைக்க முயன்றார். இருளில் மாமா அப்படியே நின்றிருந்தார்..

விடிந்து காலையானது. மாமா தலைக் கறி எடுத்துக் கொண்டு வந்தார். மாமி கோரைப் பாயை உதறி முன்னறையில் விரித்தார் பின்புறம் சமையற்கட்டிலிருந்து கிழங்கு அவியல் வாசனை மஞ்சள் பொடியுடன் சேர்ந்து மூக்கில் நமநமத்தது...

மார்கழி மாதத்துப் பனி விருவிருன்னு தாக்கும். அரிக்கேன் லைட்டு வெளிச்சம் உம்மாவின் நிழல் அம்மியில் விழுகிறது. தேங்காய் பூச் சம்பல் அரைத்து பீங்கானில் தப்பிக் கமகமக்கும். வாழை இலையில் குபுகுபுக்கும் கருணைக் கிழங்கு மணம் அரட்டி விட்டதுபோல் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்த வாப்பா கனைத்துக் கொண்டு எழுந்திருப்பார்...

திடீரென எழும்பும் கோடைக் காற்றில் வீதிக் கொழிமணல்கள் பறந்தன. வாகை மர நிழலில் கூடைகள் விரித்து வைக்கப்பட்டிருந்தன. ஒன்றில் சக்கர வள்ளிக் கிழங்கு, அடுத்த பக்கத்தில் சோளக் கதிர்கள் அவிந்து கொண்டிருக்கும். இரவானால் இதே இடத்தில் கிழங்குப் பொரியல், ஒரு கணவா லாம்பு தூங்கி எரிந்து ஒளி விடும். சூட்டின் காந்தல் புகையோடு பரவும். கிழங்குகள் துகிலுரியப்படும் அழகை படம் பிடிப்பதுபோல் கண்களால் கவ்வி நின்றிருப்பேன். "ஸ் ஸ்.." என்பதைவிட இப்போது காதுகளுக்குள் வேறு சப்தமே இல்லை; செந்தில் என்பவர் பொரித்துக் கூடையில் இறக்கிக் கொட்டுவார்; இரண்டு ரூபாய்க்கு வாங்கிக் கொண்டு தங்கைகள் பார்க்காத இடத்தில் ஒளித்து வைப்பேன். இது கண்டு பிடிக்கப்பட்டதால் அவர்கள் பார்த்திருக்கவே ஒவ்வொரு துண்டுகளிலும் எச்சிலைப் படுத்தி விட்டு வைத்திருந்து உண்பேன். அதே கடையில் ஆட்டுக் கால் சூப் ஒரு ரூபாய்க்குக் கிடைத்தது.

# SLT–MOBITEL வர்த்தக நாமத் தூதுவர்களாக ஃபலன் அன்ட்ரியா மற்றும் நுவந்திகா சேனாரட்ன




இலங்கையின் இரு புகழ்பெற்ற இளம் ரியாலிட்டி நட்சத்திரங்களான ஃபலன் அன்ட்ரியா மற்றும் நுவந்திகா சேனாரட்ன ஆகியோர் தேசிய தொலைத்தொடர்பாடல் சேவைகள் வழங்குநரான SLTMobitel இன் வர்த்தக நாமத் தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையின் வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த பரந்தளவு இளம் தலைமுறையினருடன் அதிகளவு ஈடுபாட்டை பேண SLTMobitel எதிர்பார்க்கும் நிலையில், ஃபலன் மற்றும் நுவந்திகா ஆகியோர் வர்த்தக நாமத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். புகழ்பெற்ற உள்நாட்டு ரியாலிட்டி இசை நிகழ்ச்சியில் ஃபலன் முதலாமிடத்தையும், நுவந்திகா இரண்டாமிடத்தையும் வெற்றியீட்டியிருந்தனர். தமது இசைத் திறமையால் பல மில்லியன் கணக்கான இலங்கையர்களின் உள்ளங்களை இவர்கள் வென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஒன்றிணைக்கப்பட்ட வர்த்தக நாமம் எனும் வகையில், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகளை பின்பற்றுவதற்கு தேசத்துக்கு வலிமையளிக்கும் SLTMobitel, தமது வர்த்தக நாமமான SLTMOBITEL இன் தூதுவர்களாக நியமிப்பதற்கு ஃபலன் மற்றும் நுவந்திகா ஆகியோரை மிகவும் பொருத்தமானவர்களாக இனங்கண்டிருந்தது.

ஃபலன் மற்றும் நுவந்திகா ஆகியோர் தமது உறுதியான, எதிர்பார்ப்புகள் நிறைந்த மற்றும் யுவதிகளை வழிநடத்துவதில் தமது நிலைப்பாட்டை உறுதி செய்துள்ளதுடன், அவர்கள் தமக்கென உருவாக்கியுள்ள ரசிகர்கள் மத்தியில் முன்மாதிரியானவர்களாக திகழ்கின்றனர். ஃபலன் மற்றும் நுவந்திகா ஆகியோரின் புதிய நிலைகளினுளடாக, பல்வேறு திட்டங்களில் அவர்கள் ரசிகர்களுடன் ஈடுபாட்டை பேண வழிவகுக்கும்.

இவர்களின் நியமனம் தொடர்பாக ஸ்ரீ லங்கா ரெலிகொம் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரட்ன கருத்துத் தெரிவிக்கையில், "மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் ஒன்றிணைக்கப்பட்ட வர்த்தக நாமம் எனும் வகையிலும், இந்த டிஜிட்டல் யுகத்தில் மாற்றத்தையும் புத்தாக்கத்தையும் ஊக்குவிக்க முக்கியத்துவம் வழங்கும் நிலையில், எம் நாட்டின் இளைஞர்கள் உலகளாவிய ரீதியில் இடம்பெறும் டிஜிட்டல் அமுலாக்கங்களுடன் தம்மையும் வளர்த்துக் கொள்வதில் அதிகளவு நாட்டம் காண்பிப்பதை அவதானிக்க முடிகின்றது.

# உள்நாட்டு பாற்பண்ணைத் துறைக்கு ஆதரவளிக்க சிறிய தொழிற்துறையை உருவாக்கும் Pelwatte Industries



இலங்கையின் முன்னணி பாலுற்பத்தி நிறுவனமான Pelwatte Dairy Industries, உற்பத்திகள், மேய்ச்சல் முறைகள் மற்றும் கால்நடைகளின் பாலுற்பத்தி திறன்களில் பாதிப்பை ஏற்படுத்தும் பருவகாலம், வானிலை மற்றும் காலநிலையையும் மீறி வருடம் முழுவதும் கால்நடைகளுக்கு போதுமான தீவனத்தை உற்பத்தி செய்யும் புதிய நோக்குடன் தனது பயணத்தை தொடர்கின்றது. இதன் மூலம் உள்நாட்டு பால் தேவையை பூர்த்தி செய்வதை உறுதி செய்வது மட்டுமல்லாமல், உள்ளூர் பாற்பண்ணையாளர்கள், துணை தொழிற்துறைகள் மற்றும் உள்ளூர் மக்களின் சமூகபொருளாதார நிலையை உயர்த்தவும் உறுதி பூண்டுள்ளது.

உள்ளூரில் உள்ள பல பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு இப்போது தங்கள் சொந்த தீவனம் மற்றும் கால்நடை உணவு உற்பத்தி மையங்களை நிறுவுவதற்கு Pelwatte Industries தனது ஆதரவை வழங்கியுள்ளது.

இவற்றை நிறுவனம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட உள்ளூர் பாற்பண்ணையாளர்கள் கொள்வனவு செய்து, ஆண்டு முழுவதும் கால்நடைகளுக்குத் தேவையான உணவு கிடைப்பதை உறுதிசெய்வதுடன், அதே நேரத்தில் இந்த செயன்முறையில் ஒரு சிறு தொழிற்துறையையும் ஆதரிக்கிறது.

இது தொடர்பில் தனது கருத்தை தெரிவித்த Pelwatte Dairy Industries இன் முகாமைத்துவ பணிப்பாளர் அக்மால் விக்ரமநாயக்க, " இத்துறையில் முன்னணி உள்ளூர் நிறுவனமாக, எங்கள் பெறுமதி சங்கிலியின் மிக முக்கியமான கூறுகள் விவசாயிகள் மற்றும் அவர்களுக்கு ஆதரவான தொழில்துறைகள் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த காரணத்தினாலேயே Pelwatte Dairy Industries, இந்த ஏழை சமூகங்களின் சமூகபொருளாதார தரத்தை உயர்த்தும் தீவிர கவனத்துடன், பாலுற்பத்தியாளர்கள் மற்றும் ஆதரவான தொழில்துறைகளின் வாழ்க்கை மற்றும் பணிகளை மேம்படுத்துவதற்கு நாங்கள் பெருமளவில் முதலீடு செய்கிறோம்," என்றார். பயிற்சி போன்ற துணை சேவைகளை வழங்குவதன் மூலம், அவர்கள் உயர் தரமான பால் விநியோக சங்கிலியை உருவாக்குவதை PDIL உறுதி செய்கிறது.

# வருமானமாக ரூ.36.98 பில்லியனை பதிவுசெய்தது செலிங்கோ லைஃப்



நிதியாண்டு 2020க்கான திரட்டிய வருமானமாக 36.98 பில்லியன் ரூபாயை அடைந்துள்ள செலிங்கோ லைஃப் நிறுவனம், கடும் சவாலான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் வணிகத்தின் அளவைப் பெருக்கவும் முதலீட்டு வருமானங்களை அதிகரிக்கவும் தாம் கொண்டுள்ள திறனை வெளிப்படுத்தியுள்ளது.

15.2 சதவீதம் என்ற இந்த வருமான வளர்ச்சியானது, டிசெம்பர் 31, 2020 அன்று முடிவடைந்த 12 மாதங்களில் 22.07 பில்லியன் ரூபாயாக அமைந்த மொத்த எழுதப்பட்ட காப்புறுதி வருமானம், 14.9 பில்லியன் ரூபாயாக அமைந்த முதலீடும் ஏனைய வருமானமும் ஆகியவற்றால் சாத்தியமானது என, ஆயுள் காப்புறுதியின் முன்னிலை நிறுவனமான செலிங்கோ லைஃப் வெளிப்படுத்தியுள்ளது.

2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது செலிங்கோ லைஃப் வெளிப்படுத்திய மொத்தக் காப்புறுதி வருமானமானது 17.9 சதவீத அதிகரிப்பையும், முதலீடும் ஏனைய வருமானமும் வெளிப்படுத்திய அதிகரிப்பு 11.3 சதவீதமாகவும் காணப்பட்டது.

ஆயுள் காப்புறுதி வணிகத்தில் செலிங்கோ லைஃப் வெளிப்படுத்திய வளர்ச்சியின் காரணமாக, இலங்கையின் ஆயுள் காப்புறுதித் துறையில் சந்தை முதலிடத்தை 17ஆவது தொடர்ச்சியான ஆண்டாகவும் தக்கவைத்துக் கொண்டது.

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நிகரக் கோரிக்கைகளாகவும் மற்றும் சலுகைகளாகவும் 12.2 பில்லியன் ரூபாயை தனது வாடிக்கையாளர்களுக்கு செலிங்கோ லைஃப் செலுத்தியிருந்தது.

முன்னைய ஆண்டோடு ஒப்பிடும் போது, இது 15.7 சதவீத அதிகரிப்பை வெளிப்படுத்தியது. அத்தோடு, 9.42 பில்லியன் ரூபாயைத் தனது ஆயுள் நிதியத்துக்கு அந்நிறுவனம் மாற்றியதோடு, இதன்மூலமாக டிசெம்பர் 31, 2020 அன்று ஆயுள் நிதியத்தை 106.74 பில்லியன் ரூபாயாக விரிவுபடுத்தியது. இது, 10.94 சதவீத வளர்ச்சியாகும்.

செலிங்கோ லைஃப் நிறுவனத்தின் மொத்தச் சொத்துகள் மாதாந்தம் 1.4 பில்லியன் ரூபாய் என்ற சராசரியில், மொத்தமாக ஆண்டில் 17.6 பில்லியன் ரூபாயால் அதிகரித்து, 150 பில்லியன் ரூபாய் என்ற மைல்கல்லை ஆண்டின் இறுதியில் அடைந்திருந்தது.

அதேநேரத்தில் நிறுவனத்தின் முதலீட்டு நிதி இந்த 12 மாதங்களில் 14.36 சதவீதத்தால் அதிகரித்து, டிசெம்பர் 31, 2020 அன்று 133.7 பில்லியன் ரூபாயாகக் காணப்பட்டது.

## APIIT கல்வியகம்

# வருடாந்த பட்டமளிப்பு விழா 338 பேர் பட்டம் பெற்றனர்




ஆசியா பசுபிக் இன்ஸ்டிரியூட் ஒஃப் இன்போமேஷன் டெக்னோலஜி (APIIT) ஸ்ரீலங்கா கல்வியகம் தனது வருடாந்த பட்டமளிப்பு விழாவை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் (BMICH) பிரதான மண்டபத்தில் அண்மையில் நடத்தியது. இந்நிகழ்வில், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரான சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த அதேநேரத்தில், நெஸ்லே லங்கா பி.எல்.சி. நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஃபெப்ரிஸ் கவலின் கௌரவ அதிதியாக கலந்து கொண்டார்.

இந்த பட்டமளிப்பு விழாவில் APIIT கல்வியகத்தின் 338 பட்டதாரிகள் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட இளங்கலை (undergraduate) மற்றும் பட்டப்பின்படிப்பு (postgraduate) பட்டங்களை பெற்றுக் கொண்டனர். ஐக்கிய இராச்சியத்தின் ஸ்டெஃபோட்ஷயர் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் வியாபாரம், கணணி மற்றும் சட்டம் ஆகிய துறைகளிலான பட்டங்களையே இவர்கள் பெற்றுக் கொண்டனர்.

இவற்றுள், 38 முதல் வகுப்பு 'சிறப்பு' சித்திகள், 117 இரண்டாம் வகுப்பு (முதற் பிரிவு) சித்திகள் மற்றும் 10 பட்டப்பின்படிப்பு மேற்தர சித்திகளும் உள்ளடங்கும்.

வர்ணமயமான இப் பட்டமளிப்பு விழா மனமகிழ்ச்சி தரும் ஒரு நிகழ்வாக அமைந்திருந்தது. இளம் இளங்கலை மாணவர்களாக APIIT கல்வியகத்திற்குள் நுழைந்தவர்கள் தமது கடின உழைப்பின் பலாபலனை இதன்போது அறுவடை செய்து கொண்டதுடன், மாணவர் வாழ்க்கைக்கு சம்பிரதாயபூர்வமாக பிரியாவிடை கொடுத்தனர்.

அதேவேளை, வளமிக்க கற்றல் அனுபவம் மற்றும் முழுமையான ஆளுமை விருத்தி என்பவற்றுக்கு வழிவகுக்கக் கூடியதாக APIIT வழங்கிய உயர் தரநியமங்களைக் கொண்ட கல்வியை பிரதிபலிக்கும் விதத்தில், பட்டம் பெறும் மாணவர்கள் மிகுந்த நம்பிக்கையை வெளிப்படுத்திய வாறு தங்களது பட்டச் சான்றிதழைப் பெறுவதற்காக மேடை ஏறினர்.

# இலங்கையில் தனது பிரத்தியேக காட்சியறையை ஆரம்பித்துள்ள ASUS




பிரபல பல்தேசிய தொழில்நுட்ப நிறுவனமான ASUS Sri Lanka, இலங்கையில் தனது முதலாவது பிரத்தியேக காட்சியறையை கொழும்பின் மையப்பகுதியில் திறந்து வைத்துள்ளது.

இலங்கையில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான தீர்வுகளுக்காக மட்டுமே அர்ப்பணிக்கப்பட்டுள்ள யூனிட்டி பிளாசாவில் இந்த கடை வசதியாகவும், மையப்பகுதியிலும் அமைந்துள்ளது.

மேலும் ASUS ZenBook தொடர், VivoBook தொடர் உள்ளிட்ட இலத்திரனியல் பொருட்கள், கணினி வன்பொருள் மற்றும் துணைப்பொருட்கள் ஆகியவற்றை வழங்குவதுடன், கேமிங் தொடர் மற்றும் வணிக, நிறுவன மற்றும் கோர்ப்பரேட் வாடிக்கையாளர்களுக்கான தயாரிப்புகள் போன்றவற்றையும் கொண்டுள்ளது.

இந்த காட்சியறையானது பெப்ரவரி 23 ஆம் திகதி , ASUS Sri Lankaவின் இலங்கைக்கான விற்பனை முகாமையாளர் இஸ்கி இர்ஷாத் மற்றும் Unity Systems Solutionsஇன் உரிமையாளரும், பணிப்பாளருமான வசந்த தினுவன் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டதுடன், பல்வேறு தயாரிப்புகளும் இதன் போது காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

"நாட்டில் மிகவும் விரும்பப்படும் வர்த்தகநாமம் ஒன்றிற்கான முதல் பிரத்தியேக காட்சியறையை ஆரம்பிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைவதோடு, ASUS Sri Lanka அதன் தனிப்பட்ட கணனிகள் மற்றும் கேமிங் தீர்வுகளுக்கான கேள்வி குறிப்பாக மில்லேனியல்கள் மற்றும் Z தலைமுறையினரிடையே அதிகரித்து வருவதனை கண்டு வருகின்றது.

மற்றும் இது போன்ற ஒரு வலுவான வர்த்தகநாமத்திற்கான ஒரு பிரத்தியேக வர்த்தகநிலையமாக இருப்பதும் பெமையளிப்பதாக உள்ளது," என்று தினுவன், திறப்பு நிகழ்வின் போது தெரிவித்தார்.

"ASUS Sri Lanka இளைஞர்களுக்கான ஒரு வர்த்தகநாமமாக தன்னை நிலைநிறுத்தியுள்ளது.

அதிகரித்து வரும் அதன் தயாரிப்புகளுக்கான தேவை, குறிப்பாக இந்த மக்கள்தொகையினரிடையில் , நாட்டில் ஒரு பிரத்தியேக வர்த்தகநிலையத்துக்கான தேவையைத் தூண்டியதுடன், விரைவில் ஆரம்பிக்கப்படக் கூடிய பல காட்சியறைகளுக்கான ஆரம்பம் இதுவாகும்," என இர்ஷாத் தெரிவித்தார்.

# லிலீசீஸ் அறிமுகப்படுத்தியுள்ள வேபுரோட்டீன் பானம்




விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கும் சிறார்களுக்கும் பல்வேறு வகையில் போசாக்கினை வழங்கும் பிரபலமானதொரு போசாக்கு ஆதாரமான வேபுரோட்டீன் பானத்தின் முக்கியத்துவத்தை கவனத்தில் கொண்டு துரிதமாக அருந்தக்கூடிய வேபுரோட்டீன் பானமொன்று இலங்கை சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் முன்னணி சீஸ் உற்பத்தியாளர்களான லிலீசீஸ் நிறுவனம் (www.lilidiary.com) தேசிய விஞ்ஞான மன்றத்துடன் இணைந்து மேற்கொண்ட ஆராய்ச்சியை தொடர்ந்து இந் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த ஆராய்ச்சியின் நோக்கம், பல்வேறு வயதினருக்கான போசாக்கு தேவைகளுக்கு பொருந்தும் வகையில் இயற்கை திரவநிலையிலுள்ள வேபுரோட்டீனுடன் கூடிய இயற்கை பழச்சாறு கலந்த பானமொன்றை உற்பத்தி செய்வதாகும். முறையான பரந்துபட்ட சந்தை மதிப்பீட்டை தொடர்ந்து பொருத்தமான கலவை தீர்மானிக்கப்பட்டதோடு அதன் போசாக்கு உள்ளடக்கமும் பரிசோதிக்ககப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது.

உடலின் புரோட்டீன் சமநிலையை பேணுவதற்கும், உடற் பயிற்சி மற்றும் செயற்பாடுகளால் இழக்கப்படும் சக்தியை மீளப் பெறுவதற்கும் தசைகளின் வளர்ச்சிக்கும் அதுஉதவுகிறது. விளையாட்டு வீரர் வீராங்கணைகளுக்கு மிகவும் பொருத்தமான இப் பானமானது, மேம்பட்ட போசாக்கு நலம் மற்றும் உயர் தரத்திலான வேபுரோட்டீனை அளித்து, உடல் பலத்தை நிலையானதாக்கி உணவு வேளைகளுக்கிடையே போசாக்கு தேவையினை பூர்த்தி செய்கின்றது.

"தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஒத்துழைப்புடன் மேம்படுத்தப்பட்ட இயற்கை வேபுரோட்டீன் பானமொன்றை முதல் தடவையாக இலங்கைக்கு அறிமுகப்படுத்துவதற்கு லிலீசீஸ் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. உடன் கறந்த பாலிலிருந்து பெறப்பட்ட வேபுரோட்டீன் மற்றும் உடன் பறித்த பழங்களிலிருந்து பெறப்பட்ட பழச்சாறு கொண்டு 100மூ இயற்கையாக உற்பத்திச் செய்யப்பட்ட பானமான இதில் மேலதிக நீர், செயற்கை சுவையூட்டிகள் அல்லது வர்ணவூட்டிகள் எதுவும் கலக்கப்படவில்லை. இது தேசிய விஞ்ஞான மன்றத்தினதும் இலங்கையின் பால் உற்பத்தித் துறையினதும் திருப்புமுனை என்றால் அது மிகையாகாது" என தேசிய விஞ்ஞான மன்றத்தின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் சேனாரத்ன இந்த உற்பத்தியின் அறிமுக விழாவில் கலந்துகொண்டு பேசும்போது குறிப்பிட்டார்.

# HNB உடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ள கண்டி திரித்துவக் கல்லூரி




இலங்கையின் மிகவும் மதிப்புமிக்க கல்வி நிறுவனங்களுக்கு தனது ஆதரவை விரிவுப்படுத்தி வரும் HNB கண்டி திரித்துவக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்துடன் மற்றுமொரு முக்கிய ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

HNB, Affinity கடனட்டை மூலம் கண்டி திரித்துவக் கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினர்களுக்கு விசேட சலுகைகளை வழங்குகிறது.

இதனுடன் கண்டி திரித்துவக் கல்லூரியின் 150வது ஆண்டு விழாவிற்கு வங்கி பங்காளராக HNB பணியாற்றுகிறது. மேலும் திரித்துவக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்த திருத்துவம் 150 நிதி திரட்டலுக்கும் பங்களிக்கிறது.

HNB பிரதி பொது முகாமையாளர் வாடிக்கையாளர் நடவடிக்கைகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முனைவோரின் வங்கி நடவடிக்கைகள், சஞ்ஜேய் விஜயமான்ன, HNB தலைமை கடன் அதிகாரி – நிரோஷ் பெரேரா. HNB வலையமைப்பு மற்றும் வணிக வளர்ச்சி நிர்வாகத்தின் தலைவர் சுப்புன் டயஸ், HNB அட்டைகள் தலைவர் கௌதமி நிரஞ்சன், கண்டி திருத்துவக் கல்லூரி அதிபர் அதி வண. ஆண்டகை ஆரலியா ஜெயசுந்தரா, TCKOBA தலைவர் சேனக அலவதுகம, TCKOBA கேகாலை கிளை தலைவர் TCKOBA, சபரகமுவ மாகாண ஆளுநர் டிகிரிகொப்பெகடுவ, அலோசகர் மற்றம் மேற்பார்வை குழு, Trinity 150 ஜெயதிஸ்ஸ ரத்வத்த மற்றும் திருத்துவ கல்லூரி OBA செயலாளர் பிரசன்ன பலிஹவதன ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். கண்டி திருத்துவக் கல்லூரியானது உலகெங்கிலும் கல்வியின் அனைத்து அம்சங்களிலும் சிறந்து விளங்கும் கல்வி நிறுவனமாகும். அதற்கு இக்கல்லூரியில் கல்வி பயின்று வெளியேறி தற்போது பிரபல்யமான இடங்களில் சாதித்துக் கொண்டிருக்கும் நபர்களே இதற்கு சாட்சி யாவார்கள்.

திருத்துவ கல்லூரி பழைய விளையாட்டு கழகத்திலுள்ள அனைத்து Affinity அட்டைதாரர்களுக்கும் HNBஇன் அனைத்து வணிக பங்குதாரர்களும் சிறப்பு தள்ளுபடி பெற்றுக்கொள்ள முடியும். அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய இலவச SMS மற்றும் இலவச சுகாதார, ஆயுள் மற்றும் வெளிநாட்டு பயண காப்புறுதி பாதுகாப்பும் அடங்கும். ஒவ்வொரு அட்டைதாரரும் ஒரு இலவச துணை அட்டையை பெற முடியும். ஆரம்பக் கட்டணமும் முதல் வருடத்திற்கான வருடாந்த கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

# நல்ல கதைகள் எழுதிய நாகேசு தர்மலிங்கம்..!



அந்த நாள் இன்றும் எனக்கு ஞாபகம் இருக்கின்றது. எழுபதுகளின் முற்பகுதி. பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்தில் தபால் தந்தித்துறை அமைச்சராகப் பணியாற்றிய செல்லையா குமாரசூரியர் நெடுந்தீவுக்குச் சென்று உபதபால் நிலையமொன்றை ஆரம்பித்துவைத்தார்.

நெடுந்தீவில் அமைச்சர் குமாரசூரியருக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

முற்பகல் அந்த நிகழ்வை முடித்துக்கொண்டு பிற்பகல் புங்குடுதீவு குறிகாட்டுவான் துறைமுகம் வழியாகப் புங்குடுதீவு வந்துசேர்ந்த அமைச்சர் குமாரசூரியர் புங்குடுதீவு கிழக்கு தட்டையன்புலம் என்ற இடத்திலும் ஓர் உபதபால் நிலையத்தை ஆரம்பித்துவைத்தார்.

இந்த உபதபால் நிலையத்தின் அதிபராக நியமனம் பெற்றவர் தான் அன்று இளம் எழுத்தாளராக அறிமுகமான நாகேசு தர்மலிங்கம்.

இந்நிகழ்வுகளை அன்று பத்திரிகையாளனாகப் பணிபுரிந்த நான் கொழும்புப் பத்திரிகைகளுக்கும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கும் செய்திகளாக அனுப்பிவைத்தமை ஞாபகத்திலுண்டு.

எனது ஊரான புங்குடுதீவைச் சேர்ந்த நண்பரான நாகேசு தர்மலிங்கம் டொமினிக் ஜீவாவின் 'மல்லிகை" சஞ்சிகையின் மூலம் இலக்கிய உலகில் பிரவேசித்தார்.

இவரது சிறுகதைகள் பலவும் மல்லிகை இதழ்களில் தான் பிரசுரமாகியுள்ளன. மேலும் தேசியப் பத்திரிகைகளான தினகரன், வீரகேசரி போன்ற பத்திரிகைகளின் ஞாயிறுப் பதிப்புகளிலும் இவரது படைப்புகள் வெளிவந்துள்ளன.

பின்னர் பதவி உயர்வுபெற்ற நாகேசு தர்மலிங்கம் கொழும்பு புறக்கோட்டை தபாலகத்தில் தபாலதிபராகக் கடமையாற்றி வந்தார்.

மல்லிகையுடன் கொழும்பு செல்லும் டொமினிக் ஜீவா இவரையும் சந்தித்து உரையாடுவதுண்டு.

அவ்வேளை, தனது சிறுகதைத் தொகுப்பை 'மல்லிகைப் பந்தல்' பதிப்பகம் ஊடாக வெளியிட வேண்டுமென்ற தனது விருப்பத்தைத் தர்மலிங்கம் ஜீவாவிடம் தெரிவித்ததுண்டு.

அவரது 46 வது வயதில் சடுதியாக ஏற்பட்ட இருதய நோய் தர்மலிங்கத்தைக் காவுகொண்டுவிட்டது.

அவரின் மறைவுக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் புறக்கோட்டைத் தபாலகத்தில் ஜீவா அவரைச் சந்தித்து உரையாடியிருக்கிறார்.

அப்போது, ''ஒரு கிழமை பொறுத்துக் கொள்ளுங்கோ.. கதைகள் எல்லாத்தையும் ஒழுங்குபடுத்தித் தயார் நிலையில்தான் வைச்சிருக்கிறன்.. அடுத்த கிழமை அப்படியே உங்கட கையில ஒப்படைச்சுவிடுகிறன்.. நீங்களே எல்லாத்தையும் கவனிச்சுக் கொள்ளுங்கோ.." எனத் தர்மலிங்கம் கூறியிருக்கிறார்.

ஆனால்... ... இயற்கை அடுத்த மூன்று நாட்களுக்குள் அவரை அணைத்துக்கொண்டது.

''உடுத்திக்கொண்டு கந்தோருக்கு வெளிக்கிட்டவர் சொன்ன கடைசி வார்த்தைகள் இவைதாம்... 'கதைகளை எல்லாம் டைப் பண்ணி ஒழுங்குபடுத்தி வைச்சிருக்கிறன்.. ரெண்டொரு நாளைக்குள்ள ஜீவாவிடம் கொண்டு போய்க் குடுத்துப்போட வேணும்.. சொல்லிவிட்டுப் படியிறங்கிப் போனவர் நெஞ்சுக்குள்ளை என்னமோ செய்யிது எண்டு சொல்லிவிட்டுக் கதிரையில் சாய்ந்தவர்... அத்தோட... ..."

தர்மலிங்கத்தின் மரணச் செய்தி அறிந்தவுடன் அவர் வீட்டிற்குச் சென்ற ஜீவாவிடம் தர்மலிங்கத்தின் மனைவி சொல்லி அழுததை ஜீவா கவலையுடன் பதிவுசெய்துள்ளார்.

கொழும்பு கனத்தை மயானத்தில் நடந்த இறுதி நிகழ்வில் ஜீவா இரங்கலுரையில் குறிப்பிட்டவாறு, தர்மலிங்கத்தின் சிறுகதைத் தொகுப்பை விரைவில் மல்லிகைப் பந்தல் வெளியீடாகக் கொண்டுவரும் முயற்சியை மேற்கொண்டார்.''அந்நியம்" என்ற பெயரில் அந்தத் தொகுப்பு வெளிவரத் தர்மலிங்கத்தின் குடும்பத்தினர் ஒத்துழைப்பு வழங்கியதாகவும், மற்றும் மேமன்கவி, அந்தனி ஜீவா, தம்பிஐயா தேவதாஸ்ஆகியோரும் பல வகைகளிலும் ஒத்தாசை வழங்கியதாகவும் ஜீவா குறிப்பிட்டுள்ளார்.

தர்மலிங்கத்தின் மறைவின்பின் 1996 மார்ச் மாதம் வெளியிடப்பட்ட 'அந்நியம்' தொகுதியில் பன்னிரண்டு சிறுகதைகள் அடங்கியுள்ளன.

அந்தக் காலத்தில் சென்னையில் வாழ்ந்த, புகழ்பெற்ற ஈழத்து எழுத்தாளர் செ. யோகநாதன் நூலாசிரியரை நேரில் அறிந்திராத போதும் இத்தொகுதிக்குச் சிறந்ததோர் முன்னுரையை வழங்கியுள்ளார்.

''நாகேசு தர்மலிங்கம் தன் கண் எதிரே, தான் கண்டு பாதிப்படைந்த நிகழ்வுகளையெல்லாம் கலையாக்கமாக மாற்றியிருக்கிறார். மெய்யாய், மனதைத் தொட்டதாய், சிந்தனையாய் வெளிப்பட்டவற்றை யதார்த்தமாய், எளிமையாய், உணர்வுபூர்வமாய்ப் படைத்திருக்கிறார். இவரது எழுத்தின் சத்தியத்தை நான் போற்றுகிறேன். பாராட்டுவதில் நிறைவடைகிறேன்." என செ. யோகநாதன் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

நண்பர் தர்மலிங்கம் 21 வது வயதில் உபதபாலதிராக நியமனம் பெற்று, சுயமுயற்சியில் முன்னேறிப் பத்தாண்டுகளுக்கு மேலாகப் புறக்கோட்டைத் தபால்நிலையத்தில் தபாலதிபராகக் கடமையாற்றியவர்.

சிறுகதைகள், விமர்சனக் கட்டுரைகள், வானொலி நாடகங்கள் பலவும் குறுகிய காலத்தில் எழுதிக் கவனத்தை ஈர்த்தவர்.


மேடை நாடகங்கள், வானொலி, தொலைக்காட்சி நாடகங்களிலும் பங்குபற்றிப் பாராட்டுப் பெற்றவர்.

பழகுவதற்கு இனியவரான தர்மலிங்கம் ஊரில் சமூகப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர்.

புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் செயலாளராகக் கடமையாற்றி வந்தவர்.தன் படைப்புகளை நூலுருவில் பார்க்கப் பெரிதும் விரும்பியிருந்த போதிலும் அவர் மறைவிற்குப் பின்னரே அவரது சிறுகதைத் தொகுதி வெளியாகியது.

அவரது விருப்பத்தைச் சொன்னபடி 'மல்லிகைப் பந்தல்' பதிப்பகம் மூலம் நிறைவேற்றிய டொமினிக் ஜீவா இலக்கிய உலகத்தின் பாராட்டுக்குரியவர்.

நாகேசு தர்மலிங்கத்தின் நாமம் அவரது படைப்புகள் மூலம் நீடித்து நிலைக்கும்.





வி.ரி.இளங்கோவன்...
தியத்தலாவை

# ஈழத்து இலக்கியத்தின் தனிப்பெரும் விருட்சம்

## கே.எஸ். சிவகுமாரன்

(கடந்த வாரத் தொடர்)

கடந்த அறுபது ஆண்டுக்காலத்தில் ஈழத் தமிழிலக்கியத்தில் என்ன நடந்திருக்கிறது என்று அறிய விரும்புபவர்கள் கே.எஸ்.சிவகுமாரனின் நூல்களைத்தான் தேடிப்போக வேண்டும். அத்தகைய மதிப்பு வாய்ந்த பதிவு அது. நூற்றுக்கும் அதிகமான ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்புகளை அவர் விமர்சனத்திற்குட் படுத்தியிருக்கிறார். ஈழத்தில் வேறெந்த விமர்சகரும் இவ்வளவு பரந்த தளத்தில் விமர்சனத்தை மேற்கொண்டதில்லை. வஸீம் அக்ரம் எழுதுகிறார்: 'சிங்கள இலக்கியப் பகைப்புலத்திலிருந்து புது வரவாக மலரும், அனுராதபுரம் போன்ற பின்தங்கிய இலக்கியப் பிரதேசமொன்றிலிருந்து இலக்கிய இதழ்களுடன் மிக மூத்த படைப்பாளிகளில் ஒருவரான கே.எஸ். சிவகுமாரன் போன்ற ஒருவர் இலக்கிய உறவு வைத்திருப்பது தனிப் பெருமை தரும் செய்தியாகும்' 'கிண்ணியாவில் எழுத்துலகைப் பொறுத்தமட்டில் மூன்று அலிகள் இருக்கிறார்கள். ஏ.எம்.எம். அலி, எம். வை.எம். அலி, ஏ.ஏ. அமீர் அலி. அதேபோல அன்று கிண்ணியா என்றதும் ஞாபகத்திற்கு வந்தவர் 'அண்ணல்' என்று எழுதுகிறார் கே.எஸ். சிவகுமாரன். எத்தகைய நுட்பமான அவதானக் குறிப்பு!

ஈழத்தமிழ் வாசகப்பரப்பிற்கு அவர் அள்ளிக்குவித்திருக்கும் அரிய நூல்களின் வியாப்தி மிகப் பெரிது. ஆங்கிலம், தமிழ், மேற்கத்தைய செவ்வியல் கலாசாரம் (Western Classical Culture) என்ற மூன்று பாடங்களை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி மாணவராகப் பயின்று, தான் தேடித்தெரிந்து கற்றதைத் தமிழில் வெளிப்படுத்தும் ஆவலின் முகிழ்வுதான் 'பண்டைய கிரேக்க முதன்மையாளர்கள்' என்ற கே.எஸ். சிவகுமாரனின் நூல்.

லண்டனிலிருந்து வெளியான A.J: The Rooted Cosmopolitan என்ற நூலை வாசித்த மறுகணத்திலேயே அதனைத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியதை நாங்கள் மனங்குளிர்ந்து வரவேற்ற பொழுதுகள் உண்டு. இதை யார் செய்வர்?

புது டில்லியிலிருந்து 1974இல் வெளியான 'சுடர்மலர்' என்ற ஏட்டில் பேராசிரியர் க. கைலாசபதி எழுதிய 'ஈழத்தில் இலக்கியத் திறனாய்வு' என்ற கட்டுரையை அறிமுகம் செய்கிறார் கே.எஸ். சிவகுமாரன். எனக்கு இது உண்மையில் புதிய செய்தி.

ஜி. சுந்தரமூர்த்தியின் 'பண்டைத் தமிழ் இலக்கியக் கொள்கைகள்' என்று ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட நூலின் சாரத்தை கே.எஸ். சிவகுமாரன் தரும்போது, இந்தநூல் எங்கே கிடைக்கும் என்று ஓர் இலக்கிய மாணவனுக்கு ஆவல் ஏற்படுவது இயல்பு.

'மேலை நாட்டு மெய்ப்பொருள் சோக்கிரட்டீஸ் முதல் சார்த்தர் வரை' என்று பேராசிரியர் க. நாராயணன் புதுச்சேரியிலிருந்து எழுதிய நூலை நம் கவனத்திற்குக் கொண்டுவருகிறார். Bridging Connection என்ற தலைப்பில் இந்தியாவின் நேஷனல் புக் ட்ரஸ்ட் அமைப்பிற்காக ரஜிவ விஜேசிங்க தொகுத்த நூலில் ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் கதைகள் இடம்பெற்றிருக்கும் தகவலை நமக்குக் கொண்டுவருகிறார். அல்லாதுபோனால், இந்த மொழிபெயர்ப்பு முயற்சிகளே நமக்கு என்றென்றும் தெரியவராமலே போயிருக்கும். தெ. மதுசூதனனும் கந்தையா சண்முகலிங்கமும் இணைந்து வெளியிட்ட 'சமூக சிந்தனை: விரிபடு எல்லைகள்' என்ற நூலாகட்டும், '3ஆவது கண்' என்று சமகால விவகாரங்களில் பெண்ணியலாளர்களின் கண்ணோட்டத்தில் வெளியான நூலாகட்டும், சி. மௌனகுருவின் 'பண்டைத் தமிழர் வரலாறும் இலக்கியமும்' என்ற நூலாகட்டும் வாசகனின் கவனத்திற்கு இட்டுச்செல்லும் பணியை கே.எஸ். சிவகுமாரன் அயராது செய்திருக்கிறார். பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் வெளியான 'இந்து கலைக்களஞ்சியம்' என்ற அரிய நூலினை எல்லாம் சின்னச் சின்னக் குறிப்புகளுடன் நம் கவனத்திற்குக் கொண்டுசேர்க்கிறார்.

'ஆழமான விமர்சனக் கண்ணோட்டம் ஒன்றும் இல்லாது மதிப்புரைகளையும் இலக்கியப்பத்திகளையும் எழுத முடியாது' என்று கே.எஸ். சிவகுமாரனின் விமர்சனப் பாங்கினைப் பாராட்டுகிறார் பேராசிரியர் கா. சிவத்தம்பி.

'கே.எஸ். சிவகுமாரன் தமிழ் இலக்கியப் பரப்பை வெறுமனே விபரிப்பதோடு நின்றுவிடுவதில்லை. பல இடங்களில் அவ்விலக்கியக் கூறுகளை உருவாக்குவதில் செயற்படும் காரணிகளை இனங்கண்டு, அவற்றை விளங்கவும் விளக்கவும் முயல்கிறார். அண்மைக்காலத்தில் பிரவகித்தோடும் இலக்கிய வெளிப்பாடுகளின் மீது செல்வாக்குச் செலுத்திய அடிப்படைக் கோட்பாடுகளைத் தெளிவுபடுத்துவதில் அவர் பெருமளவில் வெற்றி கண்டிருக்கிறார் என்றே நான் நம்புகிறேன்' என்று மதிப்பிடுகிறார் பேராசிரியர் க. கைலாசபதி.

'கே.எஸ். சிவகுமாரன் தமிழ்க் கலாசாரத்தில் மட்டுமே தோய்ந்தவர் என்றில்லை; சகல சீரிய விமர்சனங்களினதும் அவசிய அடிப்படைகளாக அமையவல்ல பரந்த அறமும் அழகியலும் சார்ந்த விழுமியங்களிலும் அவர் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டுள்ளார்' என்று புகழ்மிக்க ஆங்கிலப் பத்திரிகையாளர் மேர்வின் டி சில்வா கூறுகிறார். 'கே.எஸ். சிவகுமாரன் The Island பத்திரிகையில் பொறுப்பேற்றுச் செய்த Cultural Pages என்ற பகுதியே வாசகர்களால் முதன்மையாக விரும்பி வாசிக்கப்பட்ட பகுதியாக இருந்தது என்பது நாங்கள் நடத்திய வாசகர் விருப்பத் தேர்வு மதிப்பீட்டிலிருந்து தெரியவந்தது' என்கிறார் உப்பாலி நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தின் மேலாளர் ஜேம்ஸ் எச். லெனரோல்.

'இலங்கையில் இதுவரை வெளியான சிறுகதைத் தொகுப்புக்களுள் பெரும்பாலானவற்றை விமர்சித்திருப்பவர் கே.எஸ். சிவகுமாரன் ஒருவரே. இதனால் சிறந்த தமிழ் இலக்கியப்பரப்பில் சிறந்த கலை இலக்கிய விமர்சகராக மதிக்கப்படுபவர்' என்று புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் கணிக்கிறார்.

Encyclopaedia of 20th Century World Literature என்ற அரும்பெரும் களஞ்சியத் தொகுதிக்கு, ஈழத்துத் தமிழ் இலக்கியம் பற்றிய கட்டுரையை எழுத, பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர்களை விடுத்து, கே.எஸ். சிவகுமாரனை நாடி, சர்வதேச அளவில் ஈழத்து இலக்கியம் பற்றி எழுத வல்லவராகத் தன்னை நிலைநிறுத்துகிறார் அவர்.

ஆங்கிலத்தில் அவர் எழுதிய Tamil Writing in Sri Lanka என்ற நூல் 1974இல் வெளியாகி, இன்று 46 ஆண்டுகள் கழிந்துவிட்டன. கொழும்பில் நடைபெற்ற இந்நூலின் வெளியீட்டு விழாவிற்கு நான் சென்றிருக்கிறேன். இந்த 46 ஆண்டுகால எல்லையில் கே.எஸ். சிவகுமாரன் ஆங்கிலத்தில் எழுதிய எழுத்துகளைத் தொகுத்தால் கனதியான மிகப்பெரும் களஞ்சியம் நம் கைவசமாகும்.

Tamil Writing in Sri Lanka என்ற ஆங்கில நூலில் 'சிங்கள தமிழ் சமூகங்களின் புரிதலை நோக்கி...' என்ற முதல் அத்தியாயத்தில், சிங்கள இலக்கிய உலகில் என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்ள இளைய தலைமுறைத் தமிழ் எழுத்தாளர்கள் பிரக்ஞைபூர்வமாக முயற்சிகள் செய்யும்போது, சிங்கள வாசகர்கள் தமிழ் இலக்கிய உலகைப் புரிந்துகொள்ள அத்தகைய முயற்சிகளை மேற்கொண்டுள்ளனரா? என்று கேள்வியை எழுப்புகிறார் கே.எஸ். சிவகுமாரன்.

'இலக்கிய வரலாறு' என்று 15 பக்கங்களில் அவர் செய்திருக்கும் பதிவு முக்கிய இலக்கிய நிகழ்வுகளை அறிக்கையிடுகிறது. மாத்தறையை அண்டிய திக்வல்லை எனும் சிங்களச் சூழலில் 3,500 குடும்பங்களையே கொண்டு வாழும் முஸ்லிம் சமூகத்தின் மத்தியிலிருந்து, திக்வல்லை எழுத்தாளர் சங்கம் வெளியிட்ட 'பூ' என்ற இலக்கிய வெளியீட்டிற்கு தனது ஆங்கில நூலில் முக்கியம் தந்து பேசுகிறார். 'சிங்கள இலக்கியத்திற்கு முஸ்லிம்கள் ஆற்றிய பங்கு' குறித்து கட்டுரை எழுதியுள்ள மர்ஹூம் எம்.எச்.எம். சம்ஸ் அவர்களிலிருந்து ஹம்சா முஹம்மது, எம்.ஏ. இனாயத்துல்லா, திக்குவல்லை கமால் என்று கவனத்தில்கொள்ள வேண்டிய ஆளுமைகளைப் பட்டியலிடுகிறார்.

அத்துடன் 'மலையக எழுத்துகள்' என்ற தலைப்பின் கீழ் 196070 காலப்பகுதியில் மலையகத்திலிருந்து எழுந்த 35 எழுத்தாளர்களை அடையாளம் காண்கிறார். சி.வி, கே. கணேஷ், பி. கிருஷ்ணசாமி, டி.எம். பீர்முகம்மது, பி.ஆர். பெரியசாமி, இரா. சிவலிங்கம், திருச்செந்தூரன், தெளிவத்தை ஜோசப், என்.எஸ்.எம். ராமையா, கார்மேகம், மு. சிவலிங்கம், சாரல்நாடன் என்று மலையக எழுத்தின் வளத்தை விவரிக்கிறார்.

கவிதைப் பிரிவில் எலிக்கூடு, அக்கினிப்பூக்கள், ஹோசிமின் கவிதைகள், வீடும் வெளியும், குறும்பா, காணிக்கை ஆகிய தொகுப்புகளைக் கணக்கில்கொள்ளும் கே.எஸ். சிவகுமாரன் மஹாகவியை நம் காலத்தின் Robert Frost என்று மகுடம்சூட்ட விழைகிறார். பாக்குநீரிணைக்கு அப்பாலிருந்து எழுதுகின்ற கவிஞர்களைவிட மஹாகவி மகத்தான கவி என்று முத்தாய்ப்பு வைக்கிறார்.

ஈழத்தின் மூலைமுடுக்கிலெல்லாம் துளிர்க்கும் இளம் எழுத்தாளர்களை எல்லாம் அவரின் எழுத்து அணைத்திருக்கிறது. பிராந்திய எல்லைகளை மேவி, சமய வேறுபாடுகளைக் களைந்து, இனங்களின் சௌசன்யத்தை இசைத்து, மொழி வரம்புகளை விரித்துப்போட்டு இலக்கிய யாத்திரை நடத்திய யோகி இவர்.

கே.எஸ். சிவகுமாரனின் தேர்ந்த சில விமர்சனக் கட்டுரைகளைத் தொகுத்து, க்ரியா வெளியீடாக அவரின் ஒரு நூலைக் கொண்டுவரும் நோக்கில், நான் அவருக்குக் கொழும்பு முகவரிக்குக் கடிதம் எழுதியபோது, அவர் வெளிநாடொன்றில் இருந்திருக்கிறார். அது பின்னர் சாத்தியப் படாமலே போய்விட்டது.

'வளரிளம் பருவத்தில் அல்லது முதிரா இளைஞனாக இருந்த காலத்தில்', அறுபதுகளின் முற்பகுதியில் சிறுகதைத்துறையில் கால்பதித்து, பதினைந்திற்கும் மேற்பட்ட கதைகளை எழுதியிருக்கும் கே.எஸ்.சிவகுமாரன் பின்னாளில் விமர்சகராகவே பிரகாசித்திருக்கிறார்.

'இலங்கையின் நவீன புதுக்கவிதையின் முன்னோடியாகவும் அவர் திகழ்ந்திருக்கிறார் என்பதையும் இங்கு பதிவுசெய்வது பொருந்தும். பரீட்சார்த்தமாக கவிதையிலும், புனைகதையிலும் சிவகுமாரன் செயற்பட்ட ஆரம்பகால முயற்சிகள் இவையாகும்'.

இவரின் எழுத்துக்களின் வாசகர்களாக அல்லது பயனாளர்களாகக் கலைப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர்கள், பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மாணவர்களாகக் காணப்படுகின்றனர் என்பது எழுத்தாளர்களுக்கு அப்பால், வாசகப்பரப்பின் எல்லையை விஸ்தரித்திருக்கிறது. கே.எஸ். சிவகுமாரனின் எழுத்திற்கு ஒருவித புலமை அந்தஸ்து வந்து சேர்ந்திருப்பதை இது சுட்டிக்காட்டுகிறது. இது அவரே நிராகரித்துவிட்டிருந்த ஒன்றாக இருந்தது என்பது ஒரு முரண்நகை.

கே.எஸ். சிவகுமாரனின் எழுத்துப்பணியைப் பாராட்டி, அவரது படத்தை அட்டையில் வெளியிட்டு மல்லிகை தனது 215ஆவது இதழில் (செப் 1988) கௌரவம் செய்திருக்கிறது. 'ஜீவநதி' கே.எஸ். சிவகுமாரனின் பவளவிழாச் சிறப்பிதழை ஐப்பசி 2011இல் கனதிமிக்கதாக வெளியிட்டு, அவருக்குப் பெருமை சேர்த்திருக்கிறது.

சிவகுமாரன் இலங்கையின் அனைத்துத் தினசரிகளிலும், வாராந்த இதழ்களிலும் தொடர்ச்சியாக எழுதிவந்திருக்கிறார். சில நாளேடுகளில் பத்திரிகாசிரியராகவும் இருந்திருக்கிறார். இவர் தனது எழுத்திற்கு பத்தி எழுத்தினையே முக்கிய வடிவமாகக் கொண்டிருக்கிறார். 'ஒரு பத்தி எழுத்தாளனாக, எந்த விடயம் பற்றி எழுதுவது என்பதை நானே தேர்வு செய்துகொள்ளவும், எனது சொந்தப் பகுப்பாய்வை மேற்கொள்ளவும், நான் எதைச் சொல்லவேண்டுமோ அதைச் சொல்லவும், அதை எனக்காக்கிக்கொள்ளவும் முடிகிறது. இதற்கெல்லாம் அப்பால், எனது சொந்தக் குரலில் என்னால் எழுத முடிகிறது' என்கிறார் பிரபல அமெரிக்கப் பத்தி எழுத்தாளர் அலன் ஸ்லோன்.

சிவகுமாரன் எழுத்து, சரஸ்வதி போன்ற சீரிய சிற்றிதழ்களிலிருந்து, வீரகேசரி வெளியீடான 'மித்திரன்' மாலை ஏடு வரை எல்லா ஏடுகளையும் தனது எழுத்திற்கு களமாகப் பாவித்திருக்கிறார். 'தனக்குக் கிடைத்த சொற்ப பிரசுரதளத்தைக்கூட, அவர் கடந்தகாலங்களில் வெகு செம்மையாகப் பயன்படுத்திவந்துள்ளார்' என்கிறார் மேமன் கவி. இலங்கையில் வெளியாகும் அனைத்து வார மஞ்சரிகளும் ஓர் இலக்கியக் கட்டுரை இத்தனை சொற்களுக்குள் அமைய வேண்டும் என வரையறை வைத்திருக்கின்றன. தமிழ்நாட்டின் நாளேடுகளும் இத்தகைய கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளன. நீண்ட இலக்கியக் கட்டுரைகளை சாதாரண வாசகர்கள் விரும்புவதில்லை என்று அவர்கள் கருதுகிறார்கள்.

தான் கண்ட, கேட்ட, வாசித்த, ரசித்த விடயங்கள் பற்றி எழுதுவதற்கு பத்தி எழுத்து வசதியானதாக, உகந்ததாக இருப்பது கண்டு, அந்த வடிவத்தையே அவர் பெரிதும் தேர்ந்திருக்கிறார். அடிக்குறிப்புகள் போட்டு, உசாத்துணை நூல்கள் காட்டி பக்கம்பக்கமாக, ஆழமாக அல்லது அகலமாக கட்டுரை தயாரிக்கும் அவஸ்தை கே.எஸ். சிவகுமாரனுக்கு இல்லை.

'இடவசதியின்மை, ஜனரஞ்சகம், கண்டனத் தவிர்ப்பு, (விமர்சனம் என்றால் கன்னாபின்னா என்று திட்டிக் கண்டிப்பதல்ல) திட்டவட்டமான முடிவுகளை வழங்காமை, பொருளைச் சுருக்கமாகத் தொகுத்துக்கூறல், கவர்ச்சித்தலைப்பு, இடம், பொருள், ஏவலுக்கேற்ப அழுத்தம் மாறுபடல் போன்றவை பத்தி எழுத்துகளுக்கும் பொதுவான அடிப்படை அம்சங்கள்' என்று ஒரு சந்தர்ப்பத்தில் சிவகுமாரன் எழுதுகிறார்.

இலங்கையில் வெளியான பல பத்திரிகைகளில் அக்கரைச்சீமையிலே, சருகுகள், மனத்திரை, சித்திரதர்சினி, கனபரிமாணம், நாற்சாரம், சொன்னாற்போல, எண்திசைக்கோலங்கள், நமக்கிடையே, சாளரக் காட்சிகள் ஆகிய தலைப்புகளில் அவர் தொடர்ச்சியாக பத்தி எழுத்துக்களைத் தந்துள்ளார். ஆங்கிலத்திலும் Gleanings, As I like it ஆகிய தலைப்புகளில் பத்தி எழுத்துக்களை எழுதியுள்ளார்.

வானொலி நிகழ்ச்சிகளிலும் இதே வடிவத்தைக் கையாண்டுள்ளார். இந்த எழுத்துகளில் தான் ஈழத்து இலக்கியத்தின் ஒரு அறுபது ஆண்டுகால வளர்ச்சி பதிவாகியிருக்கிறது. நமது கலை, இலக்கிய ஆளுமைகள் இந்தப் பதிவுகளிலேதான் உலா வந்திருக்கிறார்கள். பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்கள் பேராசிரியர்களின் விதப்புரை காரணமாக பழைய சமாச்சாரங்களை தேடித் தன்னிடம் வருவதாகத் தெரிவிப்பது அவருடைய பதிவின் சரித்திர முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.

இலக்கியம் மட்டுமன்றி, நாடகம், ஓவியம், இசை பற்றிய இவரின் குறிப்புகளும் ஆய்வாளர்களுக்கு அரிய ஆவணங்களாக அமையவல்லன. கொழும்பில் குறித்த ஒரு ஆண்டில் இலங்கை நாடகப் போட்டிக்காக மேடையேறிய நாடகங்கள் எவை, அந்த நாடகங்களின் மையப்பொருள் எது, பங்குகொண்ட நடிகர்கள், நெறியாளர் போன்ற விபரங்களை ரத்தினச் சுருக்கமாக ஒரு பக்கத்தில் Lanka Guardian இதழில் எழுதியிருந்தார். இந்த விபரங்களை வேறு எங்கும் நீங்கள் தேடிப் பிடிக்க முடியாது. இந்தக் கட்டுரை ஒரு archival materialதான்.

பரந்த வாசிப்பும், ஆழ்ந்த பார்வையும் தெளிவான எழுத்தாற்றலும் அயராத எழுத்துழைப்பும் கொண்ட ஓர் எழுத்தாளன்மீது எத்துணை சேறடிப்பு நம் இலக்கிய வரலாற்றில் நடந்தேறியுள்ளது என்பதையும் இங்கே நோக்குவது பொருந்தும். நுனிப்புல் விமர்சகர், மேலோட்டமான எழுத்தாளர் என்று கண்மூடித்தனமான வக்கிரத் தாக்குதல்கள் இவர்மீது நிகழ்த்தப்பட்டன.

'மேலோட்டமான குறிப்புத்தெரிவித்தலே உள்ளது, சரியான நேர்மையான விமர்சனங்களை வைத்தல் செய்யப்படுவதில்லை, அவர் ஒருவகை 'தப்பி ஓடுதல்', 'பொதுமைப்படுத்தல்' போன்ற வாய்பாடுகளுள் அடங்கிவிடுகிறார், இத்தகைய 'நுனிப்புல் மேய்தல்' விமர்சனங்களிலும் பார்க்க ஆங்கிலத்தில் எழுதாமல் இருப்பது புத்திசாலித்தனம் என்று சொல்லத் தோன்றுகிறது, மற்றைய எல்லா 'மேதாவிகளும்' இத்தகைய போலிகளைப் பார்த்துவிட்டு, படித்துவிட்டு சும்மா இருக்கையில் தனக்கு சின்ன கோபம் வந்துவிட்டது' என்று மாரீசத்தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. இந்த மனிதர்கள் போலி முகங்களோடு திரிபவர்கள்.

'சரிநிகர்' பத்திரிகையில் கே.எஸ். சிவகுமாரனின் 'திறனாய்வுப் பார்வைகள்' என்ற நூலுக்கு மாலின் என்ற பெயரில் ஒரு நபர் மதிப்புரை எழுதியுள்ளார்.


'இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் யாவும் ஆழமான விமர்சன நோக்குடையவை அல்ல. அதனை மேற்கொள்வதையும் தனது பணியாக கே.எஸ். புரிந்துகொள்ளவில்லை. ஆனால், தமிழில் பல்வேறு நூல்கள், எழுத்தாளர்கள், கட்டுரைகள் என்பனவற்றை வாசகர்களுக்கு அறிமுகம்செய்துவரும் பணியை நாம் குறைத்து மதிப்பிடவும் முடியாது' என்று ஒரேயடியாக, மேதாவித்தனத்துடன் எனது நூலில் இடம்பெற்ற கட்டுரைகளை (முழுமையாக வாசித்திருப்பாரோ



என்று எனக்குச் சந்தேகம். நக்கலாக எழுதுவது 'விமர்சனம்' என்று சிலர் நினைக்கிறார்கள்போலும்) மதிப்புரைக் குறிப்பு எழுதியவர் மட்டந்தட்டியிருக்கிறார். நெஞ்சில் ஒரு முள்ளாக இது குத்தியது' என்று திடீர் விமர்சகர் மாலின் எழுதிய குறிப்பு பற்றி கே.எஸ். சிவகுமாரன் விசனிக்கிறார்.

சிவகுமாரனின் இந்தத் 'திறனாய்வுப் பார்வைகள்' என்ற நூலில்தான் விபுலானந்தரின் திறனாய்வு குறித்து 33 பக்கங்களில் எழுதப்பட்ட மிகச் சிறந்த ஆய்வுக்கட்டுரை இடம்பெற்றிருக்கிறது. பாரதியின் புனைகதைகள் பற்றிய கட்டுரை புதியது. மௌனி, அ.ஸ.அப்துல் ஸமது, தெணியான் போன்றோர் பற்றிய பதிவுகள் முக்கியமானவை.

எஸ்.பொ.வின் 'தீ' நாவலுக்கு கே.எஸ். எழுதிய விமர்சன வரிகளில் ஒன்றைத்தானும் சொந்தமாக எழுத இயலாதவர்கள் பொய்ப் பெயர்களில் ஆழமில்லை என்று லேசாகத் தீர்ப்பளித்துவிடுகிறார்கள். எத்தனை inch ஆழம் என்று கொஞ்சம் சரியாகச் சொன்னால் வசதியாக இருந்திருக்கும். மாலின் மாதிரிப் பேர்வழிகளை சிவகுமாரன்' தற்காலிக அல்லது திடீர் விமர்சகர்' என்று குறிக்கிறார். தங்களின் பெயரைப் போட்டு எழுதத் திராணியற்றவர்கள் இம்மாதிரி மறைந்துநின்று எழுதுவது ஒன்றும் புதிய விடயம் அல்ல. Fake ID வகையறாக்கள். 'கே.எஸ். சிவகுமாரன் ஈழத்துக் கலை, இலக்கிய உலகில் தூக்கி எறியப்பட முடியாத ஒருவராக நிலைகொண்டுள்ளார்' என்று பேராசிரியர் சி. மௌனகுரு இலக்கிய உலகில் அவரின் இடநிர்ணயத்தை எடைபோடும் வரிகள் அர்த்தம் மிக்கவை.




## மேஷம்

**(அஸ்வினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதம் )**

கும்பத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன் சூரியனோடு இணைந்திருக்கின்றார். தனஸ்தானத்திற்கும் 2 ஆம் இடத்திற்கும் களத்திரதானத்திற்கும் 7 ஆம் இடத்திற்கும் அதிபதியான சுக்கிரன் இலாபஸ்தானத்தில் 11 ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால் உங்கள் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். வாழக்கைத்துணையின் உத்தியோகத்தில் முன்னேற்றம் இருக்கும். தங்கம், வெள்ளி போன்ற விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதற்கான வாய்ப்புகள் கைக்கூடிவரும். அதிர்ஷ்ட நாள் 7 , 8 ,12

## ரிஷபம்

**(கார்த்திகை 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1 ஆம் 2 ஆம் பாதம்)**

கும்பத்தில் சூரியனோடு சேர்ந்து சுக்கிரன் சஞ்சாரம் செய்கின்றார். உங்கள் இராசிநாதனாகவும் 6 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் சுக்கிரன் 10 ஆம் இடத்தில் இப்போது சஞ்சரிப்பதால் சூரியனோடு சேர்ந்திருப்பதால் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதில் சுயதொழில் செய்யலாமா என சிந்திப்பர். இக்காலத்தில் ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. மேலும் தொழில் இல்லாமல் கஷ்டப்பட்டவர்களுக்கு மீண்டும் தொழில் வந்து சேரும் வாய்ப்புகள் வந்துசேரும். அதிர்ஷ்ட நாள் 9, 10 , 11.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3 ஆம் 4 ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்,)**

கும்பத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன் சூரியனோடு சேர்ந்து சஞ்சாரம் செய்கின்றார். 5 க்கும் 12 ஆம் இடத்திற்கும் உரிய சுக்கிரன் 9 ஆம் இடத்தில் சூரியனோடு இணைந்து சஞ்சாரம் செய்யும்போது பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றிக்கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பூர்வீக சொத்துக்களில் பாகப்பிரிவினைகள் சுமுகமாக நிறைவேறும். அதிர்ஷ்ட நாள் 12, 13.

## கடகம்

**(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

கும்ப இராசியில் சஞ்சரிக்கும் சுக்கிரன் சூரியனோடு சேர்ந்து சஞ்சாரம் செய்கின்றார். சுகஸ்தானமான 4 ஆம் இடத்திற்கும். இலாபஸ்தானமான 11 ஆம் இடத்திற்கும் அதிபதியான சுக்கிரன் கும்பத்தில் சஞ்சரிப்பதால் உடல் நலத்திற்கான ஒருதொகை பணத்தை செலவிட நேரிடலாம். வெளிநாட்டிலிருந்து அனுகூலமான தகவல் வந்துசேரும். புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். அதிர்ஷ்ட நாள் 8.

## சிம்மம்

**( மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)**

கும்ப இராசியில் சஞ்சரிக்கும் சுக்கிரன் சூரியனோடு சேர்ந்து சஞ்சாரம் செய்கின்றார். எனவே, மிகுந்த முன்னேற்றம் ஏற்படும். புதிய முதலீடுகள் செய்து தொழிலை விரிவுப்படுத்த முயற்சிப்பீர்கள். பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். அடகு வைத்த நகைகளை மீட்டு அணிந்துகொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படும். சகோதரர் வழியில் இடம்பெறும் சுபகாரியங்களை முன்னின்று நடத்துவீர்கள். அதிர்ஷட நாள் 9.

## கன்னி

**( உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம்,அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)**

கும்ப இராசியில் சஞ்சரிக்கும் சுக்கிரன் சூரியனோடு சேர்ந்து சஞ்சாரம் செய்கின்றார். உங்கள் இராசிக்கு தனஸ்தானமான 2 ஆம் இடத்திற்கும் பாக்கியஸ்தானமான 9 ஆம் இடத்திற்கும் அதிபதியானவர் சுக்கிரன் அவர் 6 ஆம் இடத்திற்கு வரும்போது உத்தியோகத்தில் முன்னேற்றங்கள் ஏற்படும். பணிபுரியும் இடத்திலிருந்து வேறு துறைக்கு மாறவேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தால் அதை கைவிட்டுவிடுவீர்கள். தடைக் கற்களை படிக் கற்களாக மாற்ற இக்காலத்தில் குலதெய்வ வழிபாடு நல்லது. அதிர்ஷ்ட நாள் 7 ,8 ,9

## துலாம்

**(சித்திரை 3 ஆம் 4 ஆம் பாதம்,சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)**

உங்கள் இராசி அதிபதி சுக்கிரன் சூரியனோடு இணைந்து கும்ப இராசியில் இப்போது சஞ்சாரம் செய்துகொண்டிருக்கின்றார். இக்காலத்தில் பெண் பிள்ளைகளின் திருமண முயற்சி கைக்கூடும். பூர்வீக சொத்துக்களை பங்கிடுவதில் இருந்த பிரச்சினைகள் அகலும். தொழில் முயற்சியில் தொல்லை தந்தவர்கள் விலகுவர். கடன் பிரச்சினையில் இருந்தவர்களுக்கு இப்போது நிவாரணம் கிடைக்கும். கட்டிட திறப்பு விழா, கடை திறப்பு விழாக்களையும் அமைக்கும் நேரமிது. அதிர்ஷ்ட நாள் 10

## விருச்சிகம்

**(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

உங்கள் இராசிக்கு களத்திரதானத்திற்குரிய 7 ஆம் இடத்திற்குரியவரும் விரயாதிபதியான 12 ஆம் இடத்திற்குரியவருமான சுக்கிரன் இப்போது சூரியனோடு சேர்ந்து சஞ்சரிக்கின்றார். அவர் 4 ஆம் இடத்தில் சுகஸ்தானத்தில் சஞ்சரிக்கும்போது உடல்நலம் சீராகும். கடன் சுமை குறையும். கடை மற்றும் கட்டிட திறப்பு விழாவை கண்டு மகிழுவீர்கள். தாயின் உடல்நலம் சீராகும். அதிர்ஷட நாள் 8 ,9 ,12 ,13

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)**

கும்ப இராசியில் சஞ்சாரம் செய்யும் சுக்கிரன் சூரியனோடு சேர்ந்து சஞ்சாரம் செய்கின்றார். உங்கள் இராசிக்கு கடன், நோய், எதிரிஸ்தானமான 6 ஆம் இடத்திற்குரியவரும் இலாபஸ்தானமான 11 ஆம் இடத்திற்கு உரியவருமான சுக்கிரன் இப்போது முயற்சிஸ்தானமான 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றபோது நீங்கள் நடக்காது என எண்ணியிருந்த காரியங்கள் திடீரென நடைபெறும். விலகிச்சென்ற உடன்பிறப்புக்கள் வந்து சேர்வர். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகள் கிடைக்கலாம். அதிர்ஷ்ட நாள் 10, 11

## மகரம்

**(உத்தராடம் 2 ஆம் 3 ஆம்; 4 ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1 ஆம் 2 ஆம் பாதம்)**

உங்கள் இராசிக்கு புத்திரஸ்தானமான 5 ஆம் இடத்திற்கும் தொழில் ஸ்தானமான 10 ஆம் இடத்திற்கும் உரிய சுக்கிரன் சூரியனோடு இணைந்து கும்பத்தில் சஞ்சாரம் செய்கின்றார். அவர் தனஸ்தானத்தில் வரும்போது விலையுயர்ந்த பொருட்கயை வாங்கும் வாய்ப்பு கிட்டும். அத்தோடு, கட்டி வீட்டை பழுதுபார்க்கும் அமைப்பும் ஒருசிலருக்கு அமையும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அதிர்ஷ்ட நாள் 12, 13

## கும்பம்

**(அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)**

உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் சுக்கிரன் சுகஸ்தானமான 4 ஆம் இடத்துக்கும் பாக்கியஸ்தானமான 9 ஆம் இடத்திற்கு உரியவருமான சுக்கிரன் சூரியனோடு சேர்ந்து கும்ப இராசியில் சஞ்சாரம் செய்கின்றார். எனவே, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. பங்காளிப் பகை மாறும். உத்தியோக உயர்வு தானாக வந்துசேரும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு போட்டிக்கு மத்தியில் வெற்றிகிடைக்கும். பெற்றோர்களின் மணிவிழாக்களை நடத்தும் யோகம் உண்டு. அதிர்ஷ்ட நாள் 7, 8 , 9.

## மீனம்

**மீனம் (புரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)**

உங்கள் இராசிக்கு 12 ஆம் இடமான விரயஸ்தானத்தில் சுக்கிரன் சூரியனோடு சேர்ந்து சஞ்சரிப்பது நன்மைதான். முயற்சிஸ்தானமான 3 ஆம் இடத்திற்கும் அட்டமஸ்தானமான ஆயுள்ஸ்தானத்திற்கும் உரிய 8 ஆம் இடத்திற்கு அதிபதியான சுக்கிரன் விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கும்போது எதிர்பாராத திருப்பங்கள் பல காண்பீர்கள். அதிகப்படியான வருமானம் வந்து மகிழ்ச்சித்தரும். அதிர்ஷ்ட நாள் 10, 11.

---

# எனது வெற்றி கட்சிக்கு அப்பாற்பட்டது

**மக்களின் தேவையை இனம் கண்டு நலன் தரும் வரையறைக்குள்ளும், வழிமுறைக்குள்ளும் நின்று சேவையாற்றுவதே ஒரு நல்ல தலைவனுக்கு அழகு என்று கூறுகின்றார் ஏறாவூர்பற்று பிரதேச சபையின் புதிய தலைவர் எஸ்.சர்வானந்தன் அவரது நேர்காணல்...**

எஸ்.எஸ்.தவபாலன்
புளியந்தீவு குறூப் நிருபர்



ஏறாவூர்பற்று பிரதேச சபையின் புதிய தலைவர் எஸ்.சர்வானந்தன்

**கேள்வி: மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்ற பிரதேச சபைத் தலைவர்களுக்குள் நீங்கள்தான் வயதில் இளையவர். உங்களைப்பற்றி கூறுங்கள்?**

மட்க்களப்பு மாவட்டத்தில் இப்போதிருக்கின்ற தலைவர்களுள் நான் வயதில் இளையவன். இருந்தும் பிரதேச சபைகளின் ஆட்சி, அதிகாரம், செயற்பாடுகள் என்பவைே எனக்கு அத்துப்படி. அதற்கு இதே பிரதேச சபையின் ஊழியராக இருந்தமைதான் காரணம். ஒரு தலைவரின் செயற்பாட்டுக்கு மனப்பாங்கு, விசாலம் நிறைந்த நுணுக்கமான அறிவு, அர்ப்பணிப்பான சேவை என்பன பிரதானமானவை என்பது எனது அபிப்பிராயம். இப்போது பாதைகள், தெரு விளக்குகள், பொதுச்சந்தைகள் என்பன போன்ற சேவைகள் விரிவாக்கம் அடைந்துள்ளன. அது இன்னும் நீண்டு செல்லும்

**கேள்வி: மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் பிரதேச சபைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நா.கதிரவேல் தலைவராக தெரிவு செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் அவரது தலைமைப் பதவி தொடர்ந்தது. அவரால் சமர்ப்பிக்கப்பட்ட "பாதீடுகள்" தோல்வியுற்றதால் அவர் பதவியிழந்திருக்கிறார். அதன்பின்னர் நீங்கள் தெரிவாகியிருக்கிறீர்கள் இதுபற்றி உங்களின் கருத்து என்ன?**

தனிப்பட்ட முறையில் உறுப்பினர் கதிரவேல் ஒரு நல்ல மனிதர். அவருக்கு தலைமைப்பதவி வழங்கிய உறுப்பினர்களின் மன ஒட்டத்தை அவர் கவனிக்கவில்லை. அவர்களது நல்ல எண்ணங்களை அவர் கவனித்து செயற்பட்டிருந்தால் தவறுகள் நடந்திருக்க இடமில்லை. நான் அவ்வாறு நடக்க மாட்டேன்.

**கேள்வி: பொதுவாக கிழக்கில் பிரதேச சபை நிர்வாகத்தில் தலைவரை மாற்றுவதென்பது ஒரு புதுப்பாணியாக மாறியிருப்பதாக மக்கள் மத்தியில் கருத்து பதிவாகியிருக்கிறது. சில பிரதேச சபைகளுக்கு விரைவில் புதிய தலைவர்கள் தெரிவு செய்யப்பட இருக்கிறார்கள். மக்களினது கருத்தில் எவ்வளவு உண்மையிருக்கிறது?**

பல ஊடகங்கள் இவ்வாறான கருத்துக்களை விதைப்பதை பார்த்திருக்கிறேன். இதில் எந்தளவு உண்மையிருக்கிறது என்பதை கூற முடியாதுள்ளது. பொதுவாக பிரதேச சபை உறுப்பினர்கள் மக்களின் வாக்குப்பலத்தால் பதவிக்கு வந்தவர்கள். சின்னத்தனமான செயற்பாடுகள் அவர்களிடம் இருந்திருக்க முடியாது. இவ்விடயத்தில் திட்டவட்டமாக "ஆம்" அல்லது "இல்லை" என்ற பதிலை என்னால் கூறமுடியாதுள்ளது

**கேள்வி: ஒரு பிரதேச சபையின் செயற்பாடென்பது ஒரு சமூகத்தின் பல்வேறு தேவைகளை கவனிப்பதாகவும் அவற்றை முன்னேற்றுவதாகவும் இருக்க வேண்டும் கிழக்கு மாகாணத்தின் பிரதேச சபைகளைப் பொறுத்தவரை இக் கருத்து எவ்வளவு தூரம் பிரதி பலிக்கிறது என்பதை பொதுவாக கூற முடியுமா?**

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்திக்கான செயற்பாடுகள் அனைத்தும் பிரதேச சபைகளின் சட்டவாக்கங்களில் இருக்கின்றன. மக்களின் தேவையை இனம் கண்டு நலன் தரும் வரையறைக்குள்ளும், வழிமுறைக்குள்ளும் நின்று சேவையாற்றுவதே ஒரு நல்ல தலைவனுக்கு அழகு. இதற்கு சபை உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் அவசியமானது. ஒரு உயிரின் "கருவறை தொடக்கம் கல்லறை வரைக்குமான சேவைகள்" உள்ளூராட்சி சட்டத்தில் வரையப்பட்டுள்ளன. அவற்றை மனவிருப்பத்தோடு ஆற்றினால் மக்களில் முன்னேற்றம் ஏற்படும்

**கேள்வி: பொதுவாக மக்கள் சேவையும் அதில் வெற்றி பெறுவதும் ஒரு கலையென கூறப்படுகிறது. இதுபற்றிய உங்களது அனுபவத்தை எமது வாசகர்களோடு பகிர்ந்து கொள்ளுவீர்களா?**

மக்கள் சேவையை மக்களோடு இணைந்து செய்ய வேண்டும். அப்போதுதான் தாங்கள் பெறுகின்ற சேவையின் பெறுமதியை மக்கள் உணர்வார்கள். மக்களை சேவையின் பக்கம் ஈர்த்தெடுப்பது இலகுவானதொன்றல்ல. அது நுணுக்கமானது. "ஆடுற மாட்டை ஆடிக்கறக்கணும், பாடுற மாட்டை பாடிக்கறக்கணும்" என்ற கிராமிய வழக்கு. இதற்கு பொருத்தமானது. இதனை தலைவர்மார்கள் சரியாக கையாள வேண்டும். இதுவே வெற்றிக்கான வழி.

**கேள்வி: மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பிரதேச சபைகளில் பாதீடு சமர்ப்பிக்கப்பட்டு தோல்வியுற்றிருக்கின்றது. அதில் கோறளைப்பற்று பிரதேச சபையும் ஒன்று. அதன் பாதீடு சமர்ப்பிக்கும் கூட்டத்தில் பல அருவருக்கத் தக்க சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. ஆனால் அதற்கான புதிய தலைவரை மீளவும் தெரிவு செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியாகவில்லை. இதுபற்றிய உங்களது அபிப்பிராயம் ?**

கோறளைப்பற்று பிரதேச சபையின் பாதீடு சமர்ப்பிக்கும் கூட்டத்தில் பல அசிங்கமான செயற்பாடுகள் இடம்பெற்றதாக ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தன. உறுப்பினர்களின் செயற்பாடுகள் கௌரவம் நிறைந்தவனவாக இருக்க வேண்டும். பதவி, பட்டங்களைவிட கௌரவத்தையும் நமது கலாசார பண்பாடுகளையம் நான் பெரிதாக மதிப்பவன். இதையே எதிர்பார்ப்பவன். சில விடயங்களில் அரசியல் நுழைகிறது. அவற்றிற்கு காலம்தான் பதில் சொல்லும். இதற்கு மேல் நான் எதையும் கூறவிரும்பவில்லை

**கேள்வி: நீங்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்தவர். நீங்கள் தலைவராக தெரிவு செய்யப்படுவதற்கு பின்புலத்தில் நின்று ஒத்துழைத்த மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.ஸ்ரீநேசன் என்று கூறப்படுகிறது. இதுபற்றி என்ன கூறப்போகிறீர்கள்?**

நான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்தவன். எனது வெற்றி கட்சிக்கு அப்பாற்பட்டது. கட்சியைச் சாராதவர்களும், மாற்றுக் கட்சிக்காரர்களும் என்னை ஆதரித்து கையுயர்த்தினார்கள். இது என்மீதுள்ள ஒரு பற்று என்றுதான் கூறமுடியும். எமது கட்சி புதிய தலைவரைத் தெரிவதற்கான தேர்தலில் தன்னிச்சையான முடிவுகளை எடுக்கலாம் என்று எனக்கு அதிகாரம் தந்திருந்தது. மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும், இப்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களும் எனக்கு உதவினார்கள். குறிப்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.ஸ்ரீநேசன் இவ்விடயத்தில் நேரடியாக இறங்கி எனக்கு ஒத்துழைப்புத் தந்தார். பல தமிழ் உணர்வாளர்கள் தடம் மாறிப் பயணித்ததை நான் பார்த்தேன்.

**கேள்வி: ஏறாவூர்ப்பற்று பிரதேசத்தில் மணல் அகழ்வதும் அதனை பிற இடங்களுக்கு ஏற்றிச் செல்வதும் பிரபலமாகப் பேசப்படுகிறது. இதுபற்றி என்ன சொல்லப் போகிறீர்கள்?**

மணல் அகழ்வும், ஏற்றிச் செல்வதும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல உயிர்க்காவுகைகளையம், துஷ்பிரயோகங்களையும் உருவாக்கி விட்டிருக்குன்றது. அண்மைக்காலம்வரை பிரதேச சபைகளுக்கே இதற்கான அதிகாரம் இருந்தது. அது கைமாறிப்போய்விட்டது. நாங்கள் கியூப் மண்ணுக்கு ரூபா 200 வரியாக கட்ட வேண்டும். மணல் சேகரிக்கும் இடத்தையும், மணல் அள்ளும் இடத்தையும் எமது பிரதேச சபை சிபாரிசு சேய்ய வேண்டும். இவை தவிர எமக்கு வேறு தொடர்புகள் கிடையாது.

**கேள்வி: பிரதேச சபை எல்லைக்குள் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கு நீங்கள் தலைமை வகிக்கும் பிரதேச சபை ஒரு நல்ல பொறிமுறையை வைத்திருக்கிறதென்ற கருத்து மக்கள் மத்தியில் இருக்கிறது. இதுபற்றி.?**

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்குகின்ற 5 பிரதேச சபைகள் மூலமாக திண்மக் கழிவு நாளொன்றுக்கு ஏறக்கறைய 25 தொன் அளவில் இங்கு வருகின்றது ஒரு தொன்னுக்கு 900 ரூபாவை கட்டுப்பணமாக நாங்கள் அறவிடுகிறோம். 16 தொழிலாளர்கள் அங்கு பணிபுரிகிறார்கள். காலப்போக்கில் இதனை விஸ்தரிக்கும் நோக்கம் எமக்கு இருக்கிறது.

**கேள்வி: உங்களுக்கு கிடைத்திருக்கும் பதவியை வைத்து இப்பிரதேசத்தை எப்படி முன்னேற்றப் போகிறீர்கள். விபரமாக கூறுங்கள்?**

எமது சபை இற்றைவரை கால்பதிக்காத பிரிவுகள் இருக்கின்றன. அவற்றில் இறங்க வேண்டும் என்பது எனது எண்ணம். உதாரணத்திற்கு உல்லாசப்பயணத்துறை. நவீன சந்தை, நவீன நூலகம், பொழுதுபோக்கு வசதிகள் கொண்ட பூங்கா என்பன அவற்றுள் சில.





பாதுகாப்பு அமைச்சு

# தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணி

நாட்டின் இளம் தலைவர்களாக மிளிர கௌரவமான மற்றும் அபிமானத்துடன் நிர்வாக திறமைமிக்க தலைமைத்துவ பண்புகளை விருத்திசெய்துகொள்வதன் ஊடாக ஆணை அங்கிகாரம் பெற்ற அதிகாரியாக தேசத்தை கட்டியெழுப்ப எம்மோடு இணைந்துக்கொள்ளுங்கள்.



2021 ஏப்ரல் 15

விண்ணப்பம் மற்றும் மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள இணையத்தளத்தினுள் பிரவேசிக்க
www.cadet.gov.lk

கொடுப்பனவுகள் மற்றும் வரப்பிரசாதங்கள்
- இலவச சீருடைகள்
- வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள் மற்றும் பயிற்சி பாடநெறிகள் முப்படைகள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்களின் விசேட...
- பாடநெறி படிப்புக்கான வாய்ப்புக்கள்
- இணைப்புச்சேவையின் போது சிறந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்
- இணைப்புச்சேவையின் போது இலவச மருத்துவ வசதி

அடிப்படை தகுதிகள்
- இலங்கையராக இருத்தல்
- இலங்கை கல்வி நிர்வாக சேவையில், இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில், இலங்கை அதிபர் சேவையில் அல்லது இலங்கை ஆசிரியர் சேவையில் அதிகாரியாக இருத்தல்
- 2021.08.31ஆம் திகதியன்று 35 வயதுக்கு குறைந்தவராக இருத்தல்
- அடிப்படை இராணுவ பயிற்சியை பெற்றுக்கொள்ளக்கூடிய சிறந்த உடற்தகுதியுடையவராக இருத்தல்
- ஆண் விண்ணப்பதாரர்களின் உயரம் 160cm இற்கு குறையாதவாறும் பெண் விண்ணப்பதாரர்களின் உயரம் 150cm இற்கு குறையாதவாறும் இருத்தல்

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி : Corps Secretary , Corps Secretary Branch, Headquarters, National, National Cadet Corps, No: 15 , Dutugemunu Street, Pamankada,Dehiwala.

மேலதிக தகவல்களுக்கு.... Corps Secretary Branch
011- 2815343/070-3613152
070-3613103/070-3613194

Headquarters,
National Cadet Corps,
No 15,
Dutugemunu Street,
Pamankada,Dehiwala.

011 28 15346
ncchq.lk@gmail.com
ww.cadet.gov.lk



# ஒப்பந்தம் (டெண்டர்) ஊடாக வாகன விற்பனை

සියපත ෆිනෑන්ස්
சியபத பினான்ஸ்
Siyapatha Finance
(Finance Company of Sampath Bank Group)
Company No. PB 917 PQ

| வாகன இல. | வகை மற்றும் மாதிரி | விபரம் | யார்ட் |
|---|---|---|---|
| **மோட்டார் கார்** | | | |
| NW KA -8xxx | MARUTI 800 - MOTOR CAR | 2006, 796.00CC, PETROL, JAPAN, SILKY SILVER | D |
| 64-5xxx | MITSUBISHI LANCER - MOTOR CAR | 1990, 2000.00CC, DIESEL, JAPAN, WHITE | D |
| WP CAZ - 5xxx | SUZUKI DAA MK42S SPACIA - MOTOR CAR | 2017, 650.00CC, PETROL/ELE, JAPAN, BLACK | A |
| WP KN -2xxx | CHERY QQ - MOTOR CAR | 2011, 812.00CC, PETROL, CHINA, ELEGANCE GREEN | A |
| EP KE - 0xxx | MITSUBISHI GH-75W - MOTOR CAR | 1999, 3490.00CC, PETROL, JAPAN, SILVER | C |
| WP GX -5xxx | NISSAN GJ-VY11 - MOTOR CAR | 2002, 1290.00CC, PETROL, JAPAN, WHITE | A |
| WP KV -33xxx | MICRO MX 7 MARK 11 - MOTOR CAR | 2013, 14978.00CC, PETROL, SRI LANKA | A |
| **டூவெல் பேப்பர்ஸ்** | | | |
| 251-2xxx | NISSAN VVJC23 - DUAL PURPOSE | 1990, 1970.00CC, DIESEL, JAPAN, WHITE | B |
| **முச்சக்கர வண்டி** | | | |
| SP ABB-5xxx | PIAGGIO APE - THREE WHEELER | 2015, 395.00CC, DIESEL, INDIA, BLUE | A |
| CP QO-2xxx | BAJAJ AUTO AR4S - THREE WHEELER | 2008, 173.5CC, PETROL, INDIA, ECO GREEN | D |
| **மோட்டார் சைக்கிள்** | | | |
| SP BIQ-5xxx | TVS SCOOTY PEP - MOTOR CYCLE | 2018, 90.00CC, PETROL, INDIA, BLUE | A |
| WP BII - 1xxx | HERO MAESTRO EDGE - MOTOR CYCLE | 2019, 110.9CC, PETROL, INDIA, PANTER BLACK RED | A |
| **மோட்டார் லொறி** | | | |
| 68-9xxx | ISUZU NRR32 - MOTOR LORRY | 1994, 7120.00CC, DIESEL, JAPAN, WHITE | D |
| 227 - 3xxx | NISSAN ATLAS 200 - MOTOR LORRY | 1992, 2950.00CC, DIESEL, JAPAN, WHITE | D |

மேலே குறிப்பிட்ட வாகனங்களை பரிசீலிக்கும் இடம்:

**முற்றம் "A"**
இல. 01, ஸ்ரீ மஹா விஹார வீதி,
பாமன்கட, தெஹிவளை.
(ஸ்ரீ மஹா விஹாரயின் உள்ளே)
விசாரணை: 0117 209 358
சுரன்ஜித் - 076 324 1184, ஜெராட் 076 065 1294

**முற்றம் "B"**
இல. 344, ஸ்ரீ மங்கலவத்த,
மம்பே, பிலியந்தல.
சுரன்ஜித் 0763 241 184
ஜெராட் 0760 651 294

**முற்றம் "C"**
12வது மைல்கல்,
கல்முனை வீதி,
ஹிங்குரான, அம்பாறை
தமித் 0769 665 224

**முற்றம் "D"**
இல. 516, பிரிவெண சந்தி,
குருநாகல வீதி, தம்புள்ளை.
அமில - 077 272 9646
ஜெராட் 0760 651 294

ஒப்பந்த பத்திரங்களின் மீள செலுத்தப்படாத கட்டணமான ரூ. 400/- ஐ செலுத்தி ஒப்பந்த விண்ணப்பத்தை வாகன முற்றத்திலிருந்து பெறலாம். பூரணப்படுத்தப்படாத அல்லது தவறான வடிவத்தில் இருக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**2021 மார்ச் 07 (ஞாயிறு) முதல் மார்ச் 11ம் திகதி (வியாழன்) வரை**
**மு.ப. 8.30-பி.ப. 5.00 வரை (இரு தினங்களும் உட்பட)**

**2021 மார்ச் 11ம் திகதி பி.ப. 5.00 மணிக்கு டெண்டர் மூடப்படும்**

**விசாரணைகள்:** தலைமை - மீள்பெறுகை,
**சியபத்த பினான்ஸ் பீஎல்சீ,**
சயுரு செவண, இல. 46/12, நவம் மாவத்தை, கொழும்பு 02.
தொலைபேசி: 011 7 605 605 நீட்சி. 1104

எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தல் இன்றி ஏலவிற்பனையிலிருந்து விலக்கி கொள்ள கம்பனிக்கு உரிமையுண்டு



மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்

# பதவி வெற்றிடம்

கொழும்பு பல்கலைக்கழக, மருத்துவ பீட ஆராய்ச்சி மானியங்கள், அபிவிருத்தி நிதியங்கள் மற்றும் பட்டப்பின் பட்ட கற்கைநெறிகளின் நிதிசார் முகாமைத்துவத்திற்கு ஆதரவு வழங்குவதற்காக கணக்கு நிறைவேற்றாளர் பதவிக்காக பொருத்தமான தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கணக்கு நிறைவேற்றாளர் (ஒப்பந்த அடிப்படையில்)**

**தகைமைகள்:**

நிதி/ கணக்கியல்/ வியாபார முகாமைத்துவம் ஆகியவற்றில் பெற்ற பட்டதாரிப் பட்டம் அல்லது நிகரான தகைமை.

பட்டப்படிப்பிற்கு மேலதிகமாக, பின்வரும் தகைமைகளையுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(i) Foundation level (CAB) in Institute of Chartered Accountants of Sri Lanka (CASL) or equivalent qualification.

(ii) Member in Association of Accounting Technicians of Sri Lanka (MAAT)

**அனுபவம்:**

புகழ்வாய்ந்த அரசாங்க அல்லது தனியார் நிறுவனமொன்றில் கணக்கிடல் துறையில் ஆகக் குறைந்தது இரு வருட அனுபவம்.

**வயது:**

35 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்.

**சம்பளம்:**

மாதாந்தம் 50,000 ரூபா + வாழ்க்கைச் செலவுப் படி.

**பணிக்காலப்பகுதி:**

ஒரு வருட ஒப்பந்தம் (செயற்பாடு மற்றும் பீடத்தின் தேவையின் அடிப்படையில் புதுப்பிக்கக்கூடியது)

தகைமைகள், சான்றிதழ்களின் பிரதிகள், மற்றும் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் ஆகியன அடங்கிய முழுவிபரங்களுடனான விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அல்லது **admin@med.cmb.ac.lk** என்ற மின்னஞ்சல் வழியாக இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து பதினான்கு நாட்களுள் (2021 மார்ச் 21 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக) கொழும்பு-08, கின்சி வீதி, த.பெ. 271, 25 ஆம் இலக்கத்திலுள்ள மருத்துவ பீட பிரதி பதிவாளரை வந்தடையும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்களை தபால் மூலம் அனுப்புவதற்கு விரும்புவுள்ள விண்ணப்பதாரிகள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரை சுட்டிக் காட்டல் வேண்டும்.

**பதிவாளர்,**
**கொழும்பு பல்கலைக்கழகம்,**
**94, குமாரதுங்க முனிதாச மாவத்தை,**
**கொழும்பு-03.**
**07.03.2021.**



# இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்

சுற்றுலாத்துறை அமைச்சு

சுற்றுலா மற்றும் ஏற்பாட்டியல் துறைகளில் மனிதவள மேம்பாட்டுக்கான கல்வியை வழங்கும் இலங்கையின் முதன்மை நிறுவனமே இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்

## SLITHM யாழ்ப்பாணம் வெற்றிடங்கள்

### துணை விரிவுரையாளர் (ASSISTANT LECTURER) (AR1 பிரிவு)

- உதவி விரிவுரையாளர் - உணவு மற்றும் பான செயற்பாடுகள் - SLITHM யாழ்ப்பாணம்
- உதவி விரிவுரையாளர் - சமையல் - SLITHM யாழ்ப்பாணம்

**தகைமையும் அனுபவமும்** (கீழுள்ளவற்றில் 1 அல்லது 2 அல்லது 3)

1. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் விசேட பட்டம்
2. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் பட்டம் அத்துடன் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் முதுகலை பட்டம்.
3. இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தில் சமையல்/ உணவு மற்றும் பான செயற்பாடுகளில் சிறப்பு பூரணமான பட்டம் பெற்றிருத்தல்.

   மற்றும்
   மூன்று அல்லது அதனிலும் கூடிய நட்சத்திர அந்தஸ்துகொண்ட ஹோட்டலொன்றில் குறைந்தது 2 வருட அனுபவத்துடன் நிறைவேற்று அதிகார மட்டத்தில் பணியாற்றிய அனுபவம்.

**வயதெல்லை:**
22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் அவசியம்.

**சம்பள அளவுத் திட்டம்:**
AR1-2016 ரூ. (53,150/= 10 x 1,375/= 15 x 1,910/= ரூ. 95,550/=) 2016ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைத்திணைக்கள வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் என்பன வழங்கப்படும். போக்குவரத்துக்காக மாதாந்தம் ரூ. 4,000/- உம் மற்றும் தொழில்முறை கொடுப்பனவாக ரூ. 3,000/- உம், தொலைபேசி கொடுப்பனவாக ரூ. 2,500/- உம் வழங்கப்படும்.

### முகாமைத்துவ உதவியாளர் (MANAGEMENT ASSISTANT) (MA 1-2 பிரிவு)

- **தகைமையும் அனுபவமும்**
  க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி. அவற்றில் சிங்களம்/தமிழ், ஆங்கில மொழி, கணிதம் என்பன அடங்கலாக நான்கு திறமை சித்திகள் உடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் (பொது பாடம் தவிர) சித்தி.

**வயதெல்லை:**
18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் அவசியம்.

**சம்பள அளவுத் திட்டம்:**
MA 1-2 ரூ. [27,910 - 10x300 - 7x350 - 12x600 - 12x710 - 49,080] 2016ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைத்திணைக்கள வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் என்பன வழங்கப்படும். போக்குவரத்துக்காக மாதாந்தம் ரூ. 4,000/- வழங்கப்படும்.

**பொதுத் தகவல்கள்:**

**ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றுக்கான பங்களிப்பு**
- ஊசேநி - அடிப்படைச் சம்பளத்தில் ஊழியர் 10% பங்களிப்பினையும் தொழில்தருநர் 15 % பங்களிப்பினையும் வழங்குவார்.
- ஊநநி - அடிப்படைச் சம்பளத்தில் தொழில்தருநர் 3% பங்களிப்பினை வழங்குவார்.
- ஊழியருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கும் கவர்ச்சிகரமான சுகாதார மருத்துவ காப்புறுதி காப்பீடு.


கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், வேலை அனுபவச் சான்றிதழ், உறவினரல்லாத இரண்டு சிபாரிசுதாரர்களின் பெயர்களுடன் பூரணமான சுயவிபரக் கோவையை (ஆங்கில மொழியில்) கீழ்வரும் முகவரிக்கு **2021 மார்ச் 25ஆம்** திகதிக்கு முன்பாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். விண்ணப்பிக்கும் பதவியை தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் குறிப்பிடவும்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்**
**இல, 78 காலி வீதி, கொழும்பு 03**

**பொது விசாரணை: 0112 208360**

# வெள்ளப்பெருக்கு

## (மலையாள சிறுகதை)



ஊரில் உயரம் கூடிய இடம் இறைவணங்கில்தான். அங்கே இறைவன் கழுத்துவரை நீரில் நிற்கின்றார். நீர்! எங்கும் நீர்! ஊரார் எல்லோரும் கரைதேடிப் போய்விட்டார்கள். வீட்டுக்குக் காவலாக ஓர் ஆள் இருப்பார் – வீட்டில் மிதவை இருக்குமாகில்.

மூன்று அறைகளுள்ள இறைவணங்கிலின் அடுக்கத்தில் (மாடி) அறுபத்தேழு குழந்தைகள் இருக்கின்றார்கள். முந்நூற்றைம்பத்தாறு ஆட்கள், நாய், பூனை, ஆடு, கோழி முதலான வளர்ப்புயிர்களும். எல்லாரும் ஒட்டுறவாக இருக்கின்றார்கள். ஒரு குழப்பமும் இல்லை.

சேந்நப் பறையன் ஓர் ஒளிநாளும் (பகல்) ஓர் இருள்நாளுமாக (இரவு) நீரிலேயே நிற்கிறான். அவனுக்கு மிதவை இல்லை. அவனுடைய தலைவர் (தம்பூரான்) மூண்ணயி உயிரையும் கையில் பிடித்துக்கொண்டுகரை அடைந்துவிட்டார்.

குடிலுக்குள் முதலில் நீர்ப்பெருக்கு உள்வரத் தொடங்கியபோதே, ஓலையும் கழியும் கொண்டு ஒரு மேற்கட்டைக் கட்டியிருந்தான். நீர் விரைவில் இறங்கும் என்று நினைத்து, இரண்டு நாள்களாக அதில் நிலைத்திருந்து கழித்தாயிற்று, தவிர, நாலைந்து வாழைக் குலைகளும் வைக்கோற்போரும் கிடக்கின்றன. அங்கிருந்து போய்விட்டால், அவற்றெல்லாம் ஆளிகள் கொண்டுபோகவும் செய்வார்கள்.

இப்போது மேற்கட்டின் மேலாக முழங்கால் அளவுக்கு நீர் இருக்கிறது. மேற்கூரையின் இரண்டு நிரல் ஓலைகள் நீரின் அடியில் இருக்கின்றன.

உள்ளே கிடந்து சேந்நன் குரல் கொடுத்தால். அழைப்பை யார் கேட்பார்கள்? அன்மையில் யார் இருக்கின்றார்கள்?... வயிற்றுப்பிள்ளையான ஒரு பறைச்சி, நான்கு குழந்தைகள், ஒரு பூனை, ஒரு நாள் இவ்வளவு உயிர்களும் அவனைச் சாந்திருக்கின்றன.

குடிலுக்கு மேலால் நீர் பெருகுவதற்கு இன்னும் முப்பதே நாழிகைகள் (இரண்டரை நாழிகை ஒரு மணிக்கூறு) வேண்டும் என்றும், தனதும் தன் இல்லத்தாரதும் இறுதி நெருங்கிவிட்டதென்றும் அவன் உறுதிப்பட்டான். அச்சந்தரத்தக்க மழை பெய்யத் தொடங்கி மூன்று நாள்களாகின்றன.

கூரையின் ஓலையைப் பிய்த்துப் போதுமான அளவுக்கு வெளிப்பட்ட சேந்நன், நாலு புறமும் பார்த்தான். வடக்கே ஒரு கட்டுமரம் போகிறது. உயர்ந்த குரலில் சேந்தப் பறையன் கட்டு மரத்தினரைக் கூவியழைந்தான். நல்ல வேளையாகக் கட்டு மரத்தினருக்கு நடப்பு விளங்கியது. அவர்கள் இழுவையைக் குடிலுக்கு நேராகத் திருப்பினார்கள். குழந்தைகளையும் பொண்ணாளையும் நாயையும் பூனையையும் கூரைக் கழிகளுக்கிடையில் ஒவ்வோர் எண்ணிக்கையில் இழுத்தெடுத்து வெளியில் விட்டான் சேந்நன். இழுவையும் இதற்குள் வந்து சேர்ந்தது.

பிள்ளைகள் கட்டுமரத்தில் ஏறிக்கொண்டிருந்தார்கள். "சேந்தச்சோ!... போறியோ..." என்று மேற்கிலிருந்து யாரோ குரல் கொடுத்தார்கள். சேந்நன் திரும்பிப் பார்த்தான்.

"இங்கயும் வாயேன்!..."

அது மடியத்தரையன் குஞ்சப்பன். அவன் வீட்டுக்கு மேலிருந்து அழைத்துக்கொண்டிருந்தான்.

விரைவாக மனைவியைப் பிடித்துக் கட்டுமரத்தில் ஏற்றினான். அந்தக் கையோடு பூனையும் பாய்ந்து இழுவையில் ஏறியது. நாளைப் பற்றி யாரும் நினைக்கவில்லை. அது குடிலின் மேற்குப் புறத்தைச் சரிவில் அங்குமிங்குமாக மோப்பம் பிடித்து நடந்து கொண்டிருந்தது.

கட்டுமரம் அகன்றது. அது தொலைப்பட்டது.

நாய் முகட்டின் முன்புறமாகத் திரும்பி வந்தது. சேந்நனின் கட்டுமரம் தொலைவுக்குப் போய் விட்டது. அது பறந்து போகிறது. இறப்பின் நோவோடும் அவ்வுயிர் ஊளையிடத் தொடங்கியது. துணையற்ற ஒரு மனிதனின் குரலையொத்த ஒலியலைகளை வெளிப்படுத்தியது. யார் அதனைக் கேட்பார்?... குடிலின் நான்கு சரிவுகளிலும் அது ஓடி நடந்தது. சில இடங்களில் மோந்து பார்த்தது. ஊளையிட்டது.

கவலையற்றக் கூரையின் மேலிருந்து ஒரு தவளை, முன்பார்ப்பில்லாத இந்தக் குழப்பத்தைக் கண்டஞ்சி, நாய்க்கு முன்பாக நீர்ப்பெருக்கில் 'துடீம்' என்றொரு பாய்ச்சல் பாய்ந்தது. அந் நாய் அச்சமடைந்து நடுங்கிப் பின்னால் குதித்தது, நீரில் ஏற்பட்ட அசைவைச் சிறுபொழுது உற்றுப் பார்த்தவாறே நின்றது.

உணவு ஏதாவது தேடுவோமே என்பதாக அவ்வுயிர் அங்கிங்கெல்லாம் போய் முகர்ந்து பார்த்தது. ஒரு தவளை அதன் மூக்குத் துளைகள் மீது சிறுநீர் கழித்துவிட்டுத் தண்ணீருக்குள் பாய்ந்தது. நிலை குலைந்த நாய் சீறித் தும்மியது. தலையை அசைத்தசைந்து சீறியது. முன்னங் கால்களுள் ஒன்றால் முன்னிலை (முகத்தை)த் துடைத்தது.

அச்சமூட்டத்தக்க பேய் மழை மறுபடியும் தொடங்கியது. கூனிக் குறுகிக் குந்தியிருந்து அந் நாய் அதைப் பொறுத்தது. அதனுடைய தலைவன் அம்பலப்புழையை அடைந்திருந்தான்.

இருநாள் ஆகியது. ஒரு பகுதி நீரில் மூழ்கிக் கிடக்கின்ற குடிசையில் ஓரமாக உரசியவாறே வன்மையான முதலையொன்று மெள்ள மெள்ள மிதந்து சென்றது. நாய் அச்சம் மிகப் பெற்றதாகி வாலைக் கீழே போட்டபடியே குரைத்தது. எதையும் அறிந்துகொள்ளாத பண்பில் முதலை அங்கிருந்து மிதந்து சென்றது.

முன் முகட்டில் குத்தியிருந்தவாறே, இடர் சூழ்ந்த அந்த மிருகம் , இருளச்சம் கொண்டு வான்வெளியைப் பார்த்து ஊளையிட்டது. அந்த நாயின் துன்பக் குரல், மிகத் தொலைவான இடங்களையும் அடைந்தது. இரக்கம் உள்ளவனாக காற்றிறைவன் அதையும் ஏந்தியவாறே வீசிப் பறந்தான்.

வீட்டுக் காவல் ஏற்றிருந்த இரக்கமுள்ளோர் சிலர், "ஐய்யய்யோ... ஊட்டுக்கு மேலந்து நாய் ஊளையிடுது!..." என்று சொல்லிக் கொண்டார்கள்.

கடற்புறத்திலே அதன் தலைவன் இப்போது இரவுணவு உண்டுகொண்டிருப்பான். வழக்கப்படி உணவுண்ணும்போது இன்னும் ஓர் உருண்டை அடிசிலை அவன் அதற்காக உருட்டிக்கொண்டுமிருக்கலாம்...

இடைவிடாமல் சிறுபொழுதுக்கு அந் நாய் மிக உயர்ந்த குரலில் ஊளையிட்டது. வடக்கில் எங்கோ ஒரு வீட்டிலிருந்து வீட்டுக் காவலாளி இராமாயணம் படிக்கிறான். அதனை உன்னிப்பாகக் கேட்பதுபோல், நாய் வடக்குப் புறத்தே பார்த்து நின்றது.

நமது நாய் அம் மனிதக் குரலைச் செவியேற்று ஒரு சிறுபொழுதுக்கு அசைவின்றி நின்றது. குளிர்மையான வளிப்பெருக்கம் ஒன்றில், அந்த மகிழினிமையான பன் ஒன்றியது. காற்றின் ஒலியும் அலைகள் எழுப்பிய 'ப்ளப் ப்ளப்' எனும் ஒலியும் தவிர வேறொன்றும் கேட்பதற்கில்லை.

முன் முகட்டில் சேந்தனின் நாய் படுத்திருந்தது. பெரிதாக அது முச்செடுத்து விட்டது. இடைக்கிடை ஏக்கம் அடைந்ததால் முனகியதுமுண்டு. அவ்விடத்தில் ஒரு மீன் துடித்தது. குதித்தெழும்பி நாய் குரைத்தது. இன்னோரிடத்தில் தவளை பாய்ந்தது. பொறுமையற்றதாகி நாய் முணுமுணுத்தது.

பொழுது விடிந்தது. தாழ்ந்த குரலில் அது ஊளையிடத் தொடங்கியது. உள்ளத்தை உருக்கும் திறனுடைய ஒரு வகையான பன் பரவத் தொடங்கியது. தவளைகள் அதனை உற்றுப் பார்த்தன. நீரிற் பாய்ந்து, மேற்பகுதிக்கு வழுக்கியும் தவறியும் ஏறி, குடில் சரிந்து விழுவதை அது இமையாது பார்த்து நின்றது.

நீர்ப்பரப்பிலிருந்து உயர்ந்து காணப்படுகின்ற அந்த ஓலைக் குடிசைகளையெல்லாம் அது நம்பிக்கை விழைவோடு பார்வையிட்டது. எல்லாமே மக்களற்ற வீடுகள். உடம்பிற்கடித்து மகிழ்கிற ஈக்களை நாய் கடித்துக் கொரித்தது. பின்னங் கால்களை நீட்டி வாய்க்கீழ்ப் பகுதியில் மீண்டும் மீண்டும் சொரிந்து ஈக்களை விரட்டியது.

எரியோன் ஓரளவு தெளிவுபெறவே, அந்த இள வெய்யிலில் அது சிறுபொழுது கிடந்து உறங்கியது. மெல்லிய காற்றால் அசைகின்ற வாழையிலைகளின் நிழல், வீட்டுக் கூரையின் மீது ஆங்காங்கே விழுந்து அசைந்துகொண்டிருந்தது. நாய் பாய்ந்தெழும்பி ஒரு முறை குரைத்தது.

ஊரெல்லாம் இருண்டது. காற்று அலைகளை அசைத்தது. நீர்ப்பரப்பில் உயிரினங்களின் வெற்றுடல்கள் மிதந்து போகின்றன. அலைகளிற் பட்டு அசைவுற்று எகிறி மிதக்கின்றன. அவை தன்னியல்பில் எங்கெங்கும் அலைகின்றன. அச்சமில்லாது தொடர்கின்றன. அவற்றையெல்லாம் நாய் பார்த்தது. நமது நாய் முணுமுணுத்துக் கொண்டது.

சிறிது தொலைவில் ஒரு சிறிய மிதவை விரைவாகப் போகிறது. அது எழுந்து நின்று வாலாட்டியது. அந்த இழுவையின் செல்கையை உன்னித்தது. மிதவை அங்கே தாழைக் கூட்டத்துக் கிடையே மறைந்தது.

மழை தூறத் தொடங்கியது. பின்னங்கால்களை மடக்கி முன்னங்கால்களை ஊன்றிக் குத்தியிருந்தது அந்நாள் நாற்புறமும் பார்த்தது. அதனுடைய கண்களில், யாரையும் அழவைக்கக்கூடிய துணையிலா நிலை வெளிப்பாடாகி இருந்தது.

மழை நின்றது. வடக்கு வீட்டிலிருந்து ஒரு சிறிய இழுவை வந்து ஒரு தென்னையின் அடியை அடைந்தது. நம்முடைய நாய் கொட்டாவி விட்டு முனகியது. இழுவையாள் தென்னையிலேறி இளநீர் பிடுங்கிக் கொண்டு கீழே இறங்கினான் அவன் இழுவையில் வைத்தே காயில் துளையிட்டுக் குடித்துவிட்டு துடுப்பு எடுத்து வழித்துக் கொண்டு அப்பால் போனான்.

தொலைவிலிருந்து மரக் கிளையினின்றும் ஒரு காகம் பறந்து வந்து, அழுகி மிதந்த ஒரு வலிய எருமையின் உடலில் விழுந்தது. சேந்நனின் நாய் பெருவிழையோடு குரைத்தும் காகம் எதனையும் பொருட்படுத்தாது புலாலைக் கொத்தி இழுத்துத் தின்றது. அது நிறைவடைந்ததும் பறந்து அப்பால் போனது.

ஒரு பச்சைக் கிளி குடிசைக்கு அண்மையிலிருந்த வாழையின் இலை மீது வந்திருந்து ஒலி எழுப்பியது. நாய் பொறுமையற்றதாகிக் குரைத்தது. அந்தப் பறவையும் பறந்துபோனது.

நீர்ப்பெருக்கால் அள்ளுப்பட்டு மிதந்து வந்த எறும்புக் கூடொன்று, அக் குடிசையின் மேற்புறத்தில் ஒதுங்கியது. எறும்புகள் தங்களைக் காத்துக்கொண்டன. உணவுப் பொருளோ என்று நன்றியோடு, நம்முடைய நாய் அவற்றுக்கு முத்தம் கொடுத்துச் சீறித் தும்மியது. அதன் மென்மையான மூக்கு சிவந்து வீங்கியது.

நடு நாளாகி ஒரு சிறிய இழுவையில் இருவர் அவ்வழி வந்தனர். நாய் நன்றியுடன் குரைத்தது. வாலாட்டியது. எதையெல்லாமோ, மனித மொழிக்கு இணக்கமான மொழியில் சொல்லியது. அது நீரில் இறங்கி இழுவைக்குள் பாய்வதற்குரிய ஏற்பாட்டில் இருந்தது.

"ந்தா...! ஒரு நாய் நிக்கிது!" என்று ஒருவன் சொன்னான். அவனுடைய கழிவிரக்கம் விளங்கியதைப்போல், நன்றியறிதலோடு அது ஒரு முறை ஊளையிட்டது.

"அங்கேயே இரிக்கட்டும்!" என்று மற்றைய ஆள் சொன்னான்.

எதையோ உண்டு இறக்குவதைப்போல் அது வாயைத் திறந்து மூடியது. ஒலியெழுப்பியது, வேண்டுகோள் விடுத்தது... அது இரண்டு முறை இழுவைக்குள் பாயவும் முயற்சி செய்தது.

ஓடம் அங்கிருந்து போய்விட்டது. மீண்டும் நாய் ஊளையிட்டது. ஓடத்தில் இருந்தவர்களுள் ஒருவன் திரும்பிப் பார்த்தான்.

"ஐயோ!"

மறுபடியும் அலைகளின் ஒடுங்காத ஒலி. யாருமே பிறகு திரும்பிப் பார்க்கவில்லை.

அந்த நிலையிலேயே நாய் இழுவை மறையும் வரையில் நின்றது. வையத்திடம் இறுதிப் பயணம் சொல்வதைப் போல முணகிக்கொண்டு அது குடிலில் மேற்புறத்துக்கு ஏறியது. இனி ஒரு போதும் மனிதனை நட்பாக்குவதில்லை என்று அது சொல்வதாக இருக்கலாம்.

சிறிதளவு தண்ணீரை நக்கிக் குடித்தது. அந்த மென்மையான வானில் பறந்து போகிற பறவைகளைப் பார்த்தது.

அலைகளுக்கிடையில் மிதந்து அலைந்த ஓர் நீர்பாம்பு பாய்ந்து அருகில் வந்தது. நாய் பாய்ந்து குடிலின் மேற்புறத்தில் ஏறியது. சேந்நனும் இல்லத்தாரும் வெளியிறங்கிய ஓட்டையினூடே அத் தண்ணீர்ப்பாம்பு குடிலுக்குள் ஊர்ந்து இறங்கியது. நாய் அந்த ஓட்டையினூடாக உள்ளே எட்டிப் பார்த்து. கிளர்ச்சி வெறிகொண்ட அது குரைக்கத் தொடங்கியது.

பின்னர் நாய் உறுமியது. உயிரச்சமும் ஊண் வேட்கையும் அதில் நிறைந்திருந்தன.

இருள் நாளாகியது. அச்சமுறத்தக்க வன்மையான காற்றும் மழையும் தொடங்கின. மேற் கூரை அலைத்தாக்கம் பெற்று ஆடி அலைகிறது. இரு முறை அந் நாய் உருண்டு கீழே விழத் தொடங்கியது. ஒரு நீண்ட தலை நீருக்கு மேல் உயர்ந்தது. அது ஒரு முதலை. நாய் உயிர்த் துன்போடு குரைக்கத் தொடங்கியது. அருகில் மனித ஒலிகள் கேட்கலாகின.

"நாய் எங்கர்ந்து கொலைக்கிது?.... இங்கர்ந்து ஆளுக போகல்லியோ?..."

வாழைமரத்தினடியில் வைக்கோல், தேங்காய், வாழைக்கலை – இவற்றைக் கொண்ட ஓர் இழுவை அண்மியது.

நாய் இழுவையில் இருந்தவர்களுக்கு நேராகத் திரும்பிநின்று குரைப்பைத் தொடக்கியது. சிளத்தனாகி வாலை உயர்த்திக் கொண்டு நீரின் அருகில் நின்று குரைக்கத் தொடங்கியது.

இழுவையில் இருந்தவர்களுள் ஒருவன் வாழை மரத்தில் ஏறினான்.

"ஐயா!... நாய் பாயும்போலத் தோணுதே!"

நாய் முன்னால் ஒரு பாய்ச்சல் பாய்ந்தது. வாழையில் ஏறியவன் உருண்டு துடித்து நீருக்குள் விழுந்தான். மற்றைய ஆள் அவனைப் பிடித்து இழுவைக்குள் ஏற்றினான். நாய் இவ்வேளையில் நீந்திக் குடிசைக்கு மேலாக ஏறி உடலை உதறி ஆட்டிவிட்டுச் சினத்தனாகிக் குரைப்பைத் தொடர்ந்தது.

கள்ளர்கள் வாழைக் குலைகளையெல்லாம் வெட்டினார்கள்.

"ஒனக்கு வச்சிரிக்கிறேன்டா!...' என்று, தொண்டை கிழியும்படியாகக் குரைக்கிற நாயிடம் அவர்கள் சொன்னார்கள். பிறகு அவர்கள் வைக்கோல் முழுவதையும் இழுவையில் ஏற்றினார்கள். இறுதியில் ஒருவன் குடிசைக்கு மேலாக ஏறினான். அவனுடைய காலில் நாயின் கடியும் விழுந்தது. ஒரு வாய் நிறையப் புலால் அந்த நாய்க்குக் கிடைத்தது!

அவன், "ஐயய்ஓஓஓ!" என்று கதறி அழுதபடியே பாய்ந்து இழுவையில் ஏறினான்.

இழுவையில் நின்ற ஆள் கூரைக் கழியால் நாயின் வயிற்றில் ஓர் அடி அடித்தான். "ங்யாவூ ங்யாவூ ங்யாவூ" என்ற ஒலி படிப்படியாகக் குறைந்து வெறும் வலுவற்ற முணகலில் தேய்ந்து இறுத்தது.

நாய்க்கடியேற்ற ஆள் இழுவையிற் கிடந்து அழுதான்.

"சத்தம் போடாம இருடா!... யாராச்சும்..." என்று மற்றைய ஆள் தேறுதல் கூறினான். அவர்கள் அப்பால் போனார்கள்.

ஓரளவு பொழுது கழிந்திருந்தும், நாய், இழுவை போன இடத்தைப் பார்த்து வன்மையாகக் குரைத்தது.

நள்ளிருள் நெருங்கியது. ஒரு பெரிய இறந்த ஆடு மிதந்த வந்து குடிலில் ஒதுங்கியது. நாய் முன் முகட்டிலிருந்து அதைப் பார்த்தவாறே நின்றுகொண்டிருந்தது. கீழே இறங்கவில்லை. அந்த வெற்றுடல் மெல்ல மெல்ல இடம் மாறியது. நாய் முணுமுணுத்தது.

பிடி கிடைக்காமல் அது சிறிது அப்பால் போகத் தொடங்கவே, நாயானது. ஓலையைப் பிறாண்டி, வாலாட்டி மெதுவாக மெதுவாகக் கீழே இறங்கிக் கடித்து, இழுத்து அருகிலாக்கி உள நிறைவோடு தின்னத் தொடங்கியது. வலிய ஊண் வேட்கைக்கு வேண்டிய மட்டிலுமாக உணவு!

"டே!" என்று ஓர் அடி! நாயைக் காணுமாறில்லை. ஒரு முறை குதித்துத் தாழ்ந்துவிட்டு ஆடு அங்கிருந்து மிதந்து அகன்றது.

அப்போது முதல் – வலிய காற்றின் அலறலும் தவளைகளின் துடிப்பும் அலைகளில் ஒலியும் அல்லாமல் ஒன்றையும் கேட்பதற்கில்லை.

உள்ளமுள்ள வீட்டுக் காவலனான நாயின் துணையற்ற நிலை வெளிப்படும் ஊளையொலி பிறகு கேட்கவே இல்லை. அழுகி நாறும் வெற்றுடல்கள் அந்த நீர்ப்பரப்பில் ஆங்காங்கே மிதந்து சென்றன. காகங்கள் கொத்தித் தின்பதுமுண்டு. அவற்றின் உரிமையை ஓர் ஒலியும் பாழ்படுத்தவில்லை. கள்ளர்களுக்கும் அவர்களுடைய தொழிலுக்கும் தடை ஏற்படவில்லை.

எல்லாம் வெறுமை...

சிறுபொழுது கழிந்தபோது அக் குடிசை விழுந்தது; நீருக்குள் அமிழ்ந்தது. முடிவற்ற அந்த நீர்ப்பரப்பில் எதுவும் உயரமாகக் காணும்படியாக இல்லை.

தலைவனின் வீட்டை இறப்பு வரையிலும், தலைவனன்பு மிக்க அந்த நாய் காத்தது. அது போய்விட்டது. அந் நாய்க்காக வேண்டி என்பதைப் போலவே, அக் குடில், நாயை முதலை பிடிக்கும் வரையிலும் நீரின் மேலேயே உயர்ந்து நின்றது. அது தாழ்ந்துவிட்டது. முழுமையாகவே நீருக்குள் தாழ்ந்துவிட்டது.

நீரிறக்கம் தொடங்கியது. சேந்நன் நீந்தித் துடித்து நாயைத் தேடிக் குடிசைக்கு வருகிறான். ஒரு தென்னையின் கீழே நாயின் வெற்றுடல் ஒதுங்கிக் கிடக்கிறது. அலைகள் அதனை மெதுவாகத் தாலாட்டுகின்றன.

பெருவிரலால் சேந்தன் அதனைப் புரட்டியும் திருப்பியும் உற்றும் பார்த்தான். அது அவனுடைய நாய்தான் என்பதில் ஐயம் உண்டாகியது. ஒரு காது துண்டாடப்பட்டிருக்கிறது. தோல் அழுகிப்போய் இருந்ததால் நிறம் என்னவென்று அறிய முடியவில்லை.

**தகழி சிவசங்கரன் பிள்ளை ✍**
**தமிழில் - அல் அஸூமத்**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல : 34

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | ■ | 3 | | |
| | ■ | ■ | | ■ | | ■ | |
| 5 | 6 | 7 | | ■ | | ■ | |
| ■ | 8 | | ■ | 9 | | | ■ |
| 11 | | | ■ | | ■ | 12 | 13 |
| 14 | | ■ | 15 | | 16 | | |
| 17 | | 18 | | ■ | 19 | | |
| | ■ | 20 | | | ■ | ■ | |

**திரு/திருமதி/செல்வி** ..............................................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

**முகவரி** ..............................................................
..............................................................
..............................................................

............................ ..............................
**திகதி** **கையொப்பம்**

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 34

### கேள்விகள்

**இடமிருந்து வலம்**

1. வேண்டுகோள்.
3. கல்லில் கலைவண்ணம் காண்பவர்.
5. திண்டாட்டம் அல்லது கஷ்டம் (திரும்பியுள்ளது)
8. பார்வை உறுப்பு திரும்பிவிட்டது.
9. வழமையானதிலிருந்து மாறுபட்டதாக இருப்பது. (குழம்பியுள்ளது)
11. ஒரு வாத்தியக் கருவி.
12. மங்கல நாண்.
14. இது வந்தால் உணவு அருந்த வேண்டும். (திரும்பியுள்ளது)
15. உறுதியான கருத்து அல்லது முடிவு.
17. உணவு வகைகளுள் ஒன்று. (குழம்பியுள்ளது)
19. கறிச் சரக்குகளை அரைக்கப் பயன்படுத்துவது. இதன் பாவனை இப்போது குறைந்து வருகிறது. (திரும்பியுள்ளது)
20. ஏழு தினங்கள் கொண்டது. (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. சினம்.
2. நன்மையான விளைவு அல்லது அதிர்ஷ்டம் தருவது.
3. முற்காலப் பெண்கள் இதனை காலில் அணிந்ததாக வரலாறு சொல்கிறது.
4. பைத்தியம்.
6. விழா முதலான நிகழ்வுகளை நடத்தக்கூடிய கட்டடம்.
7. வகை.
9. சோகம்.
10. திடல்.
11. கள்ளச்சாராயத்தை இப்படிச் சொல்வர்.
13. நிலா குழம்பிவிட்டது.
15. விளக்கு.
16. ஓர் உறவு முறை.
18. விருப்பம்.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 33

### விடைகள்

**இடமிருந்து வலம்**

1. தந்திரம் 3. மாதா 4. காது 5. வனப்பு 7. விளைவு 9. பவிசு 11. தரணி 12. பகட்டு 15. நாணம் 16. திடல் 18. சேய் 19. நாண் 20. காளை

**மேலிருந்து கீழ்**

1. தனவந்தர் 2. திருப்பணி 3. மாதுளை 4. காவி 6. புவி 8. பரிவு 10. சுடு 13. கட்டளை 14. நாகம் 15. நாய் 17. கால்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 32

### பரிசுபெறுவோர்

| முதலாம் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|
| **வி.ஏ. மகாலிங்கம்,** பென்றித் எஸ்டேட் (கீ/பி) அவிசாவளை. | **ஏ.எம். பர்ஹத்,** 467/8, கல்கமுவ, கெலி ஓயா. | **இல்யாஸ் தாஸிம்,** இல. 23.ஏ, இப்றாஹிம் வீதி, பாணந்துறை. |

### பாராட்டு பெறுவோர்

**1. சந்திரமதி களியபெருமாள்,** 2/27/ஏ, வெலிக்கந்தை, கண்டி.

**2. எஸ். சஞ்ஜனா,** மட்/ விஷ்ணு வித்தியாலயம், வந்தாறுமூலை.

**3. டி. ஷீலா மாக்ரெட்,** இல. 37, கராவ்கெட்டிய, பலாங்கொடை.

**4. எஸ் நிரோஸன்,** இல. 24/2, உடுப்பிட்டிய, உக்குவளை.

**5. சின்னையா செல்வராஜ்,** இல. 91/1, மெயின் வீதி, கொழும்பு 11.




– தமிழ்மணி மானா மக்கீன்

## கசப்பு–1

கடந்த ஞாயிறு (28.02.2021) 'வசந்தம்' தொலைக்காட்சியின் 'தூவானம்' நேர்காணல் நிகழ்வைக் கண்டு ரசித்து கேட்கவேண்டிதாயிற்று.

காரணம் – இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்துத் தமிழ் தேசிய ஒலி பரப்பு செய்திகளை வாசிப்பதில் சிகரம் தொட்ட இருவர் சம்பந்தப்பட்டிருந்தனர்.

வேர்விளை – மருதானையூர் ஸனூஸ், எம் ஃபெரோஸ், கம்பளை யூர் நாகபூஷணி கருப்பையா ஆகி யோரின் வானொலிப் பங்களிப்பில் மிகவும் கவரப்பட்டவன். ரசிகன் இதில் மாற்றுக் கருத்து இல்லை.

இவர்களில், நேர்காணப்பட்டவர் ஸனூஸ். கண்டவர் நாகபூஷணி.

ஆசை ஆசையாக ஆர்வமாக ஸனூஸ் தன் வானொலி அனுபவங் கள் – முக்கியமாக அறிவிப்பாள னான விதத்தை அழகுற விவரித்துக் கொண்டே போனதை ரசித்துப் பார்த் துக் கேட்டவண்ணம் இருந்த பொழுது –

ஒரு கட்டம். "ஒரு லேடி" – "ஒரு லேடி" என ஒன்றுக்கு மேற்பட்ட தடவை ஸனூஸ் ஒருவரைப் பற்றி அவர் பெயர் குறிப்பிடாமலேயே, சொல்லியவண் ணம் இருந்தார்.

அந்த "ஒரு லேடி" அத்தனை முக் கியமானவரே! அவர்தான் அவருக்கு அறிவிப்புக் கலையை, நுணுக்கத்தைச் 'முதன் முதல்' சொல்லிக் கொடுத்தவர்.

அதுவும் வானொலி நிலையம் வந்த பிறகல்ல. அல்லது ஒரு பயிற்சிக் கூடத் தில் அல்ல!

ஒரு பாடசாலை விளையாட்டு நிகழ்வு (Sport meet) அவர் ஊரிலேயே நடந்த போது...

அப்பாடசாலையின் அதிபராக இருந்த வெலிகம முக்தார். ஏ. முஹம் மத், மேனாள் கொழும்பு மாளிகா வத்தை தாருஸ்ஸலாம் வித்தியாலய ஆசிரியராகவும் இருந்தவர் (எனது நெருங்கிய நண்பர்) அந்தப் பின்தங் கியப் பிரதேச ஆசிரியமணியான "ஒரு லேடி" யையும் அந்தப் பாடசாலை விளையாட்டு அறிவிப்புக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

அவரும் அறிவிப்பில் லேசுபட்ட அம்மணி அல்லர். ஆனால் வானொ லியில் அன்று கொழும்புப் பகுதிப் பாடசாலை விளையாட்டு வைபவங்க ளுக்கு அவர்தான் அறிவிப்புத் திலகம்.

நம்ம ஸனூஸ் அப்பாடசாலை யின் மாணவன். அறிவிப்பு என்றால் அத்தனை ஆர்வம்! வானொலிப் பெட் டியில் ஒலிக்கும் அறிவிப்புகளும், அறி விப்பாளர்களும் அத்துப்படி!

அதிபர் முக்தார் ஏ. முஹம்மதை அணுகி, "ஸேர், ஸேர், எனக்கொரு சான்ஸ் தந்து பாருங்க ஸேர்" எனக் கெஞ்ச, பலருக்கு ஏணியாகவே வாழ்ந்த என் அதிபர் நண்பர், "சரி யப்பா சரி! இந்த மேடத்தைக் கொழும் பிலிருந்து அழைப்பித்திருக்கிறேன். அவருக்கு உதவியாக மேடையில் இருந்து, அவரிடமே அறிவிப்பு நுணுக் கத்தை அறிந்து, உன் அறிவிப்பு ஆசையைத் தீர்த்துக் கொள்" என்று சம்மதிக்க அன்று வேர்விலையின் ஒரு ஸனூஸ் மாணவன் அறிவிப்பாளன் ஆனான்!

இந்த விவரங்கள் அத்தனையையும், அன்றைய நேர்காணலில் ஸனூஸ் எம். பெரோஸ் விவரித்து வானொலிப் படிகளை மிதித்த அனுபவங்களைச் சொல்லிக் கொண்டே போனார்.

அவரை தொலைக்காட்சியில் கண்ட வாரே கேட்கும் போது மிகவும் ரசிக்கும் படி இருந்தது.

நாகபூஷணியும் மிக ஆர்வமாக, எந்த இடைக்கேள்வியும் இடாமல் ஒரு ரசிகையாகவே கேட்டுக் கொண்டே இருந்தார்.

அப்பொழுது ஒரு லேடி ஒரு லேடி" என ஸனூஸ் ஒன்றுக்கு மேற்பட்ட தடவை

சொன்னார.

அப்படிச் சொன்னவர், "அந்த ஒரு கொழும்பு லேடி யார், அவர் பெயர் விவரம் எதையுமே சொன்னாரில்லை! நாகபூஷணியும் இடைமறித்துக் கோட் டாரில்லை!

இது எப்படி இருக்கு?

இந்தக் கசப்பிலே கசந்து போய் நான் வழங்குகையில் அபிமானிக ளுக்கும் இயற்கையாகவே ஓர் ஆவல் ஏற்பட்டிருக்கும், யார் அந்த ஒரு லேடி, என்பதை அறிய.

எனக்கோ, நேர்காணல் முடிந்த பிறகு ஏற்பட்டது, ஏன் இப்படி இருட்ட டிப்பு? அந்த "ஒரு லேடி" அத்தனை அபாயகரமான பெண்ணா! அறிவிப் புத்துறையில் வளர, புகழடைய ஓர் 'ஏணி' யாக இருந்தவர் தானே....

இதற்குப் பதில் இருவருமே சொல்ல வேண்டும். அதாவது, ஸனூஸ் – நாக பூஷணி!

## கசப்பு–2

தமிழ்நாடு சட்ட சபைத் தேர்தல் நன் றாகவே சூடுபிடித்து, நம் நாட்டைப் போலவே நானாவித 'நாடக அரங்கேற் றங்கள் நடக்க ஆரம்பித்துவிட்டன.

சிறுபான்மைச் சமூகங்களாக தமிழர், முஸ்லிம்கள், கிறித்தவர், மலாயர் இங்கிருப்பது போல் அங்கு தமிழகத்தில் முஸ்லிம்கள் சிறு பான்மை. அப்படி இருந்தும் அவர் களை வளைத்து வாக்குகள் சேகரிக்க அங்கே பல கட்சிகளிடையே பலத்த போட்டி.

அந்த வகையில் சிறுபான்மை முஸ் லிம்கள் 'சிதறு தேங்காய்கள் போல் சிதறி, பிரிந்து ஒருவருக்கொருவர் விரோதம் காட்டி வேறு வேறு, பள்ளி வாசல்களுக்குத் தொழப்போ கின்றனர்.

நாகூர் கோவில் – கோட்டார் பிரதேசததில் உள்ள மூத்த எழுத்தாளர் "நமது முற்றம்" என்ற முஸ்லிம் சஞ்சிகை ஆசி ரியர் 'அபூ ஹாஷிமா' என்ற ஜாம்பவான் கட்சி வாரியாக முஸ்லிம்கள் எப்படிப் பிரிந்து போய்க் கிடக்கின்றனர் என் பதற்குப் பட்டியல் தந்திருக்கி றார். பாருங்கள்.

★ திமுக முஸ்லிம்கள்★ அதிமுக முஸ்லிம்கள் ★ அமமுக முஸ்லிம்கள்★ மதிமுக முஸ்லிம்கள் (வைகோ)★ விசிக முஸ்லிம் கள்★ பாமக முஸ்லிம்கள் (ராமதாஸ்)★ இடது கம்யூ னிஸ்ட் முஸ்லிம்கள்★ வலது கம்யூனிஸ்ட் முஸ்லிம்கள்★ தேமுதிக முஸ்லிம்கள் (விஜ யகாந்த்)★ சரத்குமார் கட்சி★ முஸ்லிம் லீக்★ தேசிய முஸ்லிம்லீக்★ தமுமுக ஹைதரலி★ மமக ஜவா ஹிருல்லா★ மஜத தமீமுல் அன்சாரி★ எஸ்.டி.பி.ஐ. முஸ்லிம்கள்★ ஆம் ஆத்மி முஸ்லிம்கள்★ மதசார்பற்ற ஜனதாதளம் முஸ்லிம்கள்★ காங்கிரஸ் முஸ்லிம்கள்★ பிஜே. குறூப் முஸ்லிம்கள்★ அல்தஃப் குறூப் முஸ்லிம்கள்★ ததஜ குறூப் முஸ்லிம்கள்★ சீமான் கட்சி முஸ்லிம் கள்★ கமல்ஹாசன் கட்சி முஸ்லிம் கள்★ இடி முரசுக் கட்சி முஸ்லிம்கள்★ ரஜினி ஆதாரவுக் கட்சி முஸ்லிம்கள்★ சமாஜ்வாடி முஸ்லிம்கள்★ பாக்கா ஆதரவு முஸ்லிம்கள்★ உனவசிக் கட்சி முஸ்லிம்கள்இப்பொழுது மூச்சு விடுங்கள்! அத்தனை பெரிய நீண்ட பட்டியல். அத்தனை பெரியபிரிவினை! இலங்கை முஸ்லிம்கள் பரவாயில் லையோ? மூன்று நான்கு கட்சிகளுக் குள் தாவித்தானே அடிபிடிகள்?

## இனிப்பு

இந்த இனிப்பு சாதாரண இனிப்பு அன்று! அதிகமகமான சுவை கொண்டது.

அதுவும், நமது முதுசம், நமக்கே சொந்தமான மகத்தான கலைஞர் பாடகர் வி. முத்தழகு பற்றியது. அவ ருக்கு மிகச் சமீபத்தில் நிகழ்ந்துள்ள ஓர் இன்பமான நிகழ்வு அவருக்கு அவர் குடும்பத்தாருக்கும் அமைதி யும் ஆனந்தமும் அளிக்கக் கூடிய ஒன்று.

சிறிது நீட்டி முழக்கியே இந்த இனிப் பைப் பதிவிடுகிறேன்.

பெரும்பாலான நம்மகக் கலைஞர் களுக்கு, அவர்கள் பாடகர்களாகவோ, நடிகர்களாகவோ, ஓவிய மணிகளா கவோ எப்படியும் இருக்கலாம் – ஆண் டாண்டு காலமாக உள்ள பிரச்சினை வீட்டுப் பிரச்சினை. கலைச்சேவை செய்து விட்டு அகாலத்தில் வந்தால் ஓய்வுக்கு ஒரு வசதியான இல்லிடம் இல்லை.

தோட்ட வீடுகளில் துணைவி குழந் தைகளுடன் கஷ்டவாழ்க்கை.

நம் அருமைப் பாடகர் முத்தழகுவும் அத்தகையவரே. இலங்கை வானொலி நிலையம் சமீபாக உள்ள டொரிங்டன் அவனியுவில் ஒரு தோட்டத்தில் வீடு. அதைத் தாண்டினால் டொரிங்டன் அடுக்கங்கள்.

நானறிய 50 ஆண்டுகாலமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

மாறி மாறி வரும் எந்த ஆட்சியிலும் வீட்டு விசயத்தில் விடிவு காலம் பிறக் கவில்லை. இத்தனைக்கும் பல அரசி யல் மேடைகளின் இசைக் கச்சேரியில் தமிழில் முத்தழகுவும் சிங்களத்தில் 'சூரியகுமார் முத்தழகேயும் ஒலிவாங்கி முன் நிற்பார்கள்.

2020 இறுதிப் பொழுதுகளில், திம் பிரிகஸ்யாயப் (கொழும்பு 05) பகுதி பிராந்திய செயலகத்தில் உள்ள ஒரு பெண்மணிகள் விழித்தெழுகிறார்கள்.

பிரியந்த திஸ்ஸநாயக்க என்ற செய லகத்தலைவி, சுமித்ரா ஹேரத் என்ற கலாசார உத்தியோகத்தர் இருவரும், ஐரோப்பிய, ஆசிய நாடுகளில் புகழ்பூத் துள்ள ஓர் ஓவிய மணியான முயின் ஸஹீது என்பாருடன் முத்தழகு தோட்ட வீட்டின் முன் வந்து நிற்கிறார்கள். அவரை அழைக்கிறார்கள். உங்கள் வீட்டை பார்க்க முடியுமா என்கிறார்கள்.

பார்வையிட என்ன இருக்கிறது. கீழே ஒரு தட்டும் மேலே ஒரு தட்டுமான சிறு வீடு பயங்கர வசதிக்குறைவு. பார்க்கி றார்கள். செல்கிறார்கள்.

அதற்கு சில நாட்களில் அதிரடி காரி யங்கள் தொடர்கின்றன.

உலகளாவிய புகழ் கொண்ட அந்த ஓவியர் முயின் ஸஹீத் தன் சொந்தப் பணத்துடன் சிலரிடம் நீதியும் திரட்டி மேசன்மார்கள் சிலருடன் வந்து சேர் கின்றார்.

வந்த தொழிலாளிகள் படுவேகமாக வீட்டுப் பழுதுகளைச் சீர்செய்கிறார் கள். வெள்ளையும் அடித்து முடிக்கப் படுகிறது. ஓவியர் முயீன் ஸஹீத், தன் நவீன ஓவியத்திறமையை வீட்டுக் கதவில் காட்டுகிறார். (இங்கே, படத்தில் பார்க்கலாம்) இன்னும் எத்த னையோ அழகுபடுத்தல்கள் அரங்கேறுகின்றன. பிராந்தி யச் செயலகப் பெண்மணிக ளிருவரும் தோன்றாத்துணை.

இரண்டே வாரங்களில், அரு மைபெருமையான பாடகரின் பாழ்பட்டுப் போய்க் கொண்டி ருந்த வீடு புதுப் பொழிவுடன் காட்சியோ காட்சி!

நல்லவேளையாக, எந்த அரசியல்வாதியும் மூக்கை நுழைத்து படம் பிடித்து நாளே டுகளுக்கு அனுப்பவில்லை. நாளையோ மறுநாளோ எப்ப டியோ?

கசப்பையும் இனிப்பையும் வழங்கும் இந்தச் சாமான்ய எழுத்தாளனின் எழுது முனை விடுக்கும் வினா ஒன்று, புரவ லர்களும், புகழுக்குரியவர்க ளும் பணத்தில் புரள்கிறவர்க ளும் தன் சமூகத்துப் பாடகன் ஒருவனுக்குப் பங்களா கட்டிக் கொடுக்க வசதியில் லாமல் போனாலும் இருக் கிற இரண்டு தட்டு ஒரு தோட் டத்து வீட்டை பழுது பார்த்துக் கொடுக்கவும் வக்கு இல்லாத வங்குரோத்துக் காரர்களாகி விட்டார்களா கேவலம், கேவலம்.



இங்கே காணப்படும் நிழற்படம், ஆங்கில நாளேடு 02.03.2021 இதழில் பிரசுரித்திருப்பது வீட்டின் முன்புறத்தில், பாடகர் முத்தழகு, துணைவியார் மேரி மொனிக்கா, மகனார் உதயன் கிருபைராஜா, உலகப்புகழ் ஓவியர் முயீன் ஸஹீத் ஆகியோருடன் திம்பிரிகஸ்யாயப் பிராந்திய செயலகக் கலாசார உத்தியோகத்தர் சுமித்ரா ஹேரத் ஆகியோர் காட்சியளிக்கின்றனர்.

---




# காதலில் இல்லையே பேதம் வேண்டாமே இனி வீண் வாதம்

தனக்குத் தான்
அவர்கள் சாடைமாடையாக தாக்குகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டதும்
இவர்களுடன் ஏன்டா வந்தோம் என்ற ஓர் உணர்வு
அவள் அடிமனதில்
ஊர்ந்தது!
சுகுமாரன் மீதும் அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது!
இந்த 'குத்தல்' பேச்சுகளுக்கு அவன்தான் காரணம் என்றும் அவளுக்குத் தோன்றியது.
உடனே பஸ்சில் இருந்து இறங்கிச் செல்லவேண்டு மென்று ஓர் எண்ணம் படர்ந்தாலும்
அவள் அமர்ந்திருந்த ஆசனத்தில் இருந்து எழுந்தி ருக்க முடியாதவிதத்தில்
ஏதோ ஒன்று அவளைத் தடுத்து நிறுத்தியது.
அதனால் அமைதியாகவே அமர்ந்திருந்தாள்.
"மலர்... உங்கள் மனது நோகும் படி ஏதாவது நடந்தி ருந்தால் என்னைய மன்னிச் சிடுங்க... இதுகளோட வாய் சரியில்ல... நீங்க அதை எல்லாம் கண்டுக் காதீங்கள்...!
மலர் விழி அமையாக இருப்பதைப் பார்த்து விட்டு
மெல்ல இதழ் அசைத்தான் சுகுமாரன்.
"என் மீது உங்களுக்கு கோபமா?"
மடிமீதிருந்த வலது கரத்தை எடுத்து
தனது கைக்குள் வைத்தபடியே கேட்டான் சுகுமாரன்.
"ம்... இல்லை! என்றபடியே
அவன் கைக்குள் இருந்த தனது கையை விடுவித்துக் கொண்டாள்.
மீண்டும் அமைதி நிலவியது.
அவன் பல தடவைகள் பேசமுயன்றாலும்
அதற்கு அவள் அனுமதி வழங்காதவளைப்போல்
பஸ்சில் வேக ஓட்டத்தில்
கடந்து செல்லும்
மரங்களையும் கட்டடங்களையுமே பார்த்துக் கொண் டிருந்தாள்.
அவள் மனது நோகும்படி காரியங்கள் நடந்துவிட்டதே என்று சுகுமாரனின் மனம் வருந்திய அதே நேரம் அதற்கு காரணமாக இருந்த தனது நண்பர்கள் மீது
பயங்கர கோபமும் ஏற்பட்டது.
தன்னுடைய தவறினால் தான் இப்படி நடந்தது என்று மனம் வருந்தினாள்.
அவனுக்கு அளவுக்கு அதிகமான சுதந்திரம் கொடுத்து விட்டோமே என்று கூடஅவளுக்குத் தோன்றியது.
தான் அவன் மீது வைத்த அன்பை அவன் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறான்.
இதனால்
அவன் மீது வைத்திருக்கும் அன்புக்கு கட்டுப்பாடு விதிக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டாள்.
தன்னையும் சுகுமாரனையும் தொடர்புபடுத்தி இந்த மாதிரி வீண் வதந்திகள் பரவுவது மிகவும் ஆபத்தானது என்பதையும் அவள் உணர்ந்து கொண்டாள்.
இந்த விஷயம்
அமைச்சர் காதில் விழுந்தால் வேறு வினையே வேண்டாம்.
அவர் ஆத்திரத்தின் உச்சிக்கே போய்விடுவார்.
தான் பஸ்சில் போய்வருவதைக் கூட விரும்பாதவர் அவர்.
அவர் சினம் கொண்டால்
சிறுத்தையை விட மோசமாக இருப்பார்.
இதனால்
அவர் ஆத்திரப்படும் விதத்தில் நடந்து கொள்ளக் கூடாது
என்று அவள் முடிவு செய்தாள்.
இதன் பிறகு
சுகுமாரனுடன் பேசுவதை தவிர்த்துக் கொண்டாள்.
அவன் கேட்கும் கேள்விகளுக்கு சுருக்கமாகவே பதில் சொன்னாள்.
மீண்டும் திரும்பி வரும்போது முன்னால் இருந்த ஒரு ஆசனத்தில் அமர்ந்து கொண்ட அவள்
தனக்கு தலை வலிக்கிறது என்று சொல்லிவிட்டு
ஆசனத்தின் முன்னால் சாய்ந்து கொண்டாள்.
அதற்கான சில மருந்துகளையும் சுகுமாரன் கொடுத்தா லும்
அவற்றை எல்லாம் அவள் ஏற்றுக் கொள்ளவில்லை
வரும் வழியில்
அவர்கள் மதுவின் மயக்கத்தில் மண்டி யிட்டதால்
பிரச்சினைகள் எதுவும் ஏற்படவில்லை.
மறுநாள்
காலதாமதமாகித்தான் மலர்விழி அலு வலகம் சென்றாள்.
நேற்றைய பிரயாணத்தின் போது ஏற் பட்ட களைப்பும் பஸ்சில்
சுகுமாரனைச் சந்திப்பதில் இருந்து தவிர்த்துக் கொள்வதற்காகவுமே இந்த தாமதம்.
மதிய உணவு வேளையின் போது சுகு மாரன் அவளைத் தேடி வந்தான் "எனக்கு ஒரு அவசரமான வேலை இருக்கிறது... இப்போது எனக்கு வரமுடியாது!" என்று மெல்ல நழுவினாள் மலர்விழி.
"திடீர்ன்னு ஏன் இந்த பயங்கர மாற்றம்! இந்தக் கேள்வியால் பதறிப் போன மலர் விழி
அவனைக் கூர்ந்து பார்த்தாள்!
வியப்புடன்
அவளையே பார்த்துக் கொண்டிருந் தான் அவன்.
"கோபிக்காதீங்க சுகுமாரன் நான் காலையில் வரும்போது தாமதமாகி விட்டது... அதனால் இந்த வேலைய அவசரமாக செஞ்சி கொடுக்கணும்!"
அவன் பார்வைத் தவிர்ந்த படியே அவள் சொன்னாள்.
"காலையில் தாமதமாக வந்தது என்னை சந்திப்பதைத் தவிர்ப்பதற்குத் தானே!" "நீங்க எப்படி வேண்டுமானா லும் நினைச்சிக் கோங்க....?" என்று சொல்லத் தோன்றி னாலும்
அமைதியாகவே இருந்தாள் மலர்விழி.
"மலர்... மென்மையான குரலில் அழைத்தான் சுகுமா ரன்.
அந்தக் குரலில் இருந்த இனிமை
மலர்விழியின் இதயத்தை வருடிச் சென்றது.
அவள் மெல்ல தலையைத் தூக்கிப்பார்த்தாள்.
"உங்களோடு கொஞ்சம் பேச வேண்டும்!"
வார்த்தைகளில் வசந்தம் வீசியது.
"என்ன பேசனும்...?" தலையை மெல்ல சாய்த்த படியே கேட்டாள் மலர்விழி
"அதை இங்கே சொல்ல முடியாது... அந்திக்கு சொல்றேன் அப்போ அந்தியில சந்திப்போம்!" என்று சொல்லிவிட்டு
அவள் பதிலுக்குக் கூட காத்திருக்காமல்
விரைந்து சென்றுவிட்டான் சுகுமாரன்.
மாலையானதும்
மலர் விழி பரப்பரப்படைந்த சுகுமாரனை சந்திப்பதா அல்லது
காலையில் தவிர்த்ததைப் போல
இப்போதும்
தவிர்த்துச் செல்வதா என்று முடிவெடுக்க முடியாமல்
அவள் மனம் குழம்பிப் போயிருந்தாள்.
அவன் வருமுன்பே இங்கிருந்து போய்விட வேண்டு மென்று முடிவு செய்தாள்.



அதே நேரம்
சுகுமாரன் மீண்டும் தன் மீது ஆத்திரப்படுவானே என்றும் அவளுக்குத் தோன்றியது.
அவனைப் பகைத்துக் கொள்வதற்கும் அவள் விரும்ப வில்லை.
திரிசங்கு சொர்க்க நிலையில் மலர்விழி இருந்த போதுதான்
அவள் தொலைபேசி அலறியது.
எடுத்தாள்
பார்த்தாள்
அவள் எதிர்பார்த்தது போல்
அழைப்பில் இருந்தது
அவள் காதலன் அல்ல
அவளை எதிர்பார்த்திருந்த
சுகுமாரன்
தான் வரும் வரை காத்திருக்கும்படி அவன் சொன்னான்.
இறுதியில்
அவனை சந்தித்து
எல்லா விஷயங்களையும்
பேசி ஒரு முடிவிற்கு வரவேண்டும் என்று அவள் முடிவு செய்து கொண்டாள்.
"அமைதியான ஓர் இடத்திற்குச் சென்று நாங்கள் பேசுவோமா? பஸ்தரிப்பு நிலையத்தில் நின்று கொண்டு
சுகுமாரன் கேட்டான் அமைதியாகவே அதை ஆமோ தித்த மலர்விழி
அவனுடன் பஸ்சில் ஏறினாள்.
வழியில் ஓர் இடத்தில் இறங்கிக் கொண்ட சுகுமாரன்
அவளையும் அழைத்துக் கொண்டு
எதிரில் வந்த ஓர் ஆட்டோவை நிறுத்தி அதில் ஏறினான்.
பிரதான பாதையில் சென்ற ஆட்டா.
திடீரென்று ஒரு குறுக்கு பாதைக்குள் திரும்பி ஓடியது.
"நாம எங்கே போறம்...?"
பரபரப்படைந்த மலர்விழி கேட்டாள்.
"என்ன பயந்துட்டீங்களா... பயப்படாதீங்க மலர்... அமைதியான ஒரு இடத்திற்குப் போகிறோம்...!"
சிறிது தூரம் சென்ற ஆட்டோ
பாழடைந்த இடம் போலிருந்த ஒரு கட்டிடத்தின் முன்னால் நின்றது.
இருவரும் இறங்கி உள்ளே போனார்கள்.
மலர்விழி வியப்புடன் சுற்றும் முற்றும் பார்த்தாள்.
அமைதியான சூழலில் அமைந்திருந்த வித்தியாசமான ஓர் ஓட்டல் அது உள்ளே
வட்டமான மேசைகள் நிறையவே இருந்தன.
அதில் சில மேசைகளில்
இந்த உலகத்தையே மறந்த நிலையில்
சில காதல் ஜோடிகள் அமர்ந்துபேசிக் கொண்டிருந் தன.
காலியாக இருந்த ஒரு மேசையின் முன்னால் இருவ ரும் அமர்ந்திருந்தார்கள். இதற்கு முன்பு
அமைச்சருடன் சில ஓட்டல்களுக்குச் சென்றிருந் தாலும்
இப்படியான ஓர் ஓட்டலுக்கு மலர் விழி இதற்கு முன்பு சென்றதே இல்லை.
காதலர்கள் பலர் அமர்ந்திருந்தாலும்
உள்ளே அமைதியாகவே இருந்தது.
சிலர் வாய் மொழிகளை மறந்து
இதழ் மொழிகளை பயன்படுத்திக் கொண்டிருந் தார்கள்.
"என்ன மலர் பார்க்கிறீங்க?"
வியப்பில் விழுந்திருக்கும் அவளைப் பார்த்த படியே கேட்டான் சுகுமாரன்
சுற்றிலும் பார்த்துக் கொண்டிருந்த மலர்விழி
மெல்லத் திரும்பி
அவனைப் பார்த்தாள்
அவன் முகத்தில்
புன்னகை பூத்திருந்தது.
"நல்ல இடமா...?" மீண்டும் அவனே கேட்டான்.
"நல்லா இருக்கு... சரி.. என்ன பேசவேண்டும்?"
அவன் எதுவும் பேசாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்
அந்த மங்கிய ஒளியில்
நாற்காலியில் ஒரு வித பாவனையில் அமர்ந்திருந்த மலர்விழி மிகவும் அழகாக இருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது.
அதே நேரம்
கொண்டுவந்து வைத்த பாலுடாவை சுவைத்தபடியே
"சரி... என்ன பேசவேண்டும் மென்று வரச் சொன் னீங்க....?" கேட்டாள் மலர் விழி
"உங்களால் யூகிக்க முடியாதா மலர்!"
"முடியாது!"

(தொடரும்)



# யாவரும் கேளீர்

பல்சுவை இலக்கியத் திரட்டு 31

தமிழறிஞர், டாக்டர் தி.ஞானசேகரன்

***(‘யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்பது கணியன் பூங்குன்றனது வரிகள். இதில் கேளிர் என்பது உறவினர் எனப் பொருள்படும். இந்த உறவினருக்கு நான் தரும் பத்தி யாவரும் கேளீர்)***

## ஈழத்து நவீன இலக்கியத்துறையில் தடம்பதித்த முதலாவது மருத்துவர் பேராசிரியர் நந்தி



மருத்துவரும் புகழ்பெற்ற எழுத்தாளருமாக விளங்கிய பேராசிரியர் நந்தியின் ஜனன மாதமாகிய மார்ச் மாதத்தில் அவரது நினைவுகளைப் பகிர்வதாக இப்பத்தி அமைகிறது.

நந்தி அவர்கள் யாழ்ப்பாணம் நல்லூர் வி. செல்லத்துரைக்கும் செல்லம்மாவுக்கும் 30.03.1928இல் மகனாகப் பிறந்தார், இவரது இயற்பெயர் சிவஞானசுந்தரம். இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் வைத்திய படிப்பை நிறைவுசெய்து மேற்படிப்பினை லண்டன் பல்கலைக்கழத்தில் பெற்றவர்.



நந்தியின் இலக்கியப்பற்று அவருடைய பரம்பரைச் சொத்து. அவருடைய தாய் வழிப் பாட்டனார் சிறந்த பௌராணிகராகவும் சிறந்த பகுத்தறிவுச் சிந்தனையாளராகவும் திகழ்ந்தவர். சிறிய தகப்பனார் பேராசிரியர் வி. செல்வநாயகம் பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசானாக விளங்கியவர். இவர்களின் வழிகாட்டலில் பழந்தமிழ் இலக்கியங்களைப் பயின்றவர் நந்தி. பின்னர் றோயல் கல்லூரியில் பல்கலைக்கழக புகுமுக வகுப்பில் படித்தபோது தமிழறிஞர் கி. லக்ஷ்மண ஐயர் இவருக்குத் தமிழ் ஆசானாக விளங்கி இவரை நெறிப்படுத்தினார். பழந்தமிழ் இலக்கியப் பரிச்சயம் பெற்ற பின்னரே நந்தி படைப்பு இலக்கிய முயற்சிகளை மேற்கொண்டார். இவருக்கு நந்தி என்ற புனைபெயரை வழங்கி ஆசீர்வதித்தவர் தமிழக மூதறிஞரான ராஜாஜி

இவரது முதலாவது சிறுகதை சஞ்சலமும் சந்தோசமும் 1947இல் வீரகேசரியில் வெளியானது. 1960இல் மலையகத்தில் நந்தி சுகாதார அதிகாரியாக இருந்த காலத்தில் மலையகத்தைப் பின்புலமாகக் கொண்ட மலைக்கொழுந்து என்ற நாவலை எழுதினார். நந்தி ஒரு நாடக நடிகருமாவார். ஐம்பதுக்கும் மேற்பட்ட மேடைநாடகங்களிலும் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட வானொலி நாடகங்களிலும் நடித்துள்ளார்.

இவரது நாவல்களான மலைக்கொழுந்து தங்கச்சியம்மா நம்பிக்கைகள் என்பனவும் சிறுகதைத் தொகுதிகளான ஊர்நம்புமா? கண்களுக்கு அப்பால் நந்தியின் கதைகள் தரிசனம் நந்தியின் சிறந்த சிறுகதைகள் ஆகியனவும் குரங்குகள் என்ற நாடகப் பிரதியும் ; நூல்களாக வெளிவந்துள்ளன. இவற்றைவிட மருத்துவ அறிவுரை நூல்கள் சிறுவர் அறிவுரை நூல்கள் ஆத்மிக நூல்கள் சில வற்றையும் எழுதியுள்ளார்.

‘ஈழத்தின் நவீன தமிழிலக்கியத்துறையில் குறிப்பிடத்தக்க படைப்புகளைத் தந்த முதலாவது மருத்துவர் என்ற வகையிலும் மலையகப் பிரதேசத்தினை தமிழ் நாவலுக்குக் களமாக்கிய முதல்வர் என்ற வகையிலும் நந்திக்கு ஈழத்து இலக்கிய வரலாற்றில் நிரந்தர இடமுண்டு” எனக் குறிப்பிட்டுள்ளார் கலாநிதி நா.சுப்பிரமணியன். நந்தி 27.05.2005 இல் அமரரானார்.

## ஞானம் சஞ்சிகை வெளியிட்ட ஞானம் பரிசுச் சிறுகதைகள் –60 சிறப்பிதழ்


ஞானம் சஞ்சிகையின் 250ஆவது இதழாக மலர்ந்திருக்கும் இச்சிறப்பிதழ் சிறுகதை வளர்ச்சிக்கு ஞானம் ஆற்றிய பங்களிப்பைப் பதிவு செய்வதாக அமைந்துள்ளது. கடந்த இரண்டு தசாப்த காலத்தில் ஞானம் சஞ்சிகை 21 சிறுகதைப் போட்டிகளை நடத்தியுள்ளது. அப்போட்டிகளில் முதல் மூன்று பரிசுகள் பெற்ற சிறுகதைகளின் தொகுப்பாக இச்சிற்றிதழ் மலர்ந்திருக்கிறது.



போட்டிகளில் பரிசுபெற்ற கதைகள் யாவும் அந்தந்தக்காலச்; சமூகப் பிரச்சினைகளைப் பேசுபவையாக அமைந்தன. குறிப்பாக போர் நடந்த காலகட்டத்தில் தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவப் பிரசன்னம் அதனால் மக்களுக்கு ஏற்பட்ட துன்ப துயரங்கள் இராணுவப் பழிவாங்கல்கள் இராணுவத்தினரின் முள்வேலி முகாம்களில் மக்கள் அனுபவித்த துன்பங்கள் காணாமல்போனோர் புதைகுழிகளில் புதைக்கப்பட்ட அவலம் போர்க்கால மரணங்கள் மக்களிடத்தே ஏற்படுத்திய பீதி முள்ளிவாய்க்கால் இறுதிநாள் யுத்தத்தில் அகப்பட்டவர்களின் அவலங்கள் நில அபகரிப்பு யாழ் மண்ணிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மனநிலை அவர்களது மண்ணைப்பற்றிய ஏக்கம் பிள்ளைகள் புலம்பெயர்ந்து சென்றதால் தாய்தந்தையர் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் போர்க்காலத்தில் வெளிநாடு சென்ற போராளிகளின் வாழ்வியல் பிரச்சினைகள் புலப்பெயர்வு ஏற்படுத்திய பண்பாட்டு மாற்றங்கள் போரினால் ஏற்பட்ட பாதிப்புக்களிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற சிந்தனை போரினால் கணவனை இழந்த பெண்களுக்கு வாழ்வு கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் பெண்ணியச் சிந்தனை சாதிய ஒடுக்குமுறை போரில் தாய் தந்தையரை இழந்து அநாதையாகிப் போன குழந்தைகளின் ஏக்கம் போரினால் கணவன் அங்கயீனனாகிய குடும்பத்தின் பிரச்சினை நுண்கடன் பெற்றவர் கடனைத் திருப்பிக் கொடுக்கமுடியாமல் தற்கொலை செய்துகொள்ளல் அநாதை இல்லம் என்ற போர்வையில் பாலியல் கொடுமைகள் சிறைக்கைதிகளின் பிள்ளைகள் மனைவியர் எதிர்நோக்கும் உளவியல் பிரச்சினைகள் நவீன தொழில்நுட்பத்தினால் தொலைபேசி ஏற்படுத்தும் பிரச்சினைகள் தமிழ்மொழிப் பற்று மண்பற்று போன்ற பலவகை கருப்பொருள்களைக் கொண்டவையாக இந்தச் சிறுகதைகள் அமைந்துள்ளன. இரண்டு தசாப்த காலம் ஈழச் சமூகத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளதும் மக்களின் துன்பியல் வாழ்வினதும் ஒரு வெட்டுமுகத்தைத் தருபவையாக இந்தப் பரிசுக்கதைகள் அமைந்துள்ளன. இவற்றோடு சமகாலத்தில் உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனாத் தொற்று அவலத்தைப் பிரதிபலிக்கின்ற கதையொன்றும் இடம்பெற்றுள்ளது.

ஞானம் சஞ்சிகை சிறுகதைத்துறை வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை வெளிப்படுத்துவதாக இச்சிறப்பிதழ் அமைகின்ற அதேவேளை சிறுகதை எழுத முற்படுவோருக்கும் இலக்கிய ஆர்வலர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பயன்மிக்க இதழாகவும் இச்சிறழ் அமையும் எனத் திடமாக நம்பலாம்.

## ஐ.நா. சபை பற்றிய ஒரு சிறு விளக்கம்



ஐ.நா.சபை என்றால் என்ன? அது எப்படித் தோற்றம் பெற்றது? ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கான உரிமை அதற்கு இருக்கின்றதா? என்ற கேள்விகளுக்கு விளக்கங்கங்களைப் பெறவேண்டுமானால் இந்த ஐ.நா. சபையின் தோற்றம் பற்றியும் அதன் செயற்பாடுகள் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும்.

ஐ.நா தலைமையகம் நியூயோர்க் நகரில் உள்ளது. ஜெனிவா நகரில் அமைந்திருக்கும் காரியாலயம் இரண்டாவது நிலையில் உள்ள காரியாலயமாகும்.

ஐக்கிய நாடுகள் சபையானது உலகில் அமைதிக்காகவும் பாதுகாப்பிற்காகவும் உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இந்தச் சபை உருவாவதற்கு முக்கிய காரணம்



சென்ற நூற்றாண்டின் முதல்பாதியில் இடம்பெற்ற இரண்டு உலகப்போர்கள்தான்.

முதலாவது உலக மகாயுத்தத்தில் பெரிய அளவில் உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் ஏற்பட்டன. உலக வரலாற்றில் முதன் முதலில் போரில் பல நாடுகள் கலந்து கொண்டதாலும் உலக அளவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதாலும் இந்தப்போர் முதலாம் உலகப்போர் என வழங்கலாயிற்று.

அதன்பின்னர் சிறிது காலம் அமைதி நிலவியது.

இந்நிலையில் 1939 செப்டெம்பர் 1ஆம் திகதி ஜேர்மனி போலந்து மீது தாக்குதல் நடத்தியது. அன்றே இரண்டாம் உலகப்போர் தொடங்கியது. இந்தப் போரின் கதாநாயகனும் வில்லனும் ஹிட்லர் தான்

இந்த இரண்டாவது உலகப்போரில் 50 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உயிரிழந்தனர். அனைத்து நாடுகளும் பல வழிகளிலும் சேதமடைந்து பொருளாதார பலம் இழந்தன.

இந்தப் போர் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோதே பல நாடுகளின் போக்கில் மாற்றங்கள் எற்பட்டன. உலகின் அமைதிக்கான தேவை உணரப்பட்டது. அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

1941ஆம் ஆண்டு அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பிராங்ளின் ரூஸ்வெல்ட் அவர்களும் இங்கிலாந்துப் பிரதமர் வி ன்ஸ்டன் சேர்ச்சில் அவர்களும் அட்லான்டிக் பெருங்கடலில் ஒரு போர்க்கப்பலில் சந்தித்து உலக அமைதிக்காகச் சில முடிவுகளை எடுத்து ஒரு சாசனத்தில் கையெழுத்திட்டார்கள். இது அட்லான்டிக் சாசனம் எனப்பட்டது. பின்னர் அதன் ~ரத்துக்கள் பல்வேறு நாடுகளில் விவாதிக்கப்பட்டு இறுதியில் கலிபோர்னியாவில் உள்ள சென்பிரான்ஸிஸ்கோ மாநாட்டில் கையெழுத்திடப்பட்டது. இதன்படி 1945 அக்டோபர் 24 ஆம்திகதி ஐ.நா. சபை நிறுவப்பட்டது. இந்தச் சபையில் 193 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர். இதன் தலைநகர் நியூயோர்க் நகரில் உள்ளது.

இந்த ஐ.நா. சபையின் குறிக்கோள்கள் நான்கு முக்கிய விடயங்களை உள்ளடக்கியுள்ளன. அவை யாவன உலக அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டுதல் நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்தல் உறுப்பு நாடுகளுக்கு இடையில் ஏற்படும்க்கல்களை அமைதியான முறையில் தீர்த்தல் மற்றும் உலகப் பொருளாதாரம் சமூகப்பண்பாடு மனித இனம் சார்பான பிரச்சினைகளை தீர்ப்பதில் ஒத்துழைத்தல் என்பனவாம்.


ஆங்கிலம் பிரெஞ்சு ஸ்பானிஷ் சீனமொழி மற்றும் அரபிக் ஆகியவை ஐ.நா. சபையின் அலுவல் மொழிகளாகும்.

**(இனி அடுத்த வாரம்)**

---



# படித்ததும் பகர்வதும் 35



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் **ரஷீத் எம் இம்தியாஸ்**

### நல்லதை சொல்கிறோம்

## சோதனைகளை துவம்சம் செய்வோம்!

வாழ்க்கையில் எவருக்கும் சோதனைகள் வருவது என்பது தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால் சோதனைகளால் துவண்டு விடுவது, மனிதனை கோழையாக்கி அவனது எதிர்காலத்தையே சூன்யமாக்கிவிடுகிறது. வாழ்வில் இன்பம் வந்தாலும், துன்பம் வந்தாலும், அதை ஒன்றுபோல் சந்திக்க கற்றுக்கொள்ள வேண்டும். இன்பம் வந்தால் துள்ளிக் குதிப்பதும், துன்பம் வந்தால் துவண்டு விழுவதும் புத்திசாலித்தனமல்ல. இரண்டிலும் தன் நிலை தடுமாறாது நிதானமாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

இன்று துன்பம், சோதனைகள் வந்தாலும், நாளை அதற்கு மாற்றமாக இன்பமும் சந்தோசமும் வந்து சேருமென உள்ளத்தில் உறுதிகொள்ள வேண்டும். அதுவே மனச்சோர்வை அகற்றி புது உற்சாகத்தைத் தரும்.

வாழ்வில் உயர்ந்த நிலையை அடைந்தவர்கள் அனைவரும் பல்வேறு சோதனைகளையும், சவால்களையும் வெற்றிகரமாக எதிர்கொண்டவர்கள்தான். அவர்கள் அவற்றை தைரியமாக எதிர்கொண்டதனால்தான் இன்று இத்தகைய உயர்வை அடைந்துள்ளார்கள் என்பதை உணர்ந்து, புரிந்துகொள்ள வேண்டும்.

ஒவ்வொரு சோதனையும் தமது வாழ்வின் உயர் நிலையை அடைவதற்கான படிக்கற்கள் என்பதை சரியாக, தெளிவாக தெரிந்துகொண்டு, அவற்றில் ஏறி முன்னேற திட உறுதி கொள்வதே சரியான முடிவாக இருக்கும்.

பெண்ணாக இருந்தாலும், ஆணாக இருந்தாலும், வரும் துன்பங்களையும், சோதனைககளையும் துணிவோடு, ஆத்மா விசுவாசத்தோடு எதிர்கொள்ளக் கூடிய ஆற்றலை உருவாக்கிக் கொள்வது அவசியம். இத்தகைய துணிவும், நம்பிக்கையுமே ஒருவரை நோக்கி வரும் துன்பங்களையும், சோதனைகளையும் துவம்சம் செய்து தூக்கியெறிந்து அவரை வெற்றிப்பாதையில் அழைத்துச் செல்லும்.

துன்பங்களையும், சோதனைகளையும் எதிர்கொள்ள முடியாமல், அழுவதாலும் சோர்ந்து போவதாலும் ஒன்றும் நடக்கப் போவதில்லை. எப்படி இருந்தாலும் அவற்றின் சுமையை நாம்தான் சுமந்திட வேண்டும். அழுது சுமப்பதை காட்டிலும். ஏற்று சுமக்கும் போது சிரமம் இல்லாமல் இருக்கும். எனவே, ‘தைரியமும் தன்னம்பிக்கையும் தான் ஒரு மனிதனை உலகத்தில் வாழ வைக்கும்’ என்ற உண்மையை உணர்ந்து செயல் பட்டால் எத்தகைய துன்பங்களும், சோதனைககளும் எம்மை நெருங்காது என்பதை உணர்ந்து செயல்பட உறுதி கொள்வோம்..

### நெஞ்சுக்கு நீதி


**ஆயிரம் பேரை கூட**
**எதிர்த்து நில்**
**ஆனால் எப்போதும்**
**ஒருவரை கூட**
**எதிர்பார்த்து நிற்காதே**

### நீத்தார் நினைவு

## பன்முக ஆளுமை சாத்தான்குளம் அப்துல் ஜப்பார்



பன்முகத் தமிழ் ஆளுமையான ‘சாத்தான்குளம் அப்துல் ஜப்பார்’ என பலராலும் அறியப்பட்ட எஸ். எம். ஏ. ஜப்பார் அவர்கள் கடந்த 2020 டிசம்பரில் தனது எண்பத்தோராவது வயதில் இவ்வுலகைப் பிரிந்தார். மிகச் சிறந்த ஒலிபரப்பாளராக பிரபல்யம் அடைந்தவர் இவர். 1950ல் சிறுவனாக இலங்கை வானொலியில் கால் பதித்து 1962ல் அவரது தாயகம் திரும்பும் வரை ‘எஸ். எம். ஏ. ஜப்பார்’ என்ற பெயரில் நாடகக் கலைஞராகவும் புகழ் பெற்றிருந்தார். இலண்டன் ஐ.பி.சீ. தமிழ் வானொலியில் ஓர் அரசியல் விமர்சகராக இருந்த இவர்,



புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியில் மிகவும் பரிச்சயமானவராக திகழ்ந்தார். இலண்டன் தீபம் தொலைக்காட்சியிலும் ஜனரஞ்சகமான நிகழ்ச்சிகள் படைத்தளித்தார்.

தமிழின் முதல் கிரிக்கெட் வர்ணனையாளராக குறிப்பிடப்படும் சாத்தான்குளம் அப்துல் ஜப்பார், அகில இந்திய வானொலியில் கிரிக்கெட் நேர்முக வர்ணனைகளைத் தமிழில் வழங்கி இந்திய வானொலி ரசிகர்கள் மத்தியிலும் புகழ் பெற்றார். 1982ம் ஆண்டு சென்னையில் இங்கிலாந்து இந்திய அணிகளுக்கு இடையேயான போட்டியையும் தமிழில் வர்ணனை செய்தார். அப்போது முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர்,, அப்துல் ஜப்பாரை நேரில் அழைத்து பாராட்டினார்.

பின்னர் 1999ம் ஆண்டு உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் வர்ணனையாளராக ஐபிசி தமிழ் வானொலிக்காக பயணியாற்றினார். 2004ம் ஆண்டு லண்டனில் உலகக் கிரிக்கெட் போட்டிகளை தமிழில் வர்ணனை செய்தார். 2007ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற 20:20 உலகக்கோப்பை கிரிக்கெட்டை தமிழில் வர்ணனை செய்தார். சுமார் 35 கிரிக்கெட் மற்றும் ஹாக்கி போட்டிகளின் வர்ணனையாளராக சிறப்பாகச் செயல்பட்டு உலகத் தமிழரின் நன்மதிப்பைப் பெற்றவர் அப்துல் ஜப்பார்.

இதேபோன்று, அப்துல் ஜப்பாரின் தமிழ் வர்ணனையை பெரிதும் நேசித்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், சமாதான காலத்தில் அவரை தனது இல்லம் அழைத்து விருந்தளித்து கௌரவித்தார். பிரபாகரனுடனான சந்திப்புகளைப் பற்றி ‘அழைத்தார் பிரபாகரன்’ எனும் நூல் எழுதி வெளியிட்டார்.

சிறந்த எழுத்தாளராகவுமிருந்த இவர், 2003ஆம் ஆண்டு தமது வாழ்க்கை அனுபவங்களை “காற்று வெளியினிலே” என்ற நூலில் பகிர்ந்துள்ளார். முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சராக மர்ஹூம் அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர், 1993ஆம் ஆண்டு நடாத்திய “வாழ்வோரை வாழ்த்துவோம்” விருதுவிழாவில் “பத்ருல் மில்லத்” (சமூக மாமதி) என்ற பட்டமளித்து கௌரவிக்கப்பட்டார்! அல்ஹாஜ் அஸ்வர் அவர்களது மறைவின்போது இலங்கை வந்த சாத்தான் குளம் அப்துல் ஜப்பார், இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் பிரபலமான “பாரம்பரியம்” நிகழ்ச்சியில் தமது இலங்கை வானொலி நினைவுகளைப் பகிர்ந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

சாத்தான்குளம் அப்துல் ஜப்பார் சாதித்தவை ஏராளம். அவர் மறைத்தாலும் அவரது நினைவுகள் மக்கள் மனதில் என்றும் வாழும்.

### சிந்தனை செய் மனமே

## வாசித்ததில் வசீகரித்தது

தமிழ் மக்களின் சிந்தனைத் திறனுக்கு ஓர் உரைகல்லாகத் திகழ்வது திருக்குறள். அதனை மனதில் கொண்டு காரை இறையடியான் (19351994) நபிகள் பெருமானார் நவின்ற நல்லுரைகள் இரண்டாயிரத்தைத் தொகுத்துக் குறள் வெண்பா யாப்பில் “நபிமொழிக்குறள்” என்னும் நூலைப் படைத்துள்ளார். இந்நூல் பத்தொன்பது இயல்களையும் இருநூறுஅதிகாரங்களையும் கொண்டுள்ளது. அவரது நபிமொழிக்குறள்களில் ஒரு சில இங்கே.,

***“சிறந்த பொருளறம் செய்யாத செல்வம்***
***மறுமை பாம்பாகுமென மாற்று”***

***“செல்லும் பொருளறச் செல்வம் பதுக்கியே***
***இல்லையெனல்மிக்க இழிவு”***

***“உடலுறுப் பொன்று உறுநோயால் வாடின்***
***உடன்வாடும் மற்ற உறுப்பு”***

***“நன்மொழிகள் நாவில் நடப்பிலோ தீயொழுக்கம்***
***புன்வழியர் இன்னோரின் போக்கு”***

***“உயிர்களிடம் அன்பாய் உதவியாய் வாழும்***
***செயலிலே உண்டு சிறப்பு”***
***“பறவைகள் சண்டையைப் பார்த்து மகிழ்தல்***
***அறமில்லையால் கொள்க அன்பு”***

### நலமே வாழ்வோம்

## உடல் மொழி கேட்போம்!

★ உடல், உணவை கேட்கும் மொழி – பசி.
★ உடல், தண்ணீரை கேட்கும் மொழி – தாகம்.
★ உடல், ஓய்வை கேட்கும் மொழி – சோர்வு.
★ உடல், நுரையீரலை தூய்மை செய்யும் மொழி – தும்மல்.
★ உடல் உச்சி முதல் பாதம் வரை உள்ள கழிவுகளை வெளியேற்றும் மொழி – காய்ச்சல்.
★ உடல், நீ எந்த வேலையும் செய்யாதே என்று சொல்லும் மொழி – அசதி.
★ உடல், செரிமானம் ஆகாத உணவை வெளியேற்றச் சொல்லும் மொழி – வாந்தி.
★ உடல், குடல்களில் உள்ள கழிவுகளை வெளியேற்றச் சொல்லும் மொழி – பேதி.
★ உடல், இரத்தத்தில் உள்ள நச்சை தோல் வழியாக வெளியேற்றும் மொழி – வியர்வை.
★ உடல், தன் உறுப்புகளுக்கு ஓய்வைக் கோரும் மொழி – உறக்கம்.

நாம் அனைவரும் இத்தகைய உடலின் மொழிகளை அறிந்து, அதனைப் புரிந்து, உடல் தன் வேலைகளை சீராக செய்ய அனுமதித்தால்தான் நோயிலிருந்து நாம் விடுபட்டு ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ முடியும்.

நாம் நம் உடலை நேசிப்போம், நம் உடல் உறுப்புகளை நேசிப்போம், நாம் வெளி உறுப்புகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றோமோ, அதே அளவிற்கு நம் உள் உறுப்புகளின் உணர்வுகளும், மொழிகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்போம். அப்போதுதான் நாம் ஆரோக்கியமாகவும், அழகான தோற்றத்துடனும் வாழ முடியும்.

### நொறுக்குத் தீனி

## எண்ணும் மனிதன்

*05 வயதில் விரல்களை எண்ணினான்,*
*10 வயதில் எண்களை எண்ணினான்,*
*15 வயதில் மதிப்பெண்களை எண்ணினான்,*
*20 வயதில் தேர்வு வினாக்களை எண்ணினான்*
*25 வயதில் சம்பளத்தை எண்ணினான்,*
*30 வயதில் நண்பர்களை எண்ணினான்,*
*35 வயதில் வாரிசுகளை எண்ணினான்,*
*40 வயதில் கடன்களை எண்ணினான்,*
*45 வயதில் நோயை எண்ணினான்,*
*50 வயதில் சொந்தங்களை எண்ணினான்,*
*55 வயதில் மாத்திரையை எண்ணினான்,*
*60 வயதில் பேரக் குழந்தைகளை எண்ணினான்,*
*அதற்கு பின் வயதை எண்ணினான்,*

*பின், தான் இறந்தால் தனக்காக அழும் உள்ளங்களை எண்ணினான். எண்ணிப் பார்க்கையில் தன்னிடம் கூடவே இருந்தது கணிதம் மட்டும் தான்! மொத்தத்தில் விடை என்னவோ தொடக்கமும் “0” முடிவும் “0” தான் போலும். (இது ஒரு மனிதனின் எண்ணக் கணிப்பு)*

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், “படித்ததும் பகர்வதும்” பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2021 மார்ச் 07 ஞாயிற்றுக்கிழமை



"நிலவைப் பிடித்துச்
சிறுகறைகள்
துடைத்துக் – குறு
முறுவல் பதித்த முகம் ,
நினைவைப் பதித்து மன
அலைகள் நிறைத்துச் சிறு
நளினம் தெளித்த விழி .

# அழிப்பது சுலபம், ஆக்குவது கடினம்




லண்டனில் இருக்கும் கார்ல்டன் டிரெவர் என்ற மதுபான விடுதிக் கட்டடத்தை அதன் சொத்து மேம்பாட்டு நிறுவனம் யாரிடமும் சொல்லாமல்கொள்ளாமல் இடித்துத் தகர்த்தது. கேட்டால், அங்கே பிரமாண்டமான மதுபான விடுதியை கட்டப் போவதாக கூறியது.

ஆனால் இருந்தக் கட்டடம் சாதாரணமானதல்ல பண்டைய லண்டனை பிரதிபலிப்பதாக இருந்தது. 1920 வாக்கில் கட்டப்பட்ட இந்தக் கட்டடம் இரண்டாம் உலகப் போரில் அந்தப் பகுதியில் முழுசாகத் தப்பிய ஒரே கட்டடம் கூட. வரலாறு தெரியாமல் இடித்ததற்கு அந்த நிறுவனம் வசமாக மாட்டிக் கொண்டது.

வெஸ்ட் மினிஸ்டர் நகர சபை கடந்த 2015 ஆம் ஆண்டு போட்ட உத்தரவுப்படி, பழைய கட்டடத்தை இருந்தது போல ஒவ்வொரு கல்லாகக் கட்ட வேண்டும். ஐந்து ஆண்டுகள் கடந்திருந்தும் இன்னும் அந்தக் கட்டடத்தை கட்டும் பணி பூர்த்தியாகவில்லை.

அழிப்பது சுலபம், ஆக்குவது கடினம் என்று சும்மாவா சொன்னார்கள்!

# இதுக்குக் கூட மரண தண்டனையா?

ஹமுராபி சட்டம் என்பது உலகில் மிகப் பழமையான சட்டப் புத்தகங்களில் ஒன்று. உண்மையில் அது புத்தகம் அல்ல 2.24 மீற்றர் உயரமான கல்லில் செதுக்கப்பட்ட சட்ட விதிகள். இன்று நேற்றல்ல கி.மு 1755 க்கு முன்னர் இருந்த சட்டங்கள்.

பபிலோனிய மன்னர் ஹமுராபி ஆட்சிக்காலத்தில் போடப்பட்ட சட்டத்தால் தான் அதற்கு ஹமுராபி சட்டம் என்று பெயர். தெற்கு மெசொபதேமியா அனைத்தையும் உள்ளடக்குகின்ற யூப்ரடிஸ் நதியை ஒட்டியே கி.மு 1792 தொடக்கம் 1750 காலப்பகுதியல் ஆட்சி புரிந்திருக்கிறார் இந்த மாமன்னன்.

அந்த மன்னனின் காலத்தில் அமுலில் இருந்த ஹமுராபி சட்டத்தின் கீழ் வர்த்தக செயற்பாடுகள், சிவில் விவகாரங்கள், குற்றவியல் சட்டங்கள் என்று நீதி நிலைநாட்ட 282 சட்ட விதிகள் எழுதப்பட்டிருக்கின்றன. அதாவது பண்டைய மனித நாகரிகத்தில் இத்தனை பழையதும், முழுமையானதுமான சட்டப் புத்தகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதில்லை. எனவே, பண்டைய நாகரிகம் பற்றி தெரிந்துகொள்ள ஹமுராபி சட்டம் முக்கியமான ஒன்று.

ஹமுராபி பேரரசு இருந்த பகுதியில் இருந்து 250 மைல் தொலைவில் இன்றைய ஈரானின் குசிஸ்தான் பிராந்தியத்தில் 1901 ஆம் ஆண்டே இந்த சட்டக் கல்வெட்டு அகழ்வாராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த சட்டங்கள் உலகப் புகழ்பெற்றது. அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் கூட இந்த சட்டங்கள் பதிக்கப்பட்டிருக்கிறது.

அதற்காக இந்த சட்டங்கள் உன்னதமானது என்று சொல்ல முடியாது. குற்றங்காணப்படுபவரின் நாக்கு, கைகள், மார்பு, கண்கள் அல்லது காதுகளை அறுத்தெறிவதற்குக் கூட சட்டம் விதிக்கப்பட்டிருக்கிறது. எனினும் குற்றம்சாட்டப்பட்டால் அதனை நிரூபிக்க வேண்டும் என்பது ஒரு நாகரிகமான விடயம். ஆனால் அதிலும் கூட ஒரு கொடூரம் இருக்கிறது. ஒருவர் மற்றொருவர் மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தி, அதற்கு எதிராக ஆதாரத்தை கொண்டுவரத் தவறினால், அவர் மீது குற்றச்சாட்டு சுமத்தியவர் கொல்லப்பட வேண்டும் என்கிறது ஹமுராபி சட்டம்.

இந்த சட்டங்களைக் கூட பொறுத்துக் கொள்ளலாம் ஆனால் மதுபானக் கடையில் வேலைபார்ப்பவர்களுக்கு ஒரு சட்டம் இருக்கிறது அதனை பார்த்தால் ஜென்மத்துக்கும் மதுபானக் கடையில் வேலை பார்க்க மாட்டீர்கள்.

மதுபானக் கடையில் மதுவை ஊற்றிக் கொடுப்பவர்கள் அதனை கீழே கொட்டினால் மரண தண்டனை விதிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.





பூகோள சஞ்சாரம்

பிர்தெளஸ்

# அமெரிக்கா நடத்திய விசித்திர ஒலிம்பிக் போட்டி



1904 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி அமெரிக்காவில் நடைபெற்றது. அப்போதெல்லாம் ஒலிம்பிக் போட்டிகள் சீராக இருக்காது. ரஷ்யா ஜப்பான் போர் பதற்றம், பயணிப்பதற்கு வசதிகள் இல்லாததால் ஒரு சில நாடுகளில் விரல்விட்டு எண்ணக் கூடிய வீரர்கள் தான் போட்டியில் பங்கேற்றார்கள்.

ஆனால் ஒட்டுமொத்த போட்டிகளிலும் மரதன் ஓட்டப் போட்டிதான் சுவாரசியமானது. போட்டி நடந்த விதத்தை பார்த்தால சிரிப்பதா அழுவதா என்றே தெரியாது. வரலாற்றில் இப்படி ஒரு மரதன் போட்டி நடந்திருக்காது.

மரதன் போட்டியில் மொத்தம் 32 வீரர்கள் பங்கேற்றார்கள். ஆனால் நான்கு நாடுகளே இடம்பெற்றிருந்தன. அதிலும் கிரேக்கத்தில் இருந்து வந்த 10 வீரர்களும் தனது வாழ் நாளில் மரதன் போட்டி ஒன்றில் பங்கேற்றதே இல்லை. தென்னாபிரிக்காவில் இருந்து இரு வீரர்கள் வெறுங்காலோடு வந்தார்கள்.

இவர்களை விடவும் கியூபாவில் இருந்து வந்த பீலிக்ஸ் கர்வஜால் சுவாரஸ்யமானவர். தபால்காரரான இவர் ஊர் மக்களிடம் பணம் சேர்த்தே ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க அமெரிக்கா வந்திருந்தார். அமெரிக்காவுக்குள் நுழைந்த உடனேயே இருக்கின்ற பணத்தை எல்லாம் குடித்தே அழித்துவிட்டு பல நூறு மைல் நடந்தே மரதன் போட்டியில் பங்கேற்க வந்தார்.

போட்டியில் அவர் அணிந்திருந்த ஆடைகள் கூட மரதன் போட்டிக்கு பொருந்தாதவை. நீண்ட காற்சட்டை. தடித்த பாதணிகள் என்று வித்தியாசமாக இருந்தார்.

24.85 மைல் தூரம் கொண்ட மரதன் போட்டி ஆரம்பமானவுடன் போட்டியாளர்கள் வேகமாக ஓட ஆரம்பித்தார்கள். ஏற்பாட்டுக் குழுவினர் போட்டியாளர்களுக்கு முன்னால் கார் ஒன்றை அனுப்பியது. அந்தக் கார் எழுப்பிய புழுதி போட்டியாளர்களுக்கு மூச்சு விடாமல் முடியாமல் செய்தது.

பரபரப்பான வீதிகளில் பாதசாரிகள், வாகனங்களின் இடையூறுக்கு இடையிலேயே ஓட வேண்டி இருந்தது. ஆறு மைல் தொலைவிலேயே தண்ணீர் குடிப்பதற்கான இடம் இருந்தது.

தென்னாபிரிக்காவில் இருந்து வந்த ஒரு வீரரை காட்டு நாய் துரத்த அவர் ஒலிம்பிக்கை விட்டே ஓட்டம்பிடித்தார்.

இதில் கியூபாவில் இருந்து வந்தவர் நன்றாகவே ஓடிக்கொண்டிருந்தார். ஆனால் சற்று குரும்பு பிடித்தவர். அடிக்கடி நின்று வீதி ஓரத்தில் இருப்பவர்களுடன் பேசுவார். அவருக்கு மரதனை விடவும் வீதி ஓரத்தில் இருந்த மரங்களில் பழங்களை பறித்து சாப்பிடுவதில் தான் விருப்பம் அதிகமாக இருந்தது.


கடைசியில் வயிறு சரியில்லாமல் போக ஓட்டத்தின் பாதியிலேயே படுத்து உறங்கிவிட்டார். பின்னர் அந்த வாகனத்தில் இருந்து இறங்கிய அவர் எஞ்சிய நான்கு மைகளையும் ஓடி வெற்றிக் கோட்டை அடைந்தார். ரசிகர்கள் ஆரவாரம் செய்தார்கள். அவருக்கு பதக்கமும் வழங்கப்பட்டது.

பார்வையாளர்கள் ஒருவர் தான் லோர்ஸ் செய்த ஏமாற்று வேலையை போட்டு உடைத்தார். தப்பிப்பதற்கு தாம் கேலிக்கு செய்தேன் என்று குறிவிட்டு நழுவிக் கொண்டார் லோர்ஸ்.

எனவே 1904 ஆம் ஆண்டு மரதன் போட்டியின் உண்மையான வெற்றியாளராக தோமஸ் ஹிக்ஸ் போட்டியை முடித்தார்.



# 17,300 ஆண்டுகளுக்கு முந்தைய கங்காரு ஓவியம்



**ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த அறிவியலாளர்கள் சுமார் 17,300 ஆண்டுகளுக்கு முந்தைய கங்காரு பாறை ஓவியம் ஒன்றை கண்டுபிடித்துள்ளனர்.**

அந்த நாட்டில் இதுவரை கிடைத்துள்ள பாறை ஓவியங்களிலேயே மிகவும் பழமையானது. இந்த கங்காரு ஓவியம்தான் பாறை குகை ஒன்றின் மேற்கூரையில் சுமார் 6.5 அடி நீளம் உள்ள இந்த ஓவியம் சிவப்பு நிறமியைக் கொண்டு பயன்படுத்தி வரையப்பட்டுள்ளது.


இந்த ஓவியம் மேற்கு ஆஸ்திரேலியாவின் கிம்பர்லி பகுதியில் கண்டறியப்பட்டுள்ளது. இந்தப் பகுதி தொல்கால ஆதிமனித ஓவியங்களுக்கு பெயர் பெற்றது.

இந்த ஓவியத்தின் அருகே கிடைக்கப்பெற்ற களிமண்ணால் ஆன பழங்கால குளவிக் கூடுகள் ரேடியோ கார்பன் டேட்டிங் செய்யப்பட்டு இதன் வயது கண்டறியப்பட்டது. (கார்பன் டேட்டிங் என்பது படிமங்கள், தொல்பொருட்கள் உள்ளிட்டவற்றின் வயதைக் கண்டறிவதற்கான தொழில்நுட்பம்.)

இந்த ஆய்வின் முடிவுகள் 'நேச்சர் ஹ்யூமன் பிஹேவியர்' எனும் அறிவியல் சஞ்சிகையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

ஒரே ஓவியத்தின் மேலேயும், அதற்கு அடியிலும் பழங்கால குளவிக் கூடுகளை கண்டறிவது மிக மிக அரிதானது என்று ரேடியோ கார்பன் டேட்டிங் தொழில்நுட்பத்தின் முன்னோடிகளில் ஒருவரான ஆய்வாளர் டேமியன் ஃபின்ச் கூறுகிறார்.

இந்த ஓவியத்தின் மேற்பரப்பில் கிடைத்த மற்றும் அடியில் கிடைத்த பழங்கால குளவிக் கூடுகளில் இருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளைக் கொண்டு இதன் வயதை ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர்.



நிச்சயமாக இந்த ஓவியம் வரையப்பட்டு அதிகபட்சமாக 17,500 ஆண்டுகளும் குறைந்தபட்சமாக 17,100 ஆண்டுகளும் இருக்கும். இந்த ஓவியத்தின் வயது 17,300 ஆண்டுகளாக இருக்கவே அதிக வாய்ப்புள்ளது என்று மெல்பர்ன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முனைவர் டேமியன் ஃபின்ச் தெரிவிக்கிறார்.

பண்பாட்டுத் தொடர்புகள்

இந்த ஆய்வுக் கட்டுரை எழுதியவர்களில் ஒருவரான, மேற்கு ஆஸ்திரேலிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முனைவர் ஸ்வன் ஓஸ்மேன், "தற்போது கண்டறியப்பட்டுள்ள இந்த கங்காரு ஓவியம் மற்றும் பிற பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ள பழங்கால ஓவியங்கள் ஆகியவற்றின் இடையே தொடர்பு இருக்கக்கூடும்," என்று கூறுகிறார்.

இந்த கங்காருவின் படம் தென்கிழக்கு ஆசிய தீவுகளில் கண்டறியப்பட்டுள்ள 40,000 ஆண்டுகளுக்கும் முந்தைய ஓவியங்களை ஒத்து உள்ளது. இரு பகுதிகளுக்கும் பண்பாட்டுத் தொடர்புகள் ஏதேனும் இருப்பதை இது குறிக்கலாம் என்று அவர் கூறுகிறார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், இந்தோனீசியாவின் சுலவேசி தீவில் 45,000 ஆண்டுகளுக்கு முந்தைய உலகிலேயே மிகவும் பழமையான விலங்குகள் ஓவியத்தை ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர்.

தென்னாப்பிரிக்காவில் 73,000 ஆண்டுகளுக்கு முன்பு கண்டறியப்பட்ட ஹேஷ்டேக் வடிவிலான ஓவியம் ஒன்று இதுவரை உலகில் கண்டறியப்பட்டுள்ள பாறை ஓவியங்களில் மிகவும் பழமையான ஓவியம் என்று கருதப்படுகிறது.



## பிறந்த நாள் வாழ்த்து

உங்கள் அபிமான செந்தூரம் இதழில் உங்கள் அன்புச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்களை பிரசுரிக்க தீர்மானித்திருக்கிறோம். குழந்தைகளின் அழகிய நிழற்படம் ஒன்றை மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்தால் களமமைத்துக் கொடுக்க தயாராக இருக்கிறோம். குழந்தையின் முழுப் பெயர், பெற்றோரின் பெயர், விலாசம் என்பவற்றுடன் குழந்தையின் பிறப்புச் சான்றிதழ் பிரதி ஒன்றையும் இணைத்து அனுப்ப வேண்டும்.



அனுப்ப வேண்டிய முகவரி:

**பிறந்தநாள் வாழ்த்து, செந்தூரம், தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல. 834, கொழும்பு.**
**Senthooramtkn@gmail.com**

செந்தூரம் பிறந்த நாள் பகுதிக்கான உங்கள் அன்புச் செல்வங்களின் படங்களை எமது மின்னஞ்சல் முகவரிக்கோ 0714901181 எனும் வட்ஸ் அப் இலக்கத்திற்கோ அனுப்பலாம்.

தானி மிஷாட்
5ஆவது பிறந்த நாள்
மிசாட் மும்தாஜ்
கெலிஓயா





# நிலவில் நீர்

பூமியை சுற்றி வரும் "நேச்சுரல் சாட்டிலைட்" அதாவது இயற்கையாக உருவான செயற்கை கோள் என்று அழைக்கப்படும் சந்திர கிரகம் ஆனது, பூமிக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை ஒற்றை கட்டுரையில் கூறி விட முடியாது.

ஆனால், அந்த சந்திரனில் நீர் ஆதாரம் இருக்கும் பட்சத்தில், அது எவ்வளவு பயன் உள்ளதாக இருக்கும் என்பதை ஒற்றை கட்டுரையில் கூறி விடலாம்.

**30 வருஷத்துக்கு முன்னர் சொல்ல வேண்டியதை இப்போ சொல்லும் நாசா!**

ஆம், நீங்கள் நினைப்பது சரி தான். சந்திரனில் நீர் மூலக்கூறுகள் நகர்வதை நாசா உறுதிப்படுத்தி உள்ளது.

எப்போ சொல்ல வேண்டியதை எப்போ சொல்றீங்க? என்று உங்களுக்குள் எழும் கேள்வி எவ்வளவு நியாயமானதா, அதே அளவிற்கு கண்டுபிடிப்பும், இந்த கண்டுபிடிப்பினால் நமக்கு என்னென்ன நன்மைகள் ஏற்படும் என்பதும் மிகவும் நியாயமாகவே உள்ளன.

### நீர் ஆதாரம் நிலவில்

நிலவில் நீர் ஆதாரம் இருக்கும் பட்சத்தில் எதிர்கால மனித விண்வெளி பயணங்கள் நிகழும் போது, சந்திரனின் நீர் ஆதாரம் ஆனது உயிரி எரிபொருளாகவும் அல்லது கதிரியக்க பாதுகாப்பு கருவிகளை உற்பத்தி செய்வதற்கு கூட பயன்படுத்தப்படலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக எதிர்காலத்தில் நிகழப்போகும் தொலைதூர சூரிய மண்டல ஆய்வு பயணங்களுக்கு சந்திரன் ஒரு நிறுத்தமாக உதவும்.

### லூனார் ரிகான்ஸின்ஸ் ஆர்பிட்டர்

நிலவில் நகரும் நீரின் மூலக்கூறுகள் இருப்பதை கண்டுபிடித்தது நாசாவின் லூனார் ரிகான்ஸின்ஸ் ஆர்பிட்டர் (Lunar Reconnaissance Orbiter) ஆகும். இது நிலவை ஆய்வு செய்யும் நோக்கத்தின் கீழ் நிலவின் சுற்றுப்பாதைக்குள் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசாவினால் அனுப்பப்பட்ட ஒரு விண்கலமாகும்.

இது நிலவின் மேற்பரப்பை மிகவும் விரிவாக ஆய்வு செய்து வருகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக சந்திரனின் மேற்பரப்பில் உள்ள நீரேற்றத்தின் அளவை ஆய்வு செய்யும் நோக்கத்தினை (இலக்கு என்றே கூறலாம்) கொண்டு உள்ளது.

### ஜோன் கெல்லர்

ஜோன் கெல்லர் "இந்த ஆய்வு நிலவின் நீர் இருப்பது சார்ந்த கதையை முன்னேற்றுவதில் ஒரு முக்கிய படியாகும் என்பதுடன் இது சாத்தியம் ஆக எல்.ஆர்.ஓ வின் பல ஆண்டு கால உழைப்பும், சேகரிக்கப்பட்ட தரவும் தேவைப்பட்டது" என்று கூறி உள்ளார்.

எல்.ஆர்.ஓ திட்டத்தின் துணை விஞ்ஞானி. ஜியோபிசிக்கல் ரிசர்ச் லெட்டர்ஸில் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வு அறிக்கையானது, நிலவில் நீர் ஆதாரம் இருப்பதை லைமன் ஆல்ஃபா மேப்பிங் ப்ராஜெக்ட்டும் (LAMP) உறுதி செய்து உள்ளதாக கூறுகிறது.

லேம்ப் சான் அண்டானியோவில் உள்ள தென்மேற்கு ஆராய்ச்சி மையத்தில் இருக்கும் லேம்ப் (LAMP) கருவியின் பிரின்சிபில் இன்வெஸ்டிகேட்டர் ஆன டாக்டர் குர்ட் ரெதர்ஃபோர்ட் கூறுகையில், "சந்திரனில் நீர் ஆதாரம் இருப்பது பற்றி நடத்தப்பட்ட ஆய்விகளில் இது ஒரு முக்கியமான புதிய முடிவு ஆகும்.

"நாங்கள் சமீபத்தில் லேம்ப் (LAMP) கருவியின் இரவு மற்றும் பகல் நேரங்களில் சேகரிக்கப்பட்ட ஒளிகளை ஆராய்ந்ததின் வழியாக, சில பிரதிபலிப்பு மிக்க சமிக்ஞைகளை கண்டு அறிந்தோம்.

அந்த சமிக்ஞைகள் ஆனது சந்திரனில் நீர் ஆதாரம் ஆனது துல்லியமாக எங்கே உள்ளது என்றும் எவ்வளவு உள்ளது என்பதையும் கண்காணிக்க உதவுகிறது.

### நீர் மூலக்கூறுகளின் இருப்பு

நீண்ட காலமாகவே, பூமியின் சந்திரன் ஆனது தண்ணீர் யில்லாத பாலைவனமாகவும் வறண்ட இடமாகவும் இருந்ததாக விஞ்ஞானிகள் நம்பினர். ஆனால் சமீபத்தில் நிலவின் மேற்பரப்பில் சிறிய அளவிலான நீர் மூலக்கூறுகள் இருப்பதை அடையாளம் கண்டுள்ளனர்.

பூமத்திய ரேகைக்கு வெளியே இருப்பதாக கண்டறியப்பட்ட மேற்பரப்பு நீர் ஆனது, நிலவின் மேற்பரப்பு வெப்பமடையும் போது அதன் இயக்கத்தை (நீரோட்டத்தை அல்லது நடமாட்டத்தை) வெளிப்படுத்தி உள்ளது.

### பூமியின் நிழல்

இதற்கு முன்னதாக "இந்த" நீர் மூலக்கூறுகள் ஆனது சூரிய மண்டலத்திலிருந்து வெளிப்பட்ட சூரிய காற்றிலிருந்த ஹைட்ரஜன் அயனிகளின் விளைவாக உருவாகி இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் நம்பினார்கள். அதாவது நிலவின் மேற்பரப்பில் உள்ள நீர் ஆனது பூமியின் நிழலுக்குள் நுழைந்தால் ஏற்படும் மாற்றம் என்று அர்த்தம். ஆனால், லேம்ப்பின் ஆய்வறிக்கையின் படி, பூமியின் நிழல் மற்றும் அதன் காந்தப்புல செல்வாக்கினால் நிலவின் நீர் குறைந்துவிடவில்லை என்கிறது.

### தண்ணீரை மனிதர்களால் பயன்படுத்த முடியும்

"சந்திரனில் நிலவும் நீர் சுழற்சியைப் புரிந்து கொள்வதற்கு, இந்த ஆய்வு முடிவு மிகவும் உதவுவதுடன் எதிர்காலத்தில் மனிதர்களை சந்திரனுக்கு அனுப்புவதற்கும், அது சார்ந்த பயிற்சிகளை தொடங்குவதற்கும் உதவும்" என்கிறார் கிரானைட் சயின்ஸ் இன்ஸ்ட்டியூட்டின் மூத்த விஞ்ஞானி ஆன அமண்டா ஹெண்ட்ரிக்ஸ்.

எரிபொருளை உருவாக்க அல்லது கதிர்வீச்சு கேடயம் உருவாக்க அல்லது வெப்ப மேலாண்மைக்காக, சந்திரனின் தண்ணீரை மனிதர்களால் பயன்படுத்த முடியும். மேற்கூறியவைகளை நாம் பூமியில் இருந்து அனுப்ப வேண்டிய அவசியம் இல்லாத பட்சத்தில், எதிர்கால விண்வெளி பயணங்களானது மிகவும் மலிவானதாக மாறும்.





உங்களை எங்கேயோ
பார்த்த மாதிரி இருக்கே ?
Facebook ல இருக்கீங்களா ? இல்ல
Whats app ல ? இல்ல
Twitter ல ? இல்ல
Skype ல ? இல்லவே இல்ல.
அப்புறம் ? உங்க வீட்டு மாடியில் தான்
2 வருசமா வாடகைக்கு இருக்கேன்.



பையன் : அம்மா! எதிர் வீட்டு ஆன்டி பேர் என்னம்மா?
அம்மா : விமலா டா...
பையன் : அப்பாவுக்கு இது கூட தெரிய மாட்டேன்குதும்மா. அந்த ஆன்டிய "டார்லிங்"னு கூப்புடுறார்....



சுரேஷ் : பசங்களெல்லாம் பயப்படற மாதிரி சினிமாப்படப் பெயர் சொல்லுடா பார்க்கலாம்...
ரமேஷ் : "காலையில் எக்சாம் மாலையில் ரிசல்ட்...'



# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



காதலன் : உன் அப்பனுக்கு கடன் தர்றதும் உனக்கு முத்தம் தர்றதும் ஒண்ணுதான்..
காதலி : ஏன் டார்லிங்..?
காதலன் : திருப்பிக் கொடுக்கறதே இல்லியே



இயக்குனர் : இந்தப் படத்துல நன்றியுள்ள ஒரு நாய் காணாமப் போயிடுது சார். கடைசியில, அதுவாவே சில நாய்ங்ககிட்ட விசாரிச்சு வழி கண்டுபிடிச்சு வீட்டுக்குத் திரும்பிடுது!"
கதாநாயகன் : "படத்தோட பேரு?"
இயக்குனர் : "ஜிம்மி ரிடர்ன்ஸ்!"



மகன் : அப்பா உன்னால இருட்டுல எழுத முடியுமா?
தந்தை : ஓ! முடியுமே
மகன் : அப்ப என் ரிப்போட்டில கையெழுத்துப் போடுங்க!



ஜோன்ஸ் : பெண் பார்த்து வந்த பின் அவன் ஏன் விழுந்து விழுந்து சிரிக்கிறான்.
பீன்ஸ் : துன்பம் வரும் வேளையில் சிரிங்க என்று யாரோ சொன்னாங்களாம்.



நிருபர் : உங்க வருங்காலக் கணவர் எப்படி இருக்கணும்னு நினைக்கிறீங்க?
நடிகை : நிகழ்காலக் கணவரை விட நல்லவரா இருக்கணும்னு தான்.



தொண்டன் : தலைவரே புது வீடு கட்டி பால்தான் காய்ச்சனும் சாராயம் காய்ச்ச கூடாது.
தலைவன் : பழைய ஞாபகத்துல பண்ணிட்டேன்.



# இசைச் சிற்பியாய் வாழும் இசையமைப்பாளர் சிற்பியின் பாடல்கள்

## தமிழ்த் திரையிசைப் பாடல்கள்

### - நயப்பும் வியப்பும் -



தென்னிந்திய திரைத்துறையை பொறுத்தவரையில் இசைத்துறைசார் இயங்குதளத்தில் நல்ல பாடல்களை தந்து இன்றும் அநேக நெஞ்சங்களில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற கலைஞன் இசையமைப்பாளர் சிற்பி. 90களில் ஒரு இசை ராஜாங்கத்தையே செதுக்கியிருக்கக்கூடியவர் என்று சொல்லுமளவிற்கு பல சிறப்பான பாடல்களை உருவாக்கி ரசிகர்கள் அங்கீகாரத்தையும் கூடவே பெற்றிருக்கின்ற ஒருவர்.

செண்பகத்தோட்டம் என்ற திரைப்படத்தின் வாயிலாக திரைத்துறையில் அறிமுகமான சிற்பி. பல நல்ல திரைப்படங்களிற்கு இசையமைத்துள்ளார். அநேக இசையமைப்பாளர்களின் வெற்றிக்காலமாக 90கள் அனைவருக்கும் இருந்திருக்கின்றது. போட்டிமயமான ஒரு சூழலில்தான் சிற்பியுடைய வருகையும் நிகழ்ந்தது. ஆயினும் 90களை தனக்குரிய காலமாக அவர் வரித்துக்கொண்டார். இதே காலப்பகுதியில் சிற்பியின் பல திரைப்படங்கள் வெளியாகி அந்த படங்களுக்கான பெரிய பங்காக இவருடைய இசைப்பாடல்கள் அவற்றிற்கு வலுச்சேர்த்தது. எழுத்துச்சூழலை பொறுத்தவரை ஏலவே நான் குறிப்பிட்டதைப் போல பல நல்ல படையல்கள் என நாம் வியக்கும் படைப்புக்கள் எப்படி வைரமுத்து, வாலி ஆகியோரினது பாடல்களாக இருக்கும் என்ற ரசிகர்களின் ஏதேச்சியான சுயமுடிவு காரணமாக பிழையாக நோக்கப்பட்டதோ அதேபோல இசைத்துறைக்குள்ளும் இந்த சலனச்சிக்கல் அவ்வப்போதுகளில் நிகழ்ந்து விடுகின்றமை கண்கூடு. அப்படித்தான் சிற்பியின் பல பாடல்களையும் நாம் இளையராஜா, தேவா என்ற முன்னணி இசையமைப்பாளர்களின் பாடல்கள் என கொண்டாடியும் இருக்கின்றோம்.

சிற்பியின் இசையமைப்பில் பல திரைப்பட பாடல்கள் ஹிட் பாடல்களாக வந்திருப்பினும் ஒரு சில பாடல்களை பற்றி குறிப்பிடுவதன் ஊடாக இந்தப் பாடல்களிற்கு சொந்தக்காரர் இவரே என்பதை மீளவும் பதிவு செய்யக்கூடிய வாய்ப்பாக இது அமையும்.



இந்த இடத்தில் மணிரத்தினம் திரைப்படத்தில் இடம்பெற்ற,

**"காதல் இல்லாதது வாழ்கையாகுமா கண்கள் இல்லாமலே காட்சி தோன்றுமா"**

என்ற பாடல் S.P.B மற்றும் சித்திரா குரல்களிலமைந்து பெரிய வரவேற்பை அந்நாளில் பெற்றது. 90களில் ஒரு காதல் கீதமாக அனைத்து இளசுகளாலும் விரும்பப்பட்டது. இந்தப்பாடல் இன்றும் சமூகவலைத்தள வெளியில் இந்தப்பாடலின் இசை தொடர்பில் வேறு நாமங்களே உள்ளன என்பதனையும் பதிவுசெய்கின்றேன்.

இசையமைப்பாளர் சிற்பி அவர்களிற்கு அந்நாளில் நல்லதொரு நாமத்தை பெற்றுக்கொடுத்த திரைப்படம் கோகுலம் ஆகும். இந்தத் திரைப்படத்தில் வெளிவந்த

**"செவ்வந்தி பூ வெடுத்தேன் அதில் உன்முகம் பார்த்திருந்தேன்"**

என்ற பாடல் உன்னிமேனன், பி.சுசீலா குரல்களில் வெளிவந்து அனைத்திடமும் நல்ல வரவேற்பை பெற்றது. இந்த சமகாலத்திலேயே இசையமைப்பாளர் S.A.ராஜ்குமாரின் பல பாடல்களும் வெளியாகி நல்வரவேற்பை பெறத்தொடங்கியது. ஒரு கட்டத்தில் ராஜ்குமாரின் பாடலும், சிற்பி அவர்களினது பாடல்களும் அநேக ஒற்றுமைத்தன்மை வாய்ந்தவையாக காணப்பட்டதால் இருவர் பாடல்களும் இன்றுவரை பெயர்களால் மாறுபட்டு காண்கின்ற தன்மையையும் காணமுடிகிறது.

சிற்பி ஜனரஞ்சக கலைஞனாய் அடையாளப்படுத்திய திரைப்படம் உள்ளத்தை அள்ளித்தா். 1990களில் வெளியாகிய இத்திரைப்படம் நகைச்சுவை கலந்து வெளியாகியது. இடம்பெற்ற அனைத்து பாடல்களும் அந்நாளில் மெகாஹிட் ஆகின. குறிப்பாக இப்படத்தில்,

**"அழகிய லைலா இவளது ஸ்டைலா" " ஐலவ்யூ லவ்யூ சொன்னாளே"**

என்ற பாடல்கள் அந்நாளில் அனைத்து மங்கல சுபநிகழ்வுகளிலும் ஒலிபெருக்கியில் மறக்காமல் ஒலிக்கவிடப்பட்ட காலமாக அது இருந்தது. மற்றும் நான் பேச நினைப்பதெல்லாம் திரைப்படத்தில் இடம்பெற்ற,

**"ஏலேலங் கிளியே என்னைத் தாலாட்டும் இசையே"**

என்ற பாடலும் அநேகராலும் ரசிக்கப்பட்ட பாடலாக அமைந்தது.

சரத்குமாரின் நடிப்பில் வெளியான நாட்டாமை திரைப்படம், பாடல்களுக்காகவும், பின்னணி இசைக்காகவும் சிற்பிக்கு நல்ல பெயரை பெற்று கொடுத்தது. அதில் இடம்பெற்ற

**"கொட்டாப் பாக்கும் கொழுந்து வெத்திலையும்" பாடலும்**

**"மீனாப் பொண்ணு" பாடலும் அநேகரால் விரும்பி இரசிக்கப்பட்டது.**

கூடுதலாக சிற்பி இசையமைத்த திரைப்படங்கள் குடும்பக்கதைகளை பின்னணியாக கொண்டு எடுக்கப்பட்ட திரைப்படங்களாகவே அமைந்து விடுவதுண்டு. இதன் காரணமாகவும் சிற்பியின் பாடல்களும், பின்னணி இசையும் அநேகர் நெஞ்சில் ஆழமாக பதிந்தன.

மேட்டுக்குடி திரைப்படமும் சிற்பி க்கு நல்லதொரு தளத்தை அமைத்தது. அதில் இடம்பெற்ற அனைத்து பாடல்களும் ரசனை பூர்வமாக அமைந்தன. குறிப்பாக

**"அன்புள்ள மன்னவனே ஆசைக்காதலனே இதயம் புரியாதா முகவரி தெரியாதா" என்ற**

மனோ மற்றும் சுவர்ணலதா ஆகியோரின் குரலில் வெளியான இந்தப் பாடல் பல இளைய நெஞ்சங்களின் இதய கீதமாக அமைந்தது. இந்தப்பாடலின் இசைபற்றி உண்மையாக சொல்லியே ஆகவேண்டும் பாடலின் இன்ரலூட் என்று சொல்லப்படுகின்ற இடையிசை மிக அழகாகவும் நீளமாகவும் அமைக்கப்பட்டு பல வாத்தியச் செயர்க்கை சேர்க்கப்பட்ட ஒரு ரசனைக்குரிய பாடலாக இதனை சிற்பி அமைத்திருப்பார்.

1990களின் இறுதிப்பகுதியிலும் 2000களின் ஆரம்பங்களிலும் சிற்பி இசையமைத்த திரைப்பட பாடல்கள் அவருடைய இசையின் குறிப்பிடத்தக்க மாற்றமாக மாறி ஒரு வித்தியாசமான பாடல்களை தரத்துவங்கிய காலமாக மருவியது. அதற்கு சான்றாக மூவேந்தர் திரைப்படத்தில் இடம்பெற்று ஹரிகரனின் அற்புதக்குரலில் பாடப்பட்ட குமுதம் போல் வந்த குமரியே பாடல் அந்நாளில் தமிழகத்தில் வெளியான இதழ்களின் பெயர்களை உள்ளிருத்தி எழுதப்பட்டது. இந்த புதுமையும் சிற்பியின் இசையும், ஹரிகரன் குரலும் ஒரு சேர்ந்து பாடலை ரசனைக்குரியதாய் மாற்றியது. இதே படத்தில் இடம்பெற்ற மற்றொரு பாடலான

**"நான் வானவில்லையே பார்த்தேன்" என்ற பாடலும் சிறப்பானதாய் சிற்பிக்கென வாய்த்தது.**

2000களின் ஆரம்பத்தில் நான் ஏலவே சொன்னது போல வித்தியாசமான ஒரு இசையாய் சிற்பியின் இசைப்பாடல்கள் அமைந்தது. வருஷமெல்லாம் வசந்தம் திரைப்படத்தில்

**"எங்கே அந்த வெண்ணிலா" "முதன்முதலாய் உன்னைப் பார்க்கிறேன்"** என்ற

பாடலும் அநேகரால் விரும்பப்பட்ட பாடல்களாக அமைந்தன.

உன்னை நினைத்து திரைப்படமும் சிற்பிக்கு நல்ல வரவேற்பை பெற்றுக்கொடுத்தது. இதில் இடம்பெற்ற பொம்பளைங்க காதலைதான் மற்றும் என்னை தாலாட்டும் சங்கீதம் நீயல்லவா , யாரந்த தேவதை போன்ற பாடல்கள் ஹிட் பாடல்களாக அமைந்தன. அதிலும் பொம்பளைங்க காதலைத்தான் பாடல் உலகளாவிய ரீதியில் அநேகரால் கொண்டாடப்பட்ட பாடலாகவும் அமைந்தது.

பூவும் காற்றும் சேரும் போது என்ற பாடல் சிற்பியின் இசையில் வெளிவந்து நல்லதொரு பாடலாக அமைந்தது. பூச்சூடவா திரைப்படத்தில் இடம்பெற்ற நீயில்லை நிலவில்லை பாடல இன்றைக்கும் பலராலும் விரும்பப்படுகின்ற பாடலாக அமைந்திருக்கின்றது.

சிற்பி தனது பாடல்களை உன்னதமாக செதுக்கியிருக்கின்றார் என்றே சொல்ல வேண்டும். பாடகர்களை தெரிவு செய்கின்ற தன்மை போன்ற இன்னோரன்ன காரணிகளால் அவர் இன்றைக்கும் தனித்துத்தெரிகின்றார். சிற்பியினுடைய திரைப்படங்கள் கொஞ்சமானவையாக இருந்தாலும் அவர் இசையமைத்த பாடல்கள் அனைத்தும் மிகப்பிரபல்யமானவையே. சிற்பியின் பாடல்கள் உண்மையில் சிறப்புவாய்ந்தவையே என்ற ரசிகநிலை ஓட்டம் ஒவ்வொருவருக்குள்ளும் இருந்து கொள்ளும் என்பது நிதர்சனம்.

**வெற்றி துஷ்யந்தன்**

# சிங்கள சினிமாவிலும் சாதனைகள் நிகழ்த்திய ஷர்மிளாவின் இதயராகம் புகழ் பேராதனை ஜுனைதீன்

## பேட்டி கலாபூஷணம் எம். கே. சுதாகர்

**கலாபூஷணம் பேராதனை ஏ. ஏ. ஜுனைதீன் ஷர்மிளாவின் இதய ராகம் என்ற நாவல் சிந்தாமணியில் வெளியாகிய பின்னலேயே மக்களிடம் அவர் பெயர் தெரியவந்தது என்பது உண்மையானாலும் அவர் அதற்கு முன்னரேயே திரைப்படத்துறையில் தடம் பதித்து விட்டார். தமிழ்த் திரைப்படத்துறையிவ் அந்த பொற்காலத்தில் முக்கிய நபராக இயங்கியவர். ஷர்மிளாவின் இதய ராகத்தை வர்ணத் திரைப்படமாக எடுத்தவர் திரைக்கதை, கதை, வசனம், இயக்கம் என பல துறைகளில் பிரகாசித்தவர். 2019ஆம் ஆண்டு வாரமஞ்சரியில் இவர் எழுதிய ஈழத்து திரைப்பட முயற்சிகள் தொடர்பான கட்டுரைகள் ஜுனைதீனின் பங்களிப்புகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக இருந்தன.**

தனது 75ஆவது பிறந்த தினத்தை கடந்த ஜனவரி மாதம் 28ஆம் திகதி அவர் கொண்டாடினார். தமிழ் சினிமாவில் மட்டுமனிற் சிங்கள சினிமாவிலும் வெற்றிகரமாக ஈடுபட்டு சாதனைகள் நிலைநாட்டியவர், இனி அவரது பேட்டியை படியுங்கள்.



### உங்களைப் பற்றி வாசகர்களுக்கு ஒரு அறிமுகம்....

கண்டி மாவட்டத்தில் உடுநுவரைத் தொகுதியில் பேராதனைக்கு அண்மையில் ஹேந்தனிஎன்ற கிராமம் உள்ளது. அங்கே நான் விவசாயியான அஸன் அலிக்கும் உம்மு சல்மாவுக்கும் மகனாக 1946ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் திகதி பிறந்தேன். என் மனைவியின் பெயர் ஜெக்கியா எனக்கு நான்கு மகன்மார். ஒரு மகள். இரண்டு பேத்தி, ஆறு பேரன்மார் என்று எனது குடும்பம் விரிந்துள்ளது.

எனது ஆரம்பக் கல்வி போராதனை அரசினர் தமிழ் உயர்நிலைப்பள்ளியில் ஆரம்பமாகி கம்பளை சாஹிரா கல்லுாரியில் தொடர்ந்து உயர் கல்வி பேராதனை கலைப்பீடத்துடன் முடிவடைந்தது.

### கலைத்துறையில் எவ்வாறு ஈடுபாடு வந்தது?

கல்லூரிக் காலத்திலிருந்தே நாடகம், பாடல் எழுதுவது, நாடகங்களில் நடிப்பது என்பன எனது விருப்பத்துக்குரிய பொழுபோக்காக இருந்தன. எனது இக்கலைத் தாகத்துக்கு அதிபர்களான வீ.கனகசபாபதி, ஆ. கந்தையா, ஆகியோரும் நாடகப் பண்புள்ள துணை

ஆசிரியர்களான க. ஆறுமுகம், ஐ. சின்னமணி, இலக்கியக் கடல் ஆ. பெருமையினார், எஸ். நாகலிங்கம், நவாலியூர் நா. செல்லத்துரை, ஜனாப். ஏ. ஜே. எம். சத்தார் ஆகியோர் ஊக்கமளித்து கைத்துாக்கி விட்டனர்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் தமிழ் பேராசிரியர் சு. நித்தியாளந்தன் என் முயற்சிகளுக்கு ஆதரவாக இருந்தார்.

என் முதலாவது நாடகம் பாடசாலையில் மேடையேற்றப்பட்ட 'தொழிலாளர் கண்ணீர்' என்ற நாடகம். இது கண்டி புனித அந்தோனியார் மகளிர் கல்லூரியில் 1965 டிசம்பர் 25ஆம் திகதி மாலை 6 மணிக்கு மேடையேறியது.

அதன்பின்னர் எனது ஊரில் எனது சிங்கள நாடக மன்றமாகிய புரசந்த நாட்டிய கலா சங்கமய" ( முழுமதி கலா மன்றம்) மூலம் ' னொபிபிந்துனுமல " ( மலராது சிதைந்த மலர் ) என்ற சிங்கள நாடகம் 31.08.1968 இல் ஊர் மேடையில் மலர்ந்தது.

என் ' நிழல் " நாடக மன்றம் 1969 இல்

வெள்ளவத்தை பஸல்ஸ் லேன் 25ஆம் இலக்கத்தில் நிஜமானது.

இதன் தலைவராக, யாழ்ப்பாணம், கண்டி,கொழும்பு கலைத்துறை

யினரை முதன் முதலாக ஒன்றாக இணைத்த ஏ ரகுநாதன்

செயல்பட்டார்.

வெள்ளவத்தை சரஸ்வதி மண்டபத்திலும் யாழப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திலும் தொடர்ந்து ஏழு, ஏழு நாட்கள் ஏழு, ஏழு நாடகங்கள் ஏழு நாடக மன்றஙகள் மூலம் தயாரித்து, முற்றிலும் நிழல் நாடகமன்றம் அனுசரணையில் இலவச நாடக விழாவாக நடத்தினோம்.

அதன் பின் துறையூர் கே. மூர்த்தியின் ' தேரோட்டி மகன்," புலவர்; தெட்சினா மூர்த்தியின் ' ரகுபதி ராகவ ராஜாராம்,", எஸ். பொ. வின் ' வலை ",கவிஞர் அம்பியின் ' வேதாளம் சொன்ன கதை ", முழுமையான கவிதை நாடகம் ( கொழும்பு, கண்டி புஷ்பதான மண்டபத்தில் 24. 04. 1971, 25. 04. 1971 இல் மாத்தளை பீ. எம். எஸ். கல்லூரி மணடபத்திலும் ) எஸ். ஏ. அழகேசனின் பாவிகள் "எம். எச். பௌசுல் அமீரின் ' வாடகைக்கு அறை ", கே. எம்.சுபியானின் "அவளைக் கொன்றவன் நீ", மெக்ஷிம் கோர்க்கியின் ' நகரத்துக் கோமாளிகள் " என்பன கொழும்பில் மேடையேறின. இந்தநாடகங்கள் அத்தனையும் ஆங்கில நாடக அறிவு மிக்க ' சுஹைர் ஹமீத் " என்ற மாபெரும் கலைஞனால் நெறிப்படுத்தப்பட்டு புகழ் பூத்தன.

இந்த சுதந்திரமான, மகிழ்ச்சி இந் நாட்டில் 1971. 03. 26 ஆம் திகதிவரை மட்டுமே நீடித்தது.

1971. 04. 05 ஆம் திகதிஅரசாங்கத்துக்கு எதிராக ' ஜே. வி. பி. " என்னும் மக்கள் விடுதலை முன்னணி என்ற சிங்கள வாலிபர்களின் ஆயுதமேந்திய கிளர்ச்சி இந்த நாட்டை எல்லா வகையிலும் சின்னாபின்னப்படுத்தியது.

நாட்டில் அமைதியற்ற ஒரு ஸ்திரணமான நிலை தொடர்ந்தது. மக்களின் சந்தோசத்துக்கும் நிம்மதிக்கும் பதிலாக அச்சமும் மரண பீதியும் நாளுக்குநாள் அதிகரித்தது. கிளர்ச்சி இயக்கமும் போட்டிபோட்டுக் கொண்டு அவரவர் எதிரிகளையும் கொன்றுகுவித்தன.

இனி மிச்சம் இல்லை என்றளவுக்கு அராஜக நிலைக்கு தள்ளப் பட்டுக்கொண்டிருந்தது. இதனால் நாட்டின் சகல மக்களையும் மரணபீதிஆட்கொண்டுவிட்டதால் மக்கள் மாலை ஆறு மணிக்கு முன்னரே முடங்கலாயினர். இதனால் சினிமா, நாடகம், கேளிக்கைகள், களியாட்டங்கள் என்பன வற்றிலிருந்து மக்கள் விடுபடலாயினர்.

காலப் போக்கில் வடக்கிலும் தமிழ் இளைஞர்கள் பல குழுக்களாகபிரிந்து அரசாங்கத்துக்கு எதிராக ' மண் மீட்பு "

போராட்டம் தொடுத்தனர். இது முப்பது வருடகாலம் நீடித்தது.

போராட்டம் தோல்வியில் முடிந்தது.

அழிந்த மனித உயிர்களுக்கு எண்ணிக்கையே இல்லை.

தமிழர்களுக்கு எதிரான இந்த போராட்டத்தில் தமிழர்களுக்கு

உரித்தான சினிமா தியேட்டர்கள், சினிமா ஸ்டூடியோக்கள் தீக்கு இரையாக்கப் பட்டதோடு சிங்கள சினிமாவை உச்சத்துக்கு உயர்த்திய தமிழ்க் கலைஞர்களும் கொல்லப்பட்டனர்.

எனினும் இடைக்கிடையே கொழும்பில் இலங்கை தமிழ் சினிமாவும்

நாடகங்களும் முன் எடுத்துச் செல்லப்பட்டன.

அந்தவகையில் மண்டபத்துகசு முற்பணமும் டிக்கட்டும் அச்சடித்துக்

கொடுத்து 2000 ஆம் வருடம் ' நிழல் " நாடகமன்றம் அனுசரனையில் நான் நடாத்திய மாதம் ஒரு நாடகம் திட்டத்

தின் கீழ் மூன்று நாடக மன்றங்களே பங்குபற்றின.

ஏனைய நாடக மன்றங்களின் கடும் பொறாமையின் காரணமாகவும்

இதில் நான்கு நாடக மன்றங்களைத் தவிர தங்களை கலைஞர்கள் என்றும் நாடக மன்றங்கள் என்றும் பீத்திக் கொள்பவர்கள் ஏனையவர்கள் பங்குபற்றவில்லை. நான்கு மாதங்களோடு இந்த நாடகத் திட்டம் கைவிடப்பட்டது. இந்த விரக்தியினால் நான் 2000 ஆம் வருடம் சிங்கள சினிமாவை நாடிச் சென்றேன்.

நான் அங்கு கதை, திரைக் கதை, வசனம், எழுதி இயக்கிய 'சொமிபோய்ஸ்' திரைப்படம் மகத்தான வெற்றி பெற்றது. எனக்கு பெரும் வரவேற்பு கிடைத்தது.

அதன் பின்னர் சந்துனி, நாக கன்னியா, சுபர் ஸ்டார், மமய் பிரியே ஆதரே, குருமிட்டெக் எவில்லா, ஒப மட வாசனா, கொட உட எகஸ் பிரஸ் போன்ற திரைப் படங்கள் வெற்றிமேல் வெற்றிபெற்றன.

அது இன்றும் தொடர்கிறது.







# ஒரே படத்தில் 40 நடிகர், நடிகைகளை இயக்கிய அனுபவம் டைரக்டர்

சசிகுமார் கதாநாயகனாக நடித்துள்ள 'ராஜவம்சம்' படத்தில், அவருக்கு ஜோடியாக நிக்கி கல்ராணி நடித்து இருக்கிறார்.

இவர்களுடன் 40 முன்னணி நடிகர் நடிகைகள் பங்கேற்று நடித்துள்ளனர். இத்தனை நடிகர் நடிகைகளை வைத்து, எந்த பிரச்சினையும் இல்லாமல், 49 நாட்களில் படப் பிடிப்பை நடத்தி முடித்து இருக்கிறார், டைரக்டர் கே.பி.கதிர்வேல். இதுபற்றி அவர் கூறியதாவது:

"வாழ்ந்தால், குலசேகரன் குடும்பத்தில் வாழ வேண்டும் என்று எல்லோரும் ஆசைப்படுகிற ஒரு கூட்டு குடும்பத்தை பற்றிய கதை இது. குலசேகரனாக விஜயகுமார், அவரது 11வது மகனாக சசிகுமார் ஆகிய இருவரும் நடித்து இருக்கிறார்கள். இதற்கு முன் குடும்ப பாசத்தை மையப்படுத்திய கதைகள் வந்திருக்கலாம். 'கடைக்குட்டி சிங்கம்' படம் கூட ஒரு குடும்ப கதைதான். ஆனால், அதில் அக்காள்தங்கை சண்டை கருவாக இருந்தது.

'ராஜவம்சம்' கதையில் வரும் கூட்டு குடும்பத்தில் சண்டையே வராது. குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் இருப்பார்கள். பொதுவாகவே ஒன்றுக்கும் மேற்பட்ட நடிகர் நடிகைகளை வைத்து படப் பிடிப்பை நடத்தும்போது, 'ஈகோ' பிரச்சினை வரும். என் படத்தில் அது வரவில்லை.

அதிகாலை ஆறரை மணிக்கே எல்லா நடிகர் நடிகைகளையும் வரவழைத்து ஒரு ஹாலில் உட்கார வைத்து அன்று படமாக்கப் போகிற காட்சியை விளக்கி விடுவேன். ஒருவரை வைத்து படமாக்கும்போது மற்றவர்கள் கோபிக்க மாட்டார்கள். இதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை என் குரு சுந்தர் சி.யிடம் கற்றுக் கொண்டேன்.

முன்னணி நடிகர் நடிகைகளுக்காக 14 கேரவன்களை கொண்டு வந்தோம். ஒரு கேரவனை மூன்று நடிகர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். 30 கார்கள் பயன்படுத்தப்பட்டன.

பொள்ளாச்சியில் 49 நாட்கள் படப்பிடிப்பு நடத்தி, முழு படப்பிடிப்பையும் முடித்து விட்டோம். தயாரிப்பாளர் டி.டி.ராஜாவுக்கு மகிழ்ச்சி. படத்தை பார்த்த தணிக்கை குழுவினர், 'கடந்த பதினைந்து வருடங்களில் வெளிவந்த படங்களில், ஆட்சேபனைக்குரிய காட்சிகள் இல்லாத படம் இதுதான்' என்று கூறி, 'யு' சான்றிதழ் வழங்கினார்கள்".





# தேசிய விருதை குறிவைத்து விபசார பெண் 'தாதா' வேடத்தில் அலியாபட்



மும்பை சிவப்பு விளக்கு பகுதியில் உள்ள ஒரு பெண் தாதாவை முக்கிய கதாபாத்திரமாக வைத்து, 'கங்குபாய் கத்தியாவாடி' என்ற இந்தி படம் தயாராகிறது.

தேசிய விருதை குறிவைத்து இந்த படத்தை பிரபல இந்தி டைரக்டர் சஞ்சய்லீலா பன்சாலி டைரக்டு செய்து வருகிறார். இவர் டைரக்டு செய்யும் 10வது படம், இது.

இதில், சிவப்பு விளக்கு பகுதியில் அழகிகளை வைத்து விபசார தொழில் நடத்தும் பெண் 'தாதா'வாக அலியாபட் நடிக்கிறார். பிரபல இந்தி நடிகைகள் 2 பேர் நடிக்க மறுத்த இந்த வேடத்தில், அலியாபட் துணிச்சலுடன் நடித்து வருகிறார்.

எந்த ஒரு நடிகர் நடிகையிடம் இருந்தும் சிறப்பான நடிப்பை வெளியே கொண்டுவருவதில் பெயர் பெற்ற டைரக்டர் பன்சாலி, அலியாபட்டின் திறமையான நடிப்பை வெளியே கொண்டு வந்து இருக்கிறார். அவருடைய பிறந்தநாளில் (கடந்த 24ந் திகதி) படத்தின் டீசர் வெளியிடப்பட்டது. அதில் அலியாபட்டின் சிறந்த நடிப்பும், ஒளிப்பதிவு மற்றும் பின்னணி இசையும் வெளிப்பட்டு இருக்கிறது. இதுபற்றி இந்தி திரையுலகில் பரபரப்பாக பேசப்படுகிறது.

'கங்குபாய் கத்தியாவாடி' படத்தை வருகிற ஜூலை மாதம் திரைக்கு கொண்டுவர திட்டமிட்டு உள்ளனர்.

## சினிமாவில் நடிப்பதில் கவனம் செலுத்துகிறேன்

# போதைப்பொருள் வழக்கில் இருந்து விரைவில் வெளியே வருவேன்

# நடிகை ராகிணி

சினிமாவில் நடிப்பதில் அதிக கவனம் செலுத்துவதாகவும், போதைப்பொருள் வழக்கில் இருந்து விரைவில் வெளியே வருவேன் என்றும் நடிகை ராகிணி தெரிவித்துள்ளார்.

கன்னட திரையுலகில் முன்னணி நடிகையாக இருந்து வருபவர் ராகிணி திவேதி. இவர், போதைப்பொருட்கள் பயன்படுத்தியது மற்றும் போதைப்பொருட்கள் விற்பனை செய்யும் வியாபாரிகளுடன் தொடர்பில் இருந்ததாக பெங்களூர் மத்திய குற்றப்பிரிவு பொலிசாரால் கைது செய்யப்பட்டு இருந்தார். பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் 103 நாட்கள் அவர் சிறைவாசம் அனுபவித்திருந்தார். தற்போது பிணையில் அவர் வெளியே வந்துள்ளார்.

சிறையில் இருந்து வெளியே வந்த பின்பு பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் நடிகை ராகிணி இருந்தார். இந்த நிலையில், பெங்களூரில் நடிகை ராகிணி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

### அப்போது அவர் கூறியதாவது:

விரைவில் வெளியே வருவேன்

போதைப்பொருள் விவகாரம் குறித்து அதிகம் பேச விரும்பவில்லை. நான் எப்படி என்பது பற்றி எனக்கு தெரிந்தவர்களுக்கு நன்கு தெரியும். குறிப்பாக என்னுடைய தந்தை, தாய்க்கு நான் எப்படி என்பது தெரியும். நான் கஷ்டத்தை அனுபவித்து கொண்டிருந்த போது, எனக்கு உறுதுணையாகவும், ஆறுதலாகவும் இருந்தது என்னுடைய பெற்றோர் தான். போதைப்பொருள் வழக்கில் இருந்து கூடிய விரைவில் வெளியே வருவேன். நான் எந்த தவறும் செய்யவில்லை என்பதை நிரூபிப்பேன். அதுவரை இந்த விவகாரம் பற்றி பேச விரும்பவில்லை.

கடந்த ஆண்டு (2020) எனக்கு மட்டும் அல்ல, அனைத்து தரப்பினருக்கும் மிகுந்த வேதனை, கஷ்டங்களை கொடுத்திருந்தது.

2021ம் ஆண்டு அனைவருக்கும் நன்மை கிடைக்கும். கடந்த ஆண்டு என்னை பற்றி தொலைகாட்சிகளில் பல்வேறு விவாதங்கள் நடந்து முடிந்து விட்டன. பிக்பாஸ்8 நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொள்ள இருப்பதாக தகவல்கள் வருகின்றன. அந்த தகவல்கள் உண்மை அல்ல.

### விளம்பர தூதர்

தற்போது எனது கவனம் முழுவதும் சினிமாவில் நடிப்பதும், சமூக நலப்பணிகளில் ஈடுபடுவது தான். அதில், எனது முழு கவனத்தையும் செலுத்துகிறேன். சினிமாவில் நடிக்கும் வாய்ப்புகள் வருகின்றன. கர்மா 3 படத்தில் நடிக்கும் வாய்ப்பு வந்துள்ளது. அந்த படம் முற்றிலும் மாறுபட்ட கதையம்சம் கொண்டதாக இருக்கும். சினிமா படங்களில் தொடர்ந்து நடிப்பேன். உலகில் தற்போது கிரிக்கெட் விளையாட்டு மக்களிடையே பிரபலம் அடைந்து வருகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்காக சர்வதேச டி.10 கிரிக்கெட் போட்டி நடைபெற உள்ளது. மார்ச் 11ந் திகதியில் இருந்து தொடங்கி நடைபெற இருக்கிறது. இந்த கிரிக்கெட் போட்டிக்கான விளம்பர தூதராக நான் நியமிக்கப்பட்டுள்ளேன். இது மகிழ்ச்சியை அளிக்கிறது. இவ்வா று அவர் கூறினார்.





# கொமெடி கலைஞர், கலைமாமணியாக உயர்ந்த கதை

சமீபத்தில் கலைமாமணி விருது பெற்ற நடிகை தேவதர்ஷினியிடம் சிறு நேர்காணல்

**✱ உங்களுடைய திரை வாழ்க்கையின் தொடக்கம் பற்றி கூறுங்கள்?**

சென்னை எத்திராஜ் கல்லூரியில் பி.காம் முதலாம் ஆண்டு படித்து கொண்டிருந்தபோது, டி.வி.நிகழ்ச்சி ஒன்றில் தொகுப்பாளினியாக வாய்ப்பு கிடைத்தது. அதுதான் என்னுடைய 'முதல் எண்ட்ரி'. பிறகு 3ம் ஆண்டு படிக்கையில், தூர்தர்ஷனில் ஒளிபரப்பான 'மர்மதேசம்' திகில் தொடரில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது. கல்லூரி படிப்போடு சேர்த்து 'பார்ட் டைம்' முறையில்தான் டி.வி.நிகழ்ச்சிகளில் நடிக்க, ஆங்கரிங் செய்ய ஆரம்பித்தேன். ஒருகட்டத்தில் நடிப்பதற்கு நிறைய வாய்ப்புகள் வரவே, அதை முழுநேர வேலையாக மாற்றிக்கொண்டேன்.

**✱ ஆரம்பத்தில் எத்தகைய கதாபாத்திரங்களை எதிர்பார்த்தீர்கள்?**

எதிர்பாராத வாய்ப்புகள் மூலமாகவே நான் திரைத்துறைக்குள் நுழைந்தேன். நடிப்பதும், டி.வி. நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவதும் என் வாழ்க்கை திட்டங்களில் துளியும் இல்லை. இருப்பினும் அடுத்தடுத்த வாய்ப்புகள் தானாவே கனிந்ததால், அதை ஏற்றுக்கொண்டு நடிக்க ஆரம்பித்தேன்.

**✱ டி.வி.யில் இருந்து சினிமாவிற்குள் நுழைந்தது எப்படி?**

மர்மதேசம், ரமணி வெர்சஸ் ரமணி, சின்ன பாப்பா பெரிய பாப்பா... போன்ற டி.வி.தொடர்களில் பிசியாக நடித்துக்கொண்டிருந்த கால கட்டத்தில், சில சினிமா வாய்ப்புகளும் வந்தன. குறிப்பாக பார்த்திபன் கனவு, எனக்கு 20 உனக்கு 18, காக்க காக்க போன்ற படங்களில் நடிக்கக்கூடிய வாய்ப்புகள் கிடைத்தன. அதனால் சின்னத்திரையிலும், வெள்ளித்திரையிலும் தொடர்ச்சியாக நடிக்க ஆரம்பித்தேன்.

**✱ கொமெடிக்கு மாறிய கதையை கூறுங்கள்?**

நான் ரொம்ப 'சீரியஸ் டைப்' என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் ரமணி வெர்சஸ் ரமணி, சின்ன பாப்பா பெரிய பாப்பா போன்ற நகைச்சுவை தொடர்களில் நடித்தபோதுதான் என் மீதான கண்ணோட்டத்தை மாற்றிக்கொண்டேன். எவ்வளவு கனமான கதாபாத்திரத்தையும் எதார்த்தமாக, நகைச்சுவையாக கொடுக்க முடியும் என்பதை உணர்ந்து கொண்டேன். சில திரைப்படங்களிலும் அதை நிரூபித்திருப்பேன். இருப்பினும் 'காஞ்சனா' திரைப்படம் என்னை கொமெடி நடிகையாகவே மாற்றிவிட்டது. அதற்கு பிறகு ரொம்பவும் கொமெடியான கதாபாத்திரங்களிலே நடித்திருக்கிறேன். ஒருசில குணசித்திர வேடங்களிலும் நடித்திருக்கிறேன்.

**✱ கொமெடி, குணசித்திர வேடம் இவ்விரண்டில் உங்களுக்கு விருப்பமானது எது?**

கொமெடியோ, குணசித்திர வேடமோ அல்லது கனமான கதாபாத்திரமோ, எதுவாக இருந்தாலும் நடிப்பு திறனை வெளிக்காட்டக்கூடியதாக இருக்கவேண்டும். அதேபோல புது அனுபவமாகவும் இருக்கக்கூடிய கதாபாத்திரங்களையே விரும்புகிறேன்.

**✱ நீங்கள் நடித்த கொமெடி காட்சிகளில், உங்களுக்கு பிடித்த காட்சி எது?**

ரமணி வெர்சஸ் ரமணி டி.வி. தொடர் ரொம்பவும் பிடிக்கும். அதில் நகைச்சுவைக்கு பஞ்சமே இருக்காது.

**✱ நடிப்பை தாண்டி, நிஜ வாழ்க்கையில் நீங்கள் எப்படி?**

நிஜ வாழ்க்கையிலும் நான் கொமெடியான கேரக்டர்தான். நடிகையாக அறியப்பட்டாலும், 17 வயது மகளுக்கு பொறுப்பான அம்மாவாகவும், கணவருக்கு அன்பான மனைவியாகவும், பெற்றோருக்கு பாசமிகு மகளாகவும் கடமையை ஆற்றுகிறேன். அதேசமயம் நான் ஒரு மனநல மருத்துவர். சைக்காலஜிஸ்ட் முடித்திருக்கிறேன். மேற்படிப்புகளையும் தொடர்ந்து கொண்டிருக்கிறேன். படப்பிடிப்பு நேரம் போக, ஓய்வு நேரங்களில் ஒருசிலருக்கு மட்டும் மனநல ஆலோசனைகள் வழங்குவதுண்டு.

**✱ கலைமாமணி விருது பெற்ற அனுபவத்தை கூறுங்கள்?**

நடிகையாக, எனக்கு கிடைத்த மிகப்பெரிய கவுரவம் இது. 25 வருடங்களாக திரைத்துறையில் பயணிக்கும் எனக்கு, கலைமாமணி விருது கூடுதல் உற்சாகத்தை கொடுத்திருக்கிறது. இன்னும் அதிக காலம் பயணிக்க, இந்த விருது உத்வேகத்தை கொடுக்கும். அழுது நடித்து, மக்களை அழவைப்பது சுலபம். சிரிக்க வைப்பதுதான் சவாலானது. அந்த சவாலில் வென்றதற்கு, இந்த கலைமாமணி சான்றாகிறது.

# பெர்முடா முக்கோணம் மாயமான கப்பல்கள், விமானங்களுக்கு என்ன ஆனது?



**அமெரிக்காவின் தெற்கு கரோலைனா மாகாணத்தில் உள்ள சார்லஸ்டன் துறைமுகத்திலிருந்து நியூயார்க் துறைமுகம் நோக்கி, 1812ஆம் ஆண்டு டிசம்பர் 30ஆம் திகதி கிளம்பிய 'பேட்ரியாட்' எனும் கப்பலின் நிலை என்ன ஆனது என்று இதுவரை தெரியவில்லை.**

அந்தக் கப்பலில் இருந்து காணாமல் போனவர்களில் ஒருவர் தியோடீசியா பர் ஆல்ஸ்டன். இவர் அமெரிக்காவின் மூன்றாவது துணை அதிபராக பொறுப்பு வகித்த ஆரோன் பர்ரின் மகள்.

மேற்கண்ட சம்பவம் நடந்து முடிந்து சுமார் ஒரு நூற்றாண்டு காலத்துக்கும் பின்னர் இதேபோல இன்னொரு நிகழ்வு நடக்கிறது. 1918ஆம் ஆண்டு மார்ச் மாதம் பார்படாஸ் தீவிலிருந்து கிளம்பிய யூஎஸ்எஸ் சைக்லோப்ஸ் எனும் அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான கப்பல் மற்றும் அதில் பயணம் செய்த சுமார் 300 பேர் என்ன ஆனார்கள் என்ற தகவல் தெரியவில்லை.

போரில் நேரடியாகப் பங்கேற்காத சமயத்தில் அமெரிக்க கடற்படை அதிகமான படை வீரர்களை இழந்தது இந்த சம்பவத்தில்தான்.

1945 டிசம்பர் 5 அமெரிக்க விமானப்படையின் ஐந்து பயிற்சி விமானங்களின் தொகுப்பான 'ஃப்ளைட் 19' ஃப்ளோரிடா மாகாணத்தில் உள்ள அமெரிக்க கப்பல் படை விமானத் தளமான ஃபோர்ட் லாடர்டேலில் இருந்து கிளம்பிய இந்த விமானங்கள் திரும்பி வரவில்லை.

அவற்றிலிருந்த 14 பேரின் நிலைமை என்ன ஆனது என்று தெரியவில்லை. இவர்களைத் தேடுவதற்காக பனானா ரிவர் எனும் கடற்படை விமானத் தளத்திலிருந்து 13 பேரைக் கொண்ட மெரைனர் ரக சிறு விமானம் ஒன்று அனுப்பப்பட்டது. இந்த விமானமும் திரும்பவில்லை. இந்த 13 பேரும் காணாமல் போனார்கள். இவர்கள் நிலைமையும் என்ன ஆனது என்று தெரியவில்லை.

கடல் பரப்பின் மேல் பறந்த விமானங்கள் மற்றும் இந்த வழியாகச் சென்ற கப்பல்கள் இது போல காணாமல் போன பல சம்பவங்களுக்கும் காரணம் 'பேயின் முக்கோணம்' (Devil's Triangle ) என்று மேற்குலகில் பரவலாக அழைக்கப்படும் பெர்முடா முக்கோணம்தான் என்ற செய்தி ஒரு நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக உலவி வருகிறது.

ஆரம்ப காலத்தில் அமெரிக்க ஊடகங்களில் மட்டுமே எழுதப்பட்டு வந்த இந்தச் செய்திகள், இணையதளம் பரவலான கடந்த 20 ஆண்டுகளில் உலகெங்கும் பரவியது.

அட்லான்டிக் பெருங்கடலின் வடமேற்கு பகுதியில் உள்ள பெர்முடா தீவு, கரீபியக் கடலில் அமைந்துள்ள தீவு கூட்டமான போர்ட்டோ ரிக்கா மற்றும் அமெரிக்காவை ஒட்டி அமைந்துள்ள ஃப்ளோரிடா நீரிணை ஆகிய மூன்றையும் இணைக்கும் முக்கோண வடிவிலான கடல் பரப்பு 'பெர்முடா ட்ரையாங்கிள்' என்று பரவலாக அறியப்படுகிறது. பெர்முடா ட்ரையாங்கிளின் எல்லையை வெவ்வேறு இடங்களை வைத்து வரையறுப்பவர்களும் உண்டு.

அந்தப் பகுதி வழியாக கடந்து செல்லும் கப்பல்கள் மற்றும் விமானங்களை இழுத்துக்கொள்ளும் பெர்முடா முக்கோணத்தின் மர்ம சக்தி, வேற்று கிரகவாசிகள் அந்த பகுதியில் கொண்டுள்ள ஆதிக்கம், பேய்கள் நடமாட்டம் என பல சதித்திட்ட கோட்பாடுகள் காரணமாக முன்வைக்கப்பட்டன.

இவற்றில் பல கப்பல்களும் விமானங்களும் திரும்ப கிடைக்கவே இல்லை என்பதால் மேற்கண்ட கூற்றுகள் அனைத்தும் உண்மை எனவும் மக்கள் நம்பத் தொடங்கினர்.

ஆனால் கடல் பயணம், காணாமல் போன கப்பல் மற்றும் விமானங்கள் தேடல் உள்ளிட்டவற்றில் தற்போது இருக்கும் அளவுக்கு தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்படாத காலகட்டம் அது.

1950களின் தொடக்கத்தில் இருந்தே பெர்முடா ட்ரையாங்கிள் மர்மம் குறித்த செய்திகளை அமெரிக்காவின் முக்கிய ஊடகங்கள் வெளியிட தொடங்கியிருந்தன.

1952இல் ஃபேட் எனும் பத்திரிகையில் ஜார்ஜ் சாண்ட் என்பவர் 'A Mystery at our back door' என்று ஒரு சிறு கட்டுரையை எழுதி இருந்தார் அதில் ஃப்ளைட்என்று பெயரிடப்பட்ட ஐந்து விமானங்கள் காணாமல் போனதன் பின்னணியில் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று இருப்பதாக குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் 1964இல் 'அர்கோசி' (Argosy) எனும் பத்திரிகையில் வின்சென்ட் காடிஸ் என்பவர் எழுதிய "The Deadly Bermuda Triangle" கட்டுரையில்இதேபோல தொடர்ச்சியான பல சம்பவங்கள் அந்தப் பகுதியில் நடப்பதை விவரித்திருந்தார்.

அதன் பின்பு அந்தக் கட்டுரையில் அவர் குறிப்பிட்டிருந்த தகவல்களை வைத்து 'இன்விசிபிள் ஹாரிஸான்ஸ்' (Invisible Horizons) எனும் நூல் ஒன்றையும் எழுதினார். இதையடுத்து பெர்முடா முக்கோணத்தை மையப்படுத்தி 1960 மற்றும் 1970களிலும் எழுதப்பட்ட நூல்கள் மிகவும் பிரபலம் ஆகின. அவை அனைத்துமே சதித்திட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் எழுதப்பட்டவை. பெர்முடா முக்கோணத்தின் பக்கம் சென்றாலே மரணம் நிச்சயம் என்று ஊடகங்கள் தீவிரமாக செய்தி பரப்பிய காலகட்டத்தில் ஒருவர் அவற்றை சந்தேகித்தார்.

அவர் பெயர் லாரன்ஸ் டேவிட் குஷே. அரிசோனா மாகாண பல்கலைக்கழகத்தில் நூலக ஆய்வாளராக இருந்த லாரன்ஸ் டேவிட் குஷே 1975ஆம் ஆண்டு " The Bermuda Triangle Mystery: Solved" எனும் நூல் ஒன்றை எழுதியிருந்தார்.

கப்பல்கள் மற்றும் விமானங்கள் காணாமல் போன காலகட்டத்தில் வெளியான செய்திகள் அப்போது நிலவிய காலநிலை உள்ளிட்டவற்றை ஆராய்ந்து பல உண்மைகளை அவர் கண்டறிந்தார்.

கப்பல்கள் அல்லது படகுகள் பெர்முடா முக்கோணப் பகுதியில் காணாமல் போனால் அவை குறித்த செய்திகள் ஊடகங்களில் வெளியிடப்படும். ஆனால் அதே கப்பல்கள் அல்லது படகுகள் மீண்டும் திரும்ப வந்தால் அவை குறித்த செய்திகள் ஊடகங்களில் வெளியிடப்படவில்லை.

பெர்முடா ட்ரையாங்கிள் பகுதியில் காணாமல் போன கப்பல்கள் மற்றும் விமானங்களின் எண்ணிக்கை உலகின் வேறு எந்த பகுதியிலும் உள்ள கடல் பரப்பில் காணாமல் போன கப்பல்கள் மற்றும் விமானங்களின் எண்ணிக்கை அளவே உள்ளது. அதாவது இந்த பகுதியில் மட்டும் அதிகமான எண்ணிக்கையில் தொலைதல் சம்பவங்கள் நிகழவில்லை.

இந்தப் பகுதி சூறாவளி காற்று அடிக்கடி உண்டாகும் கடல் பரப்பாகும். ஆனால் பெர்முடா முக்கோணம் குறித்த நூல்கள் பெரும்பாலும் இந்த உண்மையை வெளிப்படுத்தவில்லை.

## கப்பல்களும் விமானங்களும் தொலைந்தது ஏன்?

கப்பல் மற்றும் விமானங்கள் காணாமல்போன சம்பவங்களுக்கு அவற்றின் திசை காட்டிகள்







சரியாக இயங்காமல் போனது காரணம் என்று பின்னாளில் தெரியவந்தது. புவியின் உண்மையான வடக்கு திசை மற்றும் புவியின் காந்தப் புலத்தின் வடக்கு ஆகியவை ஒரே நேர்கோட்டில் இல்லாத பகுதிகளில் பெர்முடா முக்கோணமும் ஒன்று என்று கூறுகிறது அமெரிக்க அரசின் கடல் சேவைகள் தொடர்பான அமைப்பான நேஷனல் ஓசியன் சர்வீஸ்.

19 விமானங்கள் காணாமல் போன போது கூட அவற்றை வழிநடத்திச் சென்ற விமானத்தின் திசைகாட்டி சரியாக இயங்கவில்லை என்று அமெரிக்க கடற்படை பின்பு நடத்திய விசாரணையில் தெரிய வந்தது. அதைத் தேடிச்சென்ற விமானம் வெடித்து சிதறியது தான் விபத்துக்கு காரணம் என்றும் அது மாயம் ஆகவில்லை என்றும் அந்த விசாரணை முடிவு கூறுகிறது.

பெர்முடா முக்கோணம் அமைந்துள்ள பகுதியில் 'த கல்ஃப் ஸ்ட்ரீம்' எனும் பெருங்கடல் நீரோட்டம் ஒன்று அமைந்துள்ளது. பெருங்கடல் நீரோட்டம் என்பது கடலுக்குள்ளேயே ஒரு ஆறு ஓடுவதை போல. எனவே இந்தப் பகுதியில் தொலைந்துபோன கப்பல்கள் அல்லது விமானங்களின் பாகங்கள் இந்த பெருங்கடல் நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டதால், அவை காணாமல் போன இடத்தில் இருந்து கண்டுபிடிக்க முடியாமல் போயிருக்கலாம் என பல சூழல்களில் அறிவியலார்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தி கல்ஃப் ஸ்ட்ரீம் வழியாக ஒரு நொடியில் கடந்து செல்லும் நீரின் அளவு உலகெங்கும் உள்ள ஆறுகள் அனைத்திலும் ஒரு நொடியில் கடந்து செல்லும் நீரின் ஒட்டுமொத்த அளவைவிட அதிகம் என்கிறது நேஷனல் ஓசியன் சர்வீஸ்.

கரீபிய கடல்பகுதி 15ஆம் நூற்றாண்டில் இருந்தே கடற்கொள்ளை சம்பவங்களுக்கு பெயர் பெற்றது. தென் அமெரிக்கா, வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இடையிலான சரக்கு கப்பல் போக்குவரத்து இந்த பகுதி வாயிலாக இன்றும் தொடர்ச்சியாக நடந்து வருகிறது. கடல் கொள்ளையர்களால் இந்தக் கப்பல்கள் தாக்கி அழிக்கப்பட்டிருக்கவும் அதிக வாய்ப்புண்டு.

முதல் மற்றும் இரண்டாம் உலகப்போர் காலகட்டங்களில் இந்த பகுதியில் காணாமல் போனதற்கு காரணம் நீர்மூழ்கிக் கப்பல்கள் மூலம் நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களே என்று ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

2018 யுஎஸ்எஸ் சைக்லோப்ஸ் கப்பலும் இத்தகைய ஒரு தாக்குதல் காரணமாகவே மூழ்கி இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது அமெரிக்க அரசு கூறுகிறது.

இந்தப் பகுதியில் சூறாவளியின் தாக்குதல் நிகழ்வது மிகவும் இயல்பானது. 1502 ஆம் ஆண்டு ஸ்பெயினுக்கு சொந்தமான கடற்படைக் கப்பல்கள் இம்மாதிரியான சூறாவளி ஒன்றில் இந்தப் பகுதியில் பேரழிவுக்கு உள்ளானது ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. பெர்முடா முக்கோணம் அமைந்துள்ள பகுதியில் சூறாவளியின் காரணமாக பேரழிவுகள் நிகழ்வதற்கான வரலாற்று ஆவணங்கள் மற்றும் செய்திகள் ஏராளமாக உள்ளன.

கப்பல் அல்லது விமானத்தை இயக்கியவர்கள் செய்த தவறு, சாகசம் செய்வதற்காக சூறாவளியின் அருகே கப்பல் அல்லது விமானத்தை செலுத்தும் போது உண்டான விபத்துகளால் ஏற்பட்ட இழப்புகள் ஆகியவையும் பெர்முடா முக்கோண பகுதியில் நடக்கும் சம்பவங்களுக்கு காரணமாக உள்ளன.

பல ஊடகங்களும், நூல் வெளியிட்டவர்களும் பணம் சம்பாதிக்க உதவிய பெர்முடா முக்கோண பகுதியில் மர்மம் எதுவும் இல்லை. நீங்கள் இந்தக் கட்டுரையைப் படித்துக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில்கூட எதாவது ஒரு கப்பலோ, விமானமோ அந்தப் பகுதியை மிகவும் பத்திரமாகக் கடந்துகொண்டுதான் இருக்கும்.

# செல்ஃபி உலா



அனு வத்தளை



அக்ஷயன் தாமரைக் கோபுரத்திற்கருகில்



ஸ்ரீபிரதா கொட்டாஞ்சேனை



சுப்பிரமணியம் கோமகன் வெள்ளவத்தை



சாரிக் அமீன் மடவள பசார்



பிரவீணா வத்தளை



தினேஷ் மட்டக்குளிய



சுரேந்திரன் நாவலப்பிட்டி



திருமண வைபவமொன்றில் நடாஷா



சந்திரமோஹன் வத்தளை

Senthooram செந்தூரம்

## எல்பர்ட் ஐன்ஸ்டைன்

### சார்பியல் கோட்பாடு







**நிறம் தீட்டுங்கள்**



**தொடர்புபடுத்துங்கள்**



**07 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்**



**நாத்தாண்டிய மற்றும் கொட்டராமுல்ல ஆகிய பிரதேசங்களில் மின்சார " வெல்டிங் " வேலையில் கைதேர்ந்தவரும் 24 வருட கால அனுபவமுடைய , 46 வயதுடைய ஏ. எம் . மும்தாஸ்தீனை கொட்டராமுல்லயில் " வெல்டிங் " வேலைத் தளத்தில் " நான் ரொம்ப பிஸி " பகுதிக்காக சந்தித்தேன். மிகவும் வறுமைக்கு மத்தியில் க. பொ. த. சாதாரண தரம் வரை கல்வி கற்று பின்னர் சுயதொழில் முயற்சியாக இத் தொழிலில் அவர் இறங்கியுள்ளார்.**



**கேள்வி :** வெல்டிங் பண்ணும் தொழில் அவதானம் மிக்கது. அதனை நீங்கள் எவ்வாறு முன்னெடுத்து வருகின்றீர்களா ?

**பதில் :** இந்த தொழிலை நான் மிகவும் அவதானத்துடனேயே செய்து வருகின்றேன். இது மின்சாரத்துடன் தொடர்பு பட்டது. எனவே இந்த தொழிலுக்கு மிகுந்த அவதானம் தேவை. சற்று தவறினாலும் ஆபத்து தான்.

# வெல்டிங் தொழில் ஆபத்தான போதும் குடும்பத்தை காப்பாற்ற அவதானத்துடன் தொழில் புரிகிறேன்

## *வெல்டிங் தொழில் செய்யும் மும்தாஸ்*

நான் றொம்ப பிஸி...

**கேள்வி :** எத்தனை வயதில் இந்த தொழிலில் நீங்கள் இணைந்து கொண்டீர்கள் ?

**பதில் :** எனக்கு இப்போது 46 வயதாகின்றது. 22 வயதில் இந்த தொழிலை பழகுவதற்காக நான் கொழும்பு, பழைய சோனகர் தெருவிலுள்ள வெல்டிங் வேலை செய்யும் கடைக்கு போனேன்.

**கேள்வி :** உங்களுக்கு யார் தொழில் பயிற்சி வழங்கினார் ?

**பதில் :** அந்த வெல்டிங் கடையை இந்திய நாட்டைச் சேர்ந்த மொஹிடீன் என்பவரே நடாத்தி வந்தார். அந்த வெல்டிங் கடையில் மொத்தம் நான்கு பேர் இருந்தனர். அந்த நான்கு பேருக்கும் எமது முதலாளி பயிற்சி அளித்தார் .

**கேள்வி :** உங்களுக்கு நாளாந்தச் சம்பளம் கொடுக்கப்பட்டதா ? அது எவ்வளவு ?

**பதில் :** அப்போது எனக்கு ஒரு நாளைக்கு பத்து ரூபாய் சம்பளமாக கிடைத்தது. மேலும் மூன்று வேளையும் சாப்பாடும் வழங்கினார். வேலை செய்யும் இடத்தில் தங்குவதற்கான வசதிகளயும் ஏற்பாடு செய்து கொடுத்தார் .



**கேள்வி :** கொழும்பு , பழைய சோனகத் தெருவிலுள்ள வெல்டிங் கடையில் எவ்வளவு காலம் வேலை செய்தீர்கள் ?

**பதில் :** சுமார் ஆறு வருட காலங்களாக அங்கு மிகவும் பொறுமையாக வேலை செய்தேன். அத்தோடு தொழிலையும் நன்றாகவே கற்றுக் கொண்டேன்.

**கேள்வி :** அதன் பின்னர் எங்கே வேலை செய்தீர்கள் ?

**பதில் :** நான் வெளிநாடு போனேன். கட்டார் நாட்டுக்கே வேலைக்கு போனேன். நான் கட்டார் நாட்டின் டோஹாவுக்கு அருகிலுள்ள நஜ்மா பிரதேசத்திலேயே வேலை செய்தேன். எமது நாட்டின் பணத்தின் படி சுமார் ஒரு இலட்சம் ரூபாவை அப்போது நான் மாதாந்த சம்பளமாகப் பெற்றேன். இரண்டு வருடங்கள் அங்கு வேலை செய்தேன். அதன் பின்னரே நான் இலங்கைக்கு வந்து எமது ஊரில் திருமணம் செய்து கொண்டேன். அதன் பின்னரே வேலைத் தளத்தை இங்கு அமைத்தேன்.

**கேள்வி :** உங்களது சொந்த ஊர் எது ?

**பதில் :** எனது சொந்த ஊர் தும்மோதர . இந்த இடத்திலிருந்து நான்கு கிலோமீட்டர் தூரத்திலேயே எனது ஊர் இருக்கின்றது .

**கேள்வி :** இப்போது எங்கே இருக்கிறீர்கள் ?

**பதில் :** கொட்டராமுல்லையில் வசிக்கிறேன். நானும் எனது மனைவியும் மற்றும் நான்கு பிள்ளைகளும் எமது வீட்டில் வசிக்கின்றோம். மூன்று பிள்ளைகளும் பாடசாலை மாணவர்கள். அவர்கள் மூவரும் அருகிலுள்ள முஸ்லிம் பாடசாலைக்கு போகிறார்கள். மற்றவர் சிறிய பிள்ளை. அவர் வீட்டில் இருக்கிறார்.

**கேள்வி :** இப்போதுள்ள கொரோனா தொற்று நோய் காரணமாக உங்களுடைய தொழில் நிலமைகள் எப்படி ?

**பதில் :** மக்கள் எங்களுக்கு வேலைகளை கொடுக்க தயங்குகிறார்கள். கொரோனா பயத்தினால் மக்கள் வருவது குறைவு . கொரோனாவுக்கு முன்பு ஒரு வாரத்திற்கு செலவுகள் எல்லாம் போக இருபத்தி ஐயாயிரம் ரூபாய் மீதம் பிடிப்பேன். தேவையான போது கூலிக்கும் ஆட்களை எடுத்து வேலைகளை நிறைவு செய்து கொடுப்பேன் .

இப்போது அவ்வாறு செய்ய முடியாது . வேலைகள் குறைவாக கிடைப்பதால் நான் மாத்திரமே இங்கு வேலை செய்து வருகிறேன் .

**கேள்வி :** நீங்கள் இந்த தொழிலுக்கான ஆரம்ப பயிற்சி பெற்றுக் கொண்டு இருக்கும் போது ஏற்பட்ட அனுபவங்கள் எப்படி இருந்தது ?

**பதில் :** மிகவும் கசப்பான அனுபவங்களே உள்ளன. வெல்டிங் வேலை செய்யும் போது பாதுகாப்பு கண்ணாடி அணிய வேண்டும். பாதுகாப்பு கண்ணாடி அணியாமல் வெல்டிங் வேலை செய்தால் கண்களுக்கு எரிச்சலாக இருக்கும். வேலைகளை முடித்து விட்டு வந்தாலும் இரவில் தூங்க முடியாது. முதலாளி மருந்து தருவார். அதனை சாப்பிட்டு விட்டு எப்படியோ இரவில் தூங்குவேன்.

**கேள்வி :** இப்போதும் அந்த பழக்கம் உள்ளதா ?

**பதில் :** கண்களில் எரிச்சல் ஏற்படும் போது இப்போதும் பனடோல் மாத்திரைகளையே எடுப்பேன்.

**கேள்வி :** இப்போதுள்ள நிலைமையில் வீட்டு செலவுகளை எப்படி சமாளித்து தீர்த்துக் கொள்கிறீர்கள் ?

**பதில் :** தொழிலை மிகவும் கவனத்துடனே செய்து வருகின்றேன். ஏனென்றால் வேலைத் தளத்துக்கு வாடிக்கையாளர்கள் வருவது நாளாந்தம் குறைந்து கொண்டே வருகின்றது . எனக்கு வருகின்ற ஒரு ஓடரை கூட விடுவதற்கு விருப்பம் இல்லை. பிள்ளைகளின் கல்விச் செலவுகள், உணவுச் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் எல்லாம் இதனாலேயே செய்ய வேண்டும். எனவே ஊக்கமாக தொழிலை செய்து வருகின்றேன்.

**கேள்வி :** உங்களுடைய தொழிலில் போட்டித் தன்மை உள்ளதா ?

**பதில் :** பல வருடங்களாக வேலை செய்த அனுபவம் எனக்கு உள்ளது. நான் வேலைகளை மிகவும் சிறந்த முறையில் செய்து கொடுப்பேன். இதனால் எனது தொழிலுக்கு போட்டி குறைவு என்றே கூறலாம்.

**கேள்வி :** இந்தத் தொழிலின் எதிர்காலம் எவ்வாறு இருக்கும் ?

**பதில் :** நிச்சயமாக இந்த தொழிலுக்கு எதிர்காலம் இருக்கின்றது . ஏனென்றால் இந்த தொழில் நிர்மாணப் பணிகளுடனும் தொடர்பு கொண்டுள்ளது. வெல்டிங் தொழிலுக்கு எப்போதும் வேலை வரும். கவனமாக கற்றுக் கொண்டு பயிற்சி பெற்றால் நல்ல வருமானம் கிடைக்கும். எனவே இது மிகவும் பயனுள்ள தொழில் என்றே கூற வேண்டும்.





**மொஹமட் ருஸ்மான்**
**(படங்கள் ; நீர்கொழும்பு தினகரன் நிருபர்)**

# பற்களின் ஈறுகளை நேர்த்தியாக பராமரிப்பது எப்படி!





பல் போனால் சொல் போகும் என்பார்கள் அத்தகைய சிறப்புமிக்க பற்களை எவ்வாறு பாதுகாப்பது பற்றி பார்ப்போம். சிலர் சிரிக்கும் போது ஈறுகள் அதிகமாக தெரியும். பற்களின் பாதிக்கு மேல் ஈறுகள் வளர்ந்து இருக்கும். பல் தேய்க்கும் போது ஈறுகளில் இரத்தம் கசிவது, சில சமயம் வாய் துர்நாற்றம் வீசுவது போன்ற பல காரணங்களால் ஈறுகள் அதிகமாக வளர்கின்றன. அதை சுத்தம் செய்வது கடினம். இதனால் ஈறுகளில் வீக்கம், வலி மற்றும் இரத்தக்கசிவு ஏற்படுகிறது.

வாய் துர்நாற்றத்திற்கு இது முக்கியமான காரணம். இதனை நவீன சிகிச்சை மூலம் சரி செய்யலாம். இந்த சிகிச்சை முறையில் லேசர் கருவி மூலம் ஈறுகளை சரியான அளவிற்கும், வடிவத்திற்கும் கொண்டுவர முடியும். இந்த சிகிச்சைக்கு ஊசியோ அறுவை சிகிச்சையோ தேவை இல்லை. சற்றும் வலி இருக்காது. இந்த சிகிச்சை முறையால் உங்கள் புன்னகை அழகாக மாறுவதோடு ஈறுகள் ஆரோக்கியமாகவும் இருக்கும்.

கழற்றி மாட்டும் பல் செட்கள் முதலில் நன்றாக இருந்தாலும் அவை தாடை எலும்புகள் தேய்வதை தவிர்ப்பதில்லை. பல் இல்லாத இடங்களில் எலும்பு தேய்ந்து நாளடைவில் பல் செட் போடுவதும் கடினமாகிவிடும். இதை தவிர்க்க 'டென்டல் இம்ப்ளான்ட்' வைப்பதே சிறந்த வழி. இதன் மூலம் இயற்கை பற்களை போலவே பற்களை பெறலாம். 'டென்டல் இம்ப்ளான்ட்' என்பது டைட்டானியம் என்னும் உலோகத்தால் ஆனது. இதனை பல்லின் வேர் இருந்த இடத்தில் வைத்து விட்டு அதன் மீது பற்களை பொருத்தி விடலாம். பல் எடுத்தவுடன் அதே இடத்தில் இம்ப்ளான்ட்களை உடனடியாக வைக்கலாம்.

சில நேரங்களில் பற்களின் சொத்தை காரணமாக சீழ் இருந்தால் பல்லை எடுத்துவிட்டு, ஒரு மாத காலம் வரை பொறுத்து இம்ப்ளான்ட் வைக்க வேண்டும். பல் எடுத்து ஒரு வருடத்திற்குள் இம்ப்ளான்ட் வைப்பது நல்லது. இந்த முறையில் பல் கட்டும்போது அருகில் இருக்கும் பற்களை கரைத்து அதனோடு சேர்த்து பல் கட்டத் தேவையில்லை. பல் கட்டுவதற்காக சொத்தை இல்லாத பற்களை கரைப்பது தவறு. இம்ப்ளான்ட் மூலம் பொருத்தப்படும் பற்கள் நீண்ட காலம் எந்த பிரச்சினையும் இல்லாமல் இருக்கும் என ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

பற்கள் ஆடுவதற்கு முதல் காரணம் பற்களை சுற்றி உள்ள எலும்பு பலமின்றி இருப்பது. பற்களில் ஏற்படும் ஈறு நோய் நாளடைவில் அதனை சுற்றி உள்ள எலும்பிலும் பரவி விடும். இந்த கிருமிகளினால் பற்களை சுற்றி உள்ள எலும்பு தேய்ந்து பற்களின் பிடிமானம் குறைந்து ஆட ஆரம்பிக்கும். ஆடும் பற்களை எல்லாம் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

பற்கள் ஆடுவதற்கான சரியான காரணத்தை கண்டுபிடித்து சரிசெய்துவிடலாம். ஈறுகளை சுத்தம் செய்வது முதல் கட்டம். பின்னர் ஈறுகளின் அடியில் சென்று எலும்பின் மேல் உள்ள கிருமிகளை நீக்கி விட வேண்டும். பின்னர் அந்த இடத்தில் ஈறுகளின் அடியில் மருந்து வைத்து கட்டிவிட வேண்டும். பின்னர் ஈறுகள் ஆறும் வரை கண்காணிக்க வேண்டும். இதன்மூலம் பற்களை சுற்றி உள்ள எலும்பு பலப்பட்டு ஈறுகளில் உள்ள கிருமிகள் நீங்கி பற்கள் ஆடுவது குறையும்.



# முக அமைப்பிற்கு ஏற்ற சிகை அலங்காரங்கள்...





பொதுவாக பெண்கள் வெளியில் செல்லும் போது தமது சிகை அலங்காரத்தில் அதிக கவனம் செலுத்துவார்கள். ஆனால் ஒரு சிலருக்கு தமது முக அமைப்பிற்கு ஏற்றவாறு சிகை அலங்காரம் செய்யத்தெரிவதில்லை. இதனால் அவர்களுடைய முக அழகே கெட்டுவிடுகின்றது. சிகை அலங்காரத்தில் ஒவ்வொரு முக அமைப்பிற்கும் பொருந்தக்கூடியவாறு சிகை அலங்கரிப்பு இருக்கின்றது. எந்த முக அமைப்பிற்கு எந்த ஹேர் ஸ்டைல் பயன்படுத்தினால் அழகாக இருக்கும். இவற்றை பெண்கள் தெரிந்து கொள்ளவது நல்லது. அவையாவன,

### நீள்வட்ட முகம் உடையவர்கள்

நீள்வட்ட முகமுடைய பெண்களுக்கு பெரும்பாலான சிகை அலங்காரங்கள் நன்றாகவே இருக்கும். ஃப்ரீ ஹேர், போனி டைல் போன்ற சிகை அலங்காரங்கள் மிக அழகாக இருக்கும். ஆனால் தலையில் நடுவாகு எடுப்பதை தவிர்த்துவிடவேண்டும். அப்படி செய்தால் அவர்களின் முகம் இன்னும் நீளமாக இருப்பது போல தோன்றுவது மட்டுமில்லாமல் அவர்களது மூக்கையும் சற்று பெரியதாக காட்டிவிடும்.

### சதுர முக வடிவம் உடையவர்கள்

சதுர முக வடிவமுடையர்களிற்கு நீளமான கூந்தல் மிகவும் நன்றாக பொருந்தும். கூந்தலை பின்பக்கமாக உயர்த்தி கட்டாமல், முகத்தில் கூந்தலின் இழைகள் விழும்படி செய்யவேண்டும். போனி டைல் போன்ற சிகை அலங்காரங்களை தவிர்த்துவிடுங்கள். குட்டை முடியாக இருந்தால் லேயர் லேயராக பாப் கட் செய்துகொள்ளலாம். ஆனால், கூந்தலை குட்டையாக வெட்டும் போது முடியை மொத்தமாக ஒரே அளவில் வெட்டினால் அது உங்களுக்கு அதிக அழகை கொடுக்கும்.

### வட்ட முக வடிவம் உடையவர்கள்.

வட்ட முகமுடையவர்களின் கன்னங்களில் நிறைய சதை இருந்தால் அவர்களின் தோள்கள் அளவிற்கு முடியை லேயர் கட் செய்துகொள்ளலாம். சுருட்டை முடி காணப்பட்டால் அதை ஸ்ரேட்னிங் செய்யலாம். அப்படி செய்யும் போது வட்ட முக வடிவம் உடையவர்களின் முகம் சற்று நீளமாக தோன்றும்.



# ரூபவாஹினி எனும் ஆலவிருட்சத்தில் 37 ஆண்டுகால சாதனைகளும் சவால்களும் நினைவுகளை மீட்டுகிறார்



யாக்கூப் உமர்லெப்பை











ஒரு ஊடகவியலாளனாக உலகுக்கு அடையாளம் காட்டித் தந்த இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் 39 வருடங்களை பூர்த்தி செய்கின்ற இவ்வேளையில் உள்ளம் பெருமிதம் கொள்கின்றது.

37 வருடங்களாக அரச ஊடகம் ஒன்றில் பணியாற்றுவது என்பது இலகுவான பயணம் அல்ல... தடை தாண்டிய சாதனைகளையும், வெற்றிகளையும் பல்வேறுபட்ட சவால்களையும் கொண்ட ஒரு விறுவிறுப்பான பயணமே இது.....!

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஊடகத்துறைசார் அனுபவசாலிகள் மற்றும் நிபுணர்களுடன் பணியாற்றுவது பெரும் பாக்கியமாகும்.அதிலும் சமூகத்தில் உள்ள சாதாரண பொதுமக்கள் மற்றும் கலைஞர்கள், அரசியல்வாதிகள், பல்வேறு துறைகளில் உள்ள முக்கியஸ்தர்களை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்காக சந்திக்க கிடைத்ததும் கடந்த 37 வருடங்களில் யான் பெற்ற பேரின்பமாகும்...

கடந்து வந்த பாதையை சற்று திரும்பிப் பார்க்கும்போது நினைவில் நிற்கும் முக்கிய நிகழ்வுகள்... உள்நாட்டில் இடம்பெற்ற CHOGM, மற்றும் சார்க் உச்சி மாநாடுகளில் இணைப்பாளராக பங்கெடுத்துப் பணியாற்றும் வாய்ப்பு, விடுதலை புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நடாத்திய சர்வதேச ஊடக மாநாட்டில் கலந்து கொண்டு மக்கள் பிரச்சினைகளை முன் வைத்தமை,சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபக தலைவர் எம் எச் எம் அஷ்ரப் அவர்களின் அகால மரணம் இடம்பெற்ற தினம் அவரது ஜனாஸா நல்லடக்கம் பற்றிய உணர்வுபூர்வமான நேர்முக வர்ணனை, மக்காவில் இடம்பெற்ற அனர்த்தம் ஒன்றின் போது அங்கிருந்து உடனுக்குடன் ரிப்போர்ட் வழங்கியமை.

"சங்கமம்" என்ற வாராந்த பல்சுவை நிகழ்ச்சித் தொடர் மூலம் நூற்றுக்கணக்கான இளம் கலைஞர்களை அறிமுகம் செய்யும் வாய்ப்பு, "சிகரம்" என்ற வாராந்த சஞ்சிகை நிகழ்ச்சித் தொடர் மூலம் உள்நாட்டு வெளிநாட்டு தகவல்களையும் சினிமா விமர்சனம் மற்றும் செவ்விகளையும் தயாரித்து ஒளிபரப்பும் வாய்ப்புக் கிடைத்தமை,"இணக்கத்தை நோக்கி" என்ற பெயரில் மலையக மக்களின் வாழ்க்கை முறையையும் அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் அவசியத்தை அரசுக்கும் அதிகாரிகளுக்கும் வெளிப்படுத்தும் வாய்ப்பு, "உதயம்" என்ற பெயரில் மலே சமூகத்தவரின் கலை கலாச்சார சமூக விடயங்களை வெளிக்கொண்டு வந்த தொடர் நிகழ்ச்சி, "வெளிச்சம்" வாராந்த நேரடி அரசியல் நிகழ்ச்சி மூலம் நடைமுறை அரசியலை மக்கள் முன் கொண்டு சென்றமை ....

உலக நாடுகளில் நாம் பெற்ற பயிற்சிகள் மற்றும் மாநாடுகள் இவைகளுக்கு பொருத்தமான களம் அமைத்துத் தந்தன என்று கூறலாம். ஒரு தயாரிப்பாளராக இருந்த போது எதிர்கொண்ட சவால்களை விடவும் ஒரு நிருவாகியாக அல்லது பணிப்பாளராக இருக்கும் போதுதான் கடுமையான சவால்களுக்கு முகம் கொடுக்கும் நிலை உருவாகிறது என்பது வித்தியாசமான ஒரு அனுபவமே.

இவ்வாறு நீண்டு செல்லும்....

அனைத்திற்கும் மேலாக இத்துறையில் ஆர்வம் கொண்ட பலர் காலூன்றக் களம் அமைத்துக் கொடுத்தமை மனதிற்கு என்றும் ஆனந்தமே.....

எல்லாப்புகளும் இறைவனுக்கே.....

















# மேல் மாகாண சபையின் 2020 ஆண்டுக்கான விஸ்வாஹி நந்தன விருது

மேல் மாகாண சபையின் 2020 ஆண்டுக்கான விஸ்வாஹி நந்தன விருது வழங்கும் நிகழ்வில் கடந்த 36 வருடங்களாக கலை சேவையாற்றிமைக்காக பொன்.பத்மநாதனுக்கு மேல் மாகாண அழகியற்கலை மண்டபத்தில் விருது வழங்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 07ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.